T. 2183

T 2133
133
Acq 1224

# ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

GOVERNMENT ORIENTAL MSS. LIBRARY
TRIPLICANE P.O. MADRAS
17 OCT 1955

## ஆரண்ய காண்டம்

தமிழ் வசனம்



By

D. S. ராகவன்

Editorial Staff 'The Hindu'

Regd. Copy Right.

விலை ரூ. 3-0-0

# ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

## ஆரண்ய காண்டம்

தமிழ் வசனம்



By

D. S. ராகவன்

Editorial Staff 'The Hindu'

• Regd. Copy Right

விலை ரு. 3-0-0

ஸ்ரீ காஞ்சி காம கோடி பீடம் ஸ்ரீ ஜகத் குரு சங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமுகம்:—

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य
श्रीमच्छंकरभगवत्पाद प्रतिष्ठित
श्रीकाञ्ची कामकोटिपीठाधिप जगद्गुरु
श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादैः
क्रियते नारायणस्मृतिः ॥

ஸ்ரீமத் வால்மீகி ராமாயண ஸுந்தரகாண்டம் D.S. நாக[illegible] அவர்கள் தமிழ் வசன புஸ்தகம் பார்வையிடப்பட்டது.

இப்புஸ்தகம் எல்லோருக்கும் பொருள் விளங்குமாறு புதிதான முறையில் அழகான நடையில் எழுதப்பட்டிருக்கிறது. ஹநுமான் கடலைத் தாண்டியது, ஹநுமானைப் பற்றிய விவரங்கள் கேட்ட ராக்ஷஸிகளுக்கு ஸ்ரீ ஸீதாதேவி பதில் சொல்லியது முதலிய இடங்களில் அநேக அபூர்வமான விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்புஸ்தகம் பண்டித பாமரர்கள் எல்லோருக்கும் மிகவும் ப்ரயோஜனப்படும். ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஸுந்தரகாண்டம் பாராயணம் செய்பவர்கள் மூல பாராயணம் செய்துவிட்டு அந்தந்த ஸர்க்கங்களின் இந்த புஸ்தகத்திலுள்ள தமிழ் மொழிபெயர்ப்பையும் வாசித்தால் அனுகூலமாயிருக்கும். ஸௌகர்யமாயிருந்தால் ஸ்ரீமத் வால்மீகி ராமாயண மூலத்தையும் சேர்த்து அச்சிட்டு ஒரே புஸ்தகமாக வெளியிட்டால் அதிக உபயோகமாயிருக்கும்.

இம்மாதிரி கைங்கர்யங்களை மேன்மேலும் செய்து கொண்டு ஸ்ரீசக்ரவர்த்தி திருமகனுடைய ஸம்பூர்ண கிருபைக்கு பாத்திரமாக வேணுமென ஆசாஸனம் செய்கிறோம்.

முகாம்: காஞ்சீபுரம்
விஜய மார்கழி 29

நாராயணஸ்ம்ருதி:

# ஆரண்ய காண்டம்

## அட்டவணை


| ஸர்க்கம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | முனிவரின் சரணாகதி ... ... | 1 |
| 2 | விராதனின் விஷமம் ... ... | 3 |
| 3 | முதல் முதல் அரக்க யுத்தம் ... ... | 4 |
| 4 | அரக்கன் மறைவு ... ... | 5 |
| 5 | சரபங்கர் அக்னிப் பிரவேசம் ... ... | 6 |
| 6 | முனிவர்கள் அடைக்கலம் வேண்டுதல் ... ... | 10 |
| 7 | சுதீக்ஷ்ணர் சந்திப்பு ... ... | 11 |
| 8 | தண்டகவனத்தினுட் புகுதல் ... ... | 13 |
| 9 | சீதையின் சாத்விக மதியுரை ... ... | 13 |
| 10 | சத்தியாக்கிரக பொறுப்பு—ராமன் உபதேசம் ... ... | 15 |
| 11 | மாண்டுகர்ணியின் மகிமை ... ... | 17 |
| 12 | அகஸ்தியர் மகிமை ... ... | 19 |
| 13 | பஞ்சவடிப் பிரயாணம் ... ... | 20 |
| 14 | ஜடாயு தரிசனம் ... ... | 24 |
| 15 | தாம்பத்ய வாழ்க்கையின் தனிப்பெருமை ... | 26 |
| 16 | பரதனுக்கு லட்சுமணன் புகழ் மாலை ... ... | 28 |
| 17—18 | சூர்ப்பனகை வரவு ... ... | 29 |
| 19 | அரக்கி தம்பியிடம் அறைகூவல் ... ... | 34 |
| 20—21 | சூர்ப்பனகையுடன் வந்த அரக்கர் மடிதல் ... | 36 |
| 22 | கரன் முடிவைக் காண புறப்பாடு ... ... | 39 |
| 23—24 | அரக்கர் தோல்விச் சின்னங்கள் ... ... | 40 |
| 25 | கோதண்டபாணியின் சிலம்பக் கலை ... ... | 43 |
| 26 | தூஷணன் வதை ... ... | 45 |
| 27 | அரக்கர் சேனைத் தலைவர்கள் சிதைவு ... ... | 37 |
| 28—29 | கரனுடன் போர் ... ... | 49 |
| 30 | அரும் பெரும் ஆணவத்திற்கு அன்பு மாலை ... | 53 |
| 31 | இலங்கை மன்னன் பரபரப்பு ... ... | 55 |
| 32 | இலங்கையில் மறுபடியும் சலசலப்பு ... ... | 59 |
| 33 | சூர்ப்பனகையின் முறையீடு ... ... | 60 |
| 34 | சூர்ப்பனகையின் தூண்டுதல் ... ... | 61 |
| 35 | அரக்க மன்னன் அசட்டுத்தனம் ... ... | 63 |
| 36 | மாரீசனிடம் ராவணன் உதவி கோருவது ... | 64 |
| 37 | மாரீசனின் ஹிதோபதேசம் ... ... | 6- |

| ஸர்க்கம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 38 | மாரீசனின் ராம கீதம் | 67 |
| 39 | மீண்டும் மாரீசனின் மதியுரை | 69 |
| 40 | அரக்க மன்னன் பிடிவாதம் | 71 |
| 41 | மீண்டும் மாரீசனின் உபதேசம் | 72 |
| 42 | மாரீசன் மாயமானாவது | 74 |
| 43 | மானுருவத்தின் மாயா விநோதம் | 76 |
| 44 | மாரீசன் மறைவு | 77 |
| 45 | போலிக் குரலின் விளைவு | 81 |
| 46 | கபட சன்யாசி | 83 |
| 47 | போலித் தவசியின் போக்கு | 84 |
| 48 | தீமையைக் கடிதல் | 86 |
| 49 | தீமை தீண்டல் | 87 |
| 50 | தீமைக்குத் தடை | 89 |
| 51 | ஜடாயு—ராவண யுத்தம் | 90 |
| 52 | சீதா பிராட்டியின் வசனம் | 92 |
| 53 | வீராங்கனையின் வீர மொழி | 93 |
| 54 | கவித்தலைவர்க்கு அருட் செல்வம் | 95 |
| 55 | கற்பின் சிறப்பு | 99 |
| 56 | ஓர் ஆண்டுத் தவணை | 103 |
| 57 | துர்நிமித்தத் தோற்றங்கள் | 105 |
| 58 | பர்ணசாலையில் சூனியம் | 107 |
| 59 | லட்சுமணனின் நியாயமும் முறையீடும் | 108 |
| 60 | துயரமும் சோர்வும் | 109 |
| 61 | சோர்வும் கடமையும் | 111 |
| 62 | மனச் சோர்வின் உச்சநிலை | 114 |
| 63 | தன்னம்பிக்கைக்கு அறைகூவல் | 115 |
| 64 | அன்பு சினமாவது | 116 |
| 65 | தருமத்திற்காக முறையீடு | 120 |
| 66 | சீற்றம் தணிதல் | 121 |
| 67 | தருமத்திற்கு உயிரீந்த பறவைப் பெரியார் | 123 |
| 68 | ஜடாயுவின் முடிவு | 125 |
| 69 | இடர்களைப் போக்கி முயற்சியில் முன்னேறுதல் | 127 |
| 70 | கபந்தன் கைகளைக் களைவது | 128 |
| 71 | கபந்தன் கதை | 129 |
| 72 | தானவன் தனயனின் ஆலோசனை | 137 |
| 73 | நட்பின் அவசியம் | 133 |
| 74 | சபரி மோக்ஷம் | 135 |
| 75, | பம்பா தரிசனம் | 137 |

# காண்டத்தின் சிறப்பு.

ஸ்ரீமத் ராமயணம் ஓர் தலைசிறந்த சரணாகதி சாஸ்திரம், அதன் நடுநாயகமாய் நின்று விளங்குவது ஆரண்ய காண்டம் என்பது, ஆதிகாவ்யத்தை விளக்கித் தந்த பேராசிரியர்களின் கருத்து. முனிவர்களின் சரணாகதி, தவப் பெரியோர் ரகுநாதனிடம் தங்கள் தவப்பலன்களை அர்ப்பணஞ் செய்து விண்ணுலகெய்வது, விராதவதை, ஜடாயு மோக்ஷம், கபந்தன் சாப விமோசனம், சபரிவிடை பெறல் முதலிய நிகழ்ச்சிகளை உதாரணமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவைமுற்றிலும் உண்மையே.

எனினும், வேதாந்தமறியா நம்போன்ற பாமரர்கள் ராகவ சரிதையை ஊக்கமுடன் கவனித்து அவ்வரலாற்றில் கலக்கும் போது அவனது வனவாசத்தைச் சித்தரிக்கும் இக்காண்டம் மகோன்னதமாய் திகழ்வதைக் காண்கிறோம். முன்பு தாசரதியின் அரண்மனை வாழ்க்கையோ, ஜானகியுடன் அயோத்தியில் அவனது இல்லறவாழ்க்கையோ தெள்ளென விளக்கப்படவில்லை என்றால், இப்பொழுது, கானகம் புகுந்து, பஞ்சவடியில் பிரத்தியேகமாய் அமையப் பெற்ற பர்ணசாலையில், ஒரு குறையுமின்றி, இயற்கையின் ஏகாந்தத்தில் அதன் புதுப்புது எழிலை மனமாறச் சுவைத்து மைதிலியுடன் பதின்மூன்று வருஷங்கள் இனிதுற்ற அவனது உயரிய தாம்பத்ய வாழ்க்கை ஓர் புனித உணர்ச்சியோடு நம்மை ஈடுபடுச் செய்கிறது இக்காண்டம். மிதிலைச் செல்வியைக்காணாது கோசலேந்திரன் புலம்புதல், நாதனைவிட்டுப் பிரிந்த மனைவி சுந்தர காண்டத்தில் அனுமன் வாயிலாக இன்புறும் பர்ணசாலை வாழ்க்கையை நினைப்பூட்டும் புலம்புதல், இவையிரண்டும் எத்தகைய அன்பு மிக்க, பிரத்தியேகமான இல்லறவாழ்க்கை இவ்விணையற்ற சதிபதிகள் இயற்றியது என்ற பலவர்ண ஜாலங்கள் தீட்டிய முழுவாழ்க்கை சித்திரத்தை நம் மனத்துள் பதிய வைப்பதும் இக்காண்டம் தான்.

அருகிலுள்ள மணற்றிட்டுகளில் கணவனுடன் அமர்ந்து உல்லாசமாக இசையமைப்பாள் தசரதன் மருமகள், அதைப்பருகிய வண்ணம் முழுமனச் சாந்தியில் மெய் மறந்து கண்மூடுவன் தாசரதி! பின்பு, மலைக்குன்றில் தாவிக் குதித்து மறைந்திருப்பள் மைதிலி, மெய் சிலிர்த்துக் காதலியைக் கூவியழைத்து குன்றின்மேல் குதித்து வருவன் ரகுநாதன்; அவளோ நேரமாயிற்றென்று நீராட நதிக்கரை விரைந்தோடுவள்; இருவரும் நீராடும் விளையாட்டில் அன்னப் பேடுகளின் களியாட்டத்தில் மனங்கரைவர். இது ராகவன் புலம்பலில் எழும் வண்ண சித்திரம்.

இருவரும் இறைவனை வழிபட்டு, அதிதிகளுக்கு வனவாச அன்னமிட்டு, மான் முதலிய பிராணிகளுக்கு உணவளித்து, காக்கை முதலியவைகளுக்கு இறைச்சியிடுவர். ஓர் பொல்லாக் காக்கை இச்சாதாரண இறைச்சி போதாதென்று அவளது தன இறைச்சி மேல் கண்வைத்து குத்திக் கிளறுகிறது. தலைவன் தன் மடியில் துயிலுகையில், தேள் கொட்டியும். அவதியுற்று உதிரம் வடிப்பினும்—தலைவி அவனை எழுப்ப மனமிசையாள் எனும் கற்பின் வன்மையைக் கண்ணாடி காட்டுகிறது ஜானகி ஆஞ்சநேயனுக்குரைத்த இக்காண்டத்தில் அமைந்த ஓர் துல்லிய இன்ப நிகழ்ச்சி. அன்பெனும் தேனில் ஊறிச்சுவை பெருக்கும் அமுதவாழ்வை அமரத்வமடைய வழி காட்டிச் செல்கின்றன இச்சதிபதிகளின் சொல்லோவியங்கள்!

மேலும், "நானறிவேன் ராமனின் ஸத்திய பராக்கிரமத்தை" என்று மாமுனி விசுவாமித்திரர் அயோத்தி அரச சபையில் அடித்துப் பேசியது இக்

காண்டத்தில் விமரிசனமாகி மிளிர்கின்றது போலும்! ஸத்யம்—தருமம் எல்லா குணத்திற்கே இயற்கையாய் அமையப் பெற்ற ஓர் தூய சக்தி உண்டு. தருமம் தலைகாக்குமென்ற சக்தியது. அத்துடன் இயற்கையாயமையப் பெற்ற இணையற்ற வல்லவனின் வலிவும் சேர்ந்தபோது எத்தகைய ஆபத்தும் வலிவிழந்து போகுமன்றோ ? மேலும் தவப்பலனடைந்த மாமுனிவர்கள்—சித்தி பெற்ற மகரிஷிகள்—குறைவற்ற குணச் செல்வனான கோசலேந்திரனைக் கண்டு களித்து ஆசிகூறி தங்கள் தங்கள் பேரருளை அவன் பால் செலுத்திச் சென்றனர். இத்தகைய சக்திகளில் திளைத்தவன் விற்சிலம்பங் காட்டி—சரக்கூடமைத்து—ஜனஸ்தானத்தில் அரக்கர் குழாமனைத்தும் தனியேயொழித்துக் கட்டியது நாம் அறிந்து கொள்ள ஓர் திறவு கோலாக உதவுகின்றது.

முன்பு, சென்ற காண்டங்களில் பெற்றோர் வாக்கிய பரிபாலனஞ் செய்தவன், இக்காண்டத்தில் பெரியோர் வாக்கியத்தைத் தலைமேற்கொண்டு பணியாற்றுகிறான். மானிடருக்குச் சிறந்த உதாரணனான மன்னுபுகழ் கோசலை மகன், கானகப் பெரியோர்களையே பின்பற்றி அவர்கள் காட்டிய வழியில் செல்கிறான், அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் வசிக்கிறான், அவர்களழைக்க அங்கங்கே தங்கி அவர்களைக் களிப்புற வைக்கிறான், அவர்களைக் காக்க ஆங்காங்கு செல்கிறான். வனத்திற்கான அரக்க பயத்தை ஒழித்துக் கட்டுகிறான். இதன் விளைவாகவோ, என்னவோ, மனைவியையிழந்து பரிதபிக்கிறான்; அப்போதும், பெரியோர் சொல்லைப் பின்பற்றுகிறான். கடைசியில் தோன்றும், சாபம் நீங்கிய, கபந்தனாயிருந்த தனுவெனும் தானவன் காட்டிய வழியே சென்று அவன் சொற்படியே நடக்கிறான், துக்கத்திற்கு மீட்சி காண்கிறான், சொன்ன வண்ணம் செய்யும் இப்பெருமான்!

ஆகவே, ராகவனும் மைதிலியும் இக்காண்டத்தில் இயற்கையாயுள்ள மனித சுபாவத்தைப் பரிமளிக்கச் செய்து நம் மனத்தையும் கருத்தையும் இழுத்து நம் உறவினராக வந்து கலந்து கொள்கிறார்கள். இலக்கண ரகசியமோ, காவிய லட்சணமோ, கலாசாரப் பண்பாடோ எக்காரணமாயினும் இக்காண்ட சம்பவங்கள், மனிதனின் இணையற்ற இன்ப வாழ்க்கை, பின்பு அவன் மனைவியிழந்த துயரம், துயரத்தின் அலைமோதல், பின்பு மற்றவன் தேற்றுதல், தன்னிலையடைந்து முயற்சியில் முனைதல் முதலிய ஒவ்வொரு மனித சுபாவ அனுபவமும் நம் ஒவ்வொருவரையும் தொட்டிழுத்து பங்கு கொள்ள வைக்கின்றது இக்காண்டத்தின் சிறப்பு.

எவ் வேதாந்தங்களுக்கும் மேல் இன்னலில் சிக்கும் ஒரு தனி மனிதன் புனித உணர்ச்சியுடன் அவ்வின்னலைக் கடக்கும் வழியையும் அவ்வழியில் உதிக்கும் குறுக்கீடுகளையும் அவைகளை சமாளித்து விடாமுயற்சியில் முன்னேறுவதையும் வாழ்க்கையின் இன்றியமையா இயல்பு என்று இக்காண்டம் தெளிவாக்குகின்றதல்லவா?

---

## பிழை திருத்தம்

| எண்கள் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| ஸர்க்கம் | 17—22 | 18—25 |
| ,, | 28— | 28—29 |
| ,, | 24—35 | 30—41 |
| ஸர்க்கம் 13 | பஞ்சவடி பிராயணம் | பஞ்சவடிப் பிரயாணம் |

# ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

## ஆரண்ய காண்டம்

———

முன்பு அயோத்தி நகரில் கோமதீ தீரத்திலுள்ள நைமிசாரணியத்தில் அமையப் பெற்ற அச்வமேத யாகசாலையில், மாமுனிகள், ரிஷி கணங்கள், அமைச்சர்கள், நகர மாந்தர்கள், வானரேச்வரர்கள், ராக்ஷஸேசுவர்கள் ஆகிய இவர்களுடன் கூடியிருந்த, ஸ்ரீ ச்யாமள ரூபனும், சர்வ லோக சரணியனும், சர்வரக்ஷகனும், சர்வேச்வரனும், புருஷோத்தமனுமான அயோத்தியர் கோமான் ஸ்ரீ ராமச்சந்திரன் முன்னிலையில் குசலவர்கள், பத்தாவது தினத்தில் ஆரண்ய காண்டம் முதல் ஸர்க்கம் முதல் 21–வது ஸர்க்கம் வரை கானஞ் செய்த பிரகாரம் :—

### 1. முனிவரின் சரணாகதி

சித்திரகூடத் தவசிகள் அரக்கர்களுக்கஞ்சி ரகுநாதனை விட்டுச் சென்றபின், புன்னகை பூண்டு, தனிப் பெரும் வீரன் தம்பியுடன், அனசூயையின் ஆபரணங்களால் அலங்கரிக்கப் பட்ட வைதேகியை அழைத்துக் கொண்டு பர்ணசாலை விட்டகன்றான். தண்டக வனத்தில் புக வெண்ணிட நடையில் நடந்து சென்றான். இதையறிந்த தவசிகள்—வழியில் வசித்து வந்த துறவிகள்—கோதண்டபாணியைப் பின்பற்றி சிறிது தூரம் உடன் சென்றனர். தண்டகவனம் புகும் ஒற்றையடிப் பாதை அணுகியதும், அவர்கள் ராஜபுத்திரர்களையும் மிதிலைச் செல்வியையும் உபசரித்து, ஆசி கூறி அப்பாதையின் போக்கைப் பற்றித் தெரிவித்து வழியனுப்பினார்கள்.

அவ்வழியே நடந்து தண்டகவனம் புகுந்தனர் அம்மூன்று அரண்மனை வாசிகளும். புகுந்ததும், மரமடர்ந்த, கம்பீரமான, இருள் சூழ்ந்த, குகை போன்ற தண்டகவனத்தின் இயற்கை வளங்களைக் கண்ணுறுகிறார்கள். காடென்றால் இதன்றோ காடு! இரவியின் கதிர் நுழையா செறிந்துயர்ந்த மரக்கிளைகளும் செடி கொடிகளும் கீழே ஓர் அடர்ந்த இருளைப் பரப்பின. ஒற்றையடிப் பாதையோ முள்ளும் கல்லும் மேடும் பள்ளமும் நிரம்பிய நெளிவு கொண்ட நீண்டதோர் மாயச் சுழல்; சற்று அமைதி, பின்பு விலங்கினங்களின் உறுமல். மலைப் பாம்புகளின் சீறல். பெரும் பறவைகளின் அலறல். கடுங்காட்டின் சலசலப்பு! எனினும் இப்பயங்கர வெள்ளத்தில் ஓர் இன்பச் சுழல் :—

இத்திரு வனசாரிகள் சிறிது உட் சென்றதும் இயற்கையமைப்பின் இனிமையைக் காண்கிறார்கள். கண் குளிரும் காட்சி—உள்ளம் உகக்கும் உணர்ச்சி, எங்கும் எழில் செறியும் தூயத்தோற்றம், தவசிகளின் தருப்பை புற்கள் பரப்பியிருந்தன, மரவுரிகள் தொங்கின, சுத்தமடைந்த சமவெளி,

அதிலமர்ந்த சிறு, பெரு பர்ணசாலைகள், மரங்களிடையே வந்தடைந்த காலைக் கதிரவன் அவ்விடம் பிரும்ம தேஜஸ்ஸால் தூவப்பட்டிருப்பதாகப் பிரதிபலித்துக் கொண்டிருந்தான். மனதிற் கெட்டா சூரிய மண்டலத்தை அங்கமைந்த பர்ணசாலைகள் வரைந்து காட்டின. எல்லாப் பிராணிகளும் பயம் தவிர்க்கும் புகலிட மாயிருந்தன அப்பிரதேசம். எங்கும் அமைதி நிலவ, சாந்தியைப் பரவும் மான் கூட்டங்கள் உலவ, வித விதப் பட்சிகள் கீதம் இசைக்க, அப்ஸர ஸ்திரீகளின் நர்த்தனம் ஒலிக்க, மண்ணுலகை விண்ணுலகாக்கும்படி எங்கு பார்க்கினும் ஓம குண்டங்கள், யாக பாத்திரங்கள், மான் தோல், சமித்தின் விரிப்புகள், பழக் கூடைகள், மலர்க் குவியல்கள், கிழங்குக் குன்றுகள், மங்களம் பொங்கும் பசு மந்தைகள்—எத்தகையப் புனிதக் காட்சியாய் அப்பர்ணசாலை வரிசைகளை மென்மையூட்டின! இத்தூயத் தன்மையை இன்னும் விவரிக்கும் இயற்கையான நீர்ப்பரப்பின் அமைப்பு! அழகிய தெள்ளிய நீரோடைகள், காட்டுப் பூக்களைத் தங்களிடையே தேக்கி வைத்து மலர்ந்து செழிந்த செந்தாமரைகள், குமிழியிட்டுக் குதூகலமாய் விளையாடும் நீர்ப்பறவைகளும், அன்னங்களும் இயற்கை எழில் எல்லையைப் படம் பிடித்துக் காட்டின. எங்கும் நிறைந்த வேத கோஷம், சதா ஒலிக்கும் கடவுள் துதி, யாக வேதிகளில் வேத பாராயணம்; நதியிலும் நீரோடைகளிலும் நின்ற வண்ணம் மரவுரி யுடுத்தி மனமடக்கி ப்ராணாயாமத்தில் தேஜஸ் ஜொலிக்க தவப் பெரியார்களான—ஜிதேந்திரியர்களான மாமுனிகள் காண்கிறார்கள்.

இத்திவ்வியமான இயற்கை வனப்பைக் கண்டு வியப்படைகிறார்கள் வந்தவர்கள். உள்ளம் பூரிக்கிறது. உடன் ஓர் புனித உணர்ச்சி யுண்டு மலர்கின்றது, இவர்களைக் கண்ணுறுகிறார்கள் அங்குள்ள ஞானியர்களும், தவசிகளும். ஆகா! என்ன அபூர்வத் தோற்றம்! இவர்களைக் கடவுளாய்க் கண்ட பாக்கியம் பெற்றவர்களாய் மெய் சிலிர்த்து, உள்ளங் களித்து, எழுந்திருந்து ஒன்று திரண்டு விரைந்து வந்து உற்சாகத்துடன் வரவேற்கிறார்கள். மிக்க பயபக்தியுடனும் பரிவுடனும் உபசரித்தார்கள். நல்வரவு கூறினார்கள். ராமபத்திரனின் திருமேனி வசீகரமும், ஜானகியின் அன்பு பொழியும் குளிர் பார்வையும், லட்சுமணனின் திடத் தன்மையும் அம்முனிவர்களைக் கடவுள் காணும் நிலையில் அழைப்பதாக உணர்ந்து அவர்கள் பரவசமானார்கள். ஸ்ரீ ரகுநாதனின் சௌகுமாரியமும், சீதா தேவியின் லக்ஷ்மீ கடாட்சமும், லட்சுமணனின் ஒளி வீசும் வதனமும் அவர்களின் தெய்வீகத் தன்மையை வெளியிட்டன. அப்படியே மெய்மறந்து அக்காட்டுப் பெரியார்கள் இக்ஷ்வாகு குல திலகங்களை பார்த்த வண்ணம் நின்று விட்டனர். இத்தகைய ஆச்சரியம் விளைவிக்கும் இன்பக் காட்சி யளிக்கும் மானிட உத்தமர்களை எதிர்பாராது கண் குளிரக் காணப் பெற்றதை நினைந்து நினைந்து எளிமை பூண்டு அடிமையானார்கள்.

முனிவர்கள், அபூர்வ அதிதிகளாய் வந்துள்ள இராம லட்சுமணர்களையும் சீதா தேவியையும் சகல உபசாரங்களுடன் நன்கு கௌரவித்து தாசரதியை நோக்கி சொல்லுகிறார்கள்:—"ரகுநந்தனா! பெரும் புகழ் படைத்தவனே! நீ இந்த ஜனங்களுக்குத் தரும ரக்ஷகன்; எல்லோருக்கும் சரண்யன்; யாவராலும் பூஜிக்கத் தக்கவன்; உத்தமன்; துஷ்டர்களை அடக்குபவன்;

எங்களுக்கு அரசன் இராகவா! அரசன் தனது சுய அம்சமான ரக்ஷணை என்பதைக் கொண்டு பிரஜைகளை எங்கும் ரக்ஷிக்கிறான். அக்காரணத்தால் அவன் பிரஜைகளால் வணங்கப் படுகிறான்; அதனால் சிறந்த போகங்களை அனுபவிக்கிறான். ப்ரபோ! உங்கள் நாட்டில் வசிக்கும் எங்களையும் நீ ரட்சிக்க வேண்டும். நகரத்திலிருந்தாலும், காட்டிலிருந்தாலும் எங்களுக்கு நாதன் நீயே! அரசே! பழிக்குப் பழி வாங்குவதை விட்டவர்களும், கோபத்தை அடக்கியவர்களும், ஐம்புலன்களை வென்றவர்களும், எளிய தவசிகளுமான நாங்கள் உன்னைச் சரணடைவதால் ரட்சிக்கப்பட வேண்டியவர்கள்'' என்று சொல்லிப் பல கனிகளையும் மலர்களையும் காணிக்கையாகக் கொடுத்து வந்தவர்களைச் சிறந்த அதிதிகளாகப் பூஜித்தார்கள். அவர்கள் தற்காலம் அங்குள்ள அரக்கர்களால் படும் இடுக்கண்களால் அல்லலுறும் நிலையை உணர்ந்த ரகுவீரன் அவர்கள் பயத்தைப் போக்க நிச்சயித்தான்.

---

## 2. விராதனின் விஷமம்

அதிதி பூஜையை அங்கீகரித்துத் தவசிகளுக்கு அபயம் அளித்து, அவர்களுடைய அரக்கர் பயத்தை போக்கத் தனிப்பெரும் ஆர்வத்தில், பர்ணசாலை வரிசைகளை விட்டு அவைகளின் வழியே நடந்து தண்டகவனத்தில் வில்லும் கையுமாய்ப் புகுந்தான் ரகுகுல தீரன்.

திரும்பவும் அக்கோர வனத்தின் பயங்கரத் தோற்றம் நான்கு திசையிலும் சூழ்ந்து கொண்டது. கொடிய புலி முதலிய விலங்குகள் உறுமின; காட்டுப் பன்றிகளும் நரிகளும் பாய்ந்து தாவின. மரங்களும் செடி கொடிகளும் ஒடிந்து விழுந்தன. அங்கங்கே ஆழமான நீர் மடுக்கள், சத்தமின்றிக் கதவுகள் போன்ற இறகுகளையுடைய பெரும் பறவைகள் பறந்தன; உர்! என்று எப்போதும் காதைத் துளைக்கும் சுவர்க்கோழிகளின் ரீங்காரம்; எல்லாம் வனத்தின் அபாயங்களைக் காட்டின. உடனே இவ்வபாயங்களையெல்லாம் ஒன்று திரட்டிப் பதின்மடங்காகப் பெருக்கிய, பூதாகாரமான உருவம் ஒன்று தென்பட்டது. மலைச் சிகரத்தை யொத்த கரடு முரடான தலை; இடியை யொத்துத் திடுக்கிட வைக்கும் பேய்க் குரல்; விகார வக்கிரக் கண்கள், பயங்கரத் தோற்றமான முகம், மலைக் குன்று போன்ற வயிறு. கொடிய சேஷ்டைகளுடனிருந்த அகோர அவயங்கள்; உடம்பெல்லாம் ரத்தவெள்ளப் பெருக்கு, கையிலிருந்த சூலத்தில் மாமிசங்களை தொங்க விட்டுக் கொண்டு அரம்போன்ற கோரப்பற்களைத் திறந்து ஆரவாரத்துடன் கோர அரக்கன் ஒருவன் பூமியை அதிரச் செய்து கொண்டு ஓடி வந்தான். உடனே நொடிப்பொழுதில் தன் கர்ஜனையால் காடு முழுவதையும் நடுக்கமுறச் செய்து, சீதா பிராட்டியைச் சிறு பொம்மை போல் அலட்சியமாய் இடுப்பில் எடுத்துக் கொண்டு ஓடினான். சற்று விலகிச் சென்று, ''நீங்கள் யார்? ஏன் இங்கு வந்தீர்கள்? இங்கிருப்பின் நீங்கள் உயிர் காண மாட்டீர்கள். ஹா! தவசிகள் போல் தோன்றுகிறீர்கள் நீங்கள். ஆனால் தவசிகளுக்

குப் பெண் ஏன்? நான் யாரென்று தெரியுமா! நான் தான் 'விராதன்' என்ற ராட்சத வீரதீரன். இங்கு ஆயுதமேந்தி வந்த நீங்கள் பிழைப்பதேது? இவள் என் மனைவியாவாள். உங்கள் உதிரத்தை இதோ குடிக்கப் போகிறேன்" என்று கோஷமிட்டு உறுமினான்.

ஜானகியும் கொடிய அவ்வரக்கனிடத்திலகப்பட்டு உயிர் நடுங்கினாள். ஜானகிராமன் மனம் சுருக்கென்று தைத்தது. மனைவியை மற்றொருவன் அபகரித்தான் என்ற நிகழ்ச்சி சரேலென்று அவனை பிரமை யடையச் செய்தது. பின்பு, "லட்சுமணா! பார்த்தாயா? விதேக நாட்டு அரசிளங்குமரி, கற்புச் செல்வி, நற்குண நற்செய்கைகளுக்கு இருப்பிடமானவள், இவள் இவனிடம் சிக்குண்டு நடுங்குகிறது என் மனத்தைப் பிளக்கிறது. என்ன விபரீத நிகழ்ச்சி இது? கைகேயியின் எண்ணம் சபலமானது போலும்!" என்று மனமுடைந்து வருந்தினான் சீதாபதி.

கண்ணீருடன் கலந்த ராமனது கலவரத்தைக் காண்கிறான் தம்பி லட்சுமணன். ஹா! என்று சர்ப்பம் போல் சீறி எழுகிறான். "காகுத்த வீரனே! என்ன சோக மொழிகள் இவை! நீங்களா இப்படிக் கதறுவது? நம் ஆண்மையைப் பரிகசிப்பதா? இதோ இந்த வில் இக் குரூரனை மாய்த்துத் தள்ளத் துடிக்கிறது, ஒரு நிமிஷம் பொறுங்கள்" என்று மொழிந்து விட்டு அரக்கனை நோக்கி "யாரடா நீ? மனம் போன போக்கின்படி திரியும் உன் வாழ்க்கை இப்போது முடிவடையப் போகிறது" என்று முழங்கி விராதன் எதிர் நின்றான்!

---

## 3. முதல் முதல் அரக்க யுத்தம்

விராதன் கர்ஜிக்கிறான். வனம் முழுவதும் நடுங்குகிறது. வெளியிலிருந்த முனிவர்களுக்குத் தங்கள் சரணாகதி சபலமாகும் காலம் வந்து விட்டதை ஸூசிப்பிக்கிறது அவ்வொலி. அரக்கன் அரசகுமாரர்களின் விருத்தாந்தத்தை வினவுகிறான். ராமன் முன் வந்து பதிலுரைக்கிறான்.

"இக்ஷ்வாகு வம்ச க்ஷத்திரியர்கள் நாங்கள். விரதத்தை மேற்கொண்டு இப்போது காட்டில் வசிக்கிறோம். நீ யார்?

"நான் ஜயனென்பவனின் மகன்; சதக்ருதை என்பவள் என் தாய். என்னை 'விராதன்' என்பார்கள். நான் தவஞ் செய்து, பிரம்மாவிடத்தில் வரம் பெற்றிருக்கிறேன், அஸ்திரத்தினால் அடிபட்டோ, வெட்டப்பட்டோ, பிளக்கப்பட்டோ, மரணம் அடைய மாட்டேன், இப்பெண்ணை விட்டுவிட்டு ஓடிப்போய் உயிர் தப்புங்கள்" என்று வீரவொலி செய்தான் அரக்கன்.

"சீ அல்பனே! சிறிது நேரத்துக்குள் நீ காலன் வாய்ப்படுவாய்; பார்" என்று சொல்லிக் கொண்டே ரகுபதி பாணத்தை விடுத்தான். கோதண்டத்தை வளைத்து அம்பு தொடுத்ததும் அது உடனே சீறிக் குத்தி அரக்கனின் உடலின் உட்புகுந்து ரத்தம் பீரிட வெளிக் கிளம்பி பூமியில் நுழைந்தது. இவையாவும் ஒரே கணத்தில் நிகழ்ந்தமையைக் கண்டு அரக்

கன் பிரமித்துப் போனுன். இவ்வற்புதச் செயல் சில கணங்கள் நீடிக்க அவன் உடல் சரமாரியால் தைக்கப்பட்டுத் துடித்தது. சினம் பொங்கி எழுந்தது. வேதனை தாங்காது துடித்தான். இடுப்பிலிருந்து ஜானகியைக் கீழே வைத்து விட்டு வஜ்ராயுதம் போன்ற பெரியதொரு சூலத்தைத் தாங்கி கர்ஜித்துக் கொண்டு இராமன் எதிரே ஓடி வந்தான். அப்போது அவ்வனம் முற்றும் கிடுகிடுத்தது. பிராணிகள் யாவும் நடுங்கின. அயோத்தி அச்சுதன் உடனே இரு பாணங்களால் அச் சூலத்தைத் துண்டாக்கினுன். பிளவுண்ட பெரும் கற்பாறை மலைச் சிகரத்தினின்று பாதாலத்திலிருந்த அடிப்பாறையில் தடாரென்று மோதும் பேரொலி போல் இடி இரைச்சலுடன் கீழே விழுந்தது, பூமி அதிர்ந்தது. விராதன் வாய் பிளந்து எதிரே கோபாவேசத்தில் ஓடி வந்தான், உடனே இராம லட்சுமணர் இருவர்களும் கருநாகத்தை யொத்த கத்திகளால் தாக்கினுர்கள். அவனே அலட்சியமாக அவ்விருவர்களையும் தன் தோளில் தூக்கிச் சென்ருன். கண்ணுழையாக்காடு, வழி துறை தெரியவில்லை. எனினும் அவன் செல்லும் வழியைக் கவனித்து இருவரும் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டு அமைதியுடன் இருந்தனர். அவன் கடுங் கூச்சலிட்டுக் கொண்டு கானில் நுழைந்து விரைந்தான்.

---

## 4. அரக்கன் மறைவு

வீரர்கள் இருவரும் அரக்கனுடன் காட்டினுள் மறைவதைக் கவனிக்கிருள் வைதேகி. உடனே நாதனை இழந்ததாகக் கருதிக் கதறுகிருள். முன்பு அவளை அரக்கன் தூக்கிச் செல்ல இவ்வண்ணமே கதறிப் புலம்பினுள் அவள் மறுளன். இப்பொழுது இவள், மறையும் அரக்கனை நோக்கி "அரக்கனே! இவர்கள் தசரத சக்கரவர்த்தியின் திருக்குமாரர்கள். ஸத்திய ஸந்தர்கள், சீலவான்கள், புனித மூர்த்திகளான ஸ்ரீ ராமனையும் லட்சுமணனையும் விட்டு விட்டு என்னைத் தூக்கிச் செல். உன்னை வணங்குகிறேன்" என்ருள்.

இத் துயரச் சொல்லைக் கேட்டார்கள் அரக்கன் தோளிலிருக்கும் தனி வீரர்கள். உடனே கூரிய வாளைக் கொண்டு இருவரும் அரக்கனின் இரு புஜங்களையும் வெட்டித் தள்ளினுர்கள். அடியற்ற மரம் போல் கையறு பட்டுக் கீழே விழுந்தான் விராத வரக்கன்; உடனே அப்பெரும் உடலின் மேல் தாவிக் குதித்து, முழங்கால்களால் அவனை நையப்புடைத்து அமுக்கி நசுக்கி அவன் மூச்சுத் திணறும்படி பிசைந்தார்கள் இரகுவீரர் இருவரும்.

சித்திரவதை அனுபவித்தும், அவன் மடிபவனுய்க் காணவில்லை. "தம்பீ! இவன் மடிவதற்கு ஒரே வழிதானுண்டு. இவனைக் குழி தோண்டி மூச்சுவிட முடியாதபடி புதைத்து விட வேண்டியதுதான்" என்ருன் வீர ராகவன். இம்முடிவைக் கேட்டான் அரக்கன். உடனே அவன் மனம் மாறுபட்டது, கைகள் அறுபட்டன, உடலெல்லாம் ரத்த வெள்ளம் கொப்பளித்து ஆருய்ப் பெருகி விட்டது. வலிவு திரண்ட கால்களால்

கழுத்து நெறிபடுகிறது, ஜயராமன் பாதங்கள் பட்ட காரணத்தாலோ என்னவோ மரண வேதனை யுற்ற அவ்வரக்கனுக்குப் பழைய ஞாபகம் வருகிறது. உடனே எதிர் நிற்பவனைக் கடவுளாகக் காண்கிறான். திடீரென்று தெளிவடைந்த அவன் தெள்ளறிவு இச்சொல்லில் வெளிக் கிளம்புகிறது.

"புருஷர்களுள் புலி போன்றவனே! இந்திரனுக்குச் சமானமாகிய உன்னால் அடிபட்ட நான் அஞ்ஞானத்தால் உன்னை இன்னானென்று அறிய முடியாதவனானேன். அப்பனே புருஷோத்தமா! ரகுராம! தேவரீரைக் கௌசல்யா தேவியின் திருக்குமாரனாக அறிகின்றேன். இப்பொழுது உங்களை அவதார புருஷர்கள என்று உணர்கிறேன். மகாபாக்கியவதியாகிய வைதேகியையும் மகா பலவானான லட்சுமணனையும் இன்னாரென்று உள்ளபடி அறிந்தேன். ஸ்வாமி! நான் தும்புரு என்ற கந்தர்வன். ரம்பையுடன் நான் ரமித்துக் கொண்டிருக்கையில் என்னால் அவமரியாதை செய்யப்பட்ட குபேரனால் நான் ராக்ஷஸனாகும்படி சபிக்கப்பட்டேன். பின்பு அபராதத்தை மன்னித்தருளும்படி வேண்டின எனக்கு, எப்பொழுது தாசரதி உன்னைப் போரில் வதை செய்வாரோ அன்று இந்த ராக்ஷஸ வடிவம் நீங்கி முன்னுருவமடைந்து சுவர்க்கம் புகுவாய் என்று அருளினான் நிதித்தலைவன். புண்ணியனே! சத்துருக்களைத் தவிக்கச் செய்பவனே! நான் தேவரீருடைய அனுக்கிரகத்தால் மிகக் கொடிய சாபத்தினின்று விடுபட்டேன். உங்களுக்கு எல்லா மங்களங்களும் உண்டாகக் கடவன! ஐயனே! இங்கிருந்து ஒன்றரை யோஜனை தூரத்தில் பிரதாபசாலியும், தருமாத்மாவும், சூரியனைப் போன்ற ஒளி வீசும் சரபங்க மகரிஷி வசிக்கிறார். தேவரீர் அவரை விரைவில் சென்று காண்பீராக, அவர் உங்களுக்காகக் காத்திருக்கிறார். என்னைக் குழியில் புதைத்து விட்டுச் சுகமாக எழுந்தருள்வீராக! என்றான்.

உடனே லட்சுமணன் தன் காலினின்று அவனை விடுவித்து, பிரும்மாண்டமான குழியைத் தோண்டி அதில் அவனைக் கிடத்தி இருவரும் அவனை மூடினார்கள். வனத்திலிருந்த முனிவர்களுக்கு அரக்கன் மாண்டானென்ற செய்தியைக் கோதண்டத்தில் கட்டியுள்ள மணி தெரிவித்தது. கோர அரக்கனின் கோலாகலம் நீங்கிய வனத்துக்கு உடனே ஒரு புத்தொளி உண்டாயிற்று பயமொழிந்து காந்தி நிலவியது. ராமலட்சுமணர் சந்திர சூரியர்கள் போல் வெற்றியில் விளங்க. ஜானகியை உற்சாகப் படுத்திக் கொண்டு உள்ளம் களித்து அப்பால் சென்றார்கள்.

---

## 5. சரபங்கர் அக்கினிப் பிரவேசம்

அநாயாசமாக விராதனைக் கொன்று அவ்வனத்தைப் பயமற்றதாகச் செய்து கொண்டு சதிபதிகள் காட்டினுள், லட்சுமணன் முன் செல்ல வருகிறார்கள். கொஞ்ச தூரம் சென்றதும் தூய பேரொளி யொன்று தோன்றியது.

அதைக் கண்டு வியப்படைந்து அருகே நெருங்குகிறார்கள். அதிசயமான அபூர்வக் காட்சி அது! தேஜோ மயமாய் விளங்கும் சுந்தர புருஷன்

திவ்வியமான ஒரு ரதத்திலிருந்து இறங்கி, அவன் கால் பூமியில் பதியாமல் நிற்க, தவசிகள் அவனைப் பூஜை செய்கிறார்கள். பச்சை நிறமுள்ள குதிரைகள் பூட்டப்பட்ட ரதம் ஒன்று அருகில் நிற்கிறது. அதுவும் பூமியில் பொருந்தினதாக இல்லை. வெண்மேகத்தைப் போல மிருதுவாகவும், சந்திர மண்டலத்தைப் போல் வர்ணங்கள் உள்ளதுமான உயரிய புஷ்பமாலைகள் அலங்கரித்த வெண்குடை ஒன்று அத்தேரை அணி செய்து கொண்டிருந்தது. இரு அப்ஸரஸ் பெண்கள் அத்திவ்விய புருஷனுக்கு ஒரேமாதிரியாகச் சாமரம் வீசுகிறார்கள். கந்தர்வர்களும், தேவர்களும், சித்தர்களும் பூமியில் கால் தொடாமல் அவனை சூழ்ந்து நிற்கிறார்கள். அப்புருஷனோ, தவமகிமையால் திவ்விய காந்தியுடன் பொலியும் பிரும்மரிஷியுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தான். இவ்வாச்சரியக் காட்சியைக் கண்ட ஸ்ரீ ராமச்சந்திரன் தம்பியைப் பார்த்து, "லட்சுமணா! ஆகாயத்தில் தூய ஒளியுடன் பிரகாசிக்கும் ரதத்தைப் பார்த்தாயா? இம்மாதிரி பச்சை நிறக் குதிரைகள் இந்திரனுக்குத்தான் உண்டென்று நாம் கேட்டிருக்கிறோம். ரதத்தின் அருகில் நிற்பவர்கள் தேவலோக வாசிகளென்று அறிகிறேன். அப்பா! இத்திவ்விய புருஷன் யாரென்று நான் அறிந்து வருகிறேன். அதுவரை, வைதேகியுடன் இங்கிரு" என்று சொல்லிப் புனிதஸ்தலமான ஒளிவீசும் அவ்வாச்ரமத்தை அணுகினான்.

கம்பீரமாய்ச் சிங்கவேறு போல் வந்து கொண்டிருக்கும் ராமபிரானைக் கண்ட அத்திவ்விய புருஷனை இந்திரன் சரபங்க முனிவரிடம் விடை பெற்றுக் கொண்டு அருகிலிருப்பவர்களை நோக்கி, "இதோ ஸ்ரீராமன் எழுந்தருளுகிறார். இவர் தம்முடைய லட்சியம் ஈடேறும் வரை என்னுடன் பேசக் கூடாது. என்னை இன்னாரென்று அறிந்து கொள்ளவும் கூடாது. எவராலும் செய்ய முடியாத காரியத்தை இவர் மனிதராய் இருந்து செய்யப் போகிறார்." என்று சொல்லி அவர்களுடன் வானில் கிளம்பி மறைந்தான். ரகுபதி வந்து பார்க்க அங்கு யாருமில்லை.

அதன் பின்பு இராகவன் சீதையையும் தம்பியையும் அழைத்துக் கொண்டு சரபங்க மகரிஷியை அடைந்தான். அவரை எல்லோரும் பணிந்தார்கள். அவரும் இவர்களை வரவேற்றுத் தக்கபடி உபசரித்தார், "இப்பொழுது இங்கு வந்திருந்தவன் தேவேந்திரன்தான், ராம! நான் பிரும்ம லோகம் செல்லுகிறேன். என்னை அழைத்துப் போக வந்தவன் அவன். புருஷோத்தமா! நீ இங்கு வந்திருக்கிறாயென்று அறிந்தேன். உன்னை என் அதிதியாகக் கொண்டு கௌரவிக்காமல் நான் பிரும்ம லோகம் செல்ல என் மனம் இடம் தரவில்லை. தருமதேவதா சொரூபியான உன்னோடு இருந்து பேசிவிட்டுப் போக வேண்டுமென்று காத்திருக்கிறேன். மனிதர்களில் தலை சிறந்தவனே! என் தவ மகிமையால் சேமித்து வைக்கப் பட்ட அநேக புண்ணிய பலன்கள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் உனக்குச் சமர்ப்பிக்கிறேன். அவைகளை அங்கீகரித்து ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்றார். சர்வஜ்ஞனல்லவா ராகவன் இதன் கருத்தை அறிந்தவனாக முனிவரைத் தன் தாமரைக் கண்களால் குளிரக் கடாக்ஷித்தான்.

[எவனுக்கு எல்லாவற்றையும் அர்ப்பணஞ் செய்யப்பட வேண்டுமோ அவனுக்கே சரபங்கர், நன்குணர்ந்து சமர்ப்பித்தார் போலும்! முன்பு இதே போல் அனசூய தேவியார், ஜானகியை அன்புடன் வரவேற்றுக் கௌரவித்து "என் தவப்பயனுல் நான் அடைந்த புண்ணிய பலன்கள் பல; உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்" என்ருள். மகாத்துமாக்கள் தவஞ் செய்து சித்தியடைகிருர்கள். எனினும் அச்சித்திகளின் பலனை அவர்கள் தங்களுக்காகப் பயன் படுத்திக் கொள்கிறதில்லை யென்ற சங்கற்பத்தைத் தெரிவித்தாள் அவ்வம்மையார். கடைசியுல் அப்பலன்கள் எங்கிருந்து உருவாகினவோ அந்த மூல சக்தியிடமே அவைகள் அர்ப்பணம் செய்யப் பட வேண்டு மென்பதையும் எடுத்துக் காட்டுகிருள். (மானிட உலகில் சமுதாயமே மேம்படச் செய்ய உதவும் இப்படிப்பிணை, பின்வரப் போகும் பாரதம் சரம சுலோகத்தால் செவ்வனே தெளிவாக்க விருக்கிறது) நிற்க: இவ்வாறு வேண்டின அனசூயையை நோக்கி அவ்வுத்தமி வைதேகி வரத்தையா வேண்டி நிற்பவள்? உத்தம பத்தினி; "நாங்கள் காட்டில் வசிக்கிரும்; என் நாதன் ராமனுக்கு யாதொரு ஆபத்தும் நேரிடாது வரமருளும்" என்று கேட்டிருக்கலாம். எனினும் உண்மைப் பதிவிரதையன்றே அவள்! அனசூயையுன் தவ மகிமையை சீதை துணையாய் தேடிக் கொடுத்தால் அவன் சுய ஆண்மைக்குக் குறைவல்லவா? அதன் சுய வலிவின் முன் எதுவும் எதிர் நிற்காதென்று திட உறுதி கொண்ட மைதிலி வரமொன்றும் வேண்டாமென்றுரைத்து விட்டாள். அம்மெய் ஞானியான பெரியம்மையார், அப்பயனை ஆடை ஆபரணங்களில் புகுத்தி அவ்வரசிளங் குமரியை கண் முன்னே அணியச் செய்து அன்புடன் அன்றிரவு அவளைக் கணவரிடம் அனுப்புகிருள்! ஜானகியும் கணவனை அடைகிருள். அவள் மூலம் தன் தவ வலிமையையும் பலன்களையும் அவைகளின் மூல இடமான எந்த இடமோ அங்கே அர்ப்பணம் செய்து விடுகிருள். தத்துவமறிந்த அறிவாளிகளே இதை உணர முடியும் என்று அவளுக்கு நன்கு தெரியும். கடவுளிடம் நாம் அன்ருடம் ஆத்ம வணக்கத்தைக் கோயிலின் சிலை ரூபமான மூர்த்தியின் மூலம் செலுத்துவதும் இத்தகையத் தத்துவத்தைக் கொண்டது போலும்!

[இங்மே சரபங்க மகரிஷியும் தமது தவப்பயன்களை எங்கே அவைகள் சேர வேண்டுமோ அவ்விடத்தில் அர்ப்பணஞ் செய்கிருர், தயரதன் மகனையே கடவுளாகக் காண்கிருரோ? அல்லது, 'மனிதர்க்குள் மகா உத்தமன். அவனிடம் தான் உண்டு அர்ப்பணம் செய்யத் தகுந்த யோக்யதை. அங்குச் சமர்ப்பித்தால் கடவுளுக்கே போய்ச் சேர்ந்து விடுமென்ற திடநம்பிக்கை கொண்டதாலோ, எனது சொத்துக்கள்—தவத்தாலடைந்த பலன்கள்—அனைத்தும் பெற்றுக் கொள்" என்கிருர்.]

[சரி என்று ஆமோதிக்கிருன் சீதாபதி. இதுவும் ராமனின் ஜீவிய சரித்திரத்தில் ஒரு ருசிகரமான அபூர்வ கட்டமாகிறது. முனிவர்கள், ரிஷிகள், தேவர்கள், அரக்கர்கள் இவனைக் கடவுளாகக் காண்கிருர்கள். சரபங்கர் பிரம்மலோகம் செல்ல விருப்பினும் "உன்னைக் காணுது போவேனு? உன்னிடத்தில் இவைகளைச் சமர்ப்பித்து விட்டு என் கர்மங்களை விட்டுப் பந்தம் நீங்கி, இவ்வுடலையும் தீயில் அர்ப்பணஞ் செய்து விட்டுச் செல்ல விருக்கிறேன்" என்கிருர். இச்சமயங்களிலெல்லாம் ரகுபதி "ஆம் நான்

கடவுள்தான்'' என்று ஆமோதிப்பதுமில்லை, 'இல்லை இல்லை, நான் கடவுள் இல்லை' என்று வாய்விட்டு மறுப்பதுமில்லை. தான் மனிதனென்றே கருது கிறான், மனிதனைப் போலவே எண்ண மிடுகிறான். மற்ற எண்ணங்களை வலுவில் அகற்றுகிறான். மனித சுபாவம் கொண்டு அதை வேண்டுமென்று ஒவ்வொரு வாய்ப்பிலும், சந்தர்ப்பத்திலும் மென்மை படுத்துகிறான்; புதிய உயர்வைத் தீட்டிக் கொடுக்கிறான். நம் நல்லுணர்ச்சிகளை எழுப்புகிறான். நம்மோடு கலக்கிறான். நான் செய்வது போல் நீங்களும் செயலாற்றுங்கள். அதனால் நீங்களும் உயர் பதவி யடைவீர்கள் என்று போதிக்கிறான்.

[மாமுனிவரின் அரும்பெரும் பலன்களைப் பெற்று ஆமோதித்துவிட்டு, பின்பு அவைகளுக்கும் தனக்கும் ஒன்றும் சம்பந்தமில்லை என்கிறபடி முனி வரைப் பார்த்து "உங்கள் சமர்ப்பணத்தை ஏற்றுக் கொண்டேன். தயவு செய்து இக்காட்டில் நான் வசிக்கத் தகுந்த ஓர் இடத்தைக் காண்பிக்க வேண்டுகிறேன்'' என்றான், நம் போன்ற ஒருவனாக. (லட்சம் ரூபாய் கொண்ட ஒரு "செக்"கை வாங்கிப் பையில் பத்திரப் படுத்தி விட்டு, இதை நன்கொடையாகக் கொடுத்தவனிடம் காலணா வெற்றிலை பாக்குக்காக யாசிப்பது போன்றிருக்கிறது இச்செயல். இது அற்பத்தன மென்று சொல்வதற்கில்லை. கொடுத்தவன், கொண்டவன் என்ற ஏற்றத்தாழ்விற் கிடங்கொடுக்காது, இருவரும் சமமே யென்று நிரூபிப்பதாகவும், தாம்பூலம் என்பது ஒரு இன்றியமையாத ஒருவரை யொருவர் பிணித்து உறவாடும் சம்பிரதாயம் என்பதையே எடுத்துக் காட்டுவது போலும்!)

முற்றிலுமுணர்ந்த மெய்ஞ்ஞானியேனும், ராகவன் கேள்விக்குகந்து, வசிக்க ஓரிடத்தைக் காட்ட முடியாதா? அவர் சொன்ன பதில், "ராம! தரும சிந்தையுள்ளவரும் தருமத்தையே பின்பற்றுபவருமான ஸுதீக்ஷண ரென்ற பெரியவர் இங்கே வசித்து வருகிறார். அவர் உனக்கு நன்மையைச் செய்வார். நீ சென்று அவரைத் தரிசி. அவர் உனக்கு வசிக்குமிடத்தைக் காட்டுவர். இதோ காணும் இம்மந்தாகினி நதியை எதிர் நோக்கிச் செல்'' என்கிறார்.

இதே மாதிரி ஒவ்வொரு ரிஷியும் ராமருக்குத் தகுந்த ஓர் இடத்தையும் காணவேண்டிய பெரியவரையும் சொல்லிப் போகிறார்கள், ராமனும் அவர்களுக்கிசைந்து அவ்வாறே செய்கிறான். பின்பு பெரியரான சரபங்க முனி ராமனைப் பார்த்து, "அப்பா ஒரு க்ஷணப்பொழுது என்னைப் பார்க்க வேண்டும்'' என்று சொல்லி, அவன் பார்க்கும்போதே அருகில் ஜ்வாலை யுடன் தயாராயிருந்த தீக்குண்டத்தில் இறங்கினார்.

[தன்னை இந்திரன் அழைத்துப் போக வந்தானென்று சொன்னவர் பிரும்மலோகம் செல்லக் காத்திருப்பதாகக் கூறியவர் தம் தவப் பலன் களை அர்ப்பணம் செய்து விட்டுக் கர்மம் துறந்தவர்—தம் ஆத்மா போய்ச் சேருமிடத்தை நன்கறிந்தவர்—தீயை வளர்த்து அதில் உடலை சுட்டெரித்து விடுபட்டுப் போக நிற்பவர்—ராமன் வரவுக்காகக் காத்திருந்து அவனைக் கண்டுவிட்டு "அப்பா ஒரு நிமிஷம் என்னைப் பார்'' என்று ராமனின் கடாக்ஷத்தை வேண்டுகிறார். கடவுளைப் பிரத்தியட்சமாகக் காண்கிறார் கண்டும், தன் நிலையில் நின்று தன் கருமஞ் செய்ய வேண்டி, தன் கடமை

யைச் செய்ய பிரும்ம லோகஞ் செல்கிறார். கடவுளைக் காண்பவர் மற்றொன்றைக் காண்பரோ? எனினும் மனிதனாய் வந்தவன், அவனவன் கடமையைச் செய்ய வேண்டுமென்ற சிறந்த கருத்தைப் போதிக்க எண்ணியோ என்னவோ இவ்வாறு ராமனைப் பார்த்த வண்ணம் எரியும் தீயில் குதித்து மறு நிமிஷம் மறைகிறார்.]

இதை அங்கிருந்து அனைவரும் கவனிக்கின்றனர். ரகுநாதன் தம்பியையும், மனைவியையும் நோக்கி, "பார்த்தீர்களா என்ன ஆச்சரியமான நிகழ்ச்சி இது" என்கிறான் சாதாரண மானிடனைப் போல்.

அடுத்த நிமிஷம் அத்தீக்குண்டத்திலிருந்து சூரியன் உதிப்பது போல் ஜகஜ்ஜோதியாய்க் கிளம்புகிறது ஒரு யௌவன உருவம், அது ஆகாசத்தை நோக்கிக் கிளம்பி சென்று மறைகிறது! பிரும்ம லோகத்தில் அப் பெரியாருக்குத் தகுந்த வரவேற்புடன் ஓர் உயர்ந்த இடம் அமைகிறது.

---

## 6, முனிவர்கள் அடைக்கலம் வேண்டுதல்

சரபங்க முனிவர் இப்படித் தீயிலே குதித்து வானில் மறைந்ததும் அங்கு கூடிய முனிவர் அனைவரும் தாசரதியிடம் வந்து அடைக்கலம் புகுந்தனர். அங்கு—சித்திரகூடத் தவசிகள்—ராமனை விட்டுச் சென்றனர். இங்கு பம்பா நதி வாசிகளும், மந்தாகினி நதி முனிவர்களும் ராமனை அரக்கர்களிடமிருந்து தங்களை ரட்சிக்கப் பிரார்த்தித்தனர். இங்கு சரபங்க ஆச்ரமப் பிரதேசத்தில் வசித்து வந்தவர்கள். வைகானஸர், வால்கில்யர், ஸம்பிரக்ஷாலர், மரீசிபர். அச்மகுட்டர் ஆகிய தவசிகள்; இவர்கள் இலைகளை உண்பவர்கள்; ஒரே ஒரு தானிய மணியைத் தின்று தவசு புரியும் தந்தோலுகர், எப்பொழுதும் நித்திரை யின்றிக் கழுத்தளவு நீரிலேயே நின்று தவஞ் செய்யும் உன்மஜ்ஜகர்: உடலையே படுக்கையாகச் செய்து கொண்டு தவம் புரியும் காத்ரசையர், இரவும் பகலும் நின்ற வண்ணமே தவங் கிடக்கும் அசய்யர்; வெட்ட வெளியிலே கிடக்கும் அப்ரவகாசகர் முதலியோரும் குழுமி இருந்தனர். ஆகாரத்தை விட்டவர்கள்; நீரையே அருந்துபவர்கள், காற்றையே புசிப்பவர்கள், சதா ஈரத் துணியுடனிருப்பவர்கள், ஐந்து தீயில் தவம் புரிபவர்கள், பரம யோகிகள், ஐம்புலன்களை வென்றவர்கள், எல்லோரும் தவத்தினால் ஒளி வீசப் பெற்றவர்கள்; இவர்கள் தாங்கள் அரக்கர்களால் துன்புறுத்துப் படுவதை ராமனிடம் சொல்லி முறையிட்டனர்.

ஸ்ரீ ராகவன் அவர்களுக்கெல்லாம் அபயமளித்தான். கொடிய அரக்கர்களை அறவே ஒழித்து விடும் லட்சியத்துடன் தான் வந்திருப்பதாகவும், அவர்களைக் காப்பது அரசனின் பொறுப்பும் கடமையுமென்று அவர்கள் நினைப்பூட்ட வேண்டியதில்லையென்றும், அவர்கள் நலனுக்குழைப்பதே தான் எடுத்த விரதமென்றும் சொல்லி, அவர்களைத் தேற்றினான். இனி அவர்கள் அரக்கருக்கு அஞ்சவேண்டியதில்லை யென்று தெளிவுறுத்தி அவர்களுடன் சரபங்கர் முன் சொன்ன அருகாமையிலுள்ள ஸுதீக்ஷ்ணர் என்ற ரிஷி ஆச்ரமம் நோக்கிச் சென்றான்.

---

## 7 சுதீக்ஷ்ணர் சந்திப்பு

எல்லா முனிவர்களுடன் கூடவும் லட்சுமணரும் சீதையும் பின்பற்ற ராமன் ஸுதீக்ஷ்ண முனிவரின் ஆச்ரமத்தை நோக்கி நடந்தான். முன்பு விராதன் 'நீ சரபங்கரைப் போய்க் காண வேண்டும். உனக்கு அவர் நன்மையைச் செய்வார்' என்றான். ராமன் அவ்வண்ணமே சரபங்கரைத் தரிசித்த போது, அவருடைய தவப்பலன்களை யெல்லாம் கோசலேந்திரனிடம் அர்ப்பணஞ் செய்து பிரம்மலோகம் சென்றார்.

[இதில் ரகுநாதனுக்கு ஏற்பட்ட நன்மை என்ன? ரகுநாதனைத் தெய்வமாய்க் காண்போர்க்கு கடுந்தவ மியற்றிய கடவுள் பக்தியிலேயே நின்ற பெரியோர்களுக்கு, கடவுள் தானகவே உருவங்கொண்டு நேரில் வந்து அநுக்ரகிக்கிறார் என்பது நிதரிசனமானது போலும்! அவனை உத்தம மானிடனாகவே கருதிப் போற்றுவோர்க்கு, அவன் அரும் பெரும் தவப் பெரியோரைக் கண்டு தரிசித்து ஆசிபெற்று வருவது புலனாகும். சரபங்கர் கோரியபடி ஸுதீக்ஷ்ண ரிஷியைக் காணச் சென்றான். ஒவ்வொரு பெரியாரிடமும் தனக்கு வசிக்க ஓரிடம் தேடி உரைக்க வேண்டுமென்று கோருகிறான். அவர்களுக்கன்றோ தெரியும் உற்ற இடம்! எந்த இடத்தில், பெரியோரிடம் இத்தகைய பக்தி கொண்டவன், வாசஞ் செய்தால் அவர்கள் இலட்சியம் விக்கினமின்றி ஈடேறுமோ, அவ்விடத்தை அவர்கள் தான் அறிய முடியும். இவனுக்கு எவ்விடமானாலும் அக்கறையில்லை. அவர்கள் பயத்தைப் போக்கடிக்க எந்த இடம் உகந்ததாகுமோ அதை யறிய விரும்பினான்.]

ஆகையால் முனிவர்களுடன் ஸுதீக்ஷ்ணருடைய இடம் சேர வெகு தூரம் நடக்க வேண்டியதாயிற்று. ஏராளமான நீர் நிரம்பியோடும் நதிகள், அழகிய சிறு ஓடைகள், பள்ளத் தாக்குகள், முட்புதர்கள், மேகத்தை யொத்த மலை இவைகளைக் கடந்து உயர் மரங்களடர்ந்த காட்டினில் வழி நடந்தார்கள்.

பயங்கரமான இக்காட்டினில் ஏகாந்தமான ஓரிடம் கண்ணைக் கவர்ந்தது. அந்தப் பிரதேசத்தில் சாந்தி என்னும் உணர்ச்சி இயற்கை யுருவங் கொண்டு விளங்கா நின்றது. எங்கும் மணம் கமழும் பல வண்ண புஷ்பச் செடிகொடிகள்; மரக்கிளைகளில் தொங்கிய மரவுரிகள்; இவைகளினிடையே ஒரு ஆச்ரமம் நல்வரவாகுக வென்று அவர்களை அழைத்து நின்றது. அதினுள் தூய ஒளி வீசும் தவ மகிமையால் துலங்கிய ஸுதீக்ஷ்ண முனிவர் வீற்றிருக்கக் கண்டார்கள். அத்தபோதனரைக் கண்டவுடன், கோசலைச் செல்வன் "தருமனுரே! ஸத்தியத்தில் நிலை பெற்றவரே, மகரிஷியே! நான் தசரத குமாரன்; ராமன் என்னும் பெயரினன். தேவரீரைத் தரிசிக்க வந்துள்ளவன், பணிகிறேன்" என்றான்.

மாமுனிவர் தரும மூர்த்தியாய் விகசித்த ராமமூர்த்தியைக் கவனித்தார்; உள்ளங் களித்தார். பணிவாய் வந்த இளைஞனை இரு கரங்களாலும் பற்றித் தழுவி ஆசி கூறி, "வீரனே! தருமாத்மாக்களுள் உத்தமனே! உன் வரவு நல்வரவாகுக. உன்னால் இப்பொழுது வந்தடையப் பட்ட இந்த ஆச்ரமும் சோபையுற்று மிளிர்கிறது. உனக்காகத்தான் நான் இங்கு காத்திருந்தேன். நான் தேவலோகம் செல்ல வேண்டியவன். நீ உன் ராஜ்

யத்தை விட்டுச் சித்திரகூடம் வந்திருப்பதை யறிந்தேன். என் தவங்கள் சித்தி பெற்றன வென்று தேவராஜன் எனக்குத் தெரிவித்தான். அவைகளை இதோ உனக்கு அர்ப்பணஞ் செய்கிறேன். அவைகளை அங்கீகரிப்பாயாக'' என்ருர்.

எல்லோரிடத்தும் பிரியமாயிருப்பதையே தன் வாழ்க்கை லட்சியமாய்க் கொண்ட கருணாமூர்த்தி காகுத்தன், அவ்வாறே அவைகளை அங்கீகரித்ததாக விளம்பினன். பின்பு "சுவாமி! நான் வசிப்பதற்கு ஓரிடம் நியமிக்க வேண்டுகிறேன்'' என்ருன். மேலும் அவன் அவரைப் பார்த்துச் சொல்கிருன்:—"தேவரீர், எல்லோரும் க்ஷேமமாயிருக்க வேண்டுமென்று உள்ளங் கொண்டவரென்றும் எல்லா ஜீவராசிகளின் நன்மையில் ஊக்கமுடையவரென்றும் கௌதம வம்சத்து மகாத்மாவான சரபங்க முனிவரால் உணர்ந்தேன்''

மகரிஷியின் மனம் இவைகளைக் கேட்டு மகத்தான மகிழ்ச்சியடைந்தது. தான் வெகு நாளாய்க் கொண்ட கோரிக்கை அன்று ஈடேறியதாகக் கண்ட அப்பெரியார், "அப்பனே! ராம, நீ இங்கேயே வாசஞ் செய்யலாம். ஆனல் இங்கு ஒரு குறை உண்டு. அதென்ன வென்ருல்:—கொஞ்சமும் பயமென்பதே கொள்ளாது மான் கூட்டங்கள் எதேச்சையாய் இவ்வாச்ரமத்துள் நுழைந்து திரிந்து இரைச்சலிட்டு அமைதியைக் குலைக்கின்றன. இதைத் தவிர இவ்விடத்திற்கு வேறு தோஷம் ஒன்றுமில்லை'' என்ருர்.

முனிவரின் முறையீடு மன்னவன் மகனின் சிந்தனையைக் கிளப்பிற்று. இதன் கருத்தென்ன? மான்கள் ரிஷிகளின் ஆச்ரமங்களில் வசிப்பது சகஜம் எனினும் அவைகள் உட்புகுந்து எதேச்சையாய் ஓடித் திரிந்து அமைதியைக் குலைப்பதில்லையே, ஆகையால் இவைகள் மான் உருக் கொண்ட மாய அரக்கர்களா? இவைகளை எப்படியும் ஒழித்துக் கட்ட வேண்டும். கோதண்டத்தை இறுகப் பற்றினன். முனிவரைப் பார்த்துச் சொல்கிருன்: "பூஜ்யரே! அந்தக் கொடிய சுபாவங் கொண்ட மான்கள் அனைத்தையும் இடிபோன்ற கூரிய பாணமொன்ருல் வீழ்த்தித் தள்ள வேண்டும். இதைச் செய்தேனுகில் இப்புனித இடம் அவைகளின் குருதி சொட்டும் சடலங்களால் அசுத்தமடையுமே, சுவாமி! உங்கள் மேல் இதனல் ஏதாவது அசுத்தம் நேரிடின் அதை விடக் கஷ்டம் எதுவுமிருக்காது. ஆகவே இங்கு மான்கள் பாணத்தால் வதையுண்டு உயிர் நீத்த இடம்—வெகு காலம் வசிப்பதற்கு ஏற்றதாகாது. வேறு இடம் செல்லவேண்டும். இதை நீங்கள் அறிவீர்களென்று எண்ணுகிறேன்'' என்று சொல்லி விட்டு சீதையுடனும் தம்பியுடனும் நதியில் சந்தியா வந்தனஞ் செய்யப் புறப்பட்டான்.

அன்றிரவு அவர்கள் ஸுதீக்ஷ்ணரது ஆச்ரமத்தில் எல்லோராலும் கௌரவிக்கப் பெற்று அங்கேயே தங்கினர்கள்.

## 8 தண்டக வனத்தினுட் புகுதல்

ஸுதீக்ஷ்ண முனிவரின் அதிதிகளாக ராம லட்சுமணர்களும் சீதையும் நன்கு உபசரிக்கப் பட்டவர்களாய், மறுநாள் அதிகாலையில் அவ்விடம் விட்டகன்றனர். ரகுவீரன் ஜானகியுடனும் லக்ஷ்மணனுடனும் கருநெய்தல் மலர் கமழும் குளிர்ந்த தடாகத்தில் நீராடி பரிசுத்தமாய் முறைப்படி அக்னியையும் மற்ற தேவதைகளையும் உபாசித்துப் பின்பு கடவுள் துதி செய்து, காலைக் கடனை முடித்தார்கள். பின்பு, சுதீக்ஷ்ணரிடம் வந்து, "சுவாமி! புண்யாத்மாவான உங்களால் வரவேற்கப்பட்டு, இரவை இனிது கழித்தோம். எங்களுடன் வந்திருக்கும் முனிவர்கள் மேலே செல்ல எங்களைத் துரிதப் படுத்துகிறார்கள். ஆகையால் நாங்கள் செல்ல விடை யளிக்க வேண்டும்" என்றான் ரகுநாதன்.

முனிவரும் அவர்களுக்குப் பரிவுடன் ஆசி கூறி, "ராமச்சந்திரா! உன் நிழல் போல் கூடவே வருகிற ஜானகியுடனும் லக்ஷ்மணனுடனும் காட்டினிடையே சுகமாய்ப் போய் வா, வீரனே! உன்னை அழைத்துப்போக வந்த இவ்வாத்ம ஞானிகளான தண்டகா வன வாசிகள் ஆசை நிறைவேறட்டும், சென்று வாருங்கள், வனத்திலுள்ள அவர்கள் ஆசிரமங்களைக் கண்டு நீ களிக்கப் போகிறாய். ஏராளமான கனிகள், புஷ்டியளிக்கும் கிழங்குகள், பூச்சொரியும் நந்த வனங்கள், சாந்த ரூபமான மான்கள் அழகு பொருந்திச் செல்வமாய் வளர்க்கப்படும் கிளி முதலிய பறவைகள், மலர்ந்து அழைக்கும் தெளிந்த நீரையுடைய தாமரைத் தடாகங்கள், மணலில் பாய்ந்தோடும் தெள்ளிய நீரோடைகள், மிக்க ரம்மியமான நீர்வீழ்ச்சிகள், கம்பீரமான மயில் கூட்டங்கள், வனப்பு வாய்ந்து மனச்சாந்தியளிக்கும் மறைவிடங்கள், இவைகளை அங்கங்கே கண்டு களிக்க விருக்கிறீர்கள். செல்வனே, சென்றுவா! குழந்தாய், சௌமித்ரீ! நீயும் இனிது சென்றுவா. திரும்பி இவ்வாச்ரமம் சுகமே வந்து சேர்வீர்களாக" என்று அன்புடன் ஆசிகூறி அனுப்பி வைத்தார்.

அயோத்தி அரண்மனை வாசிகள் பெரியோரை அடிபணிந்து வணங்கிப் புறப்பட்டனர். பல முனிவர்களும் பின் தொடர்ந்தனர். அப்பொழுது சீதா பிராட்டி, அவ்விரு சகோதரர்களுக்கும், வெற்றியளிக்கும் இரு அம்பறுத் தூணிகளையும் வில்லுகளையும் கண்ணைப் பறிக்கும் கத்திகளையும் எடுத்துக் கொடுத்தாள். ஆயுதபாணிகளாய் வீரம் பொலியும் வன்மை துலங்க கம்பீரமாய் மூவரும் கடும் வனம் புகுந்தனர்.

## 9 சீதையின் சாத்வீக மதியுரை

வில்லும் வாளும் ஏந்தி ஆண் சிங்கம் போல் கம்பீரமாய் நடந்து செல்லும் கோதண்டபாணியை கவனிக்கிறாள் கோசலை மருமகள். சாவதானமாக புன்னகை பூத்து பேசவாரம்பிக்கிறாள்.

"தருமம் என்பதே வாழ்க்கையின் இலட்சியமும் இலட்சணமுமாகும். நெறி முறையில் செல்வதே உயர் வாழ்வு. இவ்விஷயத்தில் சில விதிகளும்

விலக்குகளும் உள. மதி இழந்து பாவங்கள் செய்தால் வாழ்க்கை பாழ் டைந்துவிடும். மூன்று மகத்தான பாவங்கள் இவ்வுலகின் நேர்மையை நிர் மூலமாக்குகின்றன. இவைகளில் முதலாவது பொய்யுரைத்தல் எனும் தீமை. இதைப் போல் கொடியது எதுவுமில்லை. இதைக் காட்டிலும் பெரியவைகள் இரண்டு தோஷங்கள் உண்டு. அவை, பரதாரமடைவது, நிரபராதியை இம்சிப்பது. இவைகளொன்றும் உங்களிடத்தில் கனவிலும் இடம் பெருவென்று நன்கறிவேன். பொய்யென்பதே அறியாத நீங்கள் முன்னும், இப்போதும், இனியும் அதை யுரைக்கப்போவதில்லை. பரதார மிச்சை என்பது உங்கள் சுவாசக் காற்றிலுமில்லை என்பதை என்றும் மற வேன். மானவத் தலைவ ! தன் பத்தினியிடமே நிலையுற்றவர் நீங்கள். ஆகை யால் பரதார கமனமென்பது உங்கள் கனவிலுமில்லை. ஆனுல் மற்ருெரு தோஷமான இம்சை என்பது இப்பொழுது உங்களைப் பற்ற விருக்கிறதோ வென்று கவலையுறுகிறேன். மாசற்ற ஒளி வீசும் திருமேனி கொண்டவரே உங்களிடத்தில் ஸத்தியமும், தருமமும்—உலகமும் அதை இயக்கும் சக்தியும் குடி கொண்டிருக்கின்றன. மகாபாகுவே ! உலகப் பெரியோர்களான ஜிதேந்திரியர்கள் இதை அறிவார்கள். இந்திரியங்களை எவ்வாறு அடக்கி ஆள்கிறீர்களென்பதை நானறிவேன். ஆனுல் இப்பொழுது மூன்ருவதான பிராணி இம்சை இங்கு வந்தடைய மிரட்டுகிறதென்று ஏதோ எண்ணம் உதிக்கின்றது.

"வீரரே ! முனிவர்களுக்கு அபயமளித்தீர்கள். அரக்கர்களை மாய்த்தல் என்ற பிரதிக்ஞை செய்தீர்கள். இக் கடும் தண்டகவனத்தில் புகுந்தது இந்நிமித்தமாகவே என்று கொள்கிறேன். இதனுல் என் மனம் குழம்பு கின்றது. நாதா ! இவ்வனத்தின் உட்செல்வது அவசியந்தானு ? இதனுல் உங்களுக்கு அபகீர்த்தி உண்டாகுமோ வென்று அச்சங் கொண்டு நடுங்கு கிறேன். காரணம் இதுதான்.

"அரசைத் துறந்து நாட்டைத் தவிர்த்து கானகமேகி தவக் கோலங் கொண்டு எளிமைத் துறவிகளாய் வசித்துவிட்டு, இப்பொழுது ஆயுதமேந்தி க்ஷத்திரியத் தன்மையில் அரக்கர் வதைக்காகத் தண்டகவனம் நுழைவது தகுதியாகுமா ? இங்கு ராட்சதர்களைக் கண்ட மாத்திரம் நீங்கள் தரித்த வாளும் வில்லும் செயலிலிறங்குமே ! அக்கினி அருகிலிருக்கும் கட்டையை எரிக்காது விடுமோ ? நாணேற்றிய வில்லும் கண்ணிற்பட்ட பிராணிகளை இலக்காக்குவது இயல்புதானே ? முன்ஞெரு காலத்தில் இந்திரன் ஒரு தவ முனியின் வேள்வியைத் தடை செய்ய எண்ணி அவரிடம் ஓர் சிறந்த கத் தியை ஒப்படைத்தான். அதைத் திருப்பிக் கொடுக்கும் வரை அதைப் பாதுகாத்து வைப்பது தன் பொறுப்பு என்றெண்ணிய அம்முனிவர் அக் கத் தியைத் தன் கையிலேயே வைத்துக் கொண்டு திரிந்தார். முதலில் அக்கத்தி கொண்டு தருப்பையை அறுத்தார். பின்பு தன்னை இம்சிக்க இருக்கின்றன வெண்ணி கொடிய மிருகங்களை வெட்டினுர். பின்பு அவைகளைத் தேடிக் கானகமெலாம் அலைந்து எல்லாவற்றையும் வெட்டி வீழ்த்தலானுர். அவர் அறம் அழிந்தது. தவங் குலைந்தது, வேள்வியை விட்டு வேட்டையாடுவதில் காலங் கழித்து முற்றிலும் நாசமடைந்தார். இத்திருஷ்டாந்தத்தை அறி யாதவர்களா நீங்கள் ? ஆயுதத்தின் சகவாச விளைவு இவ்வாறிருக்கையில்

நீங்கள் தவசித் தன்மையை விட்டு ஆயுதமேந்தி க்ஷத்திரியத் தன்மையில் ஈடுபடுவது எனக்குக் கடும் பயத்தைக் கொண்டு விடுகிறது. வேள்வி காத்தல் என்பது க்ஷத்திரிய தருமமாயினும், நிரபராதிகளான இத்தண்டகவன வாசிகள், சிலர் அரக்கர்கள் என்ற காரணத்தினுல் மட்டும் உயிரிழக்க வைப்பது நேர்மையாகுமோ?

"ஆச்ரம வாசிகளுக்கு ஆயுதமேந்தியவர்களும், உபவாசமிருந்து துறவிகளானவர்களுக்கு க்ஷத்திரிய தன்மையைக் கைப்பற்றுவதும் முரண்பாடல்லவா? இக்காட்டிலிருக்கும் வரை நீங்கள் தவசிகள், நாடு திரும்பியதும் க்ஷத்திரியர்கள், இவ்வொவ்வொரு நிலேயும் தருமமானதே. உலகத்திலுள்ள எல்லாம், —உலகமே— தருமத்தில் கட்டுண்டிருப்பதை உங்களுக்கு நான் எடுத்துரைக்க வேண்டுமா?

"தவசித் தன்மையிலும் இப்பொழுது ஆயுதங்கள் வகித்து வீரம் பொலிய க்ஷத்திரியத் தலைவராகக் காட்சியளிக்கிறீர்கள். உங்கள் பிரதிக்ஞையைக் கண் முன் நிறுத்தும் அவ்வாயுதங்கள் இராட்சதர்களைக் கண்ட போது மாய்த்துத் தள்ளத் துடித்துத் தெறிக்கின்றன. அவைகளின் உணர்ச்சி உங்கள் கவனத்தில் எதிரொலி காண்கிறது. விற்பிடித்த தோளும், வாள் பிடித்த கையும், வாளாவிருக்குமா? இம்சை விளையுமே! வில்லேந்தி வதை செய்யும் வீராவேசன் மனமடக்கிய, மரவுரி பூண்ட முனிவனுவனே? ஸத்தியமும், தருமமும், சாந்தியும், தவமும் வாள் முனையிலும் வாளியின் கூரிலும் சிதறுண்டு போகுமே!

"ஸௌம்யரே! எப்பொழுதும் சுசி மதியுள்ளவர் இங்கு தபோவனத்தில், தவசிகளின் அகிம்சா தருமத்தை மேற்கொள்வதே தகுதியாகுமன்றோ? சர்வ ஞானியான உங்களுக்கு இதை நான் எடுத்துரைக்க வேண்டுமா? அப்புறம் உங்கள் இஷ்டம்" என்றாள்.

---

## 10 சத்தியாக்கிரக பொறுப்பு—ராமன் உபதேசம்

வைதேகியின் சத்தியாக்கிரக உபதேசத்தைக் கவனித்தான் விதேக மன்னன் மருமகன். ஆம்; முற்றிலும் உண்மையே! வேல் பிடித்த கையும் வாள் பிடித்த கையும் வாளாவிருக்காதே! தன் தன்மையையிழந்த தவசியின் தசையைத் தெளிவு படுத்தினாள். அவள் எச்சரிக்கை இன்றியமையாதது தான். ஆனால் மனதை அடக்கும் மாண்புடைய ஆணவத்திற்கல்ல அவள் அறிவுரை. அது அவள் கருணையின் பிரபாவம். தன்னிடத்திலும் அக்கருணையை எழுப்ப முனைகிறாள் என்று கண்டு, ரகுநாதன் தரும நெறியை விட்டகலாது நின்றிருப்பதை நினைப்பூட்டி, ஜானகியைப் பார்த்துப் பதில் சொல்கிறான்:—

"தரும மறிந்த ஜனகநந்தினி! உன் மொழி உன் குலத்தையும் சீலத்தையும் நன்கு விளக்குகிறது. நன்மை பயக்கும் நன்மொழி அது. தேவி! ஆபத்திலிருப்பவர்களை ரட்சிக்கும் பொருட்டே க்ஷத்திரியர் வில் தரிக்கிறார்

கனென்று நினைப்பூட்டினது உண்மையே. இந்தத் தருமத்தையே தான் நானும் பின்பற்றுகிறேனென்று உனக்குச் சொல்லவும் வேண்டுமா? சீதே! கடுந்தவம் பூண்ட முனிவர்கள் அரக்கர்களால் துன்புறுத்தப் பட்டு ரட்சகனைத் தேடித் தாங்களாகவே வந்து என்னைத் தண்டகவனத்தில் சரணமடைந்தார்கள். காட்டில் பலவித நியமங்களோடு தவம் புரியும் அவர்கள், அரக்கர்களால் இம்சிக்கப் பட்டார்கள்! தங்களைக் காக்கும் பொருட்டு அவர்கள் என் உதவியை—நான் க்ஷத்திரியன்; பிறரைக் காக்க வேண்டியவன், என என்னை நாடி வந்தார்கள். நான் அவர்களுக்கு அபயமளித்ததாக வாக்குக் கொடுத்தேன். 'இனி உங்களுக்கு அரக்கர் பயமென்பது இல்லை' என்று உறுதி கூறினேன். ராட்சதர்களால் அவர்கள் எவ்விதம் அல்லலுறுகிறார்களென்பதை அம்முனிவர்கள் வாயிலாக நீயும் கேட்டிருந்தாய். இந்நிலையில் என் கடமை என்ன? க்ஷத்திரிய தருமம், அரசனின் பிரதிநிதியின் கடமை, பெரியோர்களுக்குத் துணை புரிவதின் அவசியம், அண்டினவர்களை ஆட்கொள்ளும் ஆண்மையின் அறம், கொடுத்த வாக்கைக் கடைப் பிடித்தல் இவைகள் ஒவ்வொன்றும் புறக்கணிக்க இயலாத தருமமல்லவா? நாம் காட்டில் வசிப்பதில் என்ன பயன்? தனியே நின்று தவமியற்றி சுயநலனடைவதில் பயனென்ன? நம் பணியை நிறைவேற்றுவிடில் கடமையை இழந்தவர்களாவோம். இதற்கு உன் மனம் தான் ஒப்புமா?

"மைதிலீ! காட்டில் வசிக்கும் நான் முனிவர்களின் பரிபாலனம் என்ற கடமையை, அவர்கள் கேட்காமலே செய்ய வேண்டியவன். அவர்கள் வேண்டிய பின்னரும்—அவர்களுக்கு வாக்குக் கொடுத்த பின்னரும்—அதை புறக்கணிக்க முடியுமா! ஆனால் அகாரணமாய், வில் பிடித்த ஆத்திரத்தில் அபராதஞ் செய்யாதவர்களைக் கூட வதை செய்ய நேரிடுமென்று எச்சரித்தாய். ஆம்! அவ்வெச்சரிக்கை செய்தது உனக்குகந்ததே. அவ்விதம் நேரிடாது பார்ப்பது என் பொறுப்பேயாகும். மாசற்றவளே! ஜானகி. உன் எச்சரிக்கையை வரவேற்கிறேன். நிரபராதிகளை – அவர்கள் யாராயினும் சரி – ஒரு நாளும் இம்சியேன். என் கீர்த்தியை மனதில் வைத்து எனக்கு என் கடமையை நினைப்பூட்டினாய். நல்லது. உன் கருணையும் பிரேமையும் அபாரமானவைதான். என் உயிரினும் மேம்பட்டவளாய் உன்னை என் இதயத்தில் பிரகாசிக்க வைக்கின்றன. உன் அரும் பெருங் குணங்கள் தரும விதிகளை வலிவுறுத்தின. உத்தமியான உன்னை மிகவும் பாராட்டுகிறேன்" என்று பிரீதியுடன் அவள் சந்தேகத்தைத் தவிர்த்தான். அவளும் ஆறுதலடைந்து மனச் சாந்தி நிலவும் புன்னகை பூத்துக் கணவனைப் பின்பற்றி நடந்தாள்.

[கூடச் சென்ற முனிவர்கள் சத்தியாகிரகத்தின் தத்துவத்தையும் பொறுப்பையும், விளைவுகளையும் தங்கள் மனத்தில் ஆராய்ந்து கொள்ளவில்லையென்று யார் சொல்ல முடியும்? அரக்கர்கள்தான், எனினும் குற்றமற்றவர்களானால் அவர்கள் தண்டனைக் குள்ளாகார்கள். ஆகவே அவர்களிடம் அருயை கொள்ளலாகாது என்று இச்சதிபதிகள் சம்பாஷணை தெளிவாக்கியது போலும்!]

## 11. மாண்டுகர்ணியின் மகிமை

க்ஷத்திரிய யாத்திரை தண்டக வனத்தினுள் சென்று கொண்டிருந்தது. முதலில் ராமனும், அவன் பின் சீதையும், அவ்விருவர் பின்னே லட்சுமணனும் ஒற்றையடிப்பாதை வழியே போய்க் கொண்டிருந்தனர். அரக்கர் தொந்தரவோ, இடையூறோ ஒன்றும் காணப்படவில்லை. வனப்பு வாய்ந்த வனம்; நிழலடங்கிய சோலைகள்; குளிர்ந்த நீரோடைகள், விதவிதமான பட்சிக்கூட்டங்கள்; விலங்கினங்கள்; யானைகள்; புள்ளி மான்கள்; எல்லாம் பார்வைக்குத் தென்பட்டு மறைந்தன. வெகுதூரம் கடந்தாய் விட்டது. இடையிடையே சற்றுச் சிரம பரிகாரம்.

மாலை வேளை. விண்மணி வானில் பொற்பொடியைத் தூவிக் கொண்டிருந்தான். கண் கொண்ட கானகக் காட்சி இன்பமளித்தது. இதைப் பெருக்கியது இன்னொரு நிகழ்ச்சி. செந்தாமரை வெண்டாமரை பூக்களுடன் ரம்மியமான ஒரு தடாகம். வாத்தியங்களின் இன்னிசை அதினின்று வெளிக்கிளம்பிப் பாவிற்று. இவ்வற்புத நிகழ்ச்சியைக் கண்டு அவர்கள் பிரமித்து நின்றனர், தங்களுடன் கூட வந்து கொண்டிருக்கும் முனிவர்களுள் "தருமபிருத்" என்பவரை நோக்கி இதென்ன ஆச்சரிய அனுபவமென்று ராமன் வினவ, அவர் சொல்லலுற்றார்:

"ராம! இத்தடாகம் எப்பொழுதும் குளிர்ந்த, களங்கமற்ற, வற்றாத நீரைக் கொண்டு விளங்கும், "பஞ்சாப் ஸரஸ்" என்று இதன் பெயர். மாண்டுகர்ணி என்ற முனிவரின் தவமகிமையால் இது சிருஷ்டிக்கப் பட்டது. நீரில் நின்ற வண்ணம் வாயுவை உட்கொண்டு அநேக காலம் அவர் கடுந்தவமியற்றினார். இவர் லட்சியத்தை யாவராலும் அறிய முடியவில்லை. கடவுளைக் காண வென்றனர், சிலர். மற்றவர்—தேவர்கள் முதலானோர் இத்தவ மகிமையைக் கண்டஞ்சினர். இம்முனிவர் நம்முடைய பதவிகளைக் கைக்கொள்ளப் போகிறார் என்று கவலையடைந்தனர், இவ்வாறு சொல்லிக் கொண்டு தேவர்கள் ஒன்றுகூடி யோசித்து இவர் தவத்தைக் கலைக்கச் சூழ்ச்சி செய்தனர். மின்னொளி கொண்ட ஐந்து தேவ கன்னிகைகளை முனிவரிடம் ஏவினர். அவரோ ஐம்புலனவித்த மெய்ஞ்ஞான முனிவர். இவர்கள் செய்ததை அறிந்து, அவர்கள் மனோரதம் கை கூடட்டும் என்று எண்ணி, தன் தவ மகிமையால் இக்கன்னிகைகளை அநுபவிப்பதின் பொருட்டு நிரந்தர யௌவனம் கொண்டு இவர்களை மணந்து இத்தடாகத்தினுள் ஒரு சுவர்க்கம் போன்ற மாளிகை நிர்மாணித்து அவர்களுடன் சுகித்துக் கொண்டிருக்கிறார். இக்கன்னிகைகள் விளையாடும் போது கேட்கப்படும் ஆபரண ஓசையும், இன்னிசை ஒலிக்குக் சம்பவம் தான் இது" என்றார்.

[மாண்டுகர்ணி முனிவர் இகபர மிரண்டும் நன்கறிந்த முனிவர் என்று தருமப்ருத் விளக்கினார். பலப் பல பெரியோர்கள் பலப்பல லட்சணங்களில் தங்கள் லட்சியங்களில் சித்தியடைந்திருக்கிறார்கள், சிலர் கொடைக்குணத்தால் கடவுளைக் கண்டவர்கள், துர்வாசர் போன்றவர்கள் கோபத்தால் சித்தியடைந்தவர்கள், விச்வாமித்ரமுனி விடா முயற்சியில் முற்போக்கடைந்தவர்; வசிஷ்டர் ஞானத்தில் நின்றவர்; சிபிச் சக்கரவர்த்தி பரோபகாரத்தாலும், பலி தானத்தாலும் சித்தியடைந்தவர்கள், இங்கு மாண்டு

கர்ணி என்பவர் கேவலம் விஷய சுகத்திலேயே பற்றற்று அவவைந்து கன்னிகைகளுக்குச் சதா மனங் குளிரவைத்து அவர்கள் ஆனந்தத்திலேயே கடவுளைக் காண்கிறவர் போலும்—பின்பு ஸ்ரீ வில்லிபுத்தூரில் உதித்த கோதைப்பிராட்டி ஊடல் என்ற உணர்விலேயே கடவுளைக் காணப் போகிறதை (அவளும் மனிதப் பிறவியே) சூசிப்பது போலும்!" என்று இவ்வெண்ணங்கள் எழுந்தனவோ என்னவோ]

இவ்விருத்தாந்தத்தைக் கேட்ட இராகவன் லட்சுமணனைக் கண்டு "கேட்டாயா இந்த ஆச்சரியத்தை?" என்று மிகவும் மகிழ்ந்தான். பின்பு யாத்ரிகர்கள் அந்திப் பொழுதில் கானக நடுவில் முனிவர்கள் ஆச்ரம வரிசைகளைக் கண்டு அங்கு வந்தடைந்தார்கள்,

சாந்தி தாண்டவமாடு மிடம் அது. ஒவ்வொரு பர்ணசாலையும் ஒவ்வொரு தனித்தன்மை வாய்ந்து துலங்கியது. ஒவ்வொரு தவசியும் ஒவ்வொரு விதமாய்த் தவஞ் செய்து வந்தவர், எல்லாரும் ராமனையும் சீதையையும் லட்சுமணனையும் பரிவுடன் நன்குபசரித்துக் கௌரவித்தனர். தண்டக வனத்தில் அந்த இடத்திலேயேதான் அநேக ஆச்ரமங்கள் அமையப் பெற்றிருந்தன. மற்றப் பக்கங்களில் முனிவர்கள் வசிக்கவில்லை. அவர்களை ரட்சிக்கும் பொருட்டு அரசகுமாரர்கள் வந்தவர்கள், அங்கேயே தங்கினர். சில விடங்களில்—ஆச்ரமங்களில்—பத்து மாதங்களும் மற்ற இடத்தில் ஐந்து, மூன்று, இரண்டு மாதங்களும் தங்கி. இப்படி பத்து வருஷங்களை அங்கேயே கழித்து விட்டார்கள். இதுவரை முனிவர்கள் அரக்கர்களாலோ மற்றவர்களாலோ யாதொரு இடையூறையும் கண்டார்களில்லை. தலை சிறந்த வில்லாளிகள், தைரியம் என்பது இவர்கள் காரணப் பெயர். ராட்சதரைத் தண்டிப்பதென்ற லட்சியத்திலிருப்பவர்கள். இவர்களை வெல்வதரிதென்பது விராதன் வதத்திலிருந்து தெளிவாயிற்றென்று எல்லா அரக்கரும் ஓடி ஒளிந்துவிட்டனரோ என்னவோ? எல்லோரும் ஒன்றாய்க் கூடி என்ன செய்வதென்று ஆலோசனையிலிருந்தார்களோ என்னவோ. எல்லோரும் ஒன்று கூடி ஒரே மூச்சாய் இம்மனிதச் சிங்கங்களைத் தகைக்க எண்ணி முனைந்து ஒன்றாய் மடிய விருந்தார்களோ என்னவோ, அப் பர்ணசாலைகள் பிரதேசத்தில் பத்து வருஷங்கள் நிலையான அமைதி நிலவி நின்றது.

இக்காலம் இனிது முடிந்ததும், ராம லட்சுமணர்கள் திரும்பவும் சுதீக்ஷ்ண முனிவரிடம் வந்து சேர்ந்தார்கள். இவ்வளவு காலம் எப்படி கழித்தார்களென்றும், என்ன நிகழ்ச்சிகள் நடந்தேறினவென்றும், இதன் விளைவுகள் என்ன வென்றும் இவர்களின் அனுபவம்தான் என்ன வென்றும் அம்முனிவர் திரும்பி வந்தவர்களைக் கேட்கவுமில்லை; அவர்கள் சொல்லவுமில்லை. ஒருநாள் ரகுராமன் அம்முனிவரிடம் அங்கு அகஸ்தியமுனி வசித்து வருவதாய்க் கேட்டறிந்து அவரைத் தரிசிக்க ஆசைப்படுவதாய்ச் சொன்னான், சுதீட்சண முனிவரும் உள்ளங்களித்து, "அம்மகரிஷியைச் சென்று காணுங்கள். என்று நானே உங்களிடம் சொல்லவிருந்தேன். இப்பொழுது நீயாகக் கேட்டது மிகவும் சந்தோஷத்தைக் கொடுக்கிறது" என்று சொல்லி அந்த ஆச்ரமத்திற்கு நேரே தெற்கு திசையில் நான்கு யோஜனை தூரம் சென்றதும் அகஸ்திய முனியின் தம்பியின் ஆச்ரமமிருக்கிறது; அங்கு சென்று அவரைக் கண்டு பேசினால் அவர்

அகஸ்தியரின் ஆச்ரமத்தை தெரியப்படுத்துவார் என்று உரைத்தார். "அந்த வழி மிக மேடு பள்ளமுடையது; பிப்பலி மரங்களடர்ந்தது; பல வகைப் புஷ்பங்கள். பழங்களும் நிறைந்தது; வித விதப் பறவைகளால் சப்திக்கப் பெற்றது; ரம்மியமான அந்த ஆச்ரமப் பிரதேசத்தில். பல தெளிந்த நீரையுடையவைகளும் புண்ணியமானவைகளும், ஹம்ஸங்கள், நீர்ப்பறவைகள் நிரம்பியவைகளும், சக்கிரவாஹங்களாலழகு வாய்ந்து விளங்கும் தாமரை யோடைகள் பல இருந்தன. அங்கு ஓரிரவைக் கழித்து காலையில் அடர்ந்த காட்டின் தென்திசையில் சென்றால் ஒரு யோஜனை தூரத்தில் அகஸ்தியருடைய ஆச்ரமத்தைக் காணலாம்" என்று விவரித்தார்.

தாசரதியும் சீதையும் லட்சுமணனும் அங்குச் செல்ல உடனே புறப்பட்டார்கள். வழியில் ராமன் அகஸ்திய முனியின் மகிமையைப் பற்றித் தம்பியிடம், வாதாபி என்ற கொடிய அரக்கனை அகத்தியர் அழித்த வரலாற்றை விவரித்துரைத்தான். பின்பு இவர்கள் அம்முனியின் தம்பியின் ஆச்ரமம் வந்தடைந்தனர்.

---

## 12 அகஸ்தியர் மகிமை

அன்றிரவு சுதீக்ஷ்ணர் சொன்னபடி அகஸ்தியர் தம்பியின் பர்ண சாலையில் தங்கிவிட்டு அதிகாலையில் அவரிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டனர், அயோத்யாபுரி யாத்ரீகர்கள். சிறிது தூரம் சென்றதும் அகஸ்தியர் ஆச்ரமம் தென்பட்டது. அதை யணுகி தானும் ஜானகியும் வந்திருப்பதாகவும் முனிவரைத் தரிசிக்கக் காத்திருப்பதாகவும், அப்பர்ண சாலையிலுள்ள முனிவரிடம் தெரிவிக்குமாறு, ராமன், லட்சுமணனை அனுப்பினான். அவனும் ஆச்ரமமடைந்து அகஸ்தியர் சீடர் ஒருவரிடம் அச்செய்தியை வெளியிட்டார். சீடரும் உட்சென்று தவமகிமையால் பிரகாசித்துக் கொண்டிருக்கும் முனிவரைப் பணிந்து அயோத்தி மன்னன் புதல்வர்கள் ஜானகியுடன் வந்திருப்பதை தெரிவித்தான். அவர்களை உடனே உள் அழைத்து வருமாறு கட்டளையிட்டார் முனிவர். "இவர்கள் இந்த பிரதேசத்தில் வந்திருப்பதை அறிந்தேன். அவர்களைக் காண நானும் காத்திருந்தேன்" என்றார்.

[மற்ற முனிவர்களின் வரவேற்பும் இவ்வகஸ்திய முனியின் வரவேற்பும் வித்தியாசப்பட்டிருப்பது கவனத்திற்குரியதாகிறது. அவர்கள் ராமனைக் காணத் துடிதுடித்துக் கொண்டிருந்தனர். சிலர் இங்கு தங்கள் வாழ்க்கை முடிவடைந்தும் விண்ணுலகம் செல்வதையும் விட்டு அவனைக் காணக் காத்திருந்தனர். ஸ்ரீ ராமபிரானைக் கண்டு, தகுந்த முறையில் உபசரித்துத் தங்கள் தவமகிமையால் அடைந்த பலன்களை அவனிடம் சமர்ப்பித்து அவைகளை அங்கீகரிக்க வேண்டினர். முன் சென்று எதிர்கொண்டு பரிவுடன் அழைத்து வந்து வரவேற்றனர். அவர்கள் அவனது அவதார ரகசியத்தை யறிந்தவர் போலும்! உள்ளங்களித்துப் பூரித்தனர். ஆனால்

இவர் வெளிவரவுமில்லை, மற்றவர்களின் உணர்ச்சியையும் கொண்டு செயலாற்றினதாகவும் காணோம். ரகுநாதன் இந்த இடத்தில் வந்திருப்பதாக முனிவர்க்குத் தெரியும். தாமும் அவனைக் காண வேண்டுமென்றிருந்ததாக வெளியிடுகிறார் ஏன்? அவனைத் தன் பர்ணசாலையடைந்த ஒரு அதிதியாகக் கௌரவித்துப் பின்பு அவனுக்கு உதவி புரியுமாறு உயர்ந்த அஸ்திரங்களையும் ஆயுதங்களையும் அளிக்கிறார். முன்பு முனிவர்களின் தவப் பலன்களைப் பெறுகிறான். இங்கு இப்பெரியாரின் அஸ்திரங்களைக் கொள்கிறான். எந்த மானிடன் நேர்முறையில், அறநெறியில் நிலையாயிருந்து தன் கடமையைச் செய்கிறானோ அவனுக்குக் கடவுள் அனுக்கிரகமுண்டென்று எடுத்துக் காட்டுவது போல இயங்குகிறது இந்நிகழ்ச்சி.]

உள்ளே ஒரு மகா புனிதமான காட்சி! விசாலமான ஆலயம் போன்ற மண்டபம். அதில் மகாவிஷ்ணுக்கும் பிரம்மதேவனுக்கும் பரமேச்வரனுக்கும் தனித்தனியே சன்னதிகள். அவ்வாறே அக்கினி, வாயு, வருணன், இந்திரன் முதலிய தேவர்களுக்கும் தனித்தனியாய் கோயிலமைக்கப்பட்டிருந்தது. காயத்ரீ தேவியும், ஆதிசேஷனும். கார்த்திகேயரும். தரும தேவதையும் தனித்தனி விடுதியில் தரிசனமளித்தனர். இவைகளை ஒவ்வொன்றாகக் கவனித்துக் கொண்டே செல்லும் போது, முனிவர்பிரான் தமது சிடர்களுடன் எதிர் கொண்டழைக்க வந்து கொண்டிருந்தார். உடனே ராமன் "லட்சுமணா! பகவானான அகஸ்திய முனிவரைக் கவனி. எல்லாத் தவங்களுக்கும் இருப்பிடமாகப் பிரகாசித்து விளங்குகிறார். பார்த்தாயா" என்று சொல்லிவிட்டு மிக்க ஆத்மத் திருப்தியுடன் முனிவர் பாதங்களில் பணிந்தான்.

மாமுனி உடனே வந்தவர்களை முறைப்படி வரவேற்று, ஆசனத்திலமர்த்தி அதிதி பூஜை செய்து முடித்தார். மகாத்மாவான இவர் ஒவ்வொரு தேவதையையும் உபாசிப்பவர். தனித்தனி ஆலயமெழுப்பி வழிபடுபவர்; தவமகிமையில் சுயம்பிரகாசமாய்க் காந்தி பொலிந்து விளங்குபவர்; எல்லோர் பூஜைக்கும் உரியவர்; இவர் அதிதி பூஜையில் ஈடுபடுவானேன்? என்ற எண்ணம் மற்றவர்க்கு உதித்ததாகக் கண்டாரோ என்னவோ, அவர் தாசரதியை நோக்கி சொல்லுகிறார்:—"காகுத்தா! வாழ்க்கையின் முதலானதும் முற்றிலுமானதுமான விதி, அவனவன் தன் தன் கடமையைச் சரிவரச் செய்வதன்றோ? நானோ முனிவன், அவனைத் தேடி வந்தவர்கள் அவன் அதிதிகளாகிறார்கள். அதிதி பூஜைக்குரியவராகிறார்கள், இக்கடமையைச் செய்யாத எந்த முனியும் தன் தன்மையைப் பொய்யாக்கினவனாகி இறைச்சி யுண்ணும் மிருகத் தன்மை யடைந்தவனாகிறான். ஆகவே அதிதி பூஜை செய்தாக வேண்டும். அதிலும் எப்படிப் பட்ட அதிதி நீ என்று சொல்லவும் வேண்டுமா? சகல லோகத்திற்கும் அரசன், தருமத்தைக் கடைப் பிடித்தவன், சுத்த வீரன், பூஜைக்கும் கௌரவத்திற்கும் உரியவன், அருமையான அதிதியாய் வந்திருக்கிறாய்!" என்று சொல்லிப் பழங்களையும் கிழங்குகளையும் பலவகைப் புஷ்பங்களையும் கொண்டு எதேஷ்டமாக அவர்களைப் பரிவுடன் உபசரித்தார்.

பின்பு, ராமனைப் பார்த்து "புருஷோத்தமா! ரத்தினங்கள் இழைத்ததும், விச்வகர்மாவினால் நிருமிக்கப்பட்டதுமான இந்த பெரும் வில்லானது

தெய்வத்தன்மை வாய்ந்த விஷ்ணுவின் வில். சூரியனை நிகர்த்த உயர்ந்த பாணங்களையுடையது. வீண் போகாத சக்தி பெற்றது. பிரம்மாவினால் கொடுக்கப்பட்டதால் 'பிரம்ம தத்தம்' என்று பெயர் பூண்டது. நெருப்புப் போல் ஜ்வலிக்கும் கூர்மையான பாணங்கள் நிறைந்த எப்போதும் வற்றா மலிருக்கும் இதோ விருக்கும் இவ்விரு அம்புறாத் தூணிகளும் எனக்கு இந்திரனால் அளிக்கப்பட்டன. இதோ தங்க வுறையுடனிருக்கும் இப் பொற் கத்தி ஒன்று. ராம, முன்பு தேவாசுர யுத்தத்தில் கொடும் அசுரர் களைப் போரில் கொன்று தேவர்களுக்கு உதவி புரிந்த விஷ்ணுவால் உப யோகிக்கப்பட்ட வில் இது. சத்துருக்களை மாய்ப்பவனே! இவைகளைப் பெற்றுக்கொள். நீ வெற்றி பெறுவாய். வீரனே! பிளக்க முடியாத கவச மொன்று இந்திரன் கொடுத்திருக்கிறான், அதையும் ஏற்றுக் கொள். இன்னும் ஒன்று சொல்கிறேன். வெற்றி விஷயத்தில் சந்தேகங் கொண்டு எப்பொழுது மனந்தளர்வுற்றுக் கவலையுறுகிறாயோ, அப்பொழுது இந்திர னுடைய சாரதியான மாதலி என்பவன் குதிரைகள் பூட்டிய திவ்வியமான இந்திரனின் ரதத்தை உன்னிடம் கொண்டு வருவான்," என்று ஆசி கூறி ஆயுதங்களை ராமன் முன் வைத்தார். இதைக் கேட்ட எல்லோர் மனமும் ஓர் புது உற்சாகம் அடைந்தது.

[இப்படி ஒவ்வோர் மாமுனியும் தானடைந்த தவப்பயனை சக்கரவர்த் தித் திருமகனுக்கு அர்ப்பணம் செய்கிறார், இவையெல்லாம் உண்மையான சாத்வீகத் தியாக மென்றும், இவைகள் கடைசியில் எங்கு சேரவேண்டு மோ அங்கேயே செலுத்தப்பட்டவைகளென்றும், அப்பலன்களால், இது வேண்டும், அது வேண்டுமென்று யாசிக்காது உலக சம்ரக்ஷணை பொருட்டு சுயநலங் கருதாது தவப் பெரியார்கள் தியாகஞ் செய்து விடுகிறார்களென் றும், வியாக்யான பெரியோர்கள் விளக்கியிருக்கிறார்கள். எல்லா நதி களும் எல்லாம் கொள்ளும் கடலையடைவது போல், எல்லா தேவதைகளுக் கும் செய்யும் பூஜையானது ஸ்ரீ ஆதிகேசவனை யடைவது போல், கானக மேகிய கோதண்டபாணியை சாக்ஷாத் சர்வேச்வரனான ஸ்ரீமந் நாராயண னென்று கண்டு காட்டிலிருந்த கடுந்தவசிகள் தங்கள் தவப்பலன்களை அவனிடம் நேரில் சமர்ப்பிக்கிறார்கள் என்றும் சொல்லித் தந்திருக்கிறார் கள்.

[இது தவிர, நம் போன்ற பாமர மக்களின் பகுத்தறிவிற்கு இன் னொன்றும் புலனாகிறது. நீதி நெறி பிறழாத ஓர் மானிடன் தன் கடமை யைச் சரிவர ஆற்றிவரின் அவனுக்குத் துணை செய்ய பெரியோர்களின் ஆசிகளான தவப்பயன்களும் சித்திக்க விருக்கின்றன வென்றும் அவன் அரும் பெருஞ் செயல்களிலிறங்க இப்புனிதமான கண் மறைவான தவச் சக்தியும் காத்துதவலாமல்லவா?]

———

## 13 பஞ்சவடிப் பிராயணம்

இப்படி மாமுனி அகஸ்தியர் பேசிக் கொண்டிருக்கையில் சூரியன் மறையும் நேரமாகி விட்டது, இதைத் கண்ட பெரியார் "ராகவ ! ஆந்தைகள் மரக்கிளைகளில் வந்து கூடுகின்றன. மிருகங்களும் பறவைகளும் மறைந்து விட்டன. ஆகாசத்தில் இருள் பரவுகிறது. ஆகையால் நீங்கள் எழுந்து மாலைக்கடன்களை முடித்துவிட்டு இங்கேயே தங்கலாம்" என்றார். வந்திருந்தவர்களும் அவர் சொன்ன படியே செய்தார்கள்.

இரவு இனிதே இசைந்தது. விடிந்ததும் இராஜ புத்திரர்களும் ஜானகியும் நீராடிக் காலைக் கடனை முடித்து முனிவரைக் காணச் சென்றார்கள். அவரும் அவர்களை உபசரித்து ஆசிகூறி, "ராகவ ! தசரதர் வாக்கின் படி நியமிக்கப்பட்ட காலமும் அநேகமாக முடிவடையவிருக்கிறது. யயாதியைப் போல் தந்தை வாக்கைக் காப்பாற்றித் தசரதரைக் கரை யேற்றினாய்" என்றார்.

இராமன் "ஸ்வாமி ! உங்கள் அங்கீகாரம் பெற்று மிகவும் கௌரவிக்கப்பட்டேன். அவர் வார்த்தையை அவரே நிறைவேற்றி அவர் புண்ணிய கருமங்களாலேயே நற்கதியடைந்தார். நான் அவரைக் கரையேற்றினேன் என்பதில்லை. என் கருமத்தைச் செய்ய முனைந்தவன் நான். அதிருக்கட்டும் முனிவர் பெருமானே ! உங்களை ஒன்று கேட்க ஆசைப்படுகிறேன். அமங்களமாயும் வசிப்பதற்குத் தகாததாயுமிருந்ததாம் இப்பிரதேசம். இப்பொழுது எங்ஙனம் இத்தகைய பொலிவு பெற்று விளங்குகிறதென்பதை அறிய விரும்புகிறேன்" என்றான்.

அகஸ்தியர் உரைக்கலுற்றார் :—"ரகுநந்தனா ! இத்தேசத்து வரலாற்றைக் கேட்டாய். சொல்கிறேன் கேள். பார்க்கவ முனியின் சாபத்தாலும் இக்ஷ்வாகு குலத்துதித்த தண்டகனாலும் துறக்கப்பட்ட இவ்விடமானது மனிதர்களும் மிருகங்களுமற்றதாய் ஆயிற்று. விந்திய மலையின் தெற்கே அடிவாரம் ஐந்நூறு யோஜனை வரை மரஞ் செடி கொடிகளின்றி மிகப் பயங்கரமாய்க் கொடிய அரக்கர்கள் வசித்தற்குரிய கடு வனமாயிற்று. மழை இங்கு பெய்வதில்லை; கடுங்காற்று எப்போதும் வீசும், கட்டாந் தரையும், உயர்ந்த மண்மேடும், இருண்ட குகைகளுமுடையதாய்க் கொடிய விலங்குகளும், விஷ ஜந்துகளும் நிறைந்து, பலவகைப் பிணிகள் நிறைந்திருந்தது இவ்விடம். உயிருக்கு ஆபத்து விளைக்கக் கூடிய அபாயங்கள் இங்கும் இதைச் சூழ்ந்த புரதேசங்களிலும் எப்போதும் காணப்பட்டு வந்தன. அப்பொழுது நான் இமய மலையிலிருந்து தவம் முடித்துத் தெற்கு நோக்கி வந்தேன். மற்றப் பிரதேசங்களுக்கு இக்கோரமான இடம் எங்ஙனம் ஆபத்துகளை விளைவித்துக் கொண்டிருந்த தென்பதைக் கண்டறிந்தேன். இதை மீண்டும் நல்ல இடமாக்க நினைத்து, இங்குத் தங்கினேன். வாயு பகவானையும் வருணனையும் பிரார்த்தித்தேன். அநேக காலமாய்க் கொடும் வியாதி ரூபமாயிருந்த யமதூதர்களை என் தவப் பயனைக் கொண்டு அகற்றினேன். பருவ மழைகள் தவறாமல் பெய்து வந்தன. அதனால் குளிர்ந்த மதுரமான நீர்நிலைகள் பல இங்கு உண்டாயின. பறவைகளும் பிராணிகளும் நீர் அருந்த இப்பிரதேசத்திற்கு வந்து தங்கின. அடர்ந்த அரிய

பெரிய மரங்கள் ஓங்கி வளர்ந்தன. குளிர்ந்த காற்று வீசிற்று. பூமியும் மிக்க வளங் கொண்டு செழித்துத் திளைத்தது. மனிதர் சஞ்சாரம் செய்யத் தொடங்கினர். முனிவர்கள் பர்ணசாலை அமைத்துத் தவம் புரியலாயினர். ஆனால் அங்கங்கே அடிக்கடி அரக்கர்களின் இம்சை மாத்திரம் இருந்து வந்தது. நீ சித்திரகூடம் வந்ததும் அரக்கர்கள் முனிவர்களை இன்னும் கடுமையாய் உபத்திரவம் செய்வதில் முனைந்தார்கள். நீ தண்டக வனம் புகுந்து அங்கங்கே ஆச்ரமங்களில் வசித்து வந்த முனிவர்களிடம் சென்று அவர்கட்கு நிம்மதி கொடுத்தாய், இங்கு அவ்வுபத்திரவம் நீங்கின பாடில்லை. இங்கிருக்கும் ரிஷிகளுக்கு அபயமளித்து அவர்களையும் ரக்ஷிப்பாயென்று நம்புகிறேன். மூவுலகத்தையும் காத்து ரட்சிக்கும் வல்லவன் நீ என்பதை நானறிவேன். தலை சிறந்த ககுஸ்த வம்சத்தின் தனிப் பெரும் வீரனே! இக்ஷ்வாகு மகனான தண்டகன் என்பவனால் இவ்விடம் முன்பு சாபமடைந்து தவித்தது. அவ்வம்சத்துத் திலகனான உன்னால் இவ்விடம் நேரே கண்ணுறப்பட்டும், வசிக்கப்பட்டும் சாபம் நீங்கியதாயிற்று. இனி அதைப் புனிதமாக்க, இங்கு முடங்கி யிருக்கும் ராட்சதர்களை ஒழித்து எங்களை அவர்கள் அபாயத்தினின்றும் காத்து ரக்ஷிக்க வேண்டும்" என்று மொழிந்தார்.

ஆச்சர்யத்துடன் இவ்வரலாற்றைக் கேட்ட இக்ஷ்வாகு குல திலகன் அப்படியே ஆகட்டுமென்று இசைந்து பணிந்தான். முனிவரும் உள மகிழ்ந்து "அப்பா ராம! நீங்கள் இங்குச் சற்றுத் தங்கி இளைப்பாற வேண்டும். வெகுதூரம் நடந்து வந்திருக்கிறீர்கள். இரண்டு மூன்று நாளாய் ஒரே நடைதான். வைதேகியைக் கவனி. அவள் முற்றிலும் களைத்து இளைத்திருக்கிறாள். எந்நாளும் வழி நடந்தறியாதவள். பஞ்சினும் மெல்லிய அடியையுடையவள். சுக போகத்திற்கே உரியவள். இப்பொழுது இவ்வணங்கு உன்னைப் பின்பற்றிக் கானக மடைந்து கல்லிலும் முள்ளிலும் பரலிலும் கால் நடையாய்ச் சென்று உருமாறி வாடி வதங்கியிருக்கிறாள். அவள் இப்போது இங்குத்தங்கி இளைப்பாற வேண்டியது அத்தியாவசியம்; அவள் மனமும் உடலும் வாடாமலிருக்க வேண்டும்" என்றார்.

வைதேகி தனக்கு இயற்கையாயமைந்துள்ள அடக்கத்தினால் தலை குனிகிறாள். இதைக் கண்ணுற்ற முனிவரர் இன்னும் சொல்லிக் கொண்டே போகிறார். "அயோத்தி நகர்க் கதிபதியே! இந்த சர்வாங்க சுந்தரியின் நலனைப் பற்றி நீ கவனிக்க வேண்டுமென்று நான் உரைக்க வேண்டுமா?

"உலகில் சாமானிய ஸ்திரீகள் நல்ல தசையிலிருக்கும் கணவர்களைக் கொண்டாடுகிறார்கள். அவர்கள் துர்த்தசை யடைந்ததும் அவனிடம் வெறுப்புக் கொள்கிறார்கள், தங்கள் வாழ்வைக் கவனிக்க வேண்டியது கணவன் கடமை என்று சொல்லுகிறார்கள். [அக்கடமை எக்காரணத்தாலாவது கணவனுக்குத் தவறி விட்டால், தாங்கள் தங்கள் கடமையைச் செய்ய வேண்டுமென்று அவனை விட்டு நீங்கவும் செய்கின்றனர். மக்கள், என்றும் அவர்களை ரட்சிக்க வேண்டுமென்றும், எனினும் இதற்காக வாழ்வைக் குலைப்பதாவென்றும் தத்துவங்களைக் கூறி மனச்சாட்சி என்றும் வாதிப்பார்கள். இவ்வாதங்களின் பெயர் சுயநலன் என்பதை அறவே மறக்கிறார்கள்,] மின்னொளி போன்ற சக்தி வாய்ந்தது அவர்கள் மனோபாவம்,

அவர்கள் மனோவேகமோ கருடன், வாயு இவர்கள் கதியினும் விரைவானது வெகு தூரம் சென்று விடும். தனது என்ற தனிப்பட்ட தன்மை, வாளின் கூர்மையினும் விஞ்சியது. எதையும் பிளந்து வெளிவரும் சக்தி வாய்ந்தது ஆனால் ஜானகியோ இவைகளுக்கு விலக்கானவள், தான், தனது என்ற எண்ணமற்றவள். கணவனே அவளது உயிர் நாடி, அவன் தவிர மற்ற வைகளைக் கனவிலும் கருதாதவள். ஆதலின் அவளைப் பின்பற்றி அவனு டனே இருக்கிறாள். உள்ளமுறை செயல்கள் ஒன்றுபட்ட உத்தம சதிபதி கள் நீங்கள். மைதிலீ மணாளனே! காண்போருள்ளத்தில் குழந்தையுள் ளங் காணச் செய்யும் குணமணியே? நீஇங்கேயே சீதையுடன் இனிது வசிக்கலாம்'' என்று மொழிந்து களிப்பூட்டினார் பெரியார்.

சீதாபதி மாமுனிக்கு அஞ்சலி செய்தான். ''சுவாமி! உங்கள் ஆசி பெற்று நல்லறிவை யடைந்தேன். ஒரு விண்ணப்பம். ஓர் ஆச்ரமத்தைக் கட்டிக் கொண்டு தனியே வசிக்க எண்ணுகிறேன். அதற்குத் தகுந்த இட மொன்றை அடியேனுக்குக் குறிப்பிட்டருள வேண்டும்.'' என்றான்.

ஆத்மஞானியான முனிவர் சற்றுச் சிந்தனை செய்தார். பின்பு, ''மகனே பழங்களும், கிழங்குகளும் நிறைந்த ரம்மியமான, நீர்வள முள்ளதும், அழ கானதுமான பஞ்சவடி எனப்படும் ஒரு பிரதேசமிருக்கிறது. அது இங்கி ருந்து இரண்டு யோஜனை தூரம். அங்கு சென்று வசிப்பாயாக. அங்கே எல்லா வசதிகளுமுண்டு. அங்குச் சென்று உனக்கென்று பிரத்தியேகமாக ஓர் பர்ணசாலை யமைத்து ஜானகியுடன் இனிது வாழ்வாய்'' என்றார்.

முனிவரைப் பணிந்து ராமனும் சீதையும் லட்சுமணனும் ஆயுதம் தாங் கிக் கவலையின்றி அங்கிருந்த இலுப்பைக் காட்டைக் கடந்து, பெரியவர் குறிப்பிட்ட வழியே பஞ்சவடியை நோக்கி விரைவாகநடந்து சென்றார்கள்.

---

## 14 ஜடாயு தரிசனம்

மனிதன் தன் கடமைகளைச் சரிவரச் செய்தால் நல்லுதவிகள் எவ் வாறு தாமாகவே அவனை வந்தடைகின்றன வென்பது, அகஸ்தியர் தரிச னத்திலிருந்து இராமனுக்கு நிதரிசனமாயிற்று. இங்கு ராமன் ஜடாயுவைச் சந்திப்பது அவ்வுண்மையையே வலிவுறுத்துகிறது. அடர்ந்த காட்டினுள் புகுந்து அங்கு சூழ்ந்திருந்த பயங்கரமான தோற்றத்தைக் கண்ணுற்றுக் கவனமாய் நடந்தார்கள் அயோத்தி நகர்க் கோமான்கள்.

வழியிலே பருமனான உடலுடையதும் அதிக பராக்கிரமும் பொருந்தி யதுமான ஒரு கழுகரசைக் கண்டார்கள் அவர்கள். அது ஒரு ஆலமரத்தில் கம்பீரமாக வீற்றிருந்தது. அவர்களைப் பார்த்து அது மனத்தில் அன்பு ததும்ப ''மக்காள்! என்னை உங்கள் தந்தையின் தோழனென்று அறிவீர் களாக'' என்றது. இப்பிரியமான சொற்களைக் கேட்டு அவர்கள் அக்கழுகை மிகவும் போற்றிப் பாராட்டினார்கள். பின்னர் அது தன் விருத்தாந்தத்தை அவர்களுக்குப் பின்வருமாறு உரைத்துக் கொண்டே சென்றது.

"ஐயனே! முன்பு உலகில், சர்வேசுவரன் சிருஷ்டித்த சக்தியால் செயலாற்றத் தலைப்பட்டவர்கள் ப்ரஜாபதிகள் எனப்படுவர். அவர்களுள் முதலானவர் கர்த்தமர். அவருக்குப் பின்னர், விச்ருதர், சேஷர், சம்சரயர் பகுபுத்திரர், ஸ்தானு, மரீசி, அத்திரி, க்ருது, புலஸ்தியர், ஆங்கிரஸ், பிரசேதஸ், புலஹர், தக்ஷர், விவஸ்வான், அரிஷ்டநேமி, கடைசியில் கச்யபரென்பவர் ஆவர். இவர், தக்ஷப் பிரஜாபதியின் அறுபது பெண்களுள், அதிதி, திதி, தனு, காலிகை, தாம்ரை, குரோதவதை, மனு, அனலை என்ற சர்வலட்சணங்களும் பொருந்திய எட்டுக் கன்னிகைகளை மணந்து சுக வாழ்வு வாழ்ந்து, பின்னர் சந்ததிகள் உற்பத்திக்காக அவ்வெண்மரையும் அவர்கள் காரணப் பெயருக் கொத்த சிருஷ்டியில் நியமித்தார். இச்செயல் செய்ய நான்கு மனைவிகள் மாத்திரம் இசைந்தார்கள். இசையாத மற்ற நால்வரை அவர்களுக்குத் தகுந்த சந்ததிகளின் சம்ரட்சணைகளில் அமர்த்தினர். அதிதியினிடத்தில் பன்னிரண்டு ஆதித்யர்களும், எட்டு வசுக்களும், பதினொரு ருத்திரர்களும், அச்வினி தேவதைகள் இருவரும், முப்பத்து மூன்று தேவர்களும் பிறந்தார்கள். திதி யென்பவள் அசுரர்களை உண்டாக்கினள். முதலில் இம்மானிலம் அவர்களுடையதாயிருந்தது. மற்றவர்கள் பாம்பிற்கும், விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் மற்ற ஜீவ ஜந்துக்களுக்கும் மரங்களுக்கும், செடி கொடிகளுக்கும் காரண பூதர்களாகவும், பொறுப்பும் பாத்யதையும் பெற்றவர்களானர்கள். உலக ஜீவப் பிராணிகளின் சிருஷ்டி விருத்தாந்தம் இது. வினதை என்பவளுக்குக் கருடன், அருணன் என்று இரு புதல்வர்கள். எனக்கும், என் தமையனுன ஸம்பாதி என்பவருக்கும் அருணன் தந்தை. என்னை ச்யேனி மகனென்றும் ஜடாயுவென்றும் சொல்வார்கள். இக்காடு மிகக் கோரமானது, கொடிய விலங்குகளாலும் ராட்சதர்களாலும் நிறைந்துள்ளது. ஆகையால் நீ இசையும் பட்சத்தில், நான் உனக்கு எப்போதும் துணையாயிருந்து உங்களை ரட்சித்து வருவேன். அப்பனே! நீயும் லட்சுமணனும் வெளியில் போகையில் சீதையைப் பாதுகாத்திருப்பேன்." என்று சொல்லி முடித்தான் ஜடாயு.

[முன்பு உலகத்தில் சமுத்திரம் நதிகள் உலோகங்கள் முதலியன உண்டாக்கப்பட்டது விவரிக்கப்பட்டது. இங்கு ஜீவ ஜந்துக்களின் சிருஷ்டி ஜடாயு வாயிலாய் அறிவிக்கப்படுகிறது. இயற்கை என்பதும் அது மிளிர்வதும் அழிவதும் கடவுளின் செயல் என்பதும் எல்லா சிருஷ்டியும் தெய்வசக்தியால் தான் என்பதும், இவைகளின் உட்கருத்தைத் தெள்ளறிவுடன் துருவிப் பார்த்து நடத்தையையும் குணத்தையும் இயற்கைத் தன்மையுடன் ஒட்டிப் பார்க்க வேண்டுமென்பதும் இங்கு விளக்கப் படுகின்றன போலும்!]

## 15 தாம்பத்ய வாழ்க்கையின் தனிப் பெருமை

இப்படி ஜீவராசிகளின் உற்பத்தி வரலாற்றையும் அவைகளுக்கென்று தனித்தனி தேவதைகளையும் தெரிவித்து ஜடாயு தசரதர் நட்புக் கதையையும் சொல்லிக் கொண்டே வர, அவர்கள் அவ்வன மத்தியத்தில் வந்து சேர்ந்தார்கள்.

"அன்பா" என்று ராமன் தன் தம்பியை அழைத்து, "மகரிஷியால் குறிப்பிடப்பட்ட இடத்திற்கு வந்து விட்டோமென்று நினைக்கிறேன். அதோ பார்! பற்பல மலர்களோடு விளங்கும் மரங்களடர்ந்த பஞ்சவடி எனும் பிரதேசம் இதுதான். நாலா பக்கமும் நன்கு கவனி. எந்த விடத்தில் ஆச்ரமம் அமைக்கலாம்? நீர் வசதி, நில வசதிகளுள்ளதாய், காய்கனிகள் நிரம்பப் பெற்றதாய் சம வெளியான இடத்தில் பர்ணசாலை யிருக்க வேண்டும். ஜானகிக்கு மனக் களிப்பு உண்டாகும் வகையில் அது வாய்ந்திருக்க வேண்டும்" என்றான்.

தம்பி கவனிக்கிறான். அடர்ந்த காடு; கொடிய விலங்குகள் வாசம் செய்யும் இடம். எனினும் மனத்தைக் கொள்ளை கொள்ளும் இயற்கை எழில் மலிந்து கிடந்த இடம். சதிபதிகளுக்குப் பிரத்தியேகமாக மணம் கமழும் தாம்பத்ய வாழ்க்கைக் கென்றே வனப்பு வாய்ந்த உத்தியான வனமாய்க் கண்டான் அவன். "இனி நான் கொண்ட லட்சியம் ஈடேறப் போகிறது; இரவும் பகலும் கண் விழித்துக் காத்து சேவை செய்ய வந்தவன் நான். அது இங்குத்தான் சபலமாகும்" என்று உணர்ந்தானோ என்னவோ, அண்ணலை நோக்கி, அஞ்சலி செய்து "ஐயனே! நான் தங்களுடைய தாஸன். எந்த இடம் உங்களுக்குகந்தது என்று நீங்களன்றோ நியமிக்க வேண்டும்?" என்று அடிபணிந்தான்.

ராமன் தம்பியின் அறிவைப் பாராட்டி, சகல வசதிகளும் பொருந்திய ஓரிடத்தைக் காண்பித்தான். "இதோ பார், இது ஒரு சமவெளி. நாலு பக்கமும் பூக்கள் தொங்கும் அடர்ந்த மணங் கமழுஞ் சோலைகள், எதிரே வெண்தாமரை மலர் திகழும் தெள்ளிய நீரோடை, அழகுற்ற ஹம்சங்கள், சக்ரவாகப் பறவைகள் எவ்வளவு சாந்தமாகவும் உற்சாகமாகவும் நீரில் நீந்தி விளையாடுகின்றன. அதோ, அருகேயே கோதாவரி நதி மனத்திற்கு இன்ப மூட்டும் வகையில் அமைதியைத் தவழுகின்றது பார். இன்னும் கொஞ்ச தூரத்திலே மலைக் குன்றுகள் காணப் படுகின்றன. அவைகளின் தாழ்வரையில் மான் கூட்டங்கள், மயில்கள் உற்சாகமான நடனத்துடன் குகைகளின் உள்ளே புகுந்தும் வெளியே வருவதுமாயிருக்கின்றன. தங்கம், வெள்ளி, தாமிரம், முதலிய நிறங்கள் பொருந்தி விளங்கும் மலைகள் நம்மை அழைக்கின்றன. இந்தப் பக்கம், ஆச்சா, ஈச்சம், தமாலம், பலாமரங்கள் ஆகிய இவை கனிகளைத் தொங்க விட்டுக் கொண்டிருக்கின்றன, பின்னே நீவாரம், வேங்கை, புன்னை, அசோகு, திலக, சம்பக மரங்கள் புஷ்பங்களைக் காலைச் சூரியனுக்கு உதிர்த்து அழைக்கின்றன. அவைகளின் தேனைப் பருகும் வண்டினங்களின் ரீங்காரம் தம்புரா சுருதியை யொத்துக் கேட்கின்றன. மற்றொரு பக்கம் கவனி. பூக் ள்,

புதர்கள், கொடிகள், இவைகளுடன் விளங்கும் தாழை, சந்தனம், கடம்பு, எலுமிச்சை, கருங்காலி, பாதிரி முதலிய விதவிதமான செடிகளும் மரங்களும் என்ன ஏதேச்சாதிகாரம் செலுத்துகின்றன பார்! லட்சுமணா! இவ்விடம் மிகவும் மனோகரமாயும் பரிசுத்தமாயும் காணப் படுகிறது. இதுவே நாம் வசிப்பதற்குரிய இடம்'' இவ்விடத்தில் தகுந்தபடி ஆஸ்ரமத்தை அமைப்பாய் என்றான்.

அண்ணன் தனக்கிஷ்டமான இடத்தை லக்ஷ்மணனுக்குக் காட்டிச் சீதையுடன் நதிக்குச் சென்றான். அவ்வளவுதான்! உடனே வேலையில் இறங்கினான் தம்பி. ஒரு நிமிஷத்தில் பூமி சமமாக்கப்பட்டது. விரைவில் எழுந்தன சுவர்களும் தூண்களும்! வன்னிக் கிளைகளைப் பரப்பி, கெட்டி நாணற் கயிற்றால் முடையப் பட்டு, தருப்பை, மூங்கிலிலை, நாணல் முதலியவைகளால் விதானம் வேய்ந்து, அழகிய பரண் கட்டி, சுவர்களிலும், தூண்களிலும் அவைகளை நன்கு பொருத்தினான். பின்பு தாழ்வாரமும், மேடையும் படிக்கட்டும், வஃடா மலர் கொடிச் சாளரங்களும் அதே வேகத்தில் அப்பொழுதே கட்டி முடித்தான். பின்பு நதியில் ஸ்நானஞ் செய்து ஹோமம்'' முதலிய சடங்குகளைச் செய்து முடித்தான்.

நீராடித் திரும்பின ரகுநாதனின் சந்தோஷத்திற்கு அளவேயில்லை. ஜானகியும் மிக்கக் களிப்புற்றுக் கணவனுடன் அப்பர்ணசாலையின் அமைப்பையும் வனப்பையும் கண்டானந்தித்தாள்.

''அப்பனே! தலை சிறந்த சாமர்த்தியசாலி, உன்னால் நிர்மாணிக்கப்பட்ட இந்த ரமணீயமான பர்ணசாலை எத்தகைய நேர்த்தியைத் தெரிவிக்கிறது! உனக்கு நான் என்ன கைம்மாறு செய்வது?'' என்று அவனைத் தழுவிப் பாராட்டினான் ராமச்சந்திரன். ''லட்சுமணா! நீ தருமஞ்ஞன்; தருமத்தைப் பின்பற்றுபவன்; இங்கித மறிந்தவன்; இவைகளுக்கு இவ்வுயரிய இன்பமளிக்கும் அழகு வாய்ந்த பர்ணசாலையே அத்தாட்சி. நம் தந்தையின் பராமரிப்பு பெருமையை மெருகூட்டினாய். என்னையும் மைதிலியையும் ஆநந்தத்தில் பரவசமடையச் செய்தாய். எங்கள் திருப்தியில் மனங்களிக்கும் நீ பாக்யவான்'' என்று புகழ்ந்தான்,

இவ்வுண்மைப் புகழுரையைக் கேட்ட தம்பி ஒன்றும் பேசாது தலை குனிந்து வெளியே நின்று விட்டான். சதிபதிகள் இருவரும் மிக்க மன நிம்மதியுடன் புதிய மணமகனும் மகளும் புது வீடு புகுந்து மறுமலர்ச்சியில் களிப்புடன் உள்ளே இனிது அமர்ந்தனர். இந்திரன் சுவர்க்க போகத்தையொத்திருந்தது அச்சதிபதிகளின் இல்லற இன்பம். வெளியே இரவும் பகலும் காவல் புரிகிறான் இளையவன். அப்பிரதேசத்தின் எல்லையில் காத்துக் கண்காணிக்கிறான் ஜடாயு. தங்கு தடையற்ற பிரத்தியேக சதிபதிகளின் இல்லற வாழ்க்கை இனிதே சென்றது.

## 16 பரதனுக்கு லட்சுமணன் புகழ் மாலை

பஞ்சவடி பர்ணசாலையில் ராமனும் ஜானகியும் பிரத்தியேகமாக இல்லற இன்பத்தை இனிது சுவைத்துச் சுகித்து வந்தனர். அவர்கள் வாழ்க்கையில் இதுவே அன்பின் எல்லையை எட்டிய அருமையான பொற்காலம், சரத்காலம் முழுவதும் சந்திரனுடைய வெண்ணிலவின் ஆநந்தக் களிப்பையும் மெல்லிய காற்றின் நறுமணத்தையும் ஒன்று சேர்த்து அனுபவித்து மகிழ்ந்திருந்தனர் சதிபதிகள். பின்பு ஹேமந்தருது தனுர்மாஸம் (மார்கழி) ஆரம்பமாயிற்று,

முதல் நாள் இருள் மிகுந்த பனி பெய்யும் குளிர் காலம். விடியுங்காலை பிதுருக்கள் தர்ப்பணம் செய்யும் பொருட்டு ராமன் ஜானகியுடனும் தம்பியுடனும் கோதாவரி நதிக்குச் சென்றான். குளிர்ந்த சூழ்நிலை மனத்தைக் குளிர வைக்கிறது. பனியால் போர்க்கப் பட்டுப் பொருள்கள் தெளிவாக எவையும் புலனாகவில்லை. தம்பி சொல்கிறான்:—“அண்ணா! உங்களுக்குப் பரம இஷ்டமான காலம் வந்து விட்டது. பயிர் நிரம்பின புலம் பனிப் போர்வையால் பள்ளி கொண்டிருக்கிறது. நீரோ கையால் தொட முடியாதபடி அதி குளிர்ச்சியாயிருக்கிறது. பெரியோர்களும் சீலர்களும் தங்கள் பிதுருக்களை ஆக்ரயண பூஜைகளால் திருப்தி செய்யும் காலம் இது. பால், தயிர், நெய், வெண்ணெய் இவைகளை ஏராளமாய் மக்கள் அடையுங் காலம். அரசர்கள் பரிவாரங்களுடன் அக்காலத்தில் யாத்திரை செய்வார்கள், சூரியன் தக்ஷிணாயனத்தில் துலங்குகிறான், வடக்கே மங்கிய பகலில் மக்கள் மெதுவாகவும் சாவதானமாகவும் செயலாற்றுவார்கள். பனியால் உறைந்த இமயமலை, உதிக்கும் சூரியனை ஒரு தங்கப் பந்தாகக் கொண்டு, சிகரத்தில் வாகை சூடி விளங்குகிறது, நடுப்பகல் சௌம்மியமான வெப்பத்துடன் இன்பம் விளைக்கும் உற்சாகக் காலம் இது. நீரும் நிழலும் நிரம்பிய நற்காலம். கதிரவன் தன் உக்கிரத்தை விட்டு இயற்கையைக் களிக்க வைக்கிறான். காற்றும், மூடுபனியும், காலையும் மாலையும் ஜீவராசிகளை வெளியே வர வொட்டாதபடி செய்கின்றன. இரவு நீண்டு, சந்திரன் ஒளி மங்கி எங்கும் குளிர் மிகுந்து நடமாட்டத்தை ஒடுக்குகிறது.

“ராமச்சந்திரா! இக்காலத்தில், நகரத்தை விட்டு, அரண்மனை வாழ்க்கையைத் துறந்து தவசியாய்த் தேவரீரிடத்திலுள்ள பக்தியால் பரதன் குளிரிலும் இப்போது சரயூ நதியின் குளிர்ந்த நீரில் நீராடுவான். தரும நெறி வழுவாதவனும், ராஜ போகங்களை அனுபவிக்க உரிமையுற்றவனும், சுகபோகங்களில் திளைப்பவனுமான அவன் எங்ஙனம் இக் குளிரைத் தாங்குவான்? இந்திரியங்களை அடக்கினவன்; தாமரை இதழ் போன்ற கண்களால் எல்லோரையும் குளிரச் செய்பவன்; சுகுமாரன்; சியாமளன்; தரும மூர்த்தி; சத்தியவான்; சீலவான்; இனிமையாய்ப் பேசும் சுபாவமுடையவன் பகைமையைத் தன் நற்குணத்தால் அழிப்பவன்; முழுமனதுடன், சதா உங்களை ஆச்ரயித்து உங்கள் பாலுள்ள பக்தியில் பரவசமடைந்தவன்; இம்மையிலே சுவர்க்க மடையும் யோக்கியதை பெற்ற பாக்கியவான்; தன்னலமற்ற தியாகிகளில் தனிப் பெருந் தலைவன். குணத்தில் தாயைக் கொள்ளாதவன்” என்று தான் குளிரிலிருக்கும் நிலையில் பரதனைப் பற்றி

நினைத்து அவன் குணங்களைப் புகழ்ந்து கொண்டே போகிறான். ராமன் இதைக் கேட்டுக் கொண்டு வருகிறான்.

ஆனால், அவன், பரதன் தாயைப் பற்றின ஒரு சொல் ராமன் கவனத்தை இழுத்தது. அத்துறையில் எண்ணம் செல்லவிடாது லட்சுமணனைப் பார்த்து, ரகுநாதன், "அப்பனே, கைகேயியைப் பற்றி வசனமேன்? அவளைப்பற்றி இழிவாக நினைப்பதும் தகாது, அவள் நம் தாயல்லவா? இக்ஷ்வாகு நாதனான பரதனைப் பற்றி சொல்லிக் கொண்டே வந்தாய். கேட்கக் கேட்க ஆநந்தம் தான். சிந்தனையும் மொழியும் அவ்வழியிலே சென்றால் நலனுண்டு. ஆனால் நீ ஒன்று கவனத்தில் வைக்க வேண்டும். எவ்விதத்திலும் சிறப்பு வாய்ந்த மனோகரமான இவ்வனவாசமானது மிகப் புனிதமானது. இதையே நான் முன்பே முடிவு செய்திருந்தேன். இப்பொழுது பரதனைப் பற்றிச் சொன்னாய். எனக்கு மிக்க பிரியமான சொற்கள் இவை. செவிக்கு இன்பமான கீதம்; அம்ருத கல்பம் போன்ற மனக்களிப்பளிக்கும் மொழிகள். ஆனால் இவைகள் பரதன் நிலையைக் கண் முன் காட்டுகின்றன. பாவம். எனக்காக அவன் ஏன் இப்படி வேதனையுற வேண்டும்? அவனையும் சத்ருக்கனனையும் திரும்பவும் கண்டு களிக்கத் துடிக்கின்றது என் மனம்" என்றான்.

சிறிது நேரத்தில் எல்லோரும் நதிக்கரையை யடைந்தார்கள். நந்தியுடன் பார்வதியோடு நீராடின பரமசிவனைப் போல் சீதையுடன் நீராடிய ராமச்சந்திரன் காலைக் கதிரவன் பொற் கிரணங்களால் விளங்குவதுபோல் பிரகாசித்தான். பின்பு ராமனும், லட்சுமணனும் பித்ருக்களுக்குத் தர்ப்பணஞ் செய்தார்கள். [உடன் பிறந்த சகோதரர்கள், ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்தவர்கள்; எங்கிருப்பினும் தந்தைக்குத் தர்ப்பணஞ் செய்யும் போது தந்தையைப் பற்றியும் அண்ணன் தம்பிகளைப் பற்றியும் சிந்தனைகள் எழுவது இயற்கை. மனத்தால் ஒன்றுகிறார்கள். பின்பு எல்லோர் பொருட்டும் இந்தத் தர்ப்பணம் என்று சொல்லி முடிக்கும் போது மானிட வர்க்கத்தையே ஒன்றாய் மகிழ வைக்கிறது.]

—

## 17 சூர்ப்பனகை வரவு

தர்ப்பணம் செய்து முடித்துப் பர்ணசாலை திரும்பியவர்கள் கடவுள் வழிபாடு செய்து, கனி வர்க்கங்களை உண்டு வெளியில் வந்து சாந்த மனதுடன் அமர்கிறார்கள். உடனே அங்கிருக்கும் தவசிகள் தங்கள் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வழக்கம் போல் ராமனைப் பார்த்துப் பேசி விட்டுப் போக வந்தார்கள், ஸ்ரீ ராகவன் அவர்களைக் குசலம் விசாரித்து பரிவுடன் உபசரித்து அவர்களுக்கு விடை கொடுத்தனுப்பி விட்டு, லட்சுமணனுடன் உல்லாசமாய்ப் பேசிக் கொண்டிருந்தான்.

[இங்கு அரக்கர் பயமென்றார்கள். நாம் தண்டகவனம் புகுந்து பத்து வருஷங்களுக்கு மேல் ஆய்விட்டது. காலமும் இனிதே சென்றது. ஆனால் அரக்கர்கள் எங்கோ மாயமாய் மறைந்து விட்டனர். நாம் வந்த பின், தவசி

கள் அவர்களால் துன்புறுத்தப் பட்டவர்களாகக் காணும். இப்பிர தேசத்தை அரக்கர்களின்றிச் செய்து விட வேண்டும். இவர்கள் மறைந்து திரிந்து எல்லோரும் ஒன்று கூடி நம்மை எதிர்க்கச் சூழ்ச்சி செய்கிறார்கள் போலும்! எப்படியிருந்தாலும் நாம் நசடு திரும்பும் முன்னே இக் கொடிய வர்களை ஒழித்தாக வேண்டும் என்று தம்பியிடம் சொல்லிக் கொண்டிருந் தானோ என்னவோ? இப்படியெல்லாம் வெகு நேரம் பேசிக் கொண்டிருந் தான் ரகுநாதன், இதை யொட்டியோ என்னவோ. பின்வரும் நிகழ்ச்சியும் நடந்தேறியது.]

நீலமேகச் சியாமளன் பேசிக் கொண்டிருக்கிறான். பக்கத்தில் வைதேகி அமரிக்கையாய் அமர்ந்திருக்கிறாள். லட்சுமணன் முன் நின்று கவனித்த வண்ணம் நிற்கிறான்.

அச்சமயத்தில் தோன்றிற்று பிரும்மாண்டமான ஓருருவம்! பகலின் வெளிச்சத்தை இருளடையச் செய்தது அது. கோர அரக்கியின் உருவம்; சரிந்து விழுந்த தொந்தி வயிறு மடிப்புகள்' செம்பட்டை மயிர்; வக்கிரப் பார்வை, பின்னிப் பின்னிய கால் நடை விகாரம், முதுமைத் தன்மை வழிந் தோடும் மூச்சுத் திணறுதல், நாய்ப் பல்லுடன், புன்புலால் நாற்றமுடைய வள், பருத்த இடை, பருங் கழுத்து, மேகத்திடி யொத்த வெடித்த குர லோசை, தொங்கும் நாக்கு மிருகத் தன்மையை வெளியிட, அவளுடைய கண்களோ புகையும் கனலும் கக்கின. பிளந்த வாயுடன் விரைந்து வந்து கோதண்டபாணி முன் அப்படியே பிரமித்து நின்று விட்டாள்.

"ஆகா! என்ன கண் கொளாக் காட்சி இது! இத்தகைய நேர்த்தி யான மானிடனும் இப்புவியில் உளனோ! கமலக் கண்ணன்! ஆஜானு பாகு, வீரச்சிங்கனின் மார்பழகு, துடை தொடும் திண்டோள், விவரிக்க இயலா தூய ஒளி வீசும் வதன விலாசம், பார்க்கப் பார்க்கப் பேரானந்த உணர்ச்சி! அன்பளிக்கும் எழில் தோற்றம், யானையின் கம்பீர நடைய மைப்பு, ஜடாமண்டலதாரி, சுகுமாரத் திருமேனி, சத்வகுண விக்ரகம், ராஜ லட்சணங்களின் களஞ்சியம், கரு நெய்தல் மலரின் மேகவர்ணம் தூவியிருக்கிறது, மன்மதனை நிகர்த்த தெவிட்டா இனிய தோற்றம், தேவேந்திரனுக்கு மேலான வசீகர கவர்ச்சி, அப்பப்பா இச்சுந்தரனை, இத் தகைய அபூர்வ ஆநந்த வள்ளலை யன்றோ அடைய வேண்டும்" என்று அவள் மன வோட்டம் அவளை எங்கோ தூக்கி வாரிச் சென்றது.

மெல்ல, தத்தித் தத்தி நெருங்கினாள். ரகுவீரனின் தாமரைக் கண்ணில் ஓர் தனியழகு கண்டாள். அழகிய கூந்தல் அவன் திருமுக மண்டலத்தில் ஓர் பேரணியாய்க் கண்டாள். கானம் பொழியும் குரல், சாந்தியும் அசையா நெஞ்சுர வலிவும் அறன் வீற்றிருந்த நிலை தவ வலிவு கொண்ட துறவி களின் தலைவனைப் படம் பிடித்துக் காட்டியது. அவள் மனம் மெழுகு போல் உருகியது. மூச்சு இன்னும் திணறியது. பல்லைக் காட்டி மன்றா டும் பிச்சைக்காரி போல் அடிமையாயினாள். மனம் பதறும் வெட வெடப் புடன் பெருந் தன்மையைப் பிரதி பலிக்கும் சுந்தர மூர்த்தியை உற்று நோக்கினாள். இது உண்மைதானோ, இவ்வுயர்த்திரு காட்சி கனவோ நின வோ வென்று தலையசைத்து கண்ணை மூடித் திறந்தாள். கண்ணும் கருத்

தும் ஒன்றித்தன. இரு கைகளையும் நீட்டி யாசிப்பவள் போல் பணிவுடன் பேச வாரம்பித்தாள்.

"மரவுரியும், ஜடை முடியும் தரித்துத் தவசி போல் காண்கிறாய். தவசிக்கு மனைவியுண்டா? உண்மையாய் தவசி தான் என்று எண்ணுகிறேன் எனினும் வில்லும் வாளும் ஆயுதங்களும் ஏன்? துறவிகள் விட்டொழிந்த அரக்கர் வசிக்குமிடம் இது. இங்கு வந்த காரணம் என்ன? உண்மையை வேண்டுகிறேன்" என்றாள்.

பரந்தபனான கோசலைப் புதல்வன் அரக்கியின் கேள்விகளைக் கேட்டான். இயற்கையாகிய சத்தியக் குணமே அவனது பிறவித் தன்மை. அரக்கி உண்மையறிய ஆற்றல் கொண்டிருப்பதையுங் கவனிக்கிறான். அவள் தவறான எண்ணங் கொள்ளலாகாதென்று உண்மையை உரைக்கிறான். சத்திய விரதங் கொண்டவன். ஆச்ரமத்திலிருக்கும் போதும் மாதர்கள் முன்னிலையிலும் பொய்யுரைத்தலாகா தென்ற தொன்று தொட்டு வரும் நியதியை அறியாதவனா அவன்? அவளைப் பார்த்து சாவதானமாக பதிலுரைக்கிறான் :—

"தேவேந்திரன் பராக்கிரமம் பொருந்திய தசரதரெனும் சக்கரவர்த்தி யொருவர் இருந்தார். அவருடைய மூத்த குமாரன் நான். 'ராமா' வென்று ஜனங்கள் என்னை அழைப்பார்கள். இதோ இருப்பவன் என் இளைய சகோதரன், இவன் பெயர் லட்சுமணன். என்னைப் பின்பற்றி வந்தவன். இதோ என்னிடமிருப்பவள் என் மனைவி, சீதையெனப் படுவள். பிரசித்தி பெற்ற விதேக மன்னரின் மகள், பெற்றோர் ஆக்கினையாலும், சத்தியங் காத்துத் தருமத்தை நிலை பெறச் செய்யவும் கானகத்தில் வசிக்க வந்திருப்பவன் நான்.

"உன்னைப் பற்றி அறிய விரும்புகிறேன். நீ யார்? யாரைச் சார்ந்தவள் நீ? உன் அவயவங்களின் அமைப்பைக் கண்டு நீ ஒரு ராட்சதி என்று காண்கிறேன், எக்காரணங் கொண்டு நீ இங்கு வந்தாய், உண்மையைச் சொல்" என்றான்.

தாசரதியின் மதுரமான குரலைக் கேட்டு அவள் மனம் இன்னும் நீராய்க் கரைந்தது. "ராமா" வென்று அழைத்தாள். அந்நாமத்தின் விசேஷ குணத்தாலோ என்னவோ, உடனே எல்லா வற்றையும் உண்மையாய் உரைக்க வேண்டு மென்று உணர்ந்தாள். "உள்ளபடி சொல்கிறேன், கேளுங்கள்" என்று ஆரம்பிக்கிறாள்.

"நான் ஒரு அரக்கிதான். என் பெயர் சூர்ப்பனகை. நினைத்த உருவமெடுக்க வல்லவள், தனியே இக்காட்டில் என் இஷ்டம் போல் சஞ்சரிப்பவள். எல்லோர்க்கும் பயத்தை விளைவித்துக் கொண்டிருப்பவள். ராட்சதர்களின் அரசனான இராவணனென்பான் என் அண்ணன். மகாவீரன். அவன். விச்ரவஸ் என்பவரின் புதல்வன், அவனைப் பற்றி நீங்கள் கேட்டிருக்கலாம்.

உறக்கமே வாழ்வாகக் கொண்ட கும்பகர்ணன் எனும் எனக்கு இன்னொரு தமையனுண்டு. அவன் மகா பலிஷ்டன். இது தவிர எனக்கு மற்றொரு அண்ணனும் உண்டு. மகா தருமாத்மா, அவர். என் சகோதரர்தான்

ஆயினும் அரக்கத் தன்மையை அறவே விட்டொழித்தவர் அவர், அவர் பெயர் விபீஷணர்.

"இவர்கள் தவிர போர்க் கீர்த்தி பெற்ற கரன், தூஷணன் என்பவர்கள் என் தம்பிமார்கள். ராம! புருஷோத்தமனே உம்மைக் கண்டது முதல், உம்மை என் கணவனாக வரித்து விட்டேன். இந்த விஷயமாக, கர தூஷணர்கள் என்னை எச்சரித்திருக்கிறார்கள். அதைப் பொருட்படுத்தாது அவர்களை மீறி நான் உங்களைக் கண்டு களிக்க வந்துள்ளேன். என் சக்திக்கு எல்லையில்லை. எதேச்சையாய் எங்கும் சஞ்சரிப்பேன். ஆகையால் எவ்விதத்திலும் உம்மை உபகரிக்க முடியும். இந்தச் சீதையால் உமக்கு ஆவதென்ன? விகாரமும், அவலட்சணமும் பொருந்தியவள்; குரூபி; சரிந்த வயிறுடையாள்; துஷ்டை. மானிடப் பெண்; நான் தான் தங்களுக்குரிய பார்யை, இவளல்ல. இவளையும் உம் தம்பியையும் இதோ என் இரையாக்கி விடுகிறேன், பின்பு ஒரு தடையுமின்றி நாமிருவரும் பிரத்தியேகமாக சுகித்து வாழலாம்" என்று மட மடவென்று சொல்லி விட்டு மனைவி தம்பியின் நடுவே, ராகவன் முன் நின்று விட்டாள்.

[தன் காம விகாரத்தில் அரக்கி ஜானகியிடம் தன் அரக்க சுபாவத்தையும் அவலட்சணங்களையும் காணுகிறாள். ராமபத்திரன் வந்தவுடன் அரக்கர்கள் மறைந்து ஒதுங்கி விட்டார்களென்று அவள் வார்த்தைகள் தெளிவாக்குகின்றன. மானிடப் பெண் என்று உதாசித்து விட்டு ஒரு மானிடனையே கணவனுயடைய புத்தி தடுமாறுகிறாள் மோகங் கொண்ட சூர்ப்பனகை.]

காமவெறி கொண்டு சூர்ப்பனகை தவிக்கிறாள். பெரு மூச்செறிகிறாள். மனிதர்கள் தான், ஆனால் சாதாரண மானிடர்களா இவர்கள்! மகாலட்சுமியும் இவளுக்கு ஈடல்ல. ஜானகியோ பெண்மையின் எழிலை ஒன்று திரட்டிக் காட்சி அளிக்கிறாள். அவள் கட்டழகில் அரக்கியின் கண்ணும் மனமும் பரவச மாயின. அரக்கியின் மதி மங்கிப் போய் விட்டது. இவள் கோர சொரூபத்தையும் கொடிய எண்ணங்களையும் அறிந்த ரகுநாதன் அவளைப் பார்த்து, "வனத்தை அழகு படுத்தும் நங்காய்! உன் எண்ணத்தை அறிந்தேன். எனக்குக் கல்யாணமாகி விட்டது. இந்த மனைவி எனக்கு மிகவும் பிரியமானவள். ஆனால் உன் போன்றவள் ஒரு சக்களத்தியுடன் வாசஞ் செய்ய விரும்புவாளா? ஆகையால் நான் சொல்வதைக் கேள். இதோ என் தம்பி இருக்கிறான் பார். இவன் நல்லவன்; பார்ப்பவர்களுக்குப் பிரியத்தையே கொடுப்பவன்; சீரிய செயலும் நல்லெண்ணமுமுடையோன். தற்சமயம் அருகில் மனைவி யில்லாதிருக்கிறான். சரியான யுவபுருஷன் என்று நீயே உணர்வாய். இவனே உனக்கு ஏற்றவனுவான். அவனையடைந்து நீ சக்களத்தியின்றிச் சுகமே வாழலாம்" என்றான்.

அரக்கி இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் லட்சுமணனிடம் திரும்புகிறாள். (பெண்மை என்ற தன்மையையே இழிவாக்குகிறாள். ஒருவனை நாடி பின்பு இன்னொருவனை நாடுகிறாள். உத்தம வடிவங் கொண்ட சுந்தர புருஷனிடம் மையலாகிறாள். அவன் வார்த்தைகளைக் கேட்ட உடனேயே மற்றொருவனிடம் திரும்புகிறாள். காதல் என்பது கேவலம் மிருகத்தன்மை

யுடையது தான். அதற்குப் பார்வையும் அறிவுமில்லை என்று நிரூபிக்கிருள். சக்களத்தியுடன் வசிக்க முடியாதுதான் என்று தன் அசூயை மனத்தை வெளிக் காட்டுகிருள். தனக்கு வேண்டிய ஒரு நாயகனை விட்டு மற்றவர்களைக் கொன்று விடுவதாகத் தன் ராட்சத சுபாவத்தை வெளியிடுகிருள். இப்படிப் பெண்மையை பேயாக்கித் தீமையே உருவெடுத்துத் தலை விரித்தாடுகிருள்.]

லட்சுமணனை அணுகி, "உன் அழகிற்கு நானே தகுந்த மனைவி, வா, போகலாம். என்னுடன் சுகமாய் இத் தண்டகவனம் முழுவதும் சுற்றித் திரிந்து களிப்புறுவாய்" என்கிருள் சூர்ப்பணகை.

தமையன் மொழிகளைக் கேட்டு ஆநந்தித்தான் தம்பி. மதிமயங்கிய இக் கோர அரக்கியைப் பரிகாசம் செய்து அனுப்புவதை விட அவளை தண்டிப்பது தகாதென்று உணருகிருன், அவள் இன்னும் எந்த ராட்சதத் தீங்கையும் இழைக்க முற்படவில்லை. காம விகாரம் தலை மண்டியிட்டுத் திரிகிருள். பரிகாச முறையே தகுதியான தென்று ராமனுடைய எண்ணங்களில் கலந்து கொண்டு சொல்கிருன் அவன் :—

"தாமரையைப் போல் அலர்ந்த முக முடையவளே! என்னைப் பற்றி அறியாயோ? நான் இவருக்குப் பணிவிடை செய்யும் தொண்டன். நீ என்னை மணந்து கொண்டால் என்னைப் போல் நீயும் அவ்விருவர்க்கும் தொண்டு செய்ய வேண்டி வரும். உயர் பதவி தேடும் விசாலாட்சி, நீ. இதோ அழியாப் பேருடைய இவரை அடைந்தாலல்லவோ உன் இஷ்டப்படி அவருக்கு சந்தோஷம் கொடுக்க வல்லவளாவாய். அவருக்குச் சீதையிருக்கிருளே என்று சந்தேகங் கொள்ள வேண்டாம், நீயோ அரக்கி; அவளோ கேவலம் மானிடப் பெண். நீ கட்டழகி யல்லவா? இவள் அவலட்சணங்களும் கிழத் தன்மையும் வாய்ந்தவள் என்று நீ அறிகிருய். உன்னுடைய ரூபத்திற்கும் நிலைக்கும் இவள் இணையாவளோ? நீயே யோசித்துப் பார்" என்று புன்னகையுடன் புகன்ருன். அவள் புத்தி இன்னும் தடுமாறுகிறது.

அவள் யோசிக்கிருள். காம வெறி கொண்டோர் சுய புத்தியால் சிந்தனை செய்வதேது? இது பரிகாசமா, உண்மைதானு வென்று கூடக் காண இயலாத பகுத்தறிவைப் பறி கொடுத்தவள். இவர்களுள் யாரையாவது அடைய வேண்டுமென்பது தான் அவளுடைய பிடிவாதமான எண்ணம். உடனே ராகவனை உற்றுப் பார்த்து உடல் பதறி வெட வெடத்துப் பேசுகிருள். "அவலட்சண முள்ளவளும், கெட்டவளும், குரூபியும் தொந்தி சரிந்தவளும் கிழவியுமான இவளை நீ மனைவியாக அடைந்ததினுல் என்னை மதியாதிருக்கின்றனை, இதோ உன் கண் முன்னே இவ்வற்ப மானிடப் பதரை கடித்து தின்று விடுகிறேன். பின்பு சக்களத்தி யற்றவளாய் நான் உன்னுடன் சுகித்திருப்பேன்" என்று கனலை கக்கும் விழிகளுடன் சினந்து வாயைப் பிளந்து சீதையிடம் தாவினுள் கோர அரக்கி.

பேய் போல் மேல் விழும் கொடிய மிருகமான அரக்கியின் ஆவேசத்தை அறிந்த அமைதியிலிருந்த ஆண் சிங்கமான ராமசந்திரன் இனி தாமதித்தால் சீதைக்கு ஆபத்தென்று உணர்ந்து லட்சுமணனைப் பார்த்து,

"இப் பொல்லாப் பேயின் கொட்டத்தை அடக்கு. இவ்விகார ரூபத்தை இன்னும் விகாரஞ் செய்." என்றார்.

லட்சுமணனும் நெருக்கடியை உணர்ந்தான். இவளைத் தக்கவாறு தண்டித்து விடு என்றால் எமலோக மனுப்புவது தான் சரியானது. ஆனால் இவளை உருக்குலைத்து விடு என்று அண்ணன் சொன்னது உண்மையான தருமத்தை யொட்டிய தென்று கண்டு, உடனே கொடிப் பொழுதில் கத்தியை உருவிச் சரேலென்று அவள் மூக்கையும் காதுகளையும் அறுத்தெறிந்தான். இவ்வவயவங்கள் அறுபட்டு அவள் உடல் முழுவதும் ரத்த வெள்ளங் கொண்டது. இந்நிலை அவ்வரக்கியின் கோர ரூபத்தைப் பன்மடங்கு விகார முறச் செய்தது. அதே நிமிஷத்தில் என்ன நேர்ந்ததென்று உணர்ந்தாள் ராட்சதி, மரண வேதனை யுற்றாள். ரத்தம் பீறிட்டுப் பாய்ந்து வழிந்தது, காதையும் மூக்கையும் துண்டாக்கினவனைப் பார்த்தாள். பயங் கொண்டாள். ஹோ! வென்று அலறிப் புடைத்து அவ்வனம் முழுவதும் இடி முழக்கம் போன்ற தன் குரலால் நடுக்க முறச் செய்து உதிரத்தைப் பெருக்கிக் கொட்டிக் கொண்டு கையை யுயர்த்திக் 'கோ' வென்று கர்ஜித்த வண்ணம் வனத்தினுள் ஓடி மறைந்தாள். அரக்கர்கள் வாசஞ் செய்யுமிடமான ஜனஸ்தான மென்னுமிடத்தில் சென்று அங்கு உருவமிழந்து அங்கங்கள் அறுபட்டு வேதனையால் துடித்து உதிரம் பெருக்கி, அவர்கள் நடுவில் கோ வென்று கதறி இடி விழுவது போல் தரையில் அடித்துப் புடைத்து சாய்ந்தாள் சூர்ப்பனகை. உதிரம் நிறைந்த உடலுடன் தரையில் புரண்டு ஓலமிட்டாள். கரன் முதலிய அரக்கர்கள் ஓடிவந்து கேட்கத் தனக்கு நேர்ந்த ஆபத்தை வாய் விட்டுப் புலம்பலானாள்.

[மிக்க சக்தி வாய்ந்தவள்; எந்த ரூபத்தையும் எடுத்து எவரையும் மயக்க வைக்கும் மாயாவி; கொடிய ராட்சதத் தன்மையுடையவள்; தாடகை போன்ற பலமுடையாள். எனினும் காது, மூக்கு அறுபட்டவுடன் பஞ்சவடியை விட்டு ஓட்டம் பிடிக்கிறாள். சண்டை செய்யாது அலறிப் பின் வாங்குகிறாள். தனக்கு என்ன நேர்ந்த தென்பதை ரத்தம் கொட்டினவுடன் தான் அறிகிறாள். அவ்வளவு விரைவில் லட்சுமணன் காதையும் மூக்கையும் அறுத் தெறிந்தான். அவன் கை பட்ட மாத்திரம் மதிமயங்கி விட்டாள் போலும்! அவள் மன நிலையைத் தானே உணராது அலங்கோலமாக அரக்கர்களிடம் ஓடி வந்து கீழே விழுந்து புலம்பி அழுகிறாள்.]

---

## 18. அரக்கி தம்பியிடம் அறைகூவல்

தரையில் விழுந்து தேம்பி அழும் தமக்கையைத் தேற்றுகிறான் கரன் என்ற ராட்சதன்.

"அம்மா! என்ன இது? நீ அழுவானேன்? கவலை விடு. எழுந்திரு; என்ன நடந்தது? எவ்வாறு உனக்கு இத் தீங்கு உண்டாகியது? எவன் புற்றிலிருக்கும் கொடிய கிருஷ்ண சர்ப்பத்தைக் கையால் சீண்டினான்? உன்னை உருக் குலைக்க வைத்தவன் யாவன்? தனக்கு இதனால் நேரும் கால

பாசத்தை யறியாதவன் எவன்? பலமும் பராக்கிரமும் படைத்த உன்னைத் துன்புறுத்தி யமனிடம் போக நிற்பவன் யார்? தேவர்கள், கந்தர்வர்கள், மானிடர்கள், ரிஷிகள் உன்னைக் கண்டு அஞ்சுவார்கள். இவர்களில் எவன் இத்தகைய தைரியம் கொண்டு உன்னை அங்க பங்கம் செய்தவன்? எனக்கு அபகாரம் செய்து எவனுகிலும் இனி உயிர் வாழ முடியுமா? உன்னை இப் படிச் செய்தவனை விஷங் கலந்த பாலைக் குடித்து விட்டவனுக அறி. நீரில் கலந்த பாலைப் பிரித்தெடுக்கும் அன்னப் பறவை போல் இதோ அவன் உயிரை உடலினின்றும் ஒரு நொடிப் பொழுதில் பிரிக்கிறேன். போரில என்னுல் கூரிய பாணங்களால் மாய்க்கப்பட்ட எவனுடைய ரத்தத்தை இப்பூமி குடிக்க விருக்கிறதோ!''

என் கோபத்திலிருந்து இவ்வபராதஞ் செய்தவனை எவன் காப்பாற்ற முடியும்? என்ன நேர்ந்த தென்று தெரிவி.'' என்று சொல்லி அவளை எடுத்து அமர்த்தி சமாதானஞ் செய்தான்.

கண்ணீர்த் தாரையும் குருதிச் சொட்டும் வழிந்தோட வேதனையுடன் பேசவாரம்பிக்கிருள் அதிவிகார முற்ற அரக்கி. அவள் மனத்திலும் கண் முன்னிலும் பஞ்சவடி வாசிகளின் சொரூபங்கள் அழியாப் பதுமை களாய்த் தேங்கி நின்றன. அவர்களை நேரில் பார்ப்பது போல் தம்பிக்குப் படம் பிடித்துக் காட்டுகிருள்.

''இளமை நீங்கா இரு ஆண் சிங்கங்கள், கட்டழகு கொண்ட குண வான்கள். சுகுமாரர்கள், மகா பலிஷ்டர்கள், தாமரை இதழாயமைந்த விசாலமான நேத்திரம் பொருந்தியவர்கள். மரவுரியும் மான் தோலும் அணிந்திருக்கிருர்கள், வீரம் பொலியும் தோற்றம், மாய சக்தி வாய்ந்த வில் பிடித்தவர்கள், வாய்மையே அவர்களின் வாக்கு, தூய்மையே அவர்க ளின் எண்ணங்கள், நேர்மையே செயல்கள், அரக்கர்களை அற்பப் புல்லாய் மதிப்பவர்கள், கானிலிருந்தே புவனமெல்லாம் ஆள்பவர்கள். அபுரூபமான அரசலட்சணங்களுடையவர்கள், மீன் கொடி மன்மதனை மிக மிக மீறினவர் கள். அப்பப்பா! அவர்களை எங்ஙனம் உரைப்பது!

''யார் அவர்கள்——''?

''அவர்களா—? ஆகா! கனி கிழங்கு உண்ணும் கலைஞர்கள்; தவசி கள் அவர்கள், தருமமறிந்த தீரர்கள், தசரதனின் திருக்குமாரர்கள், இராம லட்சுமணர் எனப்படும் காணக் கிடையா சகோதரர்கள் கண்ணைக் கவரும் கவர்ச்சி யுள்ளவர்கள், உலகனைத்துக்கும் அபயமளித்து ரட்சிக்கும் தனிப் பெரும் வீரர்கள், வில் பிடிக்கும் வல்லுனர்களுள் முதல்வர்கள். அழகே உருவெடுத்து ஆண்மையே மெருகூட்டும் தேவ மானிடர் இவர்கள், மானி டர்களா இவர்கள்? தேவர்களோ, கந்தர்வர்களோ யாரோ அறியேன். அத்தகையோரின் அரும் பெரும் தன்மையை அளவிட முடியாது.

''அப்பனே! இன்னும் கேள். இவ்வொப்பற்ற உயர்தர இரு காள மேகங்களிடையே காட்சியளிக்கிருள் ஓர் யுவதி! கட்டழகி, மெல்லிடை யாள்; பொன் மேனியுடையாள்; மின்னலின் மின்மினிப்பு, வெண்பஞ்சின் மிருதுமை, மாசற்ற மழ மழப்பு, பூங்கொடியின் புது இளமை— அவள் எழிலை என்னென்றுரைப்பது? அவள் அணிந்த அணிகளும் பட்டும் அவள்

அழகில் திகழ்ந்து திளைத்து தனி மென்மையில் சோபிக்கின்றன. பெண் ஜென்மத்தைப் பெருமை படுத்த வந்த ஈடு இணையற்ற ஜெகத் திலக நாரீ மணி அந்நங்கை. அவள் பார்த்துக் கொண்டிருக்கும் போது அவள் கண் முன்னே உன் தங்கையான நான் இங்ஙனம் அவமானப்படுத்தப் பட்டேன். இதை நினைக்க என் நெஞ்சம் துடிக்கிறது. அவர்கள் உதிரத்தைக் குடிக்க என் உடல் துடிக்கிறது. அப்பனே! இந்த எண்ணத்தைப் பூர்த்தி செய்வையா'' ? என்று முடித்து மறுபடியும் புலம்பலானாள்.

சீறி எழுந்தான் தம்பி கரன். காலனை நிகர்த்த மகா பலவான்களான பதினான்கு அரக்கர்களை அழைத்து தங்கையை அவமானஞ் செய்த மானிடர்களை அவர்களிருப்பிடஞ் சென்று மாய்த்து விட்டு வாருங்கள் என்று கடுங் கட்டளை யிட்டான். போர்க்களத்தில் மாய்ந்தவர்களின் ரத்தத்தைக் குடிப்பாள் சூர்ப்பனகை என்று தெரிவித்தான். அவளும் உடனே அவர்களுடன் விரைந்து வந்தாள். ஆனால் காட்டுத் தீயைக் கண்டு மிரண்டு போகும் யானைக் கூட்டங்கள் போல அரக்கர்கள் ராம லட்சுமணர்களைக் கண்ட மாத்திரம் ஆவேசமடங்கி தயங்கி நின்று விட்டனர்.

[பொல்லா அரக்கி, பொய் பேசும் ராட்சசி, ஜானகியிடம் அசூயை கொண்டவள்; ஒரு நாளும் அடைய முடியாத அவ்விரு ராஜ குமாரர்களை எப்படியாவது தான் அடைய வேண்டு மென்று தவித்தாள். அது முடியாதென்று உணர்ந்து அவர்களை மாய்க்க எண்ணுகிறாள். தான் அங்க பங்கம் செய்யப்பட்டதையும் மறந்து அவர்களுடைய குணங்களையும் ஜானகியின் அழகையும் விவரமாகச் சித்தரிக்கிறாள். ஒரு போதும் தன் எண்ணம் நிறைவேறாதென்று தன்னுடைய வர்ணனையிலிருந்து வெளிக் காட்டுகிறாள். அவ்விருவர்களையும் மறுபடியும் காண எண்ணியும் அவர்களுடைய பராக்கிரமத்தைக் கண்டு களிக்கவும் அரக்கர் தலைவர்களுடன் சண்டையின் கைகலப்பைக் காண நினைக்கிறாள். ஆயிரமாயிரம் அரக்கர்களை மாய்க்க வைக்கிறாள். அரக்கியின் அடிப்படையான காதல் எண்ணம் அரக்கர்களை அடியோடு அழித்து விடுகிறது.]

## 19. சூர்ப்பனகையுடன் வந்த அரக்கர்கள் மடிதல்

கரனால் ஏவப்பட்டுச் சூர்ப்பனகையுடன் வந்த பதினான்கு அரக்கர்களும் தூரத்திலிருந்தே ராமன் பர்ணசாலையின் வெளியே வீற்றிருப்பதைக் கண்டார்கள். முதல் முதல் காணும் போதே அவர்கள் மனமுடைந்தவராயினர். கொடிய விலங்குகள் பாய்ந்து கொண்டு வரும் போது சட்டென்று எதிரே எரியும் நெருப்பைக் கண்டவுடன் தடை பட்டு நின்று விடுவது போன்ற ஓர் அச்ச உணர்ச்சி அவர்கட்கு உண்டாயிற்று. அத்தகைய ஒளி ராமனிடமிருந்து பிரகாசித்துக் கொண்டிருந்தது. என்ன இது? சூர்ப்பனகை சொல்வது போல் இவன் மனிதனா! தேவதையா வென்று திகைத்து நின்று விட்டனர். பற்றுத் தெளிந்து மெதுவாக அருகே அணுகினார்கள்.

இவர்களைக் கண்ணுற்றான் ராகவன். அவர்களுடன் மூக்கறுபட்ட அரக்கியும் நின்று கொண்டிருந்தாள். வாய் பிளந்து கண் கொட்டாது பிரமை கொண்டு நின்றாள். உடனே ஜானகியை தம்பி பாதுகாப்பில் அமர்த்தி விட்டு எழுந்தான். வில்லில் நாணேற்றித் தன் அருகில் வரும் அரக்கர்களை அதட்டுகிறான். தன்னை இன்னாரென்று தெரிவித்து தவசிகளை இம்சிக்கும் அரக்கர்களை மாய்ப்பதற்காகவே தண்டகவனத்தில் தான் வசிப்பதாகவும் அவர்களுக்கு எச்சரித்தான். "நீங்கள் உயிர் மாய்வது திண்ணம். பிழைத்திருக்க ஆசையிருந்தால் இப்போதே இவ்விடத்தினின்றும் ஓடி விடுங்கள்" என்று எச்சரித்தான்.

இதைக் கேட்ட அவ்வரக்கர்கள் கோபத்தால் கண் சிவந்து, வில் பிடித்தவனை அலட்சியமாய்ப் பேசி, தங்கள் சூலங்களை குறி வைத்து வீசினார்கள். ஒன்றாய்க் கூடி வரும் அச்சூலங்களை அதே கணக்குள்ள பொற் பூண் கொண்ட பாணங்களால் துண்டித்தான் ராகவன். உடனே அவர்களுக்கு அவகாசம் கொடுக்காது நாராசம் என்ற பதினான்கு உயர்ந்த பாணங்களைத் தொடுத்து விட்டான். அவைகள் மின்மினி போல் சீறிப் பறந்து அவர்கள் மார்பைப் பிளந்து வெளிவந்து பூமிக்குள் மறைந்தன. சூர்ப்பனகை இதைக் கண்டு அப்படியே ஆழ்ந்து விட்டாள். நடுநடுங்கினாள். அரக்கர்கள் மாய்ந்ததும் தம்பியிடம் ஓடினாள்! அங்கே மறு நிமிஷம் வந்து விழுந்தாள்.

வெட்டிச் சாய்த்த மரம் போல் தரையில் விழுந்த தமக்கையைக் கவனித்தான் கரன். ஓடோடியும் வந்து விழுந்தழுகிறாள். தனியே திரும்பியிருக்கிறாள். அவளுடன் போருக்குச் சென்ற அரக்க வீரர்கள் கதி என்னவாயிற்றென்பதை, அவள் தலைவிரி கோலமாய் அடித்துப் புலம்பிப் புரளுவது நன்கு புலப்படுத்தியது. மனம் கலுக் கென்று உடைந்து விட்டது. என்ன? பதினான்கு வீரர்களையும் வெட்டி வீழ்த்திய வீரன் எத்தகையவன் என்று அவன் மனம் சந்தேகமுற்றது. எனினும் சற்றுத் தேறினவனாய், ஆனால் சற்றுத் தைரியமிழந்தவனைப் போல், சூர்ப்பனகையை பின்வருமாறு கேட்கலுற்றான்.

"நங்காய்! ஏன் இப்படிப் புரண்டு ஓலமிடுகிறாய்? உன் கோரிக்கைக் கிணங்கி எனது பதினான்கு போர் வீரர்களை உன்னுடன் அனுப்பினேன். அவர்கள் உன் கட்டளையை நிறைவேற்ற வில்லையா? என்ன நடந்தது? அழாமல் சொல்" என்றான்.

• தம்பியின் சொற்களைக் கேட்கிறாள் தமக்கை. தைரிய மிழந்த குரலில் வந்த வார்த்தைகள் என்று கவனிக்கிறாள். "ஆகா! இளம் பிராயமான சுந்தர வடிவுடையோன், நிகரற்ற கொடிய அரக்கர் இனத்திற்கே உலை வைக்க வந்திருப்பவன், இவனை யன்றோ அடைய வேண்டும்? இம்மகானைக் கொண்டு தான் இப் பெண் ஜென்மம் சபலமாக வேண்டும். இப்பிறப்பில் இந்த லட்சியத்தை யடைய முடியுமா? எக்காரணம் பற்றியும் அவனுடன் தொடர்பு வேண்டும்; இதில் இந்த அரக்கர் குலமே மாண்டு போவதாயினும் அதை மதியேன். என் விடா முயற்சியால் என் உயிரையும் உள்ளத்தையும் அவனிடம் பறி கொடுத்த பின்னர் மற்றெதையும் பொருட்படுத்தேன். என்னைப் பற்றி இழிவாய் நினைத்தாலும் சரி. எப்படி நினைத்தாலும் சரி. அவன் மனத்தில் நான் இடம் பெற வேண்டும். இப்பிசாசு உருவமும்

அரக்கர்த் தன்மையும் கொண்ட என்னை ஒரு நாளும் கருணை கொண்டு அவன் நினைக்க மாட்டான். எனினும் நான் அவனை மேன் மேலும் துன் புறுத்தும் காரணத்தை அவன் சிந்தனை செய்யாமலா இருப்பான்? ஆம்! இவள் காதல் கொண்டு வந்தாள், அவள் மூக்கையும் காதையும் அறுத் தெறிந்து அங்க விகாரம் செய்து துரத்தினோம் என்று அவன் நினைவிற்கு வரும். பாவம் இதன் காரணமாக நம்மை மற்றவர்களைக் கொண்டு துன் புறுத்த முனைந்திருக்கிறாளென்றாவது ஒரு நாள் கருணை பிறக்காதா இக் கருணாமூர்த்தியின் பெருந் தன்மையான மனத்தில்'' ? பின் வரும் யுகத்தில் குப்ஜையாகக் கண்ணனின் கருணையைப் பெறப் போகிறாள் என்பதை சூசிப்பிக்கிறதா அவள் சலியாத ராமனைப் பற்றிய மன வோட்டம்?]. இவையெல்லாம் அவள் சிந்தனைக்கு வந்தனவோ என்னவோ—சூர்ப்ப னகை சொல்கிறாள்:—

''அப்பா, கரனே! நான் மூக்கறுபட்டு வந்த பொழுது என் எண்ணத் தைப் பூர்த்தி செய்வதாக வாக்களித்தாய். நீ அதை எப்படி நிறைவேற்று வாயோ? உன் பதினான்கு வீரர்களையும் என்னுடன் அனுப்பி வைத்தாய். அவர்களும் சூலமும் கூரிய கத்தியும் தாங்கி ராமனைத் தகையப் பாய்ந்தார் கள். ஆனால், என் அருமைத் தம்பி! என்ன நேர்ந்தது தெரியுமா? உடலை யும் உயிரையும் ஒரே காலத்தில் துளைத்து மாய்க்கும் ராம பாணம் அந்தப் பதினான்கு வீரர்களையும் கொன்று அவர் ஆயுதங்களையும் உடலையும் மண் ணில் புதைத்து மறைந்தது. அப்பனே! அந்த ராம பாணத்தின் வேகத் தையும் அதன் சீரிய வலிமையையும் அது எழும்பும் வேகத்தையும், அதை விடுபவனின் லாகவத்தையையும் அவன் வெற்றிப் புன்னகையையும் சுத்த வீரத்தையும் என்னென்றுரைப்பேன். அதைக் கண்ட என் மனதில் பயமென்பது எத்தகையதென்று இப்பொழுது தான் நன்கு உணர்கிறேன். நடுங்குகிறேன், துக்க சமுத்திரத்தில் தத்தளிக்கிறேன். வேதனை யென்ற முதலைகள் என்னை மிகவும் வாட்டுகின்றன. அச்ச மென்ற அலைகள் என்னை அடுத்த நிமிஷம் அமுக்கி விட ஓலமிட்டு எழுகின்றன, இதிலிருந்து நீ காப்பாற்றுவாயா? உனக்காக மடிந்த அந்தப் பதினான்கு வீரர்களின் மேன்மைக்காகவாவது நீ இப்பொழுதே ராமனைப் போரில் முறியடிக்க வேண்டும். இல்லாவிடில் நான் இப்பொழுதே என் உயிரை விடுவேன். ஆனால், நீ வெற்றி பெற முடியுமா வென்று சந்தேக மடைகிறேன். ராமனை வெல்பவர் இவ்வுலகத்தில் ஒருவருமில ரென்பது என் துணிபு. நீ சூர னென்று எண்ணிக் கொள்கிறாய். அதோ அப் பர்ணசாலையில் சாந்தியு டன் அமர்ந்திருக்கும் தீரனைப் பார்த்த எனது கண்கள் வேறொருவனைச் சூரனென்று ஒப்புக் கொள்ளவில்லை. அரக்க குலக் கீர்த்தியை நிலைநாட்டு வாயாகில் இப்போதே ராமனைப் போரில் வெல். செல். இல்லையேல், ஆண் மையற்று வீரியம் குன்றி உன் ஜனங்களுடன் இந்த ஜனஸ்தானத்தை விட்டு ஒழிந்து போய் விடு. இல்லையேல். ராமன் என்ற பௌருஷத்தாலும். லட்சுமணன் என்ற வீரியத்தாலும் நீ பீடிக்கப்பட்டு நாசமுறுவது நிச்சயம் என்று உரைத்துத் தன் கதியை நினைந்து புலம்பினாள். அவலட்சணமான அரக்கி ராட்சத சக்தி கொண்டவளாயினும் உண்மை ஆணவமான ராமனை அடைய முடியாதென்றுணர்ந்து வயிற்றில் அடித்துக் கொண்டு அலறியழுதாள்.

## 20. கரன் முடிவைக் காண புறப்பாடு

### குசலவர்கள் பதிமூன்றாம் நாள் கானம் செய்கிறார்கள்

தரையில் விழுந்து புரண்டழும் தமக்கையைக் கவனிக்கிறான் கரன். ஒருநாளும் அவள் இப்படி உணர்ச்சி மேலிட்டு அவஸ்தைப் பட்டதில்லை. அரக்கர்களின் ஆபத்தைப் பற்றி மாத்திரம் அவள் உணர்ச்சி இவ்வளவு வலிவு கொண்டதென்று அவன் எண்ணவில்லை, முதல் முதல் ராமன் தண்டகவனம் புகுந்ததும் விராதன் உயிரிழந்ததும் அரக்கர்கள் மடிவது திண்ணமென்று உணர்ந்தவர்கள் தான் மற்றவர்கள். அவள் புலம்பல் வேறு காரணத்தால் பொங்கிக் கொண்டிருக்கிறது. அதன் பரிகாரத்தை அடையும் பொருட்டுத் தன் சேனாதிபதிகள் பதினால்வரையும் அனுப்பி வைத்தான். அவர்கள் பயந்த படி அவர்கள் நொடிப் பொழுதில் மடிந்தார்கள். இனி பின் வாங்குவதற்கில்லை. ஒரு கை பார்த்து விட வேண்டியதுதான் என்று தீர்மானித்தான். கேவலம் ஒரு அல்ப மானிடன் தங்கள் இனத்திற்கே உலை வைக்கிறானென்று எண்ண எண்ண அவன் கோபமும் தாபமும் அதிகரிக்கின்றன.

தமக்கையைத் தேற்றுகிறான். "உன் அவமானம் என்னால் தாங்க முடியவில்லை. இப்பொழுது என் கோபத்தின் வலிமையைக் காணப் போகிறாய். அல்பாயுளுள்ள ஒரு மானிடன், என்னை எதிர்க்க எண்ணமிடுகிறான் ஆகையால் அவன் இதோ உயிரிழக்கப் போகிறான். நீ கவலை யொழி. இதோ போரில் மாண்டு மண்ணில் சாய்ந்து கிடக்கப் போகிறது அவன் உடல்" என்று கர்ஜித்தான்.

அவன் குரலில் பயத்தின் சாயையைக் காண்கிறாள் சூர்ப்பனகை. அவனைப் பலவாறு புகழ்ந்து உற்சாக மூட்டுகிறாள். இயற்கையாகவே கொடுந் தன்மையான அரக்கர் தலைவனுக்கு உற்சாக மூட்டும் அவசியம் ஏற்பட்டதை எண்ணி, 'வந்தது வரட்டும்; ஆயிரக்கணக்கான அரக்கர்கள் ஒன்று சேர்ந்து ஒரே ஒரு மானிடனை எதிர்க்கும் நிலை அரக்கர்கள் சுய நம்பிக்கை இழந்து விட்டதைப் புலனாக்குகிறதே என்று மனஞ் சோர்கிறாள்,

கரனும் தன் சேனாதிபதி, தூஷணன் என்பவனை யழைத்துக் கட்டளையிடுகிறான். "என் மனங் கோணாது நடப்பவர்களும், பெரும் வேகமுடையவர்களும், போரில் பின் வாங்காதவர்களும் நீல நிறங் கொண்டவர்களும் பயங்கரர்களும், கடுஞ் செயலுடையவர்களும், பிறரை இம்சிப்பதையே தங்கள் லட்சியமாய்க் கொண்டவர்களும், பலசாலிகளும், உக்கிரமமான பராக்கிரமம் கொண்டவர்களும், புலியின் வலிவு கொண்டவர்களும், தீரர்களும். ஆற்றலுடையவர்களும், தலை சிறந்த அரக்கர்களுமான எனது பதினாலாயிரம் படையினர்களையும் உடனே ஆயத்தம் செய். ரதத்தையும் ஆயுதங்களையும் கொண்டு வா. அந்த ராகவனைக் கொல்லத் தீர்மானித்து விட்டேன்.'' என்றான்.

அதிவிரைவில் அரக்கன் கட்டளை நிறைவேறியது. அரக்க அரசனுக்கொத்த ரதமும் சேனையும் தயாராயின. அடுத்த நிமிஷம் மாபெரும் படை சூழ் அரக்கன் ஜனஸ்தானத்தை விட்டுப் பஞ்சவடி புறப்பட்டான். மகத்

தான படையெடுப்பு. மற்ருெரு தேசத்தைப் பிடிப்பதற்கல்ல. பகையரச னது சேனையைப் போர்க் களத்தில் எதிர்ப்பதற்கல்ல, பர்ணசாலையில் தவசியாய்த் தனியே தங்கியிருந்த ஒரே ஒரு மானிடனை வெல்லுவதற்கு. பௌருஷம் என்ற ஆணவத்தை இழிவாக்க, அரக்கர்கள் ஒருங்கே ஒன்று திரண்டு தனிப்பட்ட ஒருவனைப் போரில் வெல்லச் சென்றது போதுமான அறிகுறியாகும். தங்கள் ஆயுள் முடிவு நாள் வந்து விட்டதென்று அவர் கள் அறிந்தனர் போலும்! எதனுலும் ஜயிக்க முடியாத மானிடன் இவன், ஒப்பற்ற மானிடன் இவனிடத்திலன்ருே போர் புரிய வேண்டு மென்று சில உண்மை வீரர்கள் ஆற்றல் கொண்டனர். மற்றவர் நாம் மடிவது நிச்சயம், ஆகையால் எல்லாரும் மடியட்டுமே என்று சிலரைக் கூட அங்கு தங்க விடாமல் அசூயையுடன் அழைத்துச் சென்றனர். கூட்டத்தாலும் வித வித ஆயுதத்தாலும் அழைக்கும் ஆபத்தாலும் ஆத்திரங் கொண்டு ஓடினர் அரக்கர்கள்.

---

## 21. அரக்கர்களின் தோல்விச் சின்னங்கள்

பதினுன்காயிரங் கொண்ட அரக்கர் படை மிக்க ஆற்றல் கொண்டு ஜனஸ்தானத்தை விட்டு வெளிக்கிளம்பிற்று. சூர்ப்பணகை மாத்திரம் தனியே தங்கி விடுவாளா? எவ்வளவு தடவை ராமனைக் கண்டாலும் இன் னும் அவனைக் காண ஆசை கொண்டிருக்கும் அவள் இம்மாபெரும் சந்தர்ப் பத்தைப் பயன்படுத்தாதிருப்பாளா? அரக்கர் படை முழுவதும் ஒன்று திரண்டு வெளி வந்தது. ஓரே ஒரு அல்ப மானிடனைப் போரில் வெல்ல மும்முரமான முயற்சி. இகழ்ச்சிக்குரிய முயற்சிதான். எனினும் அவ்வல் லவனுடைய வீரத்தை நேரில் காணத் துடித்துத் தம்பியுடன் வந்து சேர்ந் தாள் சூர்ப்பணகை.

குகையை விட்டு வெட்ட வெளியில் அரக்கர் படை வந்ததுதான் தாம தம். உடனே பகல் வெளிச்சம் மங்கி விட்டது, இடியின் பேரொலி கொண்டு வெண்மை மேகம் செம்மை வர்ணம் கொண்டு உருமிற்று. அடுத்த நிமிஷம் வர்ணம் மாறின, மேகம் மாரி பொழிந்தது. அதுவும் குருதி மழை கோரமான இந்த அபசகுனத்தை அரக்கர் தலைவன் ரதத்திலிருந்து கவ னிக்கிருன்! புறப்படும் சமயத்தில் அந்த ரதத்தின் குதிரைகள் இடறி விழுந்தன. அவன் உற்சாகம் உருக்குலைந்தது. இன்னும் கவனிக்கிருன். சூரியன் ஒளி மங்கி விட்டான், சுற்றிலும் வட்டமான கொள்ளிக் கட்டை போன்ற பொங்கு தணல் போன்ற தோற்றம். ரதத்தின் மேலே பயங்கர மான கழுகு ஒன்று கொடி மரத்தை வட்ட மிட்டது. கீழே நான்கு பக்கங் களிலிருந்தும் கொடிய விலங்குகளின் அபாயக் குரல் ஒன்று கூடி ஓலமிட் டெழுந்து நடுக்க முறச் செய்தது. கிழக்கே நரிகளின் ஊளை யொலி தெற்கு நோக்கி ரதத்தின் முன் வந்து ஒலித்தது. வன விலங்குகள் இடையிடையே பாய்ந்து மறைந்தன. இருள் எழுந்து, புகை படிந்து எங்கும் போர்வை போர்த்தது போல் பார்வையைப் புதைத்தது. அணி வகுத்துப் போர் நடையில் சென்று கொண்டிருந்த சைனியத்தினுள் ஊளையிடும் நரிகளும்

பருந்துகளும் பூனைகளும் நுழைந்து அலைவகளைச் சிதற வடித்தன. சூரியக் கிரணத்தின் சூழ் நிலை பகல் வெளிச்சத்தையும் மேக வெண்மையையும் கவ்விக் கொண்டு கரி பூசினாற் போல் கருமையாகக் காணப்பட்டது. இராக் காலமல்லவாயினும் நட்சத்திரங்கள் ஒளியிழந்து மின்மினிப் பூச்சிகளாய்க் கீழே உதிர்ந்து விழுவனபோலிருந்தன. என்னே கோரக் காட்சி! கரும் பெரும் புழுதி எழுந்து மூச்சைத் திணற வைத்தது. பூகம்பம் போன்ற நடுக்கத்தில் மலைகள், காடுகள் கிடுகிடுத்தன. இவைகள் ஒவ்வொன்றையும் கவனிக்கிறான் கரன். வருங்கால விளைவை சூசிப்பிக்கும் சின்னங்களை உணர்கிறான். அப்போதே அவன் இடது தோள் துடிப்பதையுங் கண்டான்.. இனிப் போரில் தனக்கு வெற்றி ஏது? மரணம் தான் என்று மனம் பதைபதைத்தது. கண்ணில் காரணமின்றி நீர்த்திவலைகள்; மண்டையிடி; அடங்காத் தாகம்; கொட்டாவி; அடிவயிற்றில் திடீரென்று வெற்றிடம்.

இவைகளைக் கண்டு இவைகளின் கருத்தை நன்குணர்கிறான் அரக்கர் தலைவன். எனினும் போர்த் தலைவனுகை உள்ளவன் பொல்லா அபசகுனங்களைப் பொருட்படுத்துவானு? உடலையும் உள்ளத்தையும் உதறி விட்டு வீறு கொண்டு எழுகிறான். தன் சேனை கலங்கியதைக் கவனித்துக் கம்பீரக் குரலில் கர்ஜிக்கிறான். "வீரர்களே! பயமென்பதை அறியாத அரக்கர்களே! இத்தகைய அபசகுனங்கள் வெற்றியில் திடங்கொண்ட உங்களையும் என்னையும் என்ன செய்யக்கூடும்? இவைகளை அலட்சியஞ் செய்து மேலெழுவோம்? இவைகளைக் கண்டு என் கோபம் பொங்குகிறது. என் அம்புகளால் நட்சத்திரங்களையும் விழ்த்துவேன். எமனையும் வெட்டி மாய்ப்பேன். செருக்குற்ற ராமனையும் அவன் தம்பியையும் மாய்க்காது நம் நகரம் திரும்பேன். இதோ என் தமக்கையும் தன் மனோரதம் கைகூடினவளாகத் திருப்தி யடையப் போகிருள். இது வரையில் நான் போரில் தோல்வி கண்டவனல்லேன். இதை நீங்கள் நன்கறிவீர்கள். ஆகவே இவ்வல்ப மானிடன் உங்களுக்கும் எனக்கும் எம்மாத்திரம்?" என்று உற்சாக மூட்டிக் கொண்டே சென்றான்.

இவ்வீர மொழிகளைக் கேட்டு அழிவை அறிவிக்கும் அபசகுனங்களை அசட்டை செய்த ஆணவத்தைக் கண்டு திரும்பவும் ஆற்றலுற்றார்கள் அரக்கர் சேனையர். நடக்க விருக்கும் நிகரற்ற நிகழ்ச்சியை நேரில் கண்டு களிக்கக் குழுமினர் ரிஷிகளும், தேவர்களும். எவர்கள், உலகில் நன்மை புரிபவர்களோ, அவர்களுக்கு சர்வ மங்கள முண்டாகட்டும். எவ்வாறு சக்கிரபாணியான மஹா விஷ்ணு அசுரர்களை ஒன்று சேர்த்து அழித்தனரோ அவ்வாறு ராமர் அரக்கர்களை அழித்து விடுவாராக என்று ஆசிகள் கூறி வந்தனர்.

உடனே, ச்யேனகாமி, ப்ருதுக்ரீவன், யக்ஞசத்ரு, விஹங்கமன், துர்ஜயன், பருஷன், காலகார்முகன், கரவீராக்ஷன், மேகமாலி, மகாமாலி, ஸர்ப்பாஸ்யன், ருதிராசனன் என்ற பன்னிரண்டு அரக்க வீரர்கள் அரக்கத் தலைவனைக் காத்து அரணிட்டுக் கவனமாய்ச் சென்றனர். மகாகபாலன், ஸ்தூலாக்ஷன், பிரமாதி, திரிசிரன் ஆகிய இந்நால்வரும் சேனை முன்னணியில் தூஷணனைப் பின்பற்றிச் சென்றனர்.

அரக்கர் படையும் ராமனிடம் நெருங்கிற்று !

கொடிய அரக்கர் சேனை பஞ்சவடிப் பர்ணசாலையை யணுகும் போது லட்சுமணனுடனிருந்த ரகுநாதனும் தூரத்தில் அரக்கர்களுக்குத் தோன்றிய அபசகுனங்களைக் கண்ணுற்றான். "லட்சுமணா ! இவைகளைப் பார்த்தாயா? நம் லட்சியம் ஒருவாறு ஈடேறப் போகிறதென்று நினைக்கிறேன். இனி இவ்வனப் பிரதேசம் அரக்கர் பயமின்றி வாழும். என் பாணங்கள் இக் கொடிய அரக்கர்களைத் துளைக்கத் துடிக்கின்றன" என்றான்.

இன்னும் கொஞ்ச நேரம் கவனித்து, "அப்பனே ! கோர யுத்தத்தின் இயற்கைக் குறிகள் இவை. இதோ பார், என் வலது கை துடித்த வண்ணம் காண்கிறது. நமக்கு வெற்றியையும் எதிரிகளுக்குத் தோல்வியையும் சூசிப்பிக்கிறது அந்நன்னிமித்தம். ஆம், அதே வெற்றி மலர்ச்சி உன் முகத்தில் மிளிர்கிறது. எவர்கள் முகத் தோற்றம் சட்டென்று ஒளி குன்றி விகாரமுற்று மாறுகின்றதோ அது அவர்களுக்கு ஆபத்தை விளைவிப்பதென்று நாம் அறிந்திருக்கிறோம். அதோ ! அரக்கர்கள் பேரிகை சப்தம் அவர்கள் திரண்டு வரும் சேனையை விளம்பரம் செய்கின்றது. ஆம், அவர்களின் முடிவு நாள் இது வென்று எண்ணுகிறேன். தகுந்த தற்காப்புடன் வெற்றி காண முன்னேற்பாடுகள் செய்பவன் தான் புத்திமானாவான். ஆகையால் வில்விழுத்து நாணேற்றி நாற்புறமும் நன்கு நோக்கின வண்ணம் வைதேகியை அழைத்துக் கொண்டு இப்பொழுதே இம்மலையின் மரங்களால் மறைக்கப்பட்ட குகையினுள் சென்று விடு.

"அப்பா, லட்சுமணா ! உன் முக ஜாடையை உணர்கிறேன். உன் உற்சாகத்தை அறிவேன். நீ இவர்களுடன் போரிடத் துடிப்பதையும் நன்கு காண்கிறேன். ஆனால் இதில் நீ எனக்கு இசைந்து கொடுக்க வேண்டும். நீ ஒருவனே இவர்கள் எல்லோரையும் அம்பெய்து அழித்திட முடியும். எனினும் நான் இவர்களுடன் போர் புரிய விரும்புகிறேன். ஆகையால் என் விருப்பத்தைத் தடுக்காதே, உன் முகம் கோணுகிறது, லட்சுமணா ! என் இஷ்டத்தை நீ அனுசரிக்க வேண்டும். இது என் கட்டளையென்றறி. என் பாதங்களின் மேல் ஆணை" என்றான்.

[போரின் ஆற்றலில்-வெற்றியின் உற்சாகத்தில்-ஆணவத்தின் ஆதிக்கத்திலெழுந்த இவ்வார்த்தைகளைக் கவனிக்கிறான் லட்சுமணன். அண்ணவின் கட்டளைக்கு அடிபணிவதே அவனது ஆயுட் கடமையன்றோ ! மேலும் அப்பிரதேசத்து முனிவர்களுக்கும் தவசிகளுக்கும் அவர்களிடம் பத்து வருடம் தங்கி வாழ்ந்த போது "அரக்கர்களை யழித்து ஆச்ரமங்களைப் பயமற்றதாய்ச் செய்து விடுவேன்" என்று வாக்குக் கொடுத்த ராமன் அவ்வார்த்தையை அவன் தானே நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணமும் எழ "உங்கள் ஆக்கினை" என்று உள்ளம் களித்துப் பாணங்களையும் வில்லையும் மற்ற ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு சீதையோடு குகையை நோக்கி விரைந்து சென்றான்.]

அவர்கள் குகையில் புகுந்ததும் கவலை ஒழிந்தவனாய் ஆரவாரத்துடன் மனம் குதூகலிப்பக் கவசத்தை யணிந்தான் ரகுவீரன். இக்கவசம் அவர்

பொற் சோதியைப் பெருக்கிப் பொழிந்தது. புதுமையுற்ற புவன சுந்தரனின் புன்னகை அவனது வெற்றிக் குறியை உணர்த்திற்று. ஒன்ருய்த் திரண்டு வரும் ஆயிரக் கணக்கான அரக்கர் சேனையைத் தான் ஒருவனுய் எதிர்த்துப் போரிட்டு வெற்றி பெறும் ஆணவத்தின் ஆற்றலில் அம் மாபெரும் வீரன் ஆனந்தமாக வில்லை எடுத்து நாணேற்றினன். "டங் டங்" என்ற அந்நாணொலி எதிரொலி கொண்டு பல திசைகளிலும் பேரிடி போல் முழங்கிப் பரவிற்று. அதே சமயம் அப்பிரதேசத்தில் வசித்து வந்த முனிவர்களும் தவசிகளும் ஒன்று கூடித் திரளாய் வந்து அரக்கர் தீங்குக் குற்ற யுத்த யக்ஞத்தை நேரில் கண்டு களிக்கக் குழுமினர். வானில் கந்தர்வர்களும் தேவர்களும் சித்தர்களும் வந்து கூடினர். மறுபடியும் மறுபடியும் முனிவர்களும் பெரியோர்களும் உலக நன்மையைத் தனதாகக் கருதி மானிட இனத்திற்கே அரும் பெரும் சேவை செய்து வரும் உலக உத்தமனை புருஷோத்தமன் வெற்றி கொள்வானுக வென்று வாழ்த்திசைத்த வண்ணமிருந்தனர். இவன் தன்னந்தனியனுய் நின்று இப்பெரும் ராட்சத சேனையை மனஞ்சிதருது எங்ஙனம் போர் புரியப் போகிருன் என்று இரண்டொருவர் வார்த்தையும் வந்தது. இதைக் கேட்டு ராமனின் ஆத்ம சக்தி முறுக்கேறி வலுக் கொண்டது. அஞ்சா நெஞ்சனின் திடச் சித்தமும், வீறு கொண்டெழுந்த தன்னம்பிக்கையும், சீறி எழுந்த சினமுற்ற சிங்கமாய் அவ்விளஞ் சிங்கனைச் சித்தரித்தன. ருத்திரனின் கோபாவேசம், திரிபுராந்தகனின் தீக்கண் ஜ்வாலை!

அரக்கர் சேனை வந்து நாற்புறமும் சூழ்ந்தது. கோரமான கூக்குரலும் பேரிகைகளின் பேரிரைச்சலும் காதைப் பிளந்தன. முன் வந்து சூழ்ந்த அரக்கர் தலைவர்கள் முதல் முதல் ராமனைக் கண்ணுற்றவுடன் திடுக்கிட்டு நின்று விட்டார்கள், கக்கும் தீச்சுவாலையுடன் ஒரே வளைவுடன் சூழ்ந்திருக்கும் அரக்கர்களை ஒரே சமயத்தில் துளைத்துத் தொலைக்கும் தூய்மை கொண்ட தலை சிறந்த வில்லாளி இவன் என்று கண்டனரோ என்னவோ அவன் ஒளிவீசும் காந்தியைக் கண்டு திகைத்துப் போயினர்.

---

## 25. கோதண்டபாணியின் சிலம்பக் கலை

ஆயிரக் கணக்கான பரிவாரங்களுடன் சூழ்ந்து வந்த கரன் ரகுநாதனை எதிர் நோக்கி ரதத்தில் வந்து நின்ருன். முன்பே வந்தடைந்த அரக்கர் சேனை பேரொலி பரப்பி புருஷோத்தமன் நின்ற இடத்தை நான்கு பக்கங்களிலும் சூழ்ந்து கொண்டது. தனிமையிலிருக்கும் ஒருவனை இவ்வண்ணம் அரக்கர் ஆயிரமாக அனைவரும் சூழ்ந்து அமுக்கி விட எண்ண மிட்டனரே யன்றி நேர்முறை யுத்தமா வென்றும் சுத்த வீரத் தன்மைக்கு முற்றிலும் முரணுனதென்றும் அவர்கள் கவனித்தார்களில்லை.

பேய் முழக்கஞ் செய்து எல்லோரும் ஒரே மூச்சாய் ஒரே வீச்சாய் கத்திகளையும், சூலங்களையும், கோடாரிகளையும், ஈட்டிகளையும் ஒருங்கே ராமபத்திரன் மேல் எறிந்து மோதினர். இதே தாக்குதலில் அரக்கர் தலைவனும் வில் வளைத்து வாளிகளை விடுத்தான்.

ராட்சத சேனை நான்கு பக்கங்களிலுமிருந்து எறிந்த ஆயுதங்கள் ஒன்றுக்கொன்று மோதிக் கொண்டு தடை பட்டு விழுந்தன. கரனது பாணங்களும் இவைகள் மேல் தாக்கி மழுவுற்று இலக்கிழந்து சரிந்தன. எனினும் சிற்சில பாணங்களும் ஆயுதங்களும் இக்குவியல்களுட் புகுந்து வீரராகவனைத் தைத்துத் தகைத்து உதிரம் கிளப்பின.

உடனே வீறு கொண்டு எழுந்தான் வீரராகவன்! அவ்வளவுதான்; அவன் கை கோதண்டம் மண்டலாகாரமாய் சீறிச் சுற்றிச் சிலம்பாட்டம் காட்டியது. கிறுகிறு வென்று சக்கிரமாய் சுழன்று வந்த பாண ஜாலங்கள் வட்டமான ஓரிடத்தை வெற்றிடமாக்கியது. இது மகத்தான காந்த சக்தி பெற்று எதிரிகளின் ஆயுதங்களை இழுத்துப் பறித்து கபளீகரஞ் செய்தது! வட்ட மிட்ட கோதண்டத்தின் சரவரிசைகள் கால சக்கிரங்களாக வெளி வந்து மின்னலெழுப்பிக் கண்ணைச் கவர்ந்தன. நெருப்புப் பொறிகளாய் அவ்வட்டங்களிலிருந்து எழும்பிய கணக்கற்ற அம்புச் சரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் அரக்கன் உயிரை ஒருங்கே மாய்த்துச் சென்றது. புற்றெறும்பு போன்ற சூழ்ந்திருந்த அரக்கர் சைனியம் நொடிப் பொழுதில் உருக்குலைந்து, அணி சிதைந்து, எண் குறைந்து அழிந்து போயிற்று. ஆனால் நிகரற்ற நரேந்திரனின் நாணேற்றிய கோதண்டம் மாத்திரம் சிலம்பம் சுற்றுவதைச் செய்து கொண்டே இருந்தது.

சீறிப் பாய்ந்து அரக்கர்களை அறுத்துத் தள்ளிய, அவ்வொப்பற்ற வில்லாளி வல்லுனனான வீரதீரனின் பாணங்கள், நாளீகம், நாராசம் என்று வேற்றுருப் பெற்று விதவிதமாக ராட்சதர்களின் முடிவை விளைவித்தன. இவைகளுடன் கிளம்பின விகர்ணி எனும் வாளி வரிசைகள்; இவை எப்பொழுது, எங்கிருந்து, எவ்விதம், எங்கு சென்று, என்ன செய்கின்றன வென்று கவனிக்க முடியாத வேகங் கொண்டவை, மிக்கக் கொடுமையானவை. ஊசி முனையுடையவை. குத்திக் கோர்க்கும் தன்மையுடையவை; ஒரே தடவையில் பல உயிர்களை மாய்க்கும் தகைமையுடையவை, நெருப்புப் போல் எரிக்கும் வன்மை வாய்ந்தவை; புகையை எழுப்பி நெஞ்சையும் மார்பையும் திணற வைப்பவை; இப்பாணங்கள் விடா மழை போல் பொழிந்து எஞ்சின அரக்கக் கூட்டங்களை வட்டம் வட்டமாக, வரிசை வரிசையாய், வெட்டி வீழ்த்தின. தலையறுபட்டவர்களும், அங்கங்கள் துண்டிக்கப் பட்டவர்களும், மார்பு பிளக்கப் பட்டவர்களுமாய், ஒடிந்த கவசங்களும், கேடயங்களும், வேல்களும், வாள்களும் நிரம்பிய அப்போர்க் களம் மடிந்த அரக்கர்களின் ரத்த வெள்ளத்தில் கோரக் காட்சி கண்டு கருகியது! காற்றினால் முறித்துத் தள்ளப் பட்ட மரங்கள் போல் அரக்கர்கள் குவியல் குவியலாய்க் கோசலைச் செல்வனின் கோதண்டத்தின் சூறாவளிக்குச் சாய்ந்து மாய்ந்தனர்.

எஞ்சினவர்கள் கொஞ்சமே. இவர்கள் ரத்தத்தைக் கொட்டிக் கொண்டு கரனிடம் ஓடினார்கள். ரணகளத்தின் சேனையை விட்டுச் சற்று விலகியிருந்தான் அவன். கதறி ஓடி வந்தவர்களின் கதியைக் கவனித்து வீரன் தூஷணனை ஏவினான். அவனும் இன்னொரு சேனையைத் திரட்டிப் புது ஆற்றலுடன் ராமனிடம் எதிர்த்தோடினான். ஆனால் ராமனிடமிருந்து கிளம்பின கந்தர்வம் என்னும் அஸ்திரம் அப்படியே அவர்களை

மயக்க வைத்தது. அவர்களின் மூச்சுக்களை இழுத்துச் சென்றது. அரைக் கணத்தில் அரக்கன் சேனை அழிந்து ஒழிந்தது.

அற்ப மானிடன் என்று மானிட இனத்தையே அற்பமாக எண்ணிய ராட்சதர்கள் அவ்வினத்தின் உத்தமனால் உயிர் துறந்து விடுகிறார்கள். அசையா மலை போல் தனது தோள் வலியில் திடமாய்க் காத்து நின்ற கோதண்டபாணியின் வில் மறுபடியும் ரீங்காரஞ் செய்தது. அவ்வளவு தான்! புகை மூண்டு கனல் கக்கும் இடியை யொத்த, புதிதாய்க் கிளம்பிய ராமபாண வரிசை அப்படியே நூறு நூறாக அரக்கர்களை சுக்கல் சுக்கலாய்ச் சுட்டெரித்துச் சாம்பலாக்கி மூடி மறைந்தது. சிலர் தலையறுபட்டனர், சிலர் நெஞ்சு பிளவுண்டு சாய்ந்தனர். இன்னுஞ் சிலர் தலை சாய்ந்து தங்கள் ஆயுதங்களுக்கே பலியாயினர். அறுபட்ட அங்கங்கள், உருண்டு குவிந்த தலைகள், சித்திர வதை செய்யப் பட்ட முண்டங்கள், எங்கும் ஒரே பிணக்குவியல், குமிழிட்டு உதிரக் கடல் அலை புரண்டு ஓலமிட்டது. அம் மாபெரும் இயற்கைக் காடு நொடிப் பொழுதில் சகிக்க முடியா பிணக் காடாயிற்று. பற்பல அரக்கர்கள் ஓர் மானிடனால்—கால் நடை கொண்ட கேவலம் ஒரு தனித் தவசியால்—ஒரே ஒரு நரனின் தோள் வலிவால் மடிந்து போயினர். கரன் அவன் சேனாதிபதி திரிசிரஸ், மானிட வீரனை வீரராக வன் இம் மூவரே அங்கு அப்போது எஞ்சியுள்ளவர்கள். கரனின் கோபம் பொங்கிப் பொங்கி எரித்து வந்தது.

## 26. தூஷணன் வதை

கரன் படுகளத்தைக் கவனிக்கிறான். அறுபட்ட தலைப்பாகையுள்ள தலைகளும், கைகளும், நுரை கக்கிக் கொண்டு மாய்ந்து விழுந்த குதிரைகளும், யானைகளும், பிளவுண்ட ரதங்களும், குடைகளும் சிதறின. ஈட்டிகளும், கோடாரிகளும், தூளாக்கப் பட்ட கற்களும், கேடயங்களும், அர்த்தசந்திர வட்டமாகப் பர்ணசாலை முன்னுள்ள இடம் முற்றும் அழிந்த அரக்கர் சேனையால் நிரம்பிற்று. எங்கும் ரத்த பிரவாகம். கழுகுகளும், பருந்து களும் கும்பல் கும்பலாய்ப் பறந்து வட்டமிட்டுக் கொண்டிருந்தன. எளி தில் வெல்லற்கரிய பீம வேகங் கொண்ட ஐயாயிரம் அரக்கர் கொண்ட "மூலப்" படை ஒன்று காத்து நின்றது. இதை இப்பொழுது ஆயத்தஞ் செய்து கரன் ரகுநாதனைத் தகைக்க ஏவினான். அப்போது மகத்தான போரின் இரண்டாம் கட்டம் துவங்கிற்று!

அரக்கர் படை வட்டமாகச் சூழ்ந்து கொண்டு யுத்தத்தை எழுப்பிற்று 'கோ' வென்று பேரொலி முழக்கத்துடன் சற்று எட்ட நின்ற அவர்களிட மிருந்து சூலங்களும், வாட்களும், மரங்களும், கற்களும் சீறிப் பாய்ந்தன. ஆனால் ரகுவீரன் இசைத்த சரக்கூட்டினுள் புகமுடியாது அவை 'தொப்' 'தொப்' பென்று அங்கேயே விழுந்து குவிந்தன. இவையனைத்தும் ஒன்றாக வருவதைக் கவனித்த தாசரதி எதிரிகள் முறை பிறழுவதைக் கண்டு கோபங் கொண்டான். அவ்வளவுதான்! அவன் கையிலிருந்த கோதண் டம் எமதண்டமாய் மாறியது. அப்படியே அவ்வரக்கப் படை அடுத்த வினாடியில் எமலோகம் சென்றது.

இவ்விபரீத விளைவைக் கண்ணுற்ற தூஷணனின் சினம் பொங்கி எழுந்தது. அவனும் தன் வில் திறனைக் காட்ட முனைந்தான். ஆனால் இதற்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. என்ன நேர்ந்ததென்றறிவதற்குள் ஜயராமன் அரக்கனின் வில்லைத் துண்டாக்கி விட்டான். அதே கணத்தில் மற்றொரு ராமவாளி அரக்கன் இரதத்தில் பூட்டியிருந்த குதிரைகளை வெட்டி மாய்த்தது. அதே சமயம் அர்த்த சந்திர மெனும் பாணத்தால் ரதத்தின் சாரதியின் தலையை வாங்கினான். அரக்கத் தலைவனும் அக்கணமே தன் மார்பில் மூன்று பாணங்கள் புதைந்து விட்டதைக் கண்டுத் திணற லுற்றான். வில்லொடிந்து, ரதமொழிந்து, குதிரைகள் மாண்டு, சாரதி இறந்து குத்துண்டு மடிந்த சேனை வரிசையைக் கண்டு தூஷணனின் கடுஞ் சினம் கனல் போல் கொதித்தெழுந்தது. இந்திரனின் வஜ்ராயுதத்தை யொத்த பயங்கரமான கதை யொன்றைக் கையிலெடுத்தான். அது தேவர் களை வதைத்த இடியை யொத்த மகத்தான கதை. ரகுநாதனை நோக்கி ஓடிவந்தான். தன்னிலையிழிந்த தளகர்த்தன் எதிர்த்தோடி வரும்போதே, இன்னொரு ராமபாணம் சரேலென்றுச் சீறிப் பறந்து கதை தாங்கிய தூஷ ணனின் இரு கரங்களையும் வாள் வலிவு பூண்டு அறுத்திழுத்துச் சென்றது. யுத்த அரங்கத்தின் இவ்வற்புதமான தீரச் செயலைக் கண்ட அரக்கர் மனம் சட்டென்று சுருங்கி மருண்டது. 'கோ' வென்று அலறிப் புடைத்துக் கூராணி பொதிந்த தன் கதையின் மேல் தடாரென்று சாய்ந்து குத்துண்டு மடிந்தான் தூஷணன். இம்மகத்தான சம்பவத்தைக் கண்ணுற்ற அமரர் அகமகிழ்ந்து ஆநந்தத்துடன் ராமனுக்கு ஆசி கூறினர்.

பெரு வீரனான தங்கள் தலைவன் தூஷணன் மடிந்தான் என்று கண் டதுமே, ராட்சத பிரமுகர்களான மகாகபாலன், ஸ்தூலாக்ஷன், பிரமாதி என்ற மூவரும் ஒன்று கூடி ஒருங்கே ராகவனை நோக்கி ஆவேசங் கொண்டு ஓடிவந்தனர். இன்னும் இத்தகைய அதருமப் போர் சென்று கொண்டிருந் தது. குறி தவறா காலனின் பாசத்தை யொத்த சீறிய வாளிகளால் தனி வீரன் தாசரதி இவர்களை வரவேற்றான். மகாகபாலன் தலை தரித்துத் துள்ளி விழுந்தது. பிரமாதி நெஞ்சு பிளந்து விழுந்தான். ஸ்தூலாக்ஷன் கண் இரண்டும் சிதறி விழ இரத்தம் கக்கி உயிர் விட்டான். நொடிப் பொழுதில் அந்த அரக்கர் "ரிசர்வ்" படையும் கூரிய ஈட்டி முனையுள்ள ராம பாணங்களுக்கு பிளவுண்டு இரையாயிற்று. எப்பக்கத்திலோ குறி வைப்பவனாக அவருள் சிலர் ராமனைக் காண்பார்கள். உடனே மலைப் பாறைகள் போல் அவன் மேல் பாய்வார்கள். ஆனால் கூர் முனைக் கற் பாறைகள் மேல் மோதுண்டவர்களாக மூர்ச்சையுற்று மடிந்து போவார் கள். இம்மாதிரி, ரம்பகமாகவும், வாளாகவும், கற்பாறையாகவும், கூரிய ஆணி வரிசையாகவும், ஈட்டி வேல் வரிசையாகவும் தகைக்க வரும் அரக்கர் கூட்டத்திற்குத் தக்கவாறு வில்லில் வல்லுனனான ரகுவீரன் வாளி மழை மாறிக் கொண்டே ஓய்வின்றி, கணமும் தாமதமின்றி வெளிக் கிளம்பி உயிர் பெற்று அரக்கர் உயிர்களைக் குத்தி இழுத்துச் சென்று கொண்டிருந் தது.

தூஷணன் கொலையுண்டான். அவன் சேனைத் தலைவர்கள் விதவித மாய் மாண்டு வீழ்ந்தனர். ஒருங்கே மகத்தான பேருருவங் கொண்ட இரம்பமாய் அப்படியே ஐயாயிரம் அரக்கர் சேனையரின் தலைகளையும்

அரைக்கணத்தில் அறுத்துத் தள்ளியது. கோதண்டபாணியின் அரும் பெரும் ஆணவம். இதை யெல்லாம் கண்டு கரன் அடங்காச் சினங் கொண்டு மனங் கொந்தளிக்கக் குமுறுகிறான். தன் பிரத்தியேக சேனாதி பதிகளை நோக்கிச் சீறுகிறான்.

"பார்த்தீர்களா இவ்விபரீதத்தை? மகத்தான சேனையுடன் மகா பலிஷ்டனான தூஷணன் ஒரே ஒரு அற்ப மானிடனால் போரில் தோல்வியுண்டு மடிந்தான் அரக்கர்களே! நம்மினத்தின் இந்த இழிவை யகற்றுங்கள். விதவிதமான ஆயுதங்களைக் கொண்டு இவனை ஒழித்துக் கட்டுங்கள்" என்று அவர்களைத் தூண்டி விட்டு, சினம் தலைக்கேறித் தானே ராகவ சிம்மத்தை நோக்கி ஓடினான். இவனைத் தொடர்ந்து பனிரெண்டு சேனைத் தலைவர்களும் சென்று ரகுராமனைத் தாக்கினார்கள். இவர்களைச் சூழ்ந்து பின் தொடர்ந்தது கரனின் மகத்தான சேனை.

---

## 27 அரக்கர் சேனைத் தலைவர்கள் சிதைவு

ஈடுமெடுப்பு மற்ற வில்லாளியான ராகவன் இவ்வாறு தன் திறனைக் காட்டித் துலங்குவதைக் கண்ட அரக்கத் தலைவன், மிக்கக் கவலையுற்றான், இவன் மேல் விழுந்து இவனை அமுக்கி விட எண்ணினான். அது பலிக்க வில்லை. சிலம்பங் காட்டி அரக்கர் அருகே அணுக வொண்ணாத படி சர வட்டம் செதுக்கி அரக்கர்களை ஒதுக்கி ஒழித்துக் கொண்டிருந்தான் ஓர் மானிடன். இதை நினைக்க நினைக்கக் கரனுக்குக் கடுங் கோபம் மூண்டது. ஸ்தூலாக்ஷன், பிரமாதி, மகாகபாலன் என்ற மூவரும் மடியவே, ச்யேன காமி, ப்ருதுக்கிரீவன், யக்ஞசத்ரு, விஹங்கமன், துர்ஜயன், கரவீராக்ஷன், கார்கரீரமுகன், பருஷன், மேகமாலி, மகாமாலி, ருதிராசனன், ஸர்பாஸ்யன் என்ற பன்னிரண்டு சேனைத் தலைவர்களையும் ஏவினான், அவர்களையும் கோதண்டம் சில நிமிஷங்களில் யமனிடம் அனுப்பி விட்டது. அநாயாசமாகச் சரங்களை மழையாய்ப் பெய்து கொண்டிருந்தான் அயோத்தியின் அரசிளங் குமரன்.

"இதனை எப்படியாவது ஒழித்து விட வேண்டும். தான் உயிரிழப்பினும் அக்கரையில்லை" என்று திடங் கொண்டான் கரன்.

இம்மன உறுதியைக் கவனித்தான் முத்தலையனான த்ரிசிரஸ் எனப் படும் இராக்கதத் தலைவன். எஞ்சிய சேனாதிபதிகளில் இவன் ஒருவன்தான் உயிருடனிருப்பவன். எதிரியோ திறன் படைத்த தலைசிறந்த தோலாத தனி வீரன், ஒப்பற்ற வில்லாளி. இவனிடமன்றோ போர் புரிய வேண்டும். வெற்றியுற்றாலும், தோல்வியுற்று மடிந்தாலும், மங்காப் புகழ் கிட்டு மென்று கருதினான். எனினும் மரணமடைவது நிச்சய மென்று திடங் கொண்டு, எஞ்சிய ஒரே அரக்கனான கரனையும் கொலையுண்டு அப்படுகளத் தில் புரளப் பார்க்க மனமின்றி, கரனிடம் வந்து, "வீரனே! சற்று நிதானி ராமனை முறியடிக்க நான் ஒருவன் இருக்கிறேன். எனக்கு ஒரு சந்தர்ப்ப மளி. ராமன் என்னால் கொல்லப்படுவானாகில், நீ மன நிம்மதியுடன் ஜனஸ்

தானம் திரும்பிச் செல்லலாம். நான் மாண்டால் அப்புறம் இருக்கவே இருக்கிறது உன் பராக்கிரமம்" என்றான்.

கரன் இதைக் கவனித்தான். காலன் அவனைக் கடுக அழைப்பதாய்க் கண்டானோ என்னவோ, "சரி நீ போய் வா" வென்று அனுமதியளித்தான்.

உடனே களிப்புடன் ஆடம்பரமாக ரதத்திலேறி ராமனை அணுகினான் த்ரிசிரஸ். பெரும் வில்லைக் கையிலேந்தி ராமன் தொடுக்கும் சரங்களைப் பிளக்க முனைந்தான். இரு போர் வீரர்களின் பாணங்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டன. ஒரே குழப்பமான கோர வில் யுத்தம். சளைக்காது இருவரும் போர் புரிந்தனர். இதன் நடுவே அரக்கனின் பாணங்கள் மூன்று தரம் ராமனின் சரக் கூட்டில் புகுந்து, அவன் நெற்றியில் தைத்து விட்டன. "ராட்சதர்களின் ஆற்றல்தான் என்னே! நல்லது! இவனும் ராம பாணத்தை அறியட்டும்" என்று வீறு கொண்டெழுந்தான் ரணதீரன் ரகுவீரன்.

"அடே! இந்தா! இவைகளைப் பெற்றுக்கொள். உன் பாணங்கள் எனக்கு புஷ்பம் போன்றவை" என்று சொல்லி தன் கோதண்டத்தை இழுத்தான்.

அவ்வளவுதான்! அரக்கனின் வில்வித்தை வீரராகவன் முன் விளையாட்டாய் வீணாயிற்று. அத்தகைய மேன்மை கொண்டது கோதண்டபாணியின் திறன். இலக்கு வைத்த படியே கண்ணும் கையும் ஒன்றாய் வேலை செய்யும். தோளிலிருக்கும் அம்பறாத் தூணி ஓயாது தோள் அசைவினால் சரங்களை கொட்டிக் கொண்டேயிருக்கும். தூணியிலிருந்து எடுப்பதும் வில்லில் கோப்பதும், இலக்கு வைப்பதும், வெவ்வேறு செயலாகத் தோன்றமாட்டா. இலாகவம் படைத்த ராகவனுக்கு எல்லாம் ஒரே செயல். ஒரு விநாடிச் செயல்; அற்புதச் செயல்; மழையாய் பெய்யும் சரங்களை வரிசையாய்த் தொடுத்து ஒரே சமயத்தில் பல்வேறு விளைவுகளை விளைவிக்கும் வெற்றியே கண்ட வில்வித்தை மேதாவி அவன். கோதண்டத்திலிருந்து ஒரே சரமாய்ச் சீறி பறந்த பதினான்கு பாணங்கள் த்ரிசிரஸ்ஸின் மார்பைத் துளைத்தன. அதே சமயத்தில் வெளிக் கிளம்பிய நான்கு பாணங்கள் ரதத்தின் நான்கு குதிரைகளையும் கீழே சாய்த்தன. சாரதியும் அப்பொழுதே எட்டு பாணங்களால் அடியுண்டு மண்ணில் புரண்டான். ஒரு வாளி அந்த ரதத்தின் கொடியைப் பற்றி இழுத்துப் பிய்த்தது. நாணேற்றிய வில்லில் வீணையின் ஒரே தந்தி விரலழுத்தத்தால் வெவ்வேறு தொனியை உண்டு பண்ணுவது போல் வீர சிங்கமான ராகவன், லாகவத்தினால் ஒரே சமயத்தில் அவ்வில்லின் நாணில் அங்கங்கு இடம் மாறி சரங்களை விடுத்தான். மந்திர மில்லை, மாய மில்லை, பிறர் உதவியுமில்லை; பதறாமல் தன்னிலையிலே நின்று தன் திறனைத் திரட்டிப் பயிற்சியில் தேர்ந்த சாதுர்யத்தைப் பயன் படுத்தினான் புகழ் பெற்ற வெற்றிச் செல்வன். த்ரிசிரஸ் உடனே தன் முழு பலத்துடன் எதிரியின் மேல் தடாரென்று பாய்ந்து அமுக்கி விட எண்ணி சிதறுண்ட தேரை விட்டு வெளிக் கிளம்பும் போதே ஒரு ராம பாணம் அவன் மார்பைப் பிளந்து உட்சென்று விட்டது. படாரென்று அடிபட்ட மரம்போல் பிரக்ஞை யிழந்து விழுந்தான் த்ரிசிர அரக்கன். உடனே மூன்று பாணங்கள் தரை மேல் தாவிப் பறந்து

சாய்ந்த அரக்கனின் மூன்று தலைகளையும் துண்டித்து விட்டன. இவ்வற்புத நிகழ்ச்சியைக் கண்டு ஓரிரு அரக்கர்கள் [சூர்ப்பணகையும் இதைக் காணு திருப்பளா?] கரனை விட்டு ஓடோடியும் போய் மறைந்து கொண்டனர். ஓடுகிறவர்களை அடக்கித் திரட்டி, கடும் ஆபத்தில் பெருஞ் சினங்கொண்டு காலபாசத்தைக் கழுத்தில் மாட்டிக் கொண்டவனுன கரன் கர்ஜனை யிட்டான்.

---

## 28. கரனுடன் போர்

திரிசிரஸ்ஸின் தலைகள் தரையில் புரண்டவுடன் கரன், அரக்கர்கள் அழியும் நாள் வந்து விட்டதென்று உணர்ந்தான். இதுவரை அரக்கர்கள் எதேச்சாதிகார ஆதிக்கம் கொண்டவர்கள்; மானிடனை அற்பத் துரும்பாய் எண்ணினவர்கள். அம்மானிடன் ஒருவன் தன்னந் தனியனுய்க் கேவலம் தன் தோள் வலி ஒன்றினுலேயே அரக்கர் கொழுப்பை அடக்கியது மாத்திரமின்றி அவர்களைக் கூண்டோடு எமனிடம் அனுப்பி விட்டான். இவன் தண்டகவனம் வந்ததுமே, சாவின்மை பெற்ற விராதன் குழியில் புதைக்கப்பட்டு உயிரிழந்தான் என்றதுமே அரக்கர்கள் எல்லாரும் தவசிகளை இம்சிப்பதை விட்டுப் பத்து வருஷ காலம் ராமன் கண்ணில் படாது ஜனஸ்தானத்தில் தனியே ஒடுங்கிக் கிடந்தனர். சூர்ப்பணகை என்னும் அரக்கி இப்பொழுது தங்கள் இனத்திற்கே உலை வைத்து விட்டாள். ஜனஸ்தானம் என்ற இடம், அரக்க குலம் அறவே ஒழிந்து உண்மையாக ஜனங்கள் வசிக்குமிடமாகப் போகிறது என்று உறுதி கொண்டான். இனி ஆக வேண்டியது என்ன? செய்ய வேண்டியது என்ன? இந்த மானிடன் இலாகவமாகத் தன் வில்லின் திறனைக் காட்டி அரக்கர் சேனையை ஒழித்தான். இனி அரக்கன் வில்லின் திறனைக் காணட்டும். தானும் ஓர் உயர்ந்த தனுர்வேதி யென்றுணரட்டும் என்று தன் முழு வலிவையும் உபயோகிக்கத் தீர்மானித்தான் கரன்.

உடனே கரன் தன் வில்லை வளைத்து ரத்தத்தை உறிஞ்சும் சர்ப்பங்கள் போன்ற "நாராசம்" என்ற பாணங்களைத் தொடுத்து ரகுநாதன் மேல் விடுத்தான். ரதத்தை ஒரு நிலையில் நிறுத்தாது அதி வேகமாய்ச் சுற்றியும் மறைத்தும், விரைவாக வெளிக் கிளம்பியும் மறுகணம் இடம் மாறியும், எதிரியின் இலக்குக்குத் தப்பித் தன் வில் வரிசைகளைக் காண்பித்தும் சுற்றித் திரிந்தான் கரன். தன் சாமர்த்தியத்தைத் தெரிவிக்குமாறு எதிரியின் பாணங்கள் புக வொட்டாமல் கூரிய சரங்களால் தான் ஒரு கூடு கட்டிக் கொண்டான்.

தனக்கு ஏற்ற வில்லாளி தான் என்று கண்டறிந்த தாசரதி களிப்புற்று அரக்கன் ஆற்றலை அங்கீகரிப்பதாகத் தன் வில்லினுல் எதிரியின் சரக் கூட்டின் அருகே தன் வாளிகளால் இடை வெளியில்லாது பந்தலிட்டான். அரக்கன் வில்லின் வேகத்தையும் இலக்கின் கதியையும் அம்புகளின் ஏற்றத் தாழ்வு மட்டத்தையும், தன் பயிற்சித் திறமையின் அளவு

கோலால் நிர்ணயித்த தனிப் பெரும் தனுர்தீரன். அதற்கேற்பச் சற்றுக் குறைந்த உயர் மட்டத்தையும், அதிகரித்த வேகத்தையும் கொண்டு அதி விரைவில் வாளிகளால் கூரை வேய்ந்தான். இவ்விரண்டு செயல்களும் ஒரே சமயத்தில் நேர்ந்தவை. மிக்க ஆச்சரியமான அற்புதக் கண் காட்சி! இவர்களின் சரமாரி எல்லாத் திக்குகளையும் ஆகாயத்தையும் மறைத்துக் கொண்டு வெளிச்சத்தை மழுக்கியது.

விட்டில் பூச்சி போல் ரதத்தில் பறந்து கொண்டிருந்த கரன், "நாளீகம்", "நாராசம்", "விகர்ணி" என்கிற ஊசிமுனை ஈட்டிகளான பாணங்களைத் தரையில் நின்ற வில்லாளி மேல் விடுத்தான். தான் கையாண்ட ஆயுதங்களை இவ்வரக்கனும் பிரயோகிக்கிறுனென்று ரகுவீரன் வியந்து பம்பரமாய்ச் சுழலும் ரதத்திலிருப்பவனைக் கவனித்தான்.

அப்பொழுது தன்னை வில்லின் இலக்குக்கு இரையாக்க நோக்குகிறுன் என்று உணராமல் கரன், நரன் களைப்படைந்து விட்டதாகக் கவனித்து அவனை ஒழித்து விட ஆவேசங் கொண்டு அருகே அணுகினுன். அணுகும் போதே சற்று நிதானித்த எதிரியின் கையிலிருந்த வில்லை இலக்கு வைத்துப் பாணங்களால் ஒடித்து விட்டான். அதே விஞடியில் ஏழு பாணங்களைக் கொண்டு ராகவன் பூண்ட பொற் கவசத்தைப் பிளந்து விட்டான். வில்லின்றி, கவசமின்றி, ஒரு விஞடி நிதானித்த நரோத்தமன் அதே விஞடியில் அரக்கன் பாணங்களால் தன் அங்க மெல்லாம் அடிபட்டதாக உணர்ந்து கோபம் பொங்கி, சரி, 'இவனுடன் விளையாடினது போதும்' என்று உறுதி கொண்டு அகத்திய மாமுனி யளித்த மகத்தான விஷ்ணுவின் வில்லை எடுத்து நாணேற்றி அரக்கன் அழிவிற்கு அறிகுறியாக முதல் முதல் அவன் ரதத்தின் கொடியை ஒரு பாணத்தால் அறுத்தெறிந்தான். ஆறு பாணங்களால் ஒரே சமயத்தில் கரனின் தலையையும் இரு கைகளையும் மார்பையும் குத்தித் துளைத்தான். அடுத்த விஞடியில் பதின்மூன்று "நாராச" பாணங்களைத் தொடுத்து, குதிரைகள் பூட்டிய நுகத்தடியையும் குதிரைகளையும், தேரையும், தேர்ப்பாகனையும், கரன் கையிலிருக்கும் வில்லையும் தகைத்தெறிந்து அவனையும் தூக்கியெறிந்தான். வில் முறிந்து, ரதமழிந்து, பரியும், பாகனும் மாண்டு பாதங்கள் பிளவுண்டு, தரையில் குதித்து எதிர் நின்றுன் திகைத்துப் போன அரக்கத் தலைவன்! "சபாஷ்" என்று வானில் ரிஷிகளின் வெற்றி மொழி!

[இங்கு மகத்தான மகிமை வாய்ந்த ஸ்ரீ மகா விஷ்ணுவின் தனுசை ராகவேந்திரன் எடுத்துக் கொண்டது கவனிக்கத் தக்கது. இத்தகைய வில்லைக் கையாளுவதென்ருல் அதற்குத் தகுந்த யோக்யதை பெற்றவனுக இருக்க வேண்டும். இவன் மானிடனுகவே வாழ்க்கையிலும் எண்ணத்திலும் இலட்சியத்திலும் மானிட இனத்திற்காக உயர் வழிகாட்டியாய் விளங்குகிறுன் என்று அகஸ்தியர் உணர்ந்தனரோ என்னவோ, இவனிடத்தில் உண்டு எல்லா யோக்யதையும் என்றுணர்ந்து விஷ்ணு தனுசைப் பெற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்தினுர். விஷ்ணு தனுசு என்ருல் அதன் மகிமையையும் சக்தியையும்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அத்தகைய வில்லை இப்பொழுது தோள் வழி செழித்த தனிவீரன் கரன் பால் உபயோகிக்கக் கையாளுகிறுன். தருமத்திலே நின்றவன், தரும யுத்தஞ் செய்யும் சுத்த போர் வீரன். முறை தவறி யுத்த விதிகளைப் புறக்கணித்த ராட்சதத்

தலைவனை அதிவிரைவில் மரண தண்டனை யளிக்கத் தீர்மானித்து விட்டான்.

[ஸ்ரீ மகாவிஷ்ணுவின் தனுசுக்கு இரையானவனுக்கு நற்கதியுண்டு என்ற கருணை எண்ணங் கொண்டு கோபத்திலும் விரோதிக்கு மறுமையில் நன்மை பயக்க எண்ணி இத் தனுசைக் கைப்பற்றினன் காகுத்தன் என்று விளக்கியிருக்கிறார்கள் பெரியோர்கள்.]

கதை தாங்கி விலு விலுத்துப் பெருமூச்சுடன் எதிர் நின்ற கரனைக் கண்ணுற்றான் கருணை வள்ளல்.

[சுத்த வீரனன்றோ ரகுபதி! எதிரி சளைத்த போது மேல் விழுந்து அவனை மாய்ப்பது மாண்பல்ல வென்றறிந்தவன். அவனுக்கு அவகாசம் கொடுத்து உதவுவதே தரும யுத்தத்தின் தன்மையாகு மென்றுணர்ந்து நிதானமாக அவன் சற்று சமாளித்துத் தேற்றிக் கொள்ள அவகாசம் கொடுக்க அவனிடம் பேச்சுக் கொடுக்கிறான் பெருந்தகை.]

ஆணித்தரமாகவும், ஆனால் மிருதுவாகவும் பேசுகிறான் கோதண்ட பாணி :—

"அரக்கனே! பெரும் படை உள்ளதென்று பெருமிதங் கொண்டாய். அதன் செருக்கால் உலகம் அருவருக்கும்படி தீச் செயல்களிலிறங்கினாய். இரக்க மின்றி எதேச்சையாய்க் கேட்பாரில்லாமல் அநேக காலம் துஷ்டக் கருமங்களில் ஈடுபட்டிருந்தாய். பாவத்தையே தன் வாழ்க்கையாய்க் கொண்ட எவனும்—அவன் திரிலோக ஈச்வரனானாலும்—அவன் அழிந்து போவது நிச்சயமென்று நீ அறிந்து கொண்டாயில்லை. பேராசையாலோ, பிடிவாதத்தாலோ, காமத்தாலோ அதருமத்திலிறங்கினவனுக்கு இம்மையில் அழிவும் மறுமையில் துன்பமும் அனுபவிக்க வேண்டுமென்பது விதியல்லவா? மகா பாபி நீ. தரும மூர்த்திகளான தவசிகளை தண்டக வனத்தில் இம்சித்துக் கொன்றாய். அவர்கள் உனக்குச் செய்த கெடுதி என்ன? அவர்களைக் கொன்றதால் என்ன பலன் கண்டாய்? தீங்கிழைக்கும் பாதகர்கள், எவ்வளவு ஐச்வர்ய மடைந்த போதிலும் அவர்களை உலகம் நிந்திக்கும், அவர்கள் வெகு காலம் சுகமாய் வாழ முடியாது, தகுந்த காலம் வந்ததும் அவர்கள் கோரமாகத் தண்டிக்கப் படுவார்கள். பாபிகளுக்கோ அக்காலம் அதிவிரைவில் வந்து விடும். அதே போல் உன் காலமும் நெருங்கினதை அறியாயா?" என்று அரக்கனுக்கு மெய்யுரை உணர்த்தினன் மெய்ஞ்ஞானியான மேலோன்.

[அரக்கன் இதைக் கேட்கிறான். திணறும் தன் மூச்சும் தளர்ச்சியும் சற்றுத் தணிந்தன.]

இதைக் கவனிக்கிறான் ரகுநாதன். மேலும் சொல்கிறான் :—

ராகவன் சொல்கிறான் :—"நிசாசரா! உன்னையும் உன்னைச் சேர்ந்த அரக்கர்களையும் கடுமையாகத் தண்டிக்க எனக்கு அதிகாரமுண்டு. துஷ்டர்களை எங்குக் கண்டாலும் அவர்களைத் தண்டிப்பது என் கடமையாகும். அயோத்தி மன்னனான பரதனின் ஆதரவும் அதிகாரமும் பெற்றவனாய் வந்திருக்கிறேன். [இந்த உண்மையைப் பின் நடக்க விருக்கும் நிகழ்ச்சிகள் நன்கு நிரூபிக்கப் போகின்றன வென்று அவ்வரக்கனுக்கு எப்படித் தெரி

யும்?] தர்மிஷ்டர்களான அநேக தவசிகளை நீயும் உன் அரக்கர்களும் கொலை செய்தீர்கள். அதனால் உனது அரக்கச் சேனைகள் பல மாண்டன, நீயும் அவர்களை இதோ, பின்பற்றப் போகிறாய். உன்னால் கொலையுண்ட நிரபராதிகள் இப்பொழுது வானில் விமானங்களிலிருந்து நீயும் உன் கும்பல்களும் உயிர் துறந்து நரகம் போன்ற போர்க்களத்தில் அவதியுறுவதைக் கண் குளிரப் பார்க்கட்டும். சரி! இன்னும் போர் புரிய வேண்டுமென்றால் யுத்தஞ் செய். உன் வெற்றிக்குரிய வலிவைக் கொண்டு உன் கை வரிசைகளைக் காட்டு." என்று மொழிந்தான்.

தன் ஆண்மைக்கும், வீரியத்திற்கும் சவால் கொடுத்து இவைகளைத் துரும்பாய் எண்ணும் ராமனது மொழிகளைக் கேட்டு கடுஞ் சினங் கொண்டான் கோர அரக்கன். தன்னிலையடைந்து பெருமிதங் கொண்டு புன்னகையுடன் பின்வருமாறு பதிலுரைக்கிறான். "தசரத புத்திரனே! கேவலம் தங்கள் கடமையைச் செய்த அப்பாவிகளான அரக்கர் சேனையை வென்று விட்டதால் தற்புகழ்ச்சி செய்து கொள்ளுகிறாய். உண்மை வீரர்கள் தங்கள் பராக்கிரமத்தைத் தாங்களே புகழ மாட்டார்கள். செய்யப் போவதையும் பற்றி வீறுப்பு கொள்ளார்கள். என் பராக்கிரமத்தை நீ அறியாதது உன் துர்ப்பாக்கியமே. உன்னிடம் சிறிது உரையாட எண்ணினேன். ஆனால் அதைச் செய்யப் போவதில்லை. ஏனென்றால் சூரியன் மறையுங் காலம் இது. இரவு வந்து விட்டால் யுத்தத்தை நிறுத்தி விட வேண்டியது தானே. பதினாலாயிரம் ராக்ஷஸர்களை நீ கொன்றாய். அதற்குப் பதிலாக நான் உன்னைக் கொன்று அவர்களைச் சேர்ந்தவரின் கண்ணீரைத் துடைப்பேன்" என்றான்.

[அக்காலத்துக் கலாசாரப் பண்பு, இராக்கதர்களேனினும், இரவில் யுத்தஞ் செய்வது நேர்முறையல்லவென்பதை எடுத்துக் காட்டுகிறது. தினமும் இரவில்தான் இப்பொழுது பிரபலமான விமானங்கள் பறந்து சென்று மலைகளைப் பிளக்கும்; நகரங்களைக் கொளுத்தும்; மனிதர்களை—கிழவர்கள், ஸ்திரீகள், குழந்தைகள், ராணுவத்திலில்லாத பொது மக்களையும் மூச்சைப் பிடுங்கித் தோலை எரித்துக் கருக்கிச் சுட்டுச் சாம்பலாக்கும், குண்டுகளையும், வேட்டுகளையும், அணுகுண்டுகளையும் வீசிக் கோடிக் கணக்காய்க் கொலை செய்யும். இதைப் பகிரங்கமாய்ப் பிரகடனஞ் செய்து மார் தட்டி வெற்றியில் திளைக்கும் இக்கால ராணுவ முறைகள் எவ்வாறு தரும யுத்தத்தையொட்டியவை என்று விளக்குகிறதல்லவா?]

"உன்னை என் மாய்ந்த சேனைக்கு இதோ பலியிடப் போகிறேன்" என்று கர்ச்சித்துக் கனத்த ஒரு கதையை ராமன் மேல் வீசி எறிந்தான் கரன். இதைக் கண்டு 'சரி அரக்கன் போர் புரிகிறான். இனி இவனை மாய்க்க வேண்டியதுதான்' என்று கருதி தன் பாணங்களால் அக்கதை கீழே விழுமுன் அதைப் பல துண்டங்களாய்த் துளைத்தெறிந்தான் வில்லாள விஞ்ஞானி. இதைக் கண்ட அரக்கனின் மனமும் பல துண்டுகளாய்ப் பிளந்தது.

## 24. அரும் பெரும் ஆணவத்திற்கு அன்பு மாலை !

முழு பலத்தையும் கொண்டு வீசி எறிந்த கனமுள்ள கதை பல சில்லு களாய்க் கீழே விழ, அதைக் கண்டுப் பதறித் துடித்தான் கரன். அவனை நோக்கித் தரும தேவதையான சக்கிரவர்த்தித் திருமகன் பேசுகிறான்:—

"கொடிய அரக்கனே! தவசிகளையும், அந்தணர்களையும் காரணமின்றிக் கொலை செய்த கொடும் பாவியே! உன் கதையின் கதியைக் கண்ணுற்றனையன்றோ? இப்பொழுது உன் கதி என்னவாகு மென்று உணர்கிறாயா? என்னை வதைத்துக் கண்ணீர் துடைக்க வேண்டு மென்று பிதற்றினாய். இதோ உன் உதிரத்தால் இப்பூமியின் அழுக்கு மெழுகப் பட்டுப் பரிசுத்த மாகப் போகிறது. எல்லோருக்கும் இதுவரை நரகம் போன்ற இந்த ஜனஸ்தானம் இதுமுதல் எல்லோருக்கும் புகலிடமாகப் போகிறது. உனக்குப் புகலிட மெங்கே"?

[இப்படி ஆபத்து கிட்டின போதும் மரணத் தறுவாயிலும் மனிதனுக்குத் தீதில் நன்னெறி காட்டி, அதருமத்தை நினைத்து, அதை விட்டுத் திருப்பி 'தெய்வமே கதி' என்று சரணடையும் படி கடைசி ஜீவதசையிலும் கடவுள் ஒரு சந்தர்ப்பம் அளிக்கிறான் போலும்! ரகுநாதன் அரக்கன் அந்திம காலத்திலும் அவன் விளைவித்த அநீதிகளை அறிய வுரைத்துத் தருமத்தில் திரும்பி அடைக்கலம் புக வாய்ப்பு அளித்து அழைக்கிறான். அரக்கனோ இதை யறிந்தும் அசட்டை செய்து அகம்பாவம் கொள்கிறான். அரசிளஞ் சிங்கனை அகம்பாவம் கொண்டவனாய்க் கருதிக் கடிகிறான், தனது மன வோட்டத்தையே மற்றவனுக்குப் புகுத்துதல் தீயோனின் தன்மையாகும். அதையே இங்கு நிரூபிக்கிறான் கரன்,]

கோசலேந்திரனின் கடுஞ் சொற்களைக் கேட்ட கரன் ரோஷம் தாங்காது இடி போல் முழக்கமிடுகிறான். தன் அழிவிற்காகவும் தன் இனம் அழிவிற்காகவும் வெகுகாலமாகத் தவசிகளும் ரிஷிகளும் ஹோமாக்கினியில் 'ஹவிஸ்ஸை' சமர்ப்பித்துக் காத்திருக்கின்றனர் என்று நினைப்பூட்டிய ரகுநாதனின் எச்சரிக்கை அரக்கத் தலைவனை அடங்காக் கோபா வேசத்தில் ஆழ்த்தி விட்டது.

அமைதியில் நின்றிருக்கும் க்ஷத்திரிய வீரனை நோக்கி கூச்சலிடுகிறான்: "ஏன் வீண் வீறுப்பு? உன்னை கிட்டிய ஆபத்தை உன் பெருமிதத்தில் நீ அறிய வில்லை போலும்! உன்னை காலபாசத்தில் சிக்குண்ட, மரணவஸ்தையிலிருக்கும் யானிடனாய்க் காண்கிறேன். உன் இந்திரியங்கள் ஒடுங்கி விட்டன. என்ன சொல்வதென்றும் உணர முடியா நிலையிலிருக்கிறாய். இதோ உன் முடிவு காலம்" என்று நெஞ்சு படைக்க வார்த்தைகளை உதிர்த்தான். அங்கு மிங்கும் பார்த்து அருகிலிருந்த ஒரு ஆச்சா மரத்தை வேருடன் பிடுங்கினான். தன் முழுபலத்தையும் கொண்டு அதை உயரக் கிளப்பி "இத்துடன் நீ மடிந்தாய்" என்று கடைசிக் கூக்குரலிட்டு ராமன் மேல் வீசி எறிந்தான் கரன்.

எதிர் நோக்கி வரும் பெரு மரத்தை எண்ணிறந்த பாண வரிசையால் துண்டு துண்டாய்த் துண்டித்து விட்டான் அத்தனி

பெரும் தீரன். "சரி! இவன் சாக வேண்டியதுதான்" என்று தீர்மானித்து விட்டான் தாசரதி.

["கடைசீ "சான்ஸ்" கொடுத்தோம், அப்பொழுதும் இவன் திரும்ப வில்லை, இவன் தகுந்த தண்டனையை அடைய வேண்டியவனே" என்று எண்ணினன் போலும்!]

ராகவன் கண்கள் சிவந்தன, கடுமையான திடச் சித்தம் முகத்தில் ஆணவத்தை முறுக்கேற்றியது. உடனே வில்லை இழுத்துக் கூரிய பாணங்களை விடுத்தான். சீறிய எண்ணத்தில் எழுந்த எமபாசம் போன்ற அவ் வாளிகள் ஒவ்வொன்றும் கரன் உடலில் ஊடுருவிப் பாய்ந்து துளைத்துத் துன்புறுத்தியது. இவ்வேதனையில் மதி கலங்கி உதிரம் பெருக்கி வெறி பிடித்தவனாய் வில்லாளியின்மேல் பாய்ந்தான். அதே விநாடியில் அக்கினியை நிகர்த்த இந்திரனால் அளிக்கப் பட்ட ஓர் பாணத்தைத் தொகுத்து இராக் கதனைத் தகைத்தான் ராமன். இடி முழக்கத்துடன் சீறிப் பறந்த அப்பாணம் அரக்கன் மார்பைக் கிழித்துப் பிளந்து மறைந்தது; கரனும் மரணமடைந்து மாய்ந்தான்! சராக்கினியால் கொளுத்தப் பட்டவனாய், அவ்வரக்கத் தலை வன் ருத்திரனால் சுவேதாரணியத்தில் கொளுத்தப் பட்ட அந்தகாசூரன் போலவும், இந்திரனது வஜ்ராயுதத்தால் வதைக்கப் பட்ட விருத்திராசூரன் போலவும் மாண்டு வீழ்ந்தான்! அப்பொழுது அக்கோர யுத்தத்தை முற் றும் கண்ணுற்று ராமச்சந்திரன் வெற்றியில் களிப்படைந்த ராஜரிஷிகளும் பரம ரிஷிகளும், தவசிகளும், தேவதைகளும், ஜயவீரனைப் பலவாறு புகழ்ந் தார்கள். "ஒப்பற்ற வீர தீரனே! மாத்திரையற்ற வெற்றி வீரனே! தேவேந்திரன் இந்த யுத்தத்தைக் காணவே சரபங்கரது ஆசிரமத்திற்கு வந் தவன். இக்கொடிய அரக்கக் குழாங்களை அறவே ஒழிக்கவே மகரிஷிகள் உன்னை இங்கு அழைத்து வந்தனர். சக்கரவர்த்தித் திருமகனே! இம்மகத் தான தீரச் செயல் உன்னால் இலகுவாகச் செய்யப் பட்டு இனிது முடிந்தது. இனி நிர்ப்பயமாய்த் தண்டகவனம் தடையின்றித் தவசிகள் வசிக்கப் பெறும் திவ்விய தேசமாகி விட்டது. ஜனஸ்தானம் இனி ரிஷிஸ்தானம் தான்" என்று அகமகிழ்ந்து அளவளாவினர்கள். அவ்விடத்துக் கடைசீ அரக்கனும் ஒழிந்து போனன்! அப்போது வானில் திவ்விய கீதம் ஒலித்தது. தேவர்கள் மலர்மாரி பொழிந்தார்கள்.

"ஆஹா—என்ன வீரியம்! என்ன புத்தி சாதுர்யம்! இவை மகா விஷ்ணுவினவையே ஒத்திருக்கின்றனவே!" என்று புகழ்மாலை இசைத் தார்கள். உடனே அங்கு ஓர் புது வனப்பு தோன்றிற்று, வெற்றியின் குதூகலக் காட்சி கொண்டு இயற்கை ஓர் தனி அழகில் திளைத்து விளங் கியது!

வானில் இன்னிசை ஒலியையும் விண்ணில் ரிஷிகளின் வெற்றி மொழி களையும் கேட்ட லட்சுமணனும் மைதிலியும் தாங்கள் இதுவரை தங்கி யிருந்த ஆச்ரமத்தின் பின்னிருந்த குகையை விட்டு வெளிவந்தார்கள். ஆச்ர மத்தினுள் ஆனந்தத்துடன் நுழைந்தார்கள். அதே சமயம் வெற்றி வீர னை வீரராகவனும் ஆச்ரமத்தில் நுழைந்தான்.

லட்சுமணனின் ஆநந்தம் ஒன்று திரண்டு அண்ணலைத் தலை குனிந்து பலதடவை பணிவதில் வெளியாயிற்று. ஜனக நந்தினி பதி ஆச்ரமத்தினுட்

புகுந்தனனே இல்லையோ உடனே தாவிப் பறந்து வந்து அவனை அப்படியே அணைத்துத் தழுவிக் கொண்டாள். அவள் உள்ளம் வெடிக்கும் பேரானந்தத்தை—பதியின் ஒப்பற்ற வெற்றியின் பரமானந்தத்தைக் கண்டான் ஜயராமன். தன் அன்புப் பெருக்கால் அவனது அரும் பெரும் அமர் திறனையும், ஈடு இணையற்ற மகத்தான வெற்றியையும் சுவைத்துணர அவனை அடிக்கடி இறுகப் பற்றி ஆலிங்கனஞ் செய்து தன் பரவசத்தால் வாகை சூட்டி களிப்பின் எல்லை எய்திய குழந்தையின் உள்ளத் திருப்தியை வெளிக்காட்டினாள். மறுபடியும் மறுபடியும் கணவரைக் கட்டிக் கட்டிக் களிப்பூட்டினாள். அவள் மிருதுவான தேகஸ்பரிசமும், வெள்ளோட்டங் கண்ட அவள் இன்பப் பெருக்கும் அன்பு அணைப்பும் வீராதி வீரனுக்கு மனங்குளிர வைத்தன. ரத்தம் தோய்ந்த ரணங்களும் காய்ந்து மறைந்தன. களைப்பைக் களைந்து அவள் களிப்பில் தானும் களித்தான் கோசலைக் குமரன்!

## 25. இலங்கை மன்னன் பரபரப்பு

ஜனஸ்தான அரக்கர்களை அறவே ஒழித்துக் கட்டிய தனிப் பெரும் வீரனான புருஷோத்தமன் மைதிலியின் மன மகிழ்ச்சியில் மனங் களிப்புற்றிருக்கையில், கோர யுத்தஞ் செய்து கரன் மாண்டதையும் அரக்கர் அழிந்ததையும் நேரில் கண்ட அகம்பனன் என்ற அரக்கன் ஒரே பாய்ச்சலாய் இலங்கை வந்தடைந்தான். அந்நகரின் அதிபதியான இராவணனிடம் கர தூஷண வதத்தைத் தெரிவிக்கத் துடித்தான்.

[ஒவ்வொரு மனிதனின் அறிவிலும் ஆத்மாவிலும், இருதயத்திலும் இக்கடவுள் உணர்ச்சி பிரதிபலிக்கிறது. கடவுள் நம்மிடத்திலுள்ள உண்மைத் தத்துவம். அதை அறிய முயலுவோம். அறிந்து கடவுளாவோம், இதுவே இன்றியமையாத நம் இயற்கைச் சக்தியும் தன்மையுங்கூட. இம்மெய்ப் பொருள் கொண்ட வேதாந்த உண்மையை விளக்கி வைக்கவே 'இவன் மகாவிஷ்ணுவைப் போன்றவன்' என்ற மொழி தேவர்கள் வாக்கிலிருந்து வந்தது போலும்! ஆனால் அரக்கனல்லவா அகம்பனன். அரக்க அறிவைக் கொண்டு அத்தேவ மொழிக்குத் தன் சுய மனப் போக்கின்படி பொருள் கொடுத்தான். அவன் நினைத்தான். அசகாய சூரன் ராமன், யாவராலும் வெல்ல முடியாதவன். எனினும் தேவர்களின் வாக்கு இவனை ஒரு மானிடனாகத்தானே நிரூபித்தது. தெய்வக் கலப்பிருந்தால் அவர்கள் அறியாமலிருப்பார்களா? ஆகையால் இவன் மானிடன் தான். ஒருவராலும் வெல்ல முடியாதவன்தான். ஆனால் மானிடன் என்றதால் "முடிவு நிச்சயம்" என்று அம்முடிவைப் பற்றி எண்ணமிட்டான். அம்முடிவே ராவணன் முதல் கடைசி ராட்சதன் வரை அரக்கர் இனத்தின் முடிவையே விளைவிக்கும் வித்தாய் முளைத்துத் திளைத்து அழித்தது. அவன் கணத்தில் விரைந்தோடி வருகிறான் இலங்கைக்கு. அரண்மனை வந்து பெரு மூச்சு விட்டு விழுகிறான். எழுகிறான். ராவணன் முன் திணறுகிறான். "என்ன" என்று அதட்டப் படுகிறான். அதற்கு நாக்குழறப் பதறிப் பேசுகிறான் :—

"அரசே! ஜனஸ்தானத்திலிருந்த அரக்கர்கள் அனைவரும் மடிந்து போயினர். கரனும் தூஷணனும் எமலோக மடைந்தனர். நான் பிரயாசைப் பட்டுத் தப்பித்து உயிர் பிழைத்து ஓடி வந்தேன்."

அவ்வளவுதான்! தசக்கிரீவன் கண்களில் தீப்பொறி பறந்தது. கோபாவேசம் பொங்கி எழுந்தது. "என்ன! என்னுடைய ஜனஸ்தானத்திலா? அதை யழித்தவன் யாவன்? எவனடா, எங்கும் புகலிடமின்றி என்னால் கொலையுண்டவனாகப் போகிறான்? சீக்கிரம் சொல். எனக்குத் தீங்கிழைப்பவன் இப்புவியிலிருப்பனோ? இந்திரனோ, குபேரனோ, யமனோ, எவனாயினும் இதோ மடியப் போகிறான்" என்று கர்ச்சிக்கிறான் ராவணன். அரக்கர் அடியோடு மாண்டதைப் பற்றி அக்கறையில்லை. துக்கமில்லை. தன் சமஸ்தானப் பெருமைக்குப் பங்கம் வந்ததாகக் கருதுகிறான். அவன் செருக்கின் செல்வாக்கு சீறி எரிகிறது. ராவணன் கோபாவேசத்தைக் காண்கிறான் அகம்பனன். தன்னையே கொன்று விடுவான் என்று திகில் கொண்டான். [ராமாயண மெனும் மகா ரதம் இப்போது முக்கியமான கட்டத்தில் வந்து தங்கியிருக்கிறது. அந்த ரம்மியமான ரதத்தின் வடத்தை இலங்கைக்கு இழுத்துக் கொண்டு வந்திருக்கிறான் இவ்வரக்க ஒற்றன். இப்போதே இவன் தசக்கிரீவன் கோபத்திற்கிரையாய் விட்டால் அந்த தேரின் வடம் அவ்விடத்தே நின்று விடுமென்று அஞ்சினான் போலும்.]

"அபயம், அபயம்" என்று அரக்க அரசனை அடிபணிந்து மன்றாடினான். "சரி அபயமளித்தேன் பிழைத்து போ நிகழ்ந்ததை விளங்க உரை" என்று ராவணனிடமிருந்து சொற்கள் வந்த பின்னரே தலையுயர்த்தி எழுந்து கை கூப்பிப் பின்வருமாறு சொல்ல வாரம்பித்தான்.

"வலிமையில் சிங்கம்; இளமையில் திகழ்பவன்; காளையின் உத்வேக முடையான்; உருண்டு திரண்டு நீண்டு அழகுள்ள கைகளுடையோன்; நீல மேக வர்ணன்; திக்கெட்டும் புகழுடையோன்; யுத்தத்தில் இந்திரனை நிகர்த்தவன்; மாசுமறுவற்ற பல பராக்கிரம முடையவன். தசரத சக்கரவர்த்தியின் புதல்வன்; ராமன் என்று ஒருவன் இருக்கிறான். அவனால் ஜனஸ்தானமானது அரக்கர் பூண்டின்றி ஜனங்கள் வசிக்குமிடமாகத் தன் பெயரை நிலைநாட்டியுள்ளது. கரன் தூஷணன் முதலிய அனைவரும் மறைந்து வெகு நேரமாயிற்று." என்றான். பாம்பு போல் சீறினான் பத்துத் தலையன். கோபம் நெஞ்சடைத்தது. "தேவர்களுடனும் இந்திரனுடனும் இருக்கிறவனா இவன்? ஜனஸ்தானத்திற்கா வந்திருக்கிறான்"?

அகம்பனன் ஜனஸ்தான வெற்றி வீரனின் புகழைப் பாடவே துடித்து நின்றவன்; வடம் பிடித்தவன் தேரை முழுவதும் இழுத்துச் செல்வானன்றோ! திரும்பவும் துவங்குகிறான் ராமாயணம் பாட. "ராமனென்பவன் மகா தேஜோவான். விற்பயிற்சியில் தேர்ந்து அனுபவங் கண்ட தலை சிறந்த வில்லாளி, திவ்விய அஸ்திர சஸ்திரங்களுடையவன். போர் புரிவதில் தேவேந்திரனுக்குச் சமனானவன். அவனுடைய இளைய சகோதரன் லட்சுமணனென்பான் மனிதனின் உண்மை சொரூபம் இன்னதென்பதை விளக்கிக்காட்டி நிற்கிறான். நிகரற்ற பலவான், துந்துபி முழக்கம் போன்ற குரலுடையான். சந்திரமுக முடையான். அரச லட்சணங்கள் திகழ்ந்து துலங்கும் தன் தமையனுடன் காற்று அக்னியுடன் கலந்திருப்பது போல் கூடவே

ஜனஸ்தானத்திற்கு வந்திருக்கிருன். இவர்கள் தேவர்களைச் சேர்ந்தவர்களில்லை. மனிதர்களே. இதில் எள்ளளவும் சந்தேகம் வேண்டாம். ஒரு விநாடியும் வீண் பொழுது போக்காமல் பாணங்களின் மழை பொழிந்து அரக்கர்களை ஆயிரமாயிரமாய் அடித்தழித்தான், அவன்," என்ருன்.

இதைக் கேட்டான் இலங்காதிபதி. மனிதனு அவன்? ராட்சஸேசுவரனுக்கு இவன் எம்மாத்திரம்? "சரி, லட்சுமணனுடன் ராமனைக் கொல்ல இதோ ஜனஸ்தானம் செல்கிறேன்." என்று அகம்பனனிடம் சொல்லி ஆயத்தமானுன்.

உடனே அகம்பனன் உடல் நடுங்கினுன். உள்ளம் பதறினுன், தான் கைப்பிடித்த வடத்துடன் ராம ரதத்தை இங்குக் கொண்டு வருவதே பொருத்தமானது. இதற்கு மாருக ராவணன் அங்கு சென்று போர் புரிவதை ஒப்புவானு? இதைத் தடுக்க முற்படுகிருன். "சுவாமி! நான் சத்தியமாக உரைப்பதைச் சற்றுச் செவிசாய்த்தருள வேணும்." என்று திரும்பவும் வடம் பிடித்து ஆரம்பிக்கிருன் ராமாயண ரதத்தை,

"ராமனென்பவன் சினங் கொண்டு விட்டால் அவனை அடக்குபவன் இம்மூன்று உலகிலுமில்லை. அவன் பராக்கிரமம் மூவுலகையும் முற்றிலும் மாய்த்து மறைத்து விடும். அவனது புகழ் வெள்ளம் பிரவாகங் கொண்டு இருகரையும் புரண்டு ஓடுகின்றது. சினங்கொண்டால் தன் பாணங்களால் அதை முற்றிலும் அணையிட்டு அடுத்த பக்கம் தேக்கி வைத்து அதே சமயம் வற்றச் செய்யும் வீரவிலாசன் அவன், ஒரு நிமிஷம் வான் நோக்குவான் இன்னும் சினங் கொண்டிருந்தால் அப்படியே நவக்கோசங்களையும், நட்சத்திரங்களையும், ஏன்? விண்ணையுங்கூட ஒன்ருய்ச் சேர்த்து வெட்டி வீழ்த்துவான். மகத்தான ஒரு காரணத்தாலோ, அல்லது அரக்கர் சூழ்ச்சியாலோ உலகம் நீரில் மூழ்க விருக்கிறது. அவன் சினங் கொண்டு காண்பானுகில், அவ்வளவுதான்! அப்படியே பம்பரம் போல் உலகைத் தூக்கி எடுத்து சரவரிசைகளைத் தூணிட்டு நிலை நிறுத்துவான்! அவன் சினம் முழு வன்மை கொண்டால் யுகப் பிரளயமாக்க வல்லது. கடலின் கரையைப் பிளப்பான், பூமியை அமிழ்த்துவான். கடலின் வேகத்தையும், அசைவையும் விசையையும் பாணங்களால் அடக்கி வைப்பவன். உலகங்களை அழித்துத் திரும்பவும் புதிதாய் ஆக்கவல்லது அவன் கடுஞ்சினம். தசக்கிரீவரே! இதை மாத்திரம் திடமாய் நம்பவேண்டும். இது ஸத்தியமே! பாவிகளால் சுவர்க்க மடைவது எவ்வளவு அசாத்தியமோ, அவ்வளவு அசாத்தியமானது ராமனைப் போரில் வெல்வதென்பது. தேவர்களோ, அசுரர்களோ எவராலும் அவனைக் கொல்ல முடியாது. இதனை நான் நன்கறிவேன். ஆனுல் இவனையும் மாய்க்க யுக்தி ஒன்றிருக்கிறது. சொல்லுகிறேன் செவி சாய்க்கவும்.

"இப்பெரும் புகழ் படைத்த ஒப்புயர்வற்ற மானிடோத்தமனுக்கு உயிர் நிலை அவன் மனைவி. உலகத்தில் உத்தமி என்பவள் அவள்தான். அவள் சீதை எனப்படுவள். மனிதப் பிறப்பில் திவ்விய காந்தி பெற்று பிரகாசிப்பவள் அவளேயன்றி வேறிலர், பெண் என்ற எழிலுக்கும்' பெண்மை என்ற தன்மைக்கும் பேராசிரியை இவளே! நுண்ணிடையாள்; புன்ன

கையாள்; பார்ப்பவரைப் புனிதமாக்கும் பொன் மேனி கொண்ட உயிரோ வியம்; அவளுக்கு நிகரானவள் அவளேதான். உலக மாந்தரும், தேவ மாந் தரும், கந்தர்வப் பெண்களும், அப்ஸ்ரஸ்த்ரீகளும், தானவத் தருணிகளும் அவள் அழகுக்கு ஈடுகட்டாமல் எட்ட நின்று விடுவார்கள். இவளை நீர் அபகரித்து வந்து விடும். தன் உயிர் நிலையான மனைவியை யிழந்தவுடனே அவன் மனமுடைந்து மரணமடைவான். இது நிச்சயம்'' என்று வகை காட்டினான் அகம்பனன்.

இதைச் செவியுற்றான் இலங்கை மன்னன். சரியான யோசனைதான் என்று ஆமோதித்தான். பிறன் மனைவியைத் திருடுதல் அரக்கத் தன்மைக் குப் புறம்பானதல்லவே!

மறுநாள் காலையில் இலங்கை விட்டு வெளிக்கிளம்பினான் ராவணேச் வரன். அதிவேகமாக ரதத்தில் பறந்து வந்து தாடகையின் மகனான மாரீ சன் ஆச்ரமமடைந்து அவனிடம் தன் எண்ணத்தைத் தெரிவித்தான். இரும்பைக் காய்ச்சிச் சூடிட்டாற் போல் அவ்வார்த்தை வேதனையுண்டாக்க மாரீசன் தன் செவியைப் பொத்திக் கொண்டு. ''ஐயையோ! வென்று அல றிப் புடைத்துக் கதறிக் கொண்டு சொல்லலுற்றான் :—''மன்னா! நம் குலத் தையே அறவே ஒழித்து விடச் செய்த இந்தச் சூழ்ச்சி யாருடையது? ராக்ஷஸ உத்தமனே! உனக்கும் உன் அரசுக்கும் உலைவைக்க இந்த யோசனை சொன்னது எந்தத் துரோகி? உன்னைச் சூழ்ச்சியால் மாய்க்க நினைப்பவன் எவன்? இதற்கு நீ உடன்படுவதா? அச்சமென்பதே யற்று அசைவற்று நிலை தவறா தீரங் கொண்ட வலிய வாலையுடையதும், பாணங்களையே அங்க மாய்க் கொண்டு கூர்மையான வாள் போன்ற கோரப் பல்லையுடையதும், தலைசிறந்த அரக்கர்களைச் சுண்டெலி போல் நசுக்கித் தேய்த்து விட்டுத் துயில் கொண்டிருக்கும், மானிட உருவங் கொண்ட அரும் பெரும் சிம் ஹத்தை எழுப்பத் தூண்டப் பட்டிருக்கிறாயே? அரக்கர் மன்னனே! வில் லாகிய முதலைகளையுடையதும். தோள் வலிவென்ற ஆழங் கொண்டதும், பாணங்களாகிற அலைகளைக் கொண்டதும், போர் வெற்றி என்ற வெண் ணுரையுடைய அலைமோதலுடையதும் அதிக கோரமானதும் அகாதமான துமான ராம சமுத்திரத்தில் நாம் ஏன் குதிக்க வேண்டும்? லங்கேச்வரா! ராக்ஷஸேந்திரா! அருள்புரி! மனக்கலக்கத்தை விடு. நீ துஷ்டனல்லவே அரசனன்றோ! சாது. நல்லபடியாகத் திரும்பிச் செல், உன்னுடைய மனை விகளிடத்தில் இன்புற்று வாழ. காட்டில் ராமன் தன் மனைவியுடனிருக் கட்டும்'' என்று வற்புறுத்தி மன்றாடினான் மாரீசன். அகம்பனன் ஜானகி யைத் திருடிவருமாறு யுக்தி சொன்னான். மாரீசன் வசனத்திலிருந்து அவளை அபகரிப்பது பேராபத்தில் முடியுமென்று விளங்கிற்று. அங்கு வந்தடைந்த ராவணனுக்கு முதலில் ஒன்றும் புலனாகக் காணோம். மதி குழம்பிற்று. பின்பு சற்றுத் தெளிந்து நல்லதென்று மாரீசன் மதி யுரையை மதித்து இலங்கை திரும்பினான், கடிதில் கௌவவந்த கடும் ஆபத்து தீர்ந்ததாக மாரீசனும் சற்றுத் தேர்ந்து தன்னிலையடைந்தான்.

———

## 26 இலங்கையில் மறுபடியும் சலசலப்பு

தண்டகவனத்தின் அற்புத நிகழ்ச்சியை அகம்பனனைத் தவிர இன்னொரு உருவம் கண் கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தது. உருக்குலைந்த உருவம்—மூக்கும் காதும் அறுபட்ட உருவம்—சூர்ப்பனகையின் கோபத்தில் குமுறும் உருவம், தனிப் பெரும் வீரனை சுந்தரராமன் சீதையோடு கூடி வாழ்வதைக் கண்டு அவளால் சகிக்க முடியவில்லை. அகம்பனனிடத்தில் பொல்லாக் கபட எண்ணம். இவளிடத்தில் கோபா வேசமும் அசூயையும் உச்சநிலையடைந்து தாண்டவமாடிற்று. ராமன் பர்ணசாலை சென்றதும் உடனே ஜானகி ஓடோடியும் வந்து வெற்றி வீர மணாளனை அணைவதையும் பார்த்துச் சகிப்பவளா அவள்? தன்னால் ராமனை யடைய முடியவில்லை யாதலின், அவனை மைதிலியும் அடையக் கூடா தென்று ஆத்திரங் கொண்டாள். லட்சியம் ஒன்றாயினும் அகம்பனனின் கருத்தும் இக்கோர அரக்கியின் கருத்தும் வெவ்வேறாயிருந்தன. அவளும் பேரிரைச்சலுடன் யுத்தரங்கம் விட்டு இலங்கைக்குப் பாய்ந்து வந்தாள்.

அச்சமயம் அரசன் ராவணன் ராஜசபையிலிருந்தான். மந்திரிகள் அவனைச் சூழ்ந்திருந்தனர். பொற்பீடத்தில் அவன் கம்பீரமாய் வீற்றிருப்பதைக் கண்டாள்.

[அமரிக்கையாய் சாந்தி உருவத்தில் வீற்றிருந்த இன்னொரு சித்திரம் உருவெளித் தோற்றத்தில் அவள் மனக் கண் முன் தோன்றுகிறது. அது ராமனின் முகவிலாசம். இவ்விரு உருவங்களையும் ஏறிட்டுப் பார்க்கிறாள். "ராமனது தேககாந்தியோ சூரியனொளி; இராவணனோ அக்னியின் ஜ்வாலை; அங்குப் புன்சிரிப்புப் பூத்த அழகிய வாய்; இங்குப் பிலத்துவாரம் போன்ற பெருவாய்; அங்குச் சிம்மத்தின் கம்பீரம்; இங்கு யமனுடைய தோற்றம்; அங்கு இலவம் பஞ்சிலும் மிருதுவான நீலத் திருமேனி. இங்கு போர் வடுக்களுடைய மலை போன்ற பருத்த உடல்; அங்கு அழகிய கழுத்தும் வசீகரிக்கும் சுந்தர வதனம்; இங்குப் பத்துத் தலைகள், இருபது கைகள், பயங்கர சொரூபம் உடைகளும் ஆபரணங்களும் தான் கண்ணைக் கவர்ந்தன. அங்கு துஷ்டர்களைத் தண்டித்துத் தவசிகளை ரட்சிக்கும் ஆடம்பரமற்ற உண்மை பராக்கிரமம்; இங்கு மலைகளைப் பிடுங்கி எறியும் மிருகத்தின் முரட்டுத்தனம். இன்னும் கவனிக்கிறாள் சூர்ப்பணகை. ஆம், மிகக் கொடிய சகோதரன். அஞ்சா நெஞ்சம் படைத்தவன். தேவர்களையும், தவசிகளையும் அடித்துப் புடைத்துத் துன்புறுத்துபவன்; வேண்டுமென்று அட்டகாசத்துடன் உலக தருமத்தைக் களைந்து தன் தருமத்தை நிலைநாட்டுபவன்; பிறர் மனைவிகளை அபகரித்தவன்; குபேரனின் புஷ்பக விமானத்தைக் கைப்பற்றியவன்; யதேச்சாதிகாரம் செய்யும் கொடுங்கோலன்; இரக்கமிலாக் கன்னெஞ்சன்; சுயநலப்புலி; காமம் தலைக் கொண்டவன், ஐம்புலன்களுக்கும் அடிபணிந்தவன்; இவனெங்கே, அப்புருஷச் சிங்கமெங்கே", என்று எண்ண அவள் மனம் பதைபதைத்தது. இப்பொழுதே இவன் ராமனுடன் போர் செய்வதைக் காண வேண்டுமென்று அவள் மனம் துடித்ததோ என்னவோ, சட்டென்று அரச சபையில் பாய்ந்து வந்து ஆவேசங் கொண்டாள்.]

அரச சபை யென்றும் அதை அணுகும் சமயம் எப்போதென்றும் கவனித்தாளில்லை. மூக்கும் காதும் அறுபட்டு விகார முற்றிருப்பதையும் பொருட்படுத்தாது ராவணன் முன் தோன்றி ராமனின் வில்வரிசையை நினைத்துப் படபட வென்று வசை மொழிகளை வாரி வழங்கலானாள்.

---

## 27. சூர்ப்பணகையின் முறையீடு

அமைச்சர்கள் அடங்கிய அரச சபையில் உருக்குலைந்த சூர்ப்பணகை முறையிடுகிறாள் :—

"ராவணா ! ஆபத்து நெருங்கி விட்டது. இதை உடனே கவனி. சிற்றின்பங்களில் மூழ்கிக் கிடக்காதே. உன் குலத்திற்கே அழிவு அணுகியிருக்கிறதென்பதை அறி. மக்கள் நலத்தில் நாட்டமற்ற அரசன் தன் கடமையையிழந்தவனாவான். அந்தந்தக் காலத்தில் செய்ய வேண்டிய கருமங்களைக் கவனியாத காவலன் அண்மையில் அழிவது கண்கூடு. உனக்குத் தேவர்கள், கந்தர்வர்கள் முதலிய பகைவர்கள் பலர் உளர். அவர்கள் உன் மேலுள்ள பகையைத் தீர்க்க என்ன சூழ்ச்சிகள் செய்கிறார்களென்பதை நீ அறிய வேண்டாமா? சுய புத்தியைக் கொண்டு ஆலோசித்து, தனக்கு வந்துள்ள இடையூறுகளைப் போக்கி, சத்துருக்களை அடக்கி அழித்து, மக்களின் நலனுக்காகவே, நீதி நெறியில் நின்று, உறங்கும் போதும் தருமத்தினின்று வழுவாமல் எல்லோரையும் பரிபாலித்து ஆள்பவனே உண்மையரசனாவான். கரன், தூஷணன் முதலியோர் மாண்டனர். உன் அரக்கர் சேனை முழுவதும் யமனுக்கு விருந்தாயிற்று, ஜனஸ்தானம் உனக்குச் சொந்தமானது என்று எண்ணியிருந்தாய். அது போய் விட்டது. நொடிப் பொழுதில் அங்குள்ள அரக்கர் படை அழிந்து போயிற்று, ஜாக்கிரதையில்லாதவனாய், சுயமதியிழந்து விஷய சுகங்களில் ஈடுபட்டு, உன்னைச் சூழவிருக்கும் ஆபத்தை அறியாமலிருக்கிறாய் நீ. "ராமனென்ற அனல் காற்று அரக்க இனத்தை அறவே பொசுக்கப் பரவி வருகிறது. நீ வாளாவிருந்தால் விரைவில் உனக்கு விநாசமே, ஜாக்கிரதை" என்று உறுமிச் சீறினாள்.

ராவணன் சகோதரியின் கடுமையான சொற்களின் கருத்தை ஆலோசிக்கிறான்.

[முன்பு அகம்பனன் வந்து எல்லாவற்றையும் தெளிவு படுத்தினான். உடனே மாரீசனிடம் சென்று அவனால் ஏற்கெனவே எச்சரிக்கப் பட்டுத் திரும்பி வந்தவன். இதைச் சூர்ப்பணகை அறியாதவளா ? முதலில், அகம்பனன் ராமனின் புகழை சீரிய முறையில் சித்தரித்தான். மாரீசன் அதற்கு வர்ணமிட்டு அழகு செய்தான். ராம பாண மென்ற ஆபத்தில் கோடிட்ட இடத்தை பூர்த்தி செய்து திருப்பினான். "இத்தகையான் எவன் ? இவனிடம் போர் செய்தாலன்றோ என் ஆண்மை பொருளுடையதாகும். இவனை நானும் ஒரு கை பார்த்தாலென்ன ? இவள் ராமனைப் பெரும் எமனாய்க் கருதுகிறாள் போலும் ! நல்லது. இவளிடமிருந்து அவனைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டு மென்று எண்ணினானோ என்னவோ.]

அவள் சிந்தனையைப் பொருட்படுத்தாது சகோதரியையும் அவள் மன வேதனையையும் கவனித்தான்.

## 28. சூர்ப்பணகையின் தூண்டுதல்

படபட வென்று வசை மொழிகளை அள்ளி வீசுகிறாள் அரக்கி. இவளுக்கு என்னவோ ஒரு சொந்தக் குறை இருக்க வேண்டும். ராகவனிடத்தில் ஒருவித வெறுப்பு உணர்ச்சியைக் காட்டுகிறாள்; ஏன்? சகோதரன் என்ற உணர்வில் அவன் அரசன் என்று மறந்தாள். அவனோ, அமைதியுடன் அவளை நோக்கி, "இவ்வளவு தூரம் இச் சபைமுன் ராமனைப் பற்றிப் பேசினாய். அவன் யார்? அவன் பெருமை என்ன? எந்த ரூபமும் பராக்கிரமும் கொண்டு உன்னை இங்ஙனம் துடிக்க வைத்தான்? அவன் ஏன் தண்டக வனம் வரவேண்டும்! அவன் ஆயுதங்கள் யாவை? அவன் பலம் எத்தகையது?" என்று வினவினான் இலங்காதிபதி.

ராவணனின் கேள்வி அரக்கியின் மனத்திலுள்ள உருவத்தை உயிர் பெறச் செய்கிறது. அவனை—அவள் மனத்தில் பொதிந்த ராகவ சிம்மத்தை ஒருதரம் மனத்திலும் வெளியிலும் வில்லும் கையுமாய்க் காண்கிறாள். அவள் பார்வை அவ்வுருவத்திலேயே நிலையாய் நிற்கிறது. வாய் பேசவாரம்பிக்கிறது.

"ராமன் என்பவன் தசரத சக்கரவர்த்தியின் புதல்வன்; நெடுந்தோளன் விசாலமான கண்கள் பொருந்தியவன்; மரவுரியும் மான் தோலுமுடுத்தி மன் மதனைப் பழித்து நிற்கிறான். அவன் வில்லுக்கிணை எங்குமில்லை, பொற் பூணிட்ட அவ்வில்லை வளைத்து நாணேற்றி. விஷம்பாம்பை யொத்த நாராசமெனும் வாளிகளைப் பூட்டிப் பொழிகிறான். போரில் ராமனைக் காண்கிறேன். அவ்வளவுதான். அவன் வில்வளைப்பதும், கூரிய கொடிய பாணங்களைத் தொடுப்பதும், குறிவைப்பதும் ஒன்றும் தெரிகிறதில்லை, ஆனால் ஆயிரக்கணக்கான அரக்கர்கள் அடிபட்டு மடிவதை மாத்திரம் காண்கிறேன். அத்தகைய வில்லின் சூரன் அவன். அவன் கையின் வேகம் புயல் காற்றைப் பரிகசிக்கிறது. அசைவற்று நிற்கிறான். இரும்பினும் வலிய மன உறுதி யுடையவன் அவன். நொடிப் பொழுதில் அரக்கர் குழாங்களைப் பொடிப் பொடியாக்கினதை இன்னும் கண் முன் பார்க்கிறேன். அம்பு மாரி பொழிந்தது. ஆகா! என்னே, அவன் தீரமும், வீரமும்! மூன்று நாழிகையில் கரன், தூஷணன், திரிசிரஸ் முதலியோர் உட்பட ராட்சத இனமே பூண்டற்று மறைந்து விட்டது' அவன் ஒருவனே போர் முனையில் நின்றான். மேலும் மானிடன். தவசிகளைக் காப்பதற்காகத் தண்டகவனத்தின் அரக்கர்களை ஒழித்துக் கட்டுவதாகத் தான் கொடுத்த வாக்கை அலட்சியமாய் முயற்சியின்றி நிலை நிறுத்திவிட்டான். ஒப்பற்ற மேதாவி, மகாத்மா. பெண் கொலை பெரும் பாவமென்று நினைத்து என்னை அங்க பங்கம் செய்து உயிருடன் விட்டான். இவ்வீராதி வீரனுக்கு வலது கையாகவும் தொண்டனாகவும் உயிராகவும் இருப்பவன் அவன் தம்பி. அவனுக்கு லக்ஷ்மணன்

என்று பெயர். அவன் எப்போதும் அவனுடன் இருக்கிறான். மகா தேஜஸ் உடையவன்; சிறந்த குணக் களஞ்சியம். குணங்களுக்கேற்ப ஆற்றலும் ஆணவமும் அவனிடம் மிக்க விளங்குகின்றன. அண்ணனிடம் அடங்காப் பற்றும் அந்தரங்க பக்தியும் கொண்டவன், எடுத்ததை முடிக்கும் உறுதி கொண்டவன். எவராலும் வெல்ல முடியாத சூரன்.

''இன்னும் கவனமாய்க் கேள், ராமனுடன் கூட இருக்கிறாள் அவன் மனைவி. அவள் சீதை எனப்படுவாள். விதேக மன்னனின் செல்வி, அவள் அழகை வர்ணிக்க முடியாது. நேரில் பார்க்க வேண்டியதுதான். கணவனுடைய நலத்தையே தன் ஜீவநாடியாய்க் கொண்டவள். அவளுடைய துடையழகும், மேனியமைப்பும் என்னென்றுரைப்பது? பெண்மை எனும் கீர்த்தி இன்னதென்பதை விளக்கிக் கொண்டிருக்கும் உத்தம நாரீமணி. இப்புவியில் மற்றொரு இலக்ஷ்மியாய்ப் பிரகாசிக்கிறாள் இவள். உருக்கி வார்த்த பொற்பதுமை. அவள் ஒளியால் அருகிலிருக்கும் பொருள்களும் இயற்கையும் நவஜோதி கொண்டு திளைக்கின்றன. அப்பொன் மேனியுடையாள் பாதம் தீண்டப் பெறுதலால் பூமி பாக்கியம் செய்ததென்பது என் உட்கோள். அவள் பாதங்கள் பஞ்சை யொக்கும், விரல்கள் பவளத்தை யொக்கும், வாளையும் வேலையும் வெற்றி கொண்ட விசாலாட்சி, அமுதம் போன்ற இன்சொற்களை யுடையவள், தண்டகவனத்தில் இராமனோடிருக்கிறாள். அவ்வனம் ஓர் தனிப் புதுமையில் மிளிர்ந்து பூரிக்கின்றது, ஈடு இணையற்ற ஓர் தனிப் பிரகாசங் கொண்டு சோபிக்கிறாள் இவ்வற்புதப் பெண்மணி. அவளை விவரிக்க எவ்வித உவமையும் காணேன். நெல்லுக்கும் புல்லுக்கு முள்ளவாசி அவள் அவயவத்திற்கும் உவமைப் பொருள்களுக்குமுண்டு. அவள் நக அழகு ஒன்றே போதும் மனத்திருப்திக்கும் மனச்சாந்திக்கும்.

''எனினும் அவள் கந்தர்வ ஸ்திரீயுமன்று, யக்ஷ ஜாதியைச் சேர்ந்தவளுமல்லள், கின்னர கிம்புருட குலத்தினளுமல்லள், இவளைப் போல் இப்புவியில்—ஏன், மூவுலகிலும் இத்தகைய ஒரு மானிடப் பெண்ணைக் கண்டதுமில்லை, காணப் போவதுமில்லை. எவனுக்கு ஜானகி மனைவியாய் அமைவளோ; எவனை அவள் மனங்களித்துக் கணவனாய் ஏற்பளோ அவனே பரம பாக்கியவான். அவன் வாழ்வே உயரிய வாழ்வாகும், சர்வ லட்சணங்களும் அமையப் பெற்ற இச்சர்வாங்க சுந்தரியை மனைவியாயடைந்தவன் இந்திரனைக் காட்டிலும் மேன்மை யுற்றவனாவான். அவளது சீரிய ஒழுக்கமும் ஒப்பற்ற வடிவழகும் மானிட சமூகத்தையே வானெழ உயர்த்தி விட்டதென்றால் அவள் உன்னிடமிருந்தால் எவ்வளவு தகுந்ததாகும். அழகெலாம் ஒன்று திரண்டு உருவமாயமைந்த அச்சுந்தரியை உனக்கென்று எடுத்து வர முயன்ற எனக்கு இக்கதி நேர்ந்தது. உன் பொருட்டு சீரழிந்தேன், அழகிழந்தேன், போகட்டும் அவளைப் போய் நீ காண்பாயாகில் அதுவே போதும். ராமனையும், லட்சுமணனையும் வென்று கொன்று நீ அவளை இங்கு கொண்டு வந்தால் அப்போது தான் உன் வெற்றி நிறம்பெறும். தண்டகவன அவமானத்தைப் போக்கி உன் புகழையும் நிலைநிறுத்து.'' என்று முடித்தாள் சூர்ப்பணகை.

[முன்பு அகம்பனன் வந்து ராகவனின் வெற்றியைச் சொல்லி இலங்கை அரசனின் கோபத்தை எழுப்பினன். தவசியாயிருந்த மாரீசனின் மதியுரையில் அது மழுங்கியது. இங்கு சூர்ப்பணகை அண்ணனின் காம உணர்ச்சியைக் கிளப்புகிருள். ராமாயணத்தேர் இலங்கையடைய அவளும் வடம் பிடிக்கிருள்.

## 29. அரக்க மன்னனின் அசட்டுத்தனம்

[முன்பு அகம்பனன் மொழிந்த ராமனின் புகழ்மாலைக்குச் சூர்ப்பணகை இப்பொழுது மேலும் புது மணமேற்றி மகிழ்விக்கிருள். அவன் பாடிய ராமாயணத்தை இவள் இன்னிசை யமைத்து ஒலிக்க வைக்கிருள். சீதையைக் கண்டு களிக்காது அவளைக் காமத்தால் அபகரித்தால் துன்புறுவாயென்று ஏற்கெனவே எச்சரித்திருக்கிருன் மாரீசன். இதை மனக் கண்முன் காண்கிருன் லங்காதிபதி. எனினும் சகோதரியின் சொற் சித்திரம் ஜானகியை ஓர் அற்புத சிருஷ்டியாய்த் துலங்க வைக்கிறது, இவ்வற்புதம் இலங்கையிலன்றே மற்ற அற்புதங்களுடன் விளங்கவேண்டும் ? இலங்கை மனிதன் புக முடியாத இடம், மீறி வந்த போது பார்த்துக் கொள்வோமென்று அரக்க சுபாவத்தை ஒட்டி எண்ணங்களைக் கொண்டானே என்னவோ !]

வெகு நேரம் ராவணன் யோசனையிலாழ்ந்தான். பின்பு ஒருவாறு முடிவிற்கு வந்து சாரதிக்கு உடனே தன் ரதம் தயாராகட்டும் என்று உத்திரவிட, நொடிப்பொழுதில் ரதமும் அரக்கன் முன் வந்து நின்றது. அவனுக்கு இஷ்டமான ரதம், வானில் செல்லக் கூடிய சிறந்த குதிரைகள் பூட்டிய ரதம். அதில் ஏறிக் கொண்டு அதிவிரைவாய் வெளிக் கிளம்பினன்.

தான் கொண்ட முடிவை நிறைவேற்ற மாரீசன் உதவியை நாடி மீண்டும் அவனிருக்குமிடம் சென்ருன். இவன் எப்படியும் திரும்பி வந்து தன்னைத் துன்புறுத்துவானென்று கலவரமடைந்த மாரீசன் முன்னிருந்த இடத்தை விட்டு வேற்றிடம் சென்று விட்டான்.

மிகவும் புனிதமான இடம் அது. தவசிகளும் மகரிஷிகளும் தேவ கணங்களும் வாசஞ் செய்யும் தூய்மை வாய்ந்த திவ்விய தலம். எப்பொழுதும் மனச் சாந்தியை அளிக்கும் பிரதேசம். இராவணன் சமுத்திரத்தின் அக்கரையைத் தன் விமானத்தால் கடந்து மாரீசனிருக்குமிடம் நோக்கி விரைந்தான். எங்கும் அழகான பூஞ்சோலைகள்; பழமரங்கள்; குளிர்ந்த நீரோடைகள்; தாமரைத் தடாகங்கள்; வித விதமாயமையப் பெற்ற பர்ணசாலைகள். அங்கு நாகர்கள், ஸுபர்ணகர்கள், கந்தர்வர்கள், கின்னரர்களும் வைகானசர்கள், மாஷர்கள், வாலகில்யர்கள், மரீசபர்கள், முதலிய முனிவர்களும் சித்தர்கள், சாரணர்கள் முதலியவர்களும் வித விதமாய்த் தவம் செய்து கொண்டிருந்தனர், கண்ணைக் கவரும் தேவ மாந்தர்களும், ரிஷிபத்தினிகளும் தங்கள் தங்களுக்குகந்த சேவையில் ஈடுபட்டிருந்தனர். அப்பிரதேசம் தேவலோகமாய் விளங்கிற்று. இவை யெல்லாவற்றையும் கண்ணுற்றுக் கொண்டே மாரீசனை தேடிச் சென்ருன் இலங்கை வேந்தன்.

அப்பொழுது அங்கு மிகப் பரந்ததோர் ஆலமரத்தைக் கண்டான். அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, பறவைகட்கிறைவனான கருடன் ஆகாரத்திற்கென்று யானை, ஆமை இவற்றின் இறைச்சிகளைத் தாங்கிக் கொண்டு அந்த ஆலமரத்தின் கிளை ஒன்றில் குதித்து உட்கார்ந்தான். உடனே, அந்த வேகம் தாங்க மாட்டாமல் அக்கிளை மடமடவென்று முறிந்தது. கீழே அநேக ரிஷிகள் தவம் செய்து கொண்டிருந்தனர். ஒடிந்த கிளை கீழே விழுந்தால் இவர்கள் மடிந்து விடுவார்களென்று கண்டு சடக்கென்று பாய்ந்து அக்கிளை கீழே விழுமுன் அதைப் பற்றிச் சென்று பறந்தான் கருடன். ஆகா! இவன் வேகந்தான் என்ன! இவன் பெருந்தன்மையை என்னென்று சொல்வது? அப்பெருங் கிளை கீழ் விழாமல் முனிவர்களைக் காத்து அதே கிளையைக் கொண்டு சண்டாளர்கள் என்ற கொடிய பாபிகள் வசிக்குமிடத்திலெறிந்து அவற்றை மாய்த்துத் திரும்பினான். இந் நிகழ்ச்சியைக் கண் கொட்டாமல் கண்டான் ரதத்தில் பறந்து செல்லும் அரக்கர் கோன். இதிலிருந்து ஒரு நீதியையும் அவன் அறிந்து கொண்டானில்லை. தனக்கு அது ஒரு படிப்பினை என்றும் அறிந்தானில்லை, கடைசியில் ஏகாந்தமாயிருந்த மாரீசன் ஆச்ரமத்தைக் கண்டு அங்கு இறங்கினான்.

தவத்தை மேற்கொண்டிருந்த மாரீசன் இராவணன் மறுபடியும் வந்து விட்டதை உணர்ந்து உள்ளம் நடுங்கினான். வந்தவனை விதிப்படி உபசரித்து வரவேற்று, மீண்டும் தன்னை இங்குத் தேடிவந்த காரணத்தை வினயமுடன் வினவினான்.

---

## 30. மாரீசனிடம் ராவணன் உதவி கோறுவது

மாரீசனைக் கவனித்த இலங்கை மன்னன் சொல்கிறான் :—"அப்பா, மாரீசா! நான் சொல்வதை உற்றுக் கவனி. மிக்க மனக் கவலையுடன் உன்னிடம் வந்திருக்கிறேன். நீ ஒருவன் தான் எனக்குத் துணை புரிய வேண்டும். என் ஆக்ஞையின் படி கரன் தூஷணன் முதலிய பதினான்காயிரம் அரக்கர்கள் ஜனஸ்தானத்தில் வசித்து வந்ததை நீ நன்கறிவாய். அவர்கள் அனைவரும் ராமனென்ற பாதசாரியான கேவலம் ஒரு மானிடனால் அழிந்த கதையை உன்னிடம் முன்பே சொல்லியிருக்கிறேன். அந்த தண்டகவனம் நம்முடைய ஆதிக்கமிழந்து அரக்கர் வாசமற்றுத் தவசிகளுக்குச் சிறந்த விடமாய் செய்து விடப் பட்டது. இது சகிக்கத் தக்கதா வென்பதை யோசித்துப் பார். அதுவும் கேவலம் ஒரு அல்ப மானிடனென்றால் உனக்குத் துடிப்பு ஏற்படவில்லையா? என் அதிகாரத்தைப் பழித்துச் சிதைத்து ஒரு மானிடன் திரிவதைக் கண்டு நான் வாளாவிருப்பது நியாயமா? அவனோ, தந்தையால் வனத்திற்குத் துரத்தப்பட்டவன் என்று கேள்வி. வனத்திற்கு வந்து நம் இனத்தவரை நாசமாக்கி விட்டான். இவன் நம் பிரதேசத்தை ஆக்கிரமித்ததும் தவிர, நம்மில் அநேகரை அழித்து விட்டான். இரக்கமற்றவன்; செருக்குக் கொண்டு எல்லோரையும் அழித்து விட்டவன். முரா

டன், மூடன், பெண்ணை இம்சித்தவன், பகை யொன்றுமில்லாமல் ஒரு வார்த்தை பேசாது பதினாலாயிரம் அரக்கர்களை மாய்த்தவன். அற்ப வீரியத்தைப் பகட்டாகக் காட்டுபவன். நம் சகோதரியைப் பங்கம் பண்ண நாம் இருவரும் பார்த்துக் கொண்டிருப்பதா வென்று யோசித்துப் பார். அவனை ஒழித்து விடத் திட்டமிட்டிருக்கிறேன். அவன் தன் மனைவியினிடத்தில் உயிரையே வைத்திருக்கிறான். அவளைப் பலாத்கரித்து இலங்கைக்கு எடுத்துப் போகத் தீர்மானம் பண்ணியிருக்கிறேன். மனைவியிழந்தவன் மதியிழப்பான். அவன் வலிமையும் குன்றும், மனமுடைந்தவனை நாம் எளிதில் மாய்க்கலாம். இதுதான் என் திட்டம். இதற்கு நீ உதவி புரிய வேண்டும். நன்றாய்க் கவனி. நீ சமர்த்தன், போரிலும் பராக்கிரமத்திலும் செருக்கிலும் சிறிதும் குறைந்தவனல்ல. உபாயங்களை அறிந்து அவைகளைத் தக்க சமயத்தில் தக்கபடி உபயோகிப்பவன், சூரன், மாயா சக்தியைக் கையாண்டு சித்தி பெறுபவன் நீ. ஆகையால் உன்னால் ஆகாதது ஒன்றில்லை. நீ ஒரு சிறந்த பொன் மானாக உருவங் கொள். வெள்ளிப் புள்ளிகளமைந்த அழகுற்று விளங்கும் மான் உருவங் கொண்டு ராமன் ஆச்ரமத்தில் சீதையின் கண் முன் நீ ஓடித்திரிய வேண்டும். ஒளி வீசும் இம்மானைப் பிடித்துத் தர ராமனையும் லட்சுமணனையும் அவள் தூண்டுவாள். அவர்களும் அதற்கிசைந்து அந்த மானைப் பற்றச் செல்வர். ஒருவருமில்லாத போது நான் ஆச்ரமத்துள் நுழைந்து சீதையை அபகரித்துச் சென்று விடுகிறேன், பின்பு ராமன் தன் மனைவியைப் பறி கொடுத்து நொந்து கிடப்பான். நான் திருப்தியடைந்த உள்ளத்தவனாய் மிகுந்த ஆற்றலடைவேன். அப்பொழுது அவனை எளிதில் வென்று வெற்றியடைவேன்." என்றான்.

இந்த யோசனைகளையும் திட்டத்தையும் மனநிலையையும் கேட்ட மாரீசன் உள்ளம் பதறினான். உடல் நடுக்கங் கொண்டான். அவன் நாவறண்டது. ஐயோ! இவ்வரக்கனின் கொடுமைத் தனம் உச்சநிலை எய்தியதே, இவனை எப்படித் திருப்ப முடியும்? என்று பிரமை கொண்டான், ஆயினும் சற்றுத் தெளிந்து அஞ்சலி செய்த வண்ணம் இராவணனைத் திருப்புவதில் முனைகிறான்.

---

## 31. மாரீசனின் ஹிதோபதேசம்

மாரீசன் அறிவிற் சிறந்த ஒரு மேதாவி. ராவணனுடைய மன ஓட்டத்தைக் கவனித்து அதன் விளைவை எண்ணி பெருங் கவலையுற்றான். வந்திருப்பவனைப் பார்த்து மிக்க கருத்து பொருந்திய சொற்களுடன் பேசுகிறான்:—

"அரசே! மன்னனுக்கு மனங் கோணாது மண்டியிட்டுப் பிரியமாய்ப் பேசுபவர்கள் பலர் இருக்கிறார்கள் ஆனால் கேட்பதற்கு அப்பிரியமாயும் ஆனால் க்ஷேமத்தை தரக்கூடிய ஆலோசனை சொல்பவர்கள் மிகச் சிலரே, இதைக் கேட்டுப் பின்பற்றும் அரசர்கள் இன்னுஞ் சிலரே. இந்திரன், வருணனை யொத்த நற்குணங்களின் சிகரமாகிய ரகு குலதிலகனைப் பற்றி நீ இன்னும் உண்மை யறியா திருப்பது ஏனோ! உன் ஒற்றர்கள் சரியாக தங்

கள் கடமையைச் செய்ய வில்லையா? உன் எண்ணத்தை யறிந்த பின் என் மனம் குழம்புகின்றது. இனி அரக்கர்கள் இப்புவியில் வாழ்வதேது? ராகவ சிம்மம் உன்னால் சினங் கொண்டதானால் ஒழிந்தது அரக்க இனம் என்று நினை. ஐயோ! இன் உயிரைமாய்க்கவா ஜனகன் புதல்வி தோன்றினாள்? அவள் காரணமாக விரைந்து வரும் இம்மகத்தான ஆபத்து உன்னைப் பற்றா திருக்குமோ? தன்னிலையறியா காமாதுரன், ஒரு தடையுமின்றி எதேச்சதிகாரம் புரிபவன் இத்தகைய உன்னை அரசனாயடைந்த இலங்கை ராஜ்யமும் அதன் மக்களுக்கும் உன்னோடு அழிந்து போகாதிருக்குமா?

"அப்பனே! சொல்கிறேன் கேள். நீ சொன்னபடி ராமன் தந்தையால் காட்டிற்குத் துரத்தப்பட்டவனல்லன். அவன் மரியாதை பிறழாதவன்; உலோபியல்லன்; துர் நடத்தையுள்ளவனுமல்லன். அக் கோசலைச் செல்வன் தரும குணங்கள் நிறையப் பெற்றவன்; எல்லா பிராணிகளிடத்திலும் இரக்க முள்ளவன்; தீங்கென்பதை மனத்திலும் நினைக்காதவன். கைகேயியால் மோசம் செய்யப்பட்டார் அவன் தந்தை தசரதர். இதையுணர்ந்து அவரைச் சத்தியங் காத்தவராகச் செய்தற் பொருட்டு நாட்டை விட்டுக் காடு வந்திருக்கிறான் அவர் செல்வ புதல்வன். இவனைப் பற்றி நீ அவதூறு சொல்வது கூடாது. பொய்யும் சொல்லலாகாது. தருமமே உருக்கொண்டு வந்தவன் ராமன். அவன் பரம சாது. மெய்வீரன். தேவர்களுக்கு இந்திரன் போல, இவ்வுலகிற்கு இவன் ரட்சகனாகிறான். கதிரவன் ஒளி போல் எப்போதும் பிரியாத அவன் சதியை அபகரித்து விட எண்ணமிடுகிறாய். ராமன் என்பவன் ஓர் காட்டுத் தீயென்று அறிவாயா? அவன் பாணங்கள் அத்தீயின் ஜுவாலைகள். அவன் வில்லின் வேகம் அதன் அனல்காற்று. நீ இதில் சிக்கிக் கொண்டு பொசுங்கி விடாதே. வேண்டாம், உன் எண்ணத்தை விடு. ராகவனை உனக்கு—ஏன் அரக்க இனத்திற்கே பிரத்தியேகமாக வந்த காலன் என்பதை மறக்காதே. அவன் கோதண்டம் எம தண்டமே; எதையும் உறிஞ்சும் காலனின் நாக்கே அவன் பாணங்கள்; அவன் வாள் எமபாசம்;

"இன்னும் ஓர் உண்மையை உணர்ந்து கொள் மைதிலி எவனுக்கு உரிமையுள்ளவளோ அவனுடைய பராக்கிரமும் வீரமும் அளவற்றுப் பெருகிக் கொண்டேயிருக்கும். அவளுடைய பதிபக்தியோ இன்னும் மகத்தான சக்தி வாய்ந்தது. அச்சுந்தரி, கொழுந்து விட்டெரியும் அக்கினிச் சுவாலைகள் போல் அணுக முடியாதவள். லங்கேச்வரா! வீணாக விருக்கும் முயற்கொள்வதில் பயனென்ன? போர் முனையில் உன்னை அவன் எதிரே காண்பானாகில் உன் வாழ்வு அது வரைதான். அரக்ககுல முடிவைத் தேடாதே. அநேக காலம் சுகமாயும் அரசனாயும் உன் மக்களுடன் வாழ விரும்புவாயாகில் பைந்தொடி சீதையை மனதாலும் நினையாதே. இந் நிகரற்ற நரேந்திரனின் பகைமையை விலைக்கு வாங்காதே. ஏதோ மனச்சபலத்தால் இங்கு வந்து இதை வெளியிட்டாய். வீபீஷணன் முதலிய பெரியோர்கள் அடங்கிய சபையில் இந்த யோசனை நன்கு ஆலோசிக்கப்படவேண்டும். விளைவுகளைப் பற்றியும் அவைகளைத் தடுக்கவோ, எதிர்க்கவோ, எடுக்கப்படும் நடவடிக்கைகளைப் பற்றியும் இரு கட்சிகளின் பலா பலங்களையும் சீர்தூக்கி நன்கு ஆலோசனை செய்யப்பட வேண்டும். நேர் முறையில் செல்லும் செங்

கோலே நமக்குக் கௌரவம் விளைக்கும். இவற்றை உன் மந்திரிகளுடன் கலந்து யோசனை செய்.

என்னைப் பொருத்த வரையில், நீ ராமனை எதிர்ப்பதென்பது முடியாத காரியம் மென்று நன்கறிவேன். இவ்விஷயத்தில் எனது பழைய ஓர் அனுபவத்தை உனக்கு உற்றுக் கவனித்து கேளென்று, தன்னுடைய பூர்வ விருத்தாந்தங்களைப் பற்றிச் சொல்ல வாரம்பித்தான் மாரீசன்.

---

## 32. மாரீசனின் ராம கீதம்

[இராவணன் கேட்கும் முறையிலிருந்து மாரீசனுக்குத் தன் எண்ணம் அவன் வைதேகியைத் திருடுவதிலிருந்து திருப்பும் எண்ணம்—பலனடையுமென்று தோன்றவில்லை. இருந்தாலும் தன் கடமையைச் செய்தாக வேண்டும். இவன் அழிவது நிச்சய மென்று வலிவுறுத்தி எச்சரிக்கை செய்ய வேண்டு மென்று தீர்மானித்தான் ராகவனை நன்கறிந்த மெய்ஞ்ஞானி.)

மாரீசன் சொல்கிறன் :—

"அப்பா ராவணு! இதை நன்ருய்க் கவனி. முன்னொரு காலத்தில் பர்வதத்தின் வலிவு கொண்டு பொன் குண்டலங்களணிந்து கிரீடம் புனைந்து பரிகாயுதம் (குண்டாந்தடி) ஏந்தி நூறு யானை பலமுள்ளவனுய், எமனைப் போல் என் பராக்கிரமத்தால் உலகில் எங்கும் சஞ்சரித்துக் கொண்டிருந்தேன். தண்டகாரணியத்திலுள்ள தவசிகளை யெல்லாம் என் பராக்கிரமத்தால் கொன்று குவித்து வந்தேன். அப்போது தர்மாத்மாவான விசுவாமித்திர முனி எனது உபத்திரவத்தை ஒழித்து விட எண்ணி தசரத சக்கிரவர்த்தியிடஞ் சென்று தன் வேள்வியைக் காக்க அவன் மைந்தன் ராமனின் உதவியை நாடினுர். மன்னவன் மனம் வெருண்டு, "ராமன் பன்னிரண்டு வயதுள்ள பாலகன். விற்பயிற்சியில் முதிர்ந்தவனில்லை. நான் என் சைனியத்துடன் வந்து உமது வேள்வியைக் காப்பேன், எழுக" என்றுன். அதற்கு முனிவர் இணங்கவில்லை. "ராமன் மகாத்மா, அவனது சத்திய பராக்கிரமத்தை நான் நன்கறிவேன். ஆகையால் அவனையே என்னுடன் காட்டிற்கு அனுப்பி வையும். அவனுக்கு ஒரு தீங்கும் வராது. உலகத்தில் ராமன் தவிர எந்த சைனியமும் அந்த ராக்ஷஸனுக்குப் போதாது," என்றுர்.

"அரசன் கலங்கினுன். பிறகு அரசகுரு வசிட்ட முனியின் சிபாரிசின் பேரில் ராமனையும் அவன் தம்பி லட்சுமணனையும் கூட்டி முனிவருடன் காட்டிற்கனுப்பினுன், விச்வாமித்திரர் தம் ஆச்ரமமடைந்து தீக்ஷையடைந்து இச்சிறு பிள்ளைகளைக் காவலில் நிறுத்தி வேள்வியைத் துவக்கினுர். அச்சயம் நான் அவ்வேள்வியை அழிக்க ஆச்ரமம் அணுகினேன். இவ்விளம் பிள்ளைகளைக் கண்டேன். வியப்படைந்தேன். மீசையின் அரும்பு கூட காணப்பட வில்லை. பூப்போன்ற மெல்லிய மேனி. முழுமதியைப் பழித்த முகம். அவனது கிளரொளி இளமையிலும் வனப்பிலும் ஈடு

பட்டுப் பிரமை யடைந்தேன். அவ்வாச்ரம இடம் முழுவதும் இப் பாலச் சந்திரனின் ஒளியில் அழகு பெற்று விளங்கிற்று. பயமென்பதே இன்ன தென்றறியாத இளம் பிள்ளைப் பருவம். பூ!—இக்குழந்தைகளைக் காவல் வைத்து வேள்வி புரியும் முனியின் மதியீனம் தான் என்னே யென்று வர பலம் பெற்ற நான் செருக்குடன் ஆச்ரமம் நுழைந்தேன். அவ்வளவுதான்! சிறுவன் என்னைக் கண்டான். அணுவளவும் அச்சமின்றி விளையாட்டாய் நின்று கொண்டிருந்தான். விளையாட்டாகவே ஒரு போட்டியில் கலப்ப தாக எண்ணி வளைத்த வில்லில் விளை அம்பை பூட்டினான். "பூ!— இது என்ன செய்யும்? என் வலிவிற்கு இது ஈடா, எதிரா வென்று அசட்டை செய்து வேதிகையை அணுகினேன். உடனே இப்பாலனின் பாணம் ஒன்றே ஒன்று என்னைத் தாக்கியது. அவ்வளவு தான்! காற்றில் பறக்கும் துரும்பு போல் என்னை எடுத்தடித்து நூறு யோசனை தூரம் வீசி எறிந்தது. பாணத்தின் வேகம் என்னை கடலில் ஆழ்த்தியது. வேகத்திலும் அடியின் வலிவாலும் மோதுண்ட நான் அறிவிழந்தேன். சற்றுத் தெளிந்தவுடன், சமுத்திரத்தில் தூக்கெறியப்பட்டவனாகவும் உயிருடன் விடப் பட்டவனாக வும் கண்டு என்னை அப்பெருந்தகை கருணையுள்ள கபடற்ற இளைஞன், மீண டும் துன்புறுத்த மனமில்லாமல் விட்டு விட்டான். தப்பிப் பிழைத்தேன். ஆகா இவன் மானிடச் சிறுவனா! வென்று திகைத்துத் திணறினேன். பின்னர் பயமடைந்து அவனைத் திரும்பவும் பார்க்க மன மில்லாமல் தாழ்வுற்றுத் தனியே இலங்கையடைந்தேன். என்னுடன் வந்த மற்றவர்கள் அனைவரும் அச்சிறுவனின் வில்லிற்கு இரையாயினர். "ஆகையால் ராவணா! நீ கவனிக்க வேண்டும். உன்னை எச்சரிக்கிறேன், அவனை நீ விரோதித்துக் கொண்டால் உலகில் நீ வாழ்வு காண முடியாது. நீ கூண்டோடு அழிவது நிச்சயம். தவிர நீ செய்த குற்றத்துக்காக உன்னுடன், பாவம்! களிப்பிலும் கேளிக் கையிலும் ரமித்துக் கொண்டிருக்கும் நிரபராதிகளான உன் உறவினர்க ளும் சைனியங்களும் பொது மக்களும் அழிந்து போவார்கள். உன்னை அரச னாகக் கொண்ட காரணத்தால் அவர்கள் எல்லோரும் மடிய வேண்டியது தானா? ஆகவே இத் துர்ப்புத்தியும் யோசனையையும் விட்டு விடு. ராமன் கோபத்திற்கு ஆளாகாதே. சீதை காரணமாக இலங்கை நகரே நீறாகி மண் ணில் புதையுண்டு போவதைக் காண்பாய். ஒரு குற்றமும் செய்யாதவர்கள் பாபிகளிடையே வசித்து வந்தால் அவர்களும் அழிவது நிச்சயம். அதே போல் தீங்கிழைக்க விருக்கும் உன்னைச் சார்ந்த அரக்கர்கள் அப்படியே மடிவது நிச்சயம். உன் பாவச் செய்கையால் அவர்கள் ஆயிரமாயிரமாய் மடிவதைக் காண்பாய். நீ அழிந்தவுடன், திக்கற்றுத் திரியும் பெண்களும் குழந்தைகளும், போரிலடி பட்டு குற்றுயிராய்த் துடிக்கும் அரக்கர்களும் என் னவா ரென்பதைச் சிந்தனை செய். ராம பாணத்தால் இலங்கை எரிந்து சாம் பலாய்ப் போவதை என் மனத்தால் காண்கிறேன். அப்பனே! உன் மனைவி களுடன் களிப்புற்றிரு. பிறர் மனைவியை இச் சிக்காதே. அதைப் போன்ற கொடியது வேறொன்றுமில்லை, உன் குலத்தையும், மேன்மையும், பல வனங் களுடன் பொலியும் உன் ராஜ்யத்தையும், இன் புற்றுச் சுகித்திருக்கும் உன் மக்களையும், உன் உயிரையும், அரசையும் காப்பாற்றிக் கொள். இத் தீய எண்ணத்தை விட்டொழி." என்றான் மாரீசன்.

———

## 33. மீண்டும் மாரீசனின் மதியுரை

[ராம சரிதம் எனும் தேரின் வடத்தைப் பிடித்து அகம்பனன் ராம ரதத்தை இலங்கையில் கொண்டு வந்து விட்டான். சூர்ப்பணகை அதை அங்கேயே நிலை நிறுத்தினள், அத்தேர் அழுந்தி விட்டதால், ராமகதை சக்கரம் இருகின் வேகத்தில் இலங்கையை ஒரே அமுக்காய்ச் சமுத்திரத்தில் அமுக்கி விடாதபடி மாரீசன் அத்தூயத் தேரின் சக்கரங்கள் இலங்கையில் வேரூன்றுமல் அவைகளைப் பெயர்த்து சமமான பாதையில் விட்டு ரதத்தை அதன் வழியே போக விட முயலுகிறுன். ஆகையால் ராவணனை மறுபடியும் எச்சரித்து அவன் கவனத்தைப் பெற்றுச் சொல்லிக் கொண்டே போகிறுன்]

மாரீசன் இன்னும் சொல்கிறுன் :—

"அரசே! இன்னமும் சொல்கிறேன். இதைக் கவனமாய்க் கேள். கோசலைச் செல்வன் மனைவியுடனும், தம்பியுடனும் தண்டகவனம் வந்திருப்பதை அறிந்து அவனை இந்தத் தடவை ஒரு கை பார்த்து விட வேண்டுமென்று தீர்மானித்தேன். இவன் தவசியாய் மரவுரி யுடுத்தி ஜடையுடன் அகிம்சையைக் கைக் கொண்டு வனத்தில் வசிக்கிறுன் என்று தெரிந்து, 'இது சரியான் சமய' மென்று நினைத்தேன். முதன் முதல் இவனைச் சந்தித்த போது "இவன் சிறுபாலன்; இப்போது தவசியாய் இருக்கிறுன். அகிம்சையை மேற் கொண்டிருக்கிறுன். ஆகையால் இவனிடமிருந்த பயத்தை விட்டு இரு அரக்கத் துணைவர்களுடன் மானுருவங் கொண்டு அவனிருக்குமிடம் சென்றேன். நீண்ட நாக்குடனும் கூரிய கொம்புகளுடனும் மிக்க பலத்தையும் பெரும் உடலையும் கொண்டு பெரும் மாஞகி அங்குச் சுற்றித் திரிந்தேன். அங்கிருந்த ரிஷிகள் ஏமாந்து போனுர்கள். அனேகர் மடிந்து எங்களால் உண்ணப்பட்டார்கள். மற்றவர்கள் ராமனைச் சரண மடைந்தனர். அவனும் வில்லை நணேற்றி என்னை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அச்சமயம் நானும் அவனைக் கண்டேன். சரியான வயதுதான்; உள்ளத்தை கொள்ளை கொள்ளும் அவயங்கள் பொருந்திய சாமுத்ரிகா லட்சணங்களை யெல்லாம் கொண்டு விளங்கும் நரசிம்மனுகக் காட்சியளித்தான் அவன். எனினும் காட்டில் கிடைக்கும் கந்த மூலாதிகளையே புசிப்பதால் அவன் மேனி சற்று இளைத்திருப்பதைக் கண்டேன். அவன் பால் கொண்ட என் பழைய துவேஷம் வீறு கொண்டு எழுந்தது. அவனை இந்தத் தடவை குத்திக் கொல்ல வேண்டு மென்று திடங் கொண்டு அவனிடம் பாய்ந்தேன், அவன் சற்றும் மனந்தளராது மூன்று பாணங்களை விடுத்தான். அவ்வளவு தான்! சடாரென்று வஜ்ராயுத மொத்த அவ்வாளிகள் என்னை அறைந்து அமுக்கின. கீழே விழுந்தவுடன் சட்டென்று அப்புறம் புரண்டு கண் மூடினேன். என்னுடன் இருந்த இருவரும் அப்பாணங்களால் தாக்குண்டு மாண்டனர். வெகு நேரம் கண்ணை மூடி அசைவற்று விழுந்த படி இருந்தேன். மேலும் பாணம் தொடுத்து எஞ்சிய உயிரைப் பருகாமல் அப்படியே விட்டு விட்டான் அக் கருணை வள்ளல்.

"அடிபட்டுக் கீழே விழுந்த எதிரியைத் திரும்பவும் வதைப்பவனல்ல அச்சுத்த வீரன். ஆகையால் உயிர் தப்பினேன். அவ்விடம் விட்டு ஓடி

வந்து விட்டேன். அது முதல் என் வலிவை இழந்தேன். அவன் பாணங்கள் தான் எத்தகைய வலிவு கொண்டன வென்பதை என் முறிந்த எலும்புகள் நினைவூட்டிய வண்ணமிருக்கின்றன. அதுமுதல் "சீ! இது என்ன வாழ்க்கை" என்று உலகத்தை வெறுத்துக் காட்டில் புகுந்து தவசியாய் காலங் கழிக்கிறேன். அன்று அடிபட்டது முதல் திகிலடைந்து தவிக்கிறேன். மரவுரியுடுத்திய கோதண்டபாணியான அந்த ராமனைப் பாசமேந்திய எமனைகவே கண்டு அஞ்சுகிறேன். ஒவ்வொரு மரமும் வில் பிடித்த வீரனை உருவங் கொண்டு என்னை வெருட்டி அதட்டுகின்றது. என் மனமும் மதியும் பயத்தால் எங்கு கண்டாலும் ராமனையே பார்த்துப் பதறிச் சிதைத்து போகின்றன. சதா என் முன்னே நிற்கிறான் அவன். உறக்கத்திலும் விழிப்பிலும் அதே காட்சிதான். எச்செயலிலும் எவ்வுணர்ச்சியிலும் ராமனைப் பற்றித் திகில் காணப் படுகிறது. அவனே ஒரு நாள் என் உயிரை மாய்க்கப் போகிறான் என்று உணர்ந்து நடுங்கிக் கொண்டிருக்கிறேன். "ரா" என்ற முதலெழுத்து கொண்ட சப்தங் கூட எனக்கு இனியும் நடுக்கத்தைக் கொடுக்கின்றது. ரகாரங் கொண்ட சொற்கள் "ரத்னம்" "ரதம்" என்றவைகள் கூட 'ர' என்ற உச்சரிப்பில் என் மனம் பதை பதைத்து நடுங்குகிறது. அவனை எங்கும் காண்கிறேன். இவ்வனம் முழுவதும் ராம பிம்பங்களால் நிரம்பியதாகக் காண்கிறேன். ஆகையால் ராம கோபத்திற்கு இரையாக வேண்டாம். நீ தொலைந்து போவாய். வெறும் அதைரியத்தாலும் பயத்தாலும் இவ்வார்த்தைகளைச் சொல்லுகிறேனென்று நினையாதே. உன்னால் அவனிடம் போரிடுவதென்பது பலி திரிவிக்கிரமனையும், நமுசி இந்திரனையும் எதிர்த்து அழிந்தது போலாகும். அவர்களுக்கு நேர்ந்த கதி உனக்கும் நேரும். இது நிச்சயம். ராவணா! அவனைப் போரில் எதிர்ப்பதென்பது உன்னால் நினைக்கவும் முடியாதென்று உறுதியாய்க் கூறுவேன். உனக்கு ராமன் எண்ணமே கூடாது.

"இப்பொழுது உங்களிருவருக்கும் ஒருவித சம்பந்தமுமில்லை. ஆதலின் நீ சுகமாக வாழ்கிறாய். அதைக் கெடுத்துக் கொள்ளாதே. இது உன்னைப் பொருத்தமட்டிலுமல்ல; உன்னைச் சார்ந்த அரக்கர் குலத்துக்கும் பொருத்தம். ராமன் என்று பெயர் கொண்ட ஊழித்தீ நல்லவர், கெட்டவர் ஆண் பெண் முதலிய எல்லா ஜீவராசிகளையும், ரத்தினம், வைரம், பொன், வெள்ளி மாளிகைகளையும் இலங்கைநகர் முழுவதும் வாசியின்றிக் கொளுத்திவிடும். இதில் எள்ளளவும் சந்தேகம் வேண்டாம். இம்முடிவையா இப்போது தேடுகின்றனை? சத்திய பராக்கிரமம், பெருந்தன்மை, சீற்றம், ஆற்றல் இவைகளின் உருவம் தான் ராமன். இராட்சத ஜன சமூகத்தையே பூண்டோடு அழிக்க விருக்கும் காலாக்கினியும் அவனே. ஆகையால் சிந்தனை செய். அரக்கர் இனம் முடிவடையட்டுமென்றிருந்தால் இத் தீச் செயலில் இறங்கி நாசமாய்ப் போ. சூர்ப்பணகையின் தூண்டுதலால் கரன் ராமனிடம் சென்று அவனைச் சீண்டி எமலோக மடைந்தான். அவனைப் பின்பற்றியவர்கள் அவனுடன் அழிந்தனர். இதில் ராமன் குற்றமென்ன? ராமனின் பகையைப் பெற வேண்டாம். உனது நாச எண்ணத்திற்கு ஒரு நாளும் நான் இசையேன். உன் அழிவையும் உன் ராஜ்யத்தின் அழிவையும் ஏன் நாடுகிறாய்? அதையே எனக்கும் தேடிக் கொடுக்க முயல்கிறாய் போலும்! இதைச் சற்று சிந்தனை செய்" என்று முடித்தான் மாரீசன்.

## 34 அரக்க மன்னனின் பிடிவாதம்

*[யோசனை செய்கிறான் அரக்க அரசன். அவ் யோசனை தான் வாளா திரும்பிப் போவதற்கல்ல. மாரீசனை எப்படித் தன் கோரிக்கையில் இணங்க வைப்பதென்று. மாரீசனின் போதனை இராவணனின் எண்ணத்தைத் திருப்ப மாட்ட வில்லை. அது அவன் செவியில் ஏறவேயில்லை. 'இவன் ஒரே ராம கிலியில் தயங்கித் தத்தளிக்கிறான். அவன் பயத்தைத் தன்னிடமும் திணிக்கத் திட்டமிடுகிறான்' என்று அவன் பிடிவாதம் முறுக்கேறியது. ராவணன் அரக்கர் குலத்தையே காட்டிக் கொடுத்துத் தான் தப்பித்துக் கொள்ள எண்ணுகிறான். அத் துரோகத்தை வெளிபடுத்தித் தண்டிக்க வேண்டு மென்றி தீர்மானித்தானோ என்னவோ!]*

மாரீசனைப் பார்த்து ராவணன் கடுமையாகப் பேசவாரம்பிக்கிறான்.

"மாரீசா! உன் வார்த்தைகள் அரக்கர் குலத்தைச் சேர்ந்தவனான உனக்குத் தகாது. அரக்கவரசனான எனக்கும் அவைகளைக் கேட்கத் தகாது. ஒரு பெண்ணின் பேச்சைக் கேட்டுக் காட்டுக்கு வந்தவனும், தந்தை தாயர்களை விட்டவனும், மூடனுமான, அற்ப மானிடனுமான ராமனுடன் போர் புரிவது உலகில் வெற்றியே கொண்ட எனக்கு ஆபத்தாய் முடியுமென்று என்னைப் பய முறுத்த எண்ணுகிறாய், அது பலிக்காது. அவனை மகா வீரனென்று புகழ்கிறாயே! அவனா ஒரு வீரன்? கரனைக் கொன்ற அவனை விட்டு விடுவதா? ஆகையால் எவ்வகையிலும், அவன் மனைவி சீதையை உன் கண் முன்னே அபகரிக்கத்தான் போகிறேன். இந்தத் தீர்மானத்தை உன்னாலும் தேவேந்திரனாலும் மாற்ற முடியாது, இத் தீர்மானத்தின் விளைவைப் பற்றியோ, குணத்தைப் பற்றியோ, அபாயத்தைப் பற்றியோ, உபாயத்தைப் பற்றியோ உன்னிடம் நான் கேட்க வரவில்லை. நீ எனக்கு வேண்டியவன் என்று உன் சகாயத்தைக் கோரி இங்கு வந்தேன். நீ என்னை மரியாதையின்றி பயமடைய மிரட்டுகிறாய், நான் ஒரு அரசன் என்பதையும் மகா வீரன் என்பதையும் மறந்து போனாய்.

"மந்திரிகள் ஆலோசனை சொல்லும் போது அவர்கள் அரசனுக்கு அஞ்சலி செய்த வண்ணம் இதமாயும், இனிமையாயும் பேச வேண்டுமென்பதையும் மறந்தாய். மரியாதையின்றி அசட்டையாய் வரும் கடுஞ் சொற்களை ஏற்கிறவன் அரசனாகான். நீ உன் கடமையையும் அரக்க வீரன் என்பதையும் மறந்தாய். அக்கினியின் உஷ்ணத்தையும், இந்திரனுடைய பராக்கிரமத்தையும், சந்திரனுடைய ஆனந்தம் விளைவிக்கும் தன்மையும், வருணனுடைய குளிமையும் யமனுடைய தண்டிக்கும் சக்தியையும் உடையவன் அரசன். அவன் எக்காலத்தும் போற்றத் தக்கவன். அவன் பெருமையை நினைத்துத் துரோக எண்ணங்களை விட வேண்டு மென்ற நடவடிக்கையைத் துறந்து விட்டாய். என்னை நிந்திக்க இசைந்தாய். என்னைப் பயமுறுத்த வேண்டி உன் திகிலை வெளியிட்டாய். போதும், இவ்வார்த்தைகள், உன் அபிப்பிராயத்தை நான் அறிய விரும்புகிறேன். உன் உதவியை நாடி வந்த அரசன் நான். எனக்குத் துரோகம் செய்ய மாட்டாயென்று உன்னை நம்பி வந்தேன்.

நான் சொல்வதைக் கவனி. நீ வெள்ளிப் புள்ளிகளால் அழகுற்று விளங்கும் பொன் மானாக வடிவங் கொண்டு ராமனின் ஆச்ரமத்தின் முன் ஓடித் திரிய வேண்டும். சீதை உன்னைக் கண்டதும் இந்த ஆச்சர்யமான மானைப் பிடித்துத் தரும்படி ராமனைத் தூண்டுவாள். உன்னைப் பின்பற்றி ஆச்ரமத்தை விட்டு அவனை சற்று தூரம் அழைத்துச்செல். சென்ற உடன் ராமனின் குரலில் "ஹா! சீதே, ஹா! லட்சுமணா" என்று அபாயம் தெரிவிப்பதாய் ராமனின் குரல் போல் உரக்கக் கூவு. இவ்வபாயத் தொனியை கேட்டவுடன் சீதை லட்சுமணனை நிர்ப்பந்தப்படுத்தி ஆச்ரமத்தை விட்டு ராமனைத் தேடிக் கொண்டு வர அனுப்புவாள். அப்போது சீதை ஆச்ரமத்தில் தனியே இருக்கையில் நான் உட் புகுந்து இந்திரன் இந்திராணியைத் தூக்கிச் சென்றது போல் அவளை அபகரித்து வந்து விடுவேன்.

அரக்கனே! இக்காரியத்தை நான் சொன்னபடி செய்து முடித்து விட்டு உனது இஷ்டம் போல் போய் விடு. இவ்வுதவிக்காக, என் ராஜ்யத்தில் பாதியை உனக்குக் கொடுப்பேன், வஞ்சனையால் சீதையை அபகரித்து மனோரதம் நிறைவேறியவனாக நான் உன்னுடன் இலங்கைக்குத் திரும்புவேன். மாரீசா! இதை மறுப்பாயாகில் எனக்குத் தீங்கிழைக்க விருக்கும் துரோகியெனக் கொண்டு உன்னை இப்போதே கொன்று விடுவேன். இது நிச்சயம். நீ ராமனை யடைந்து யானாக ஏமாற்றினாலும் ஒரு வேளை உயிருடன் பிழைத்தாலும் பிழைக்கலாம். நான் சொல்வதை செய்ய மறுத்தால் உன் சாவு இப்போதே நிச்சயமென்று அறிந்து கொள். உன் இனத்தையும் உன் அரசனையும் காட்டிக் கொடுத்துத் துரோகஞ் செய்ய நினைக்கலாமா வென்பதை ஆலாசனை செய்" என்று அதட்டினான் அரக்க அரசன்.

---

## 35. மீண்டும் மாரீசனின் உபதேசம்.

[அரக்கவரசனின் அதட்டலுக்கு அசைந்து கொடுப்பவனல்ல மாரீசன். தனக்கு மரண காலம் கிட்டியதென்று முதலில் உடல் நடுங்கினான். என்றைக்காவது ஒரு நாள் தான் விழிப்பிலும் உறக்கத்திலும் கண்டு கலங்கும் ராமன் என்ற காலாக்கினி கட்டாயம் தன்னைச் சூழ்ந்து கொல்லுமென்றும் பயத்தில் வாழ் நாளைக் கழித்துக் கொண்டிருந்தவனுக்கு இராவணன் இரண்டாம் தடவை தேடி வந்தவுடன் அந்த நாள் வந்து விட்டதென்றும் உணர்ந்துவிட்டான். காலைச் சுற்றின பாம்பு கடிக்காமற் போகுமா? தன் இனத்திற்கே கேடு சூழ்ந்திருப்பதை உணர்ந்து இதைத் தவிர்ப்பது தன் கடமையென்றும் முற்பட்டான். இக்கடமையைச் செய்தாக வேண்டும். பின்பு தன் இனத்தையும் அரசனையும் ஆபத்து அணுகிய போது காட்டிக் கொடுப்பவனில்லை. உயிர் கொடுத்தாவது தன் கடமையைச் செய்து அரசன் கொண்ட அவநம்பிக்கையை மாற்றிவிட எண்ணங் கொண்டு அவன் யோசனைக்கு இசைந்தாகவேண்டுமென்று தீர்மானித்தானோ என்னவோ எனினும் அதன் பயனாக அரசனுக்கும் அரக்கர் குலத்திற்குமே சூழவிருந்த ஆபத்தை மேன் மேலும் எச்சரிக்கிறான்]

மறுபடியும் மாரீசன் பேசவாரம்பிக்கிறான், அரக்கமன்ன! உன் தீர்மானத்தை அறிந்தேன். உன் மக்களும் ராஜ்யமும் மந்திரி முதலானவர்களும், மற்றும் உன் வர்க்கத்தினரும் அடியோடு அழிந்து விடும் தீங்கான ஆலோசனையை எந்தப் பாவி உனக்கு உபதேசித்தாள்? அரசே; நீ சுகமாய் வாழ்வது எவனுக்கும் பிடிக்கவில்லை? எமனுடைய வீடு உனக்காகவும் உன் மக்களுக்காகவும் திறந்திருப்பதைக் கண்டு எவன் உன்னை அங்கே போகத் தூண்டினான்? உன் அரசும் நீயும் எல்லா அரக்கர்களும் ஒருங்கே நாசமடைந்து நீறாய்ப் போவதைக் காண எவன் இச்சைப்படுகிறான்? அடியோடு அழிதற்குரிய இவ்வாபத்தான துர்ப்போதனையை போதித்தவன் எவன்? அவன் உடனே கொல்லப்படவேண்டியவன். மனம் போனபடி நடக்கிறவனும், துன்மார்க்கத்தில் செல்லுகிறவனுமான அரசனை அவன் அமைச்சர்கள், உண்மையாகக் கடமை செய்கிறவர்களானால், அரசனைத் தடுத்து விடவேண்டியதே அவர்கள் கடமை. தாங்கள் சுகமாக வாழவேண்டுமாகில், தங்கள் சுய நலத்தின் பொருட்டாவது அரசன் வெகுகாலம் வாழ வேண்டுமென்று உணர்ந்து அவனை அறியாமல் பாதுகாத்து நிற்க வேண்டும். இச்சமயத்தில் அவர்கள் ஏன் பின் வாங்கி நின்று விட்டார்கள்? நீ அவர்களைக் கலந்து ஆலோசனை செய்யவில்லையென்று நன்கு விளங்குகிறது. இதன் விளைவுகளைப் பற்றியும் நீ யோசித்தவனல்ல. உன் விபரீத துர்ப்புத்தியின் பலனாக, உன்னை அரசனாகக் கொண்ட எல்லோரும் அழிந்து போவது நிச்சயம். அக்காலமே இது. நீ என்னைத் தேடி வந்தது அரக்கர் இனம் மடியுங் காலத்தை நன்கு எடுத்துக் காட்டுகிறது. ராமன் என்னைக் கொன்று விட்டு உன்னைத் தேடிக்கொல்லப்போகிறான். உன் சேனைகளெல்லாம் இருந்த விடம் தெரியாமல் அழியப் போகின்றன. நீயும் உன் அரசும் அழிந்து உன் நகரமும் முடியப் போகின்றன. அந்தப் புண்ணியவனால் நான் கொல்லப்படுவதைப் பற்றி எனக்கு அக்கரையில்லை. அதருமத்தை யொழித்துத் தருமத்தை நிலைநிறுத்துகிறவன் அவன், ராமனைக் கண்ட தட்சணமே என்னை மாண்டு விட்டவனாக அறிந்து கொள். சீதையை நீ திருடிப் போனால் அத்தருணமே நீயும் காலன் வசம் அகப்பட்டாய் என்று நினை. அரக்கர் குலம் முழுவதும் நாசமடைவது நிச்சயம். ராமனின் பகைமைக்குத் தப்புவது அசாத்தியமென்று அப்போதே உனக்கு எச்சரித்திருக்கிறேன். துர்ப்புத்தியால் எல்லாம் நாசமடைவதையா விரும்புகிறாய்? கொஞ்சம் சிந்தனை செய். உன் நலனுக்காகவே இவ்வாறு மொழிகிறேனென்று மனதில் வாங்கிக் கொள். இதைக் கவனியாதிருந்தால் நீயும் உன்னைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் எமலோகமடைவது திண்ணம். உனக்கு இறுதிக் காலம் நெருங்கிவிட்டது. ஆகையால் தான் நான் சொல்வது உன் விபரீத எண்ணத்தை நிறைவேற்ற உறுதி கொண்டது மன்றி என்னையும் கொல்லத் தீர்மானித்து விட்டாய். நான் பிறந்து வாழ்ந்த குலத்திற்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்ய முயன்றேன். அது பயனளிக்க வில்லை'' என்றான்.

அரக்க அரசன் அசையாமல் நின்றான்.

---

## 42 மாரீசன் மாய மானுவது

உவர் நிலத்தில் இட்ட விதை பயன் கொடாதது போல் மாரீசனின் இத மொழிகள் ப்யனற்றுப் போயின. "விநாச காலம் நெருங்கியதால் விப ரீத புத்தி தோன்றுகிறது. ஆதலின் என் நன்மொழியை அவன் ஏற்க இசையவில்லை. சுடரொளியில் விட்டில் பூச்சி விழுந்து மடிவது போல் ராமன் கோபத்தீ ஒளியில் அரக்கர் இனம் அழிந்து போம்'' என்றுணர்ந்து மாரீசன் கொஞ்சமும் இணங்காத இராவணனைப் பார்த்து 'என்னுல் சொல்ல வேண்டியது சொல்லியாய் வீட்டது, இனி உனக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்து விட்டு நான் உயிர் துறக்க வேண்டியது தான். இதைவிட வேறு வழியில்லை. சரி, வா! போகலாம்'' என்று சொல்லி முடித்தான்.

"எனக்காகக் கையில் வில்லேந்திக் காத்திருக்கிருன் எமனுன ராமன். உனக்கும் காலனுகப் போகிருன். அவனை எதிர்த்து வஞ்சித்து விட்டு உயிர் வாழ்வோமென்று நினையாதே. அவனை நேரே போரில் எதிர்த்து உன் சாமர்த்தியத்தைக் காட்டத் தயங்குகிருய். அற்பமானதும், இழிவா னதும் உனக்குத் தகாததுமான கள்ளத் தொழிலில் இறங்கி விட்டாய். அதை நிறைவேற்ற என்னைத் தூண்டுகிருய். சரி; இதோ நான் போகி றேன். நீ சுகமாயிருப்பாயாக'' என்று சொல்லி எழுந்தான் மாரீசன்.

இவ்வார்த்தைகளைக் கேட்டு இராவணன் திருப்தியடைய வில்லையாயி னும் மாரீசன் கடைசியில் தன் கோரிக்கைக்கு இசைந்து விட்டானென்று கண்டு களிப்புற்ருன்.

அவனைக் கரத்தினுல் பற்றிக் கட்டிக்கொண்டு "நீ என் யோசனைக்கு இசைந்ததால் மெத்தக் களிப்புற்றேன். இப்பொழுதுதான் நானறிந்த மாரீசனைத் திரும்பவும் காண்கிறேன். இதற்கு முன் உன்னை வேறு அரக்க னுக நினைத்தேன். வீரம் கொண்ட இந்த வார்த்தைதான் உனக்குகந்தது. வா. என் ரதத்திலேறிக் கொண்டு ராமனிடம் போகலாம். அங்குப் போய் நான் வைதேகியை அபகரித்து விட்ட பிறகு நீ உன் இஷ்டப்படி போகலாம்'' என்று மொழிந்து இருவரும் ரதத்திலேறித் தண்டகவனத்தை யடைந்தார்கள். ராமனுடைய ஆச்ரமத்தைக் கண்டவுடன் இராவணன் ரதத்தை நிறுத்திக் கீழிறங்கி, மாரீசனைப் பார்த்து "அப்பா, மாரீசா! அதோ வாழை மரங்களிளிடையே தெரிகிறதுதான் ராமனின் ஆச்ரமம். நீ உடனே அழகிய பொன் மான் உருவம் கொள்'' என்ருன்.

[ராமனுடைய ஆச்ரமம் இது. வாழை மரங்களால் சூழப் பெற்ற தென்று அரக்க அரசன் மாரீசனுக்கு சுட்டிக் காட்டுகிருன். இதை அவன் முன்பு காணவில்லையென்ருல் அவனுக்கு இதுதான் ராமனின் ஆச்ரமம் என்று எப்படித் தெரியும்? ஆகையால் முன்பு ஒரு தரம் இவன் வந்து கண்டிருக்க வேண்டும். ராமன் லட்சுமணன் சீதை இவர்களின் கண் களுக்குப் புலனுகாமல் ஒளிந்து கண்டு கொண்டிருக்க வேண்டும். ராமன் தண்டகவனம் வந்ததுமே அரக்கர்கள் ராமன் கண்ணுக்குப் புலனுகாமல் பத்து வருட காலம் மறைந்திருந்தார்கள். ராமன் பட்டாபிஷேகத்தைத்

தடுக்க மந்தரை என்ற ஒரு ஸ்திரீ முற்பட்டு உலகைத் துடிக்க வைத்தாள். அதே ஸ்திரீ சாகசத்தால் இன்னொரு சூர்ப்பணகை என்ற அரக்கர் குல ஸ்திரீ, தன் குல அழிவையே தேடி வைக்க முற்படுகிறாள். எனவே ராமனிருக்குமிடம் அரக்கர்கள் எல்லோருக்கும் நன்கு தெரிந்திருக்க வேண்டும். அவனை எதிர்ப்பது அசாத்தியமென்பது விராதன் வதையிலிருந்து வெள்ளிடை மலை போல் விளங்கிற்று. இராவணனும் இதை யறியாதவனென்று நினைக்க முடியாதபடி. ராமன் வசிக்கும் பர்ணசாலை யிதுவே யென்று மாரீசனுக்குக் காட்டுவதிலிருந்து தெளிவாகிறது. அவனை வெல்ல முடியாது தான், ஆனால் அவன் மனைவி சீதையை இலங்கைக்குத் தூக்கிச் சென்று விட்டால் ராமனால் கடல் கடந்து இலங்கைக்கு வருவது முடியாத காரியமென்று நிச்சயங் கொண்டான் ராவணன். ராமன் சிறந்த வில்லாளிதான். எனினும் சாதாரண மானிடன் தானே. இவன் எப்படிக் கடலைக் கடந்து இலங்கையை யடைவானென்று எண்ணினான். அப்படி ஒருகால் வந்தாலும் மனைவியையிழந்து தவிப்பவனை எளிதில் வென்று விடலா மென்றும் எண்ணினான். இக் கருத்தையே அவன் மாரீசனை முதல் முதல் சந்தித்த போது வெளியிட்டான். ஆகவே ராமனை எவ்வாறாயினும் போரில் வெல்ல வேண்டுமென்பது அவன் எண்ணம் போலும்!]

இராவணன் ராமன் ஆச்ரமத்தைக் காண்பித்தவுடன் மாரீசன் பொன் மான் உருவங் கொண்டான். மான் என்றால் ஒரு அற்புதமான மாயமான் அது. உயர்ந்த நீல ரத்தினங்களிழைத்த ஒளி வீசும் கொம்புகள்; செந்தாமரை யொத்த முகம்; நெய்தல் மலர்களை யொத்த அழகிய காதுகள். உயர்ந்த அழகிய மெல்லிய கழுத்து; சந்திரன் போன்ற வெள்ளிய வயிறு; பூவையொத்த மிருதுவான உடல் தோற்றம்; பளபளப்புள்ள பொன்மேனி; ரத்தினங்கள் போன்ற கால்; வைடூரியக் குளம்புகள்; வெள்ளிப் புள்ளிகள்; வசீரமான கண் பார்வை. இத்தகைய அற்புதமான மான் ஒன்று ராமன் ஆச்ரமத்தையும், வனத்தையும் ஒளி பெறச்செய்து கொண்டு அங்குமிங்கும் ஓடித்திரிய வாரம்பித்தது. இராவணன் மறைந்து கொண்டு அதைக் கவனித்த வண்ணமிருந்தான்.

அவ்வாச்ரமத்தில் இருந்த இயற்கையான மற்ற மான்கள் இப்புது மாயச் செயற்கையான மானைக் கண்டு வியப்புற்றன. அவை அதனருகே அண்டி மோப்பங் கண்டவுடனே, 'இது நம்மினத்தைச் சேர்ந்ததன்று' என்றுணர்ந்து எல்லாத் திசைகளிலும் பயந்து ஓடிப் போயின. அவை மானுருவங் கொண்ட மாய அரக்கனிவன் என்று கண்டு கொண்டன போலும்! அவைகளின் இயற்கை அறிவை மாயத்தால் மாற்ற முடியவில்லை.

அச்சமயத்தில் வைதேகி செடிகளில் மலர் கொய்ய வந்தாள். இவ்வாச்சரியமான மானுருவம் அவள் கண்ணில் தென்பட்டது! ஆகா! என்ன அற்புதமான மான் இது. என்று அதையே உற்று நோக்கின வண்ணம் நின்று விட்டாள்!

**இம்மாதிரி குசலவர்கள் ராம சரிதம் பதினொன்றாவது நாள் கானம் முடிந்தேறியது.**

---

## 43 மானுருவத்தின் மாயா விநோதம்

### பன்னிரண்டாவது தினம் குசலவர்கள் செய்த ராமகானம்

விசித்திரமான பொன்மானைக் கண்டு வியப்படைந்த வைதேகி, பூப் பறித்துக் கொண்டிருக்கும் போது இராம லட்சுமணர்களை அவசரமாகக் கூப்பிட்டாள். வேறு வேலையிலிருந்த அவர்கள் சீதை அவசரமாகக் கூவி அழைப்பதைக் கேட்டு அவளிடம் விரைந்து வந்தார்கள். வந்ததும் அழகிய அற்புதமானைக் கண்டார்கள்.

மற்ற மான்களுடன் இல்லாமல், தனியே ஓடித்திரியும் இப்பொன் மானைக் கண்டதும், மகாபுத்திமானும் முன் ஜாக்ரதையுள்ளவனுமான லட்சுமணன் 'இது ஒரு மாயமானுன அரக்கன்' என்று உடனே கண்டு கொண்டு சொல்கிறுன் :—

"அண்ணு இம்மானுருவம் கொண்டுள்ளவன் மாரீசன் என்ற அரக்கன். காட்டில் வேட்டையாடவரும் ராஜபுத்திரர்களை இந்த மாரீசன் அற்புத மானுருவங் கொண்டு மயக்கிக் காட்டினுள் அழைத்துச் சென்று அவர்களைக் கொன்றுவிடுவானென்று ரிஷிகளிடம் கேட்டறிந்திருக்கிறேன். புருஷோத்தமா! சிறிது காலம் தோன்றியும், சிறிது காலம் மறையும் கந்தர்வ புரம் என்னு மிடத்தில் வானில் தென்படும் அற்புத ஒளிபெற்று விளங்கும் இப் பொய்ம்மான் இந்த மாயாவியின் மாரீசனின் மாயையே இது. சந்தேகமில்லை மான் படைப்பில் இத்தகைய ரத்தின விசித்திரமான மான் என்பதே இல்லை. ஆகையால் இது மாயையே" என்ருன்

இதைக் கேட்ட சீதை புன்னகை பூத்து, ராமனைப் பார்த்து "நாதா! நீங்கள் இம்மானைப் பிடித்துத் தரவேண்டும். மகாபாகுவே! இது என் மனதை கவர்கின்றது. ஆச்ரமப் பிரதேசங்களில் விதவிதமான்களையும் கரடிகளையும் கின்னரங்களையும் பார்த்திருக்கிறேன். ஆனுல் இம்மாதிரி மானை இது வரைகண்டதில்லை. இதன் அற்புத ஒளி இவ்விடத்தையே சோபையுறச் செய்கிறது பார்த்தீர்களா? என்ன ரூபம்! என்ன அழகு! என்ன இனியகுரல். நாதா? வனவாசம் முடிந்து நாம் நாட்டிற்குப் போகும் போது இம்மானைக் கூட்டிக் கொண்டு போனுல் அது அரண்மனைக் கலங்காரமாயிருப்பதன்றி இதனுடன் எல்லோரும் பொழுது போக்காய் விளையாடலாமல்லவா? என் மாமியாரும் பரதன் முதலானுரும் இதைக் கண்டு ஆச்சரியப் படுவர். அபூர்வமான இம்மான் உயிருடன் உங்களுக்கு அகப்பட்டால் திருப்தியாயிருக்கும். அகப்படாமல் உங்களை ஏமாற்றினுல் நீங்கள் இதை மாய்ப்பது நிச்சயம். அப்படியானுல் அதன் ஒப்பற்ற தோல் நமக்குக் கிடைக்குமன்ருே? அவ்வழகிய தோலை ஆசனமிட்டு அதன் மேல் உங்களுடன் அமர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன், ஐயனே! ஒரு குல மகள் கணவனை இப்படி நிர்ப்பந்திக்கிருளே என்று நீங்கள் என்னை வித்தியாசமாகக் கருத வேண்டாம். இவ்வதிசயமான மான் பாலுள்ள ஆசை என்னைத் தூண்டுதலால் நான் உங்களை இவ்வாறு தூண்டுகிறேன். மன்னியுங்கள்" என்ருள்.

மனைவியின் ஆசையைக் கண்ட ராகவன் மனம் இளகிற்று. லட்சுமணனைப் பார்த்து, "லட்சுமணு! சீதையின் ஆசையைக் கவனித்தாயா? இப்பொழுது இத்தகைய மான் வடிவம் கிடைப்பதரிது. எத்தகைய கண்ணைக் கவரும் தோற்றத்தில் இது உருவாயிருக்கிறது பார். ஜானகி ஆச்சரி

யப்படுவதில் விசேஷமில்லை. அபூர்வமான வஸ்துக்களைத் தேடியடைந்து ராஜ்யத்தின் பொக்கிஷத்தில் சேர்ப்பது ராஜ புத்திரர்களின் கடமையன்றோ? வைதேகி உரைப்பதும் உண்மைதான். இவ்வளவு அழகும் மென்மையும் வாய்ந்த ஓர் மான் தோல் கிடைத்தலரிதுதான். இவ்வழகிய தோலை ஆசனமிட்டு என்னுடன் அதன் மேல் உட்கார ஆசைப்படுகிறாள். காதலி, புள்ளி மான், கவரிமான் இவைகளின் தோலைக் காட்டிலும் மேம்பட்டது இது. இப்பூமண்டலத்திலுள்ள இம்மானின் தோல் நக்ஷத்திர மண்டலத்திலிருக்கும் மிருகசீர்ஷம் எனும் மான் தோலையொத்தது. மேலும் இது அப்பொல்லா அரக்கன் மாரீசனின் மாயவுருவம் என்றால், அவன் இப்போதே கொல்லப்பட வேண்டியவன். அநேக தவசிகளை இவ்விதம் வஞ்சித்த மீபாவி இவன். முன்பு வாதாபி என்ற ஒரு மாய அரக்கன் அதிதிகளுக்குத் தான் ஆகாரமாகி, பின்பு அவர்கள் வயிறுகளைக் கிழித்து விட்டு வெளிவந்த பேயரக்கன்—எவ்வண்ணம் அகஸ்தியர் முனியால் வெளிவர முடியாது அப்படியே ஜீரணமாகி கொல்லப்பட்டானோ, அது போல் இவனும் கொல்லப்பட வேண்டியவன். இவனை இதுவரை கொல்லாமல் விட்டது தருமத்திற்குத் தடையாயிற்று. இவனை இப்பொழுதே என் வில்லிற்கு இறையாக்குவேன்".

"லட்சுமணா! ஆயுதபாணியாய் நீ இங்கு ஜாக்கிரதையுடன் ஜானகியைக் காத்துக் கொண்டிரு. இவ்விடத்தை விட்டு அகல வேண்டாம். இது உண்மையான மானல்லதான். ஆகையால் இதைக் கொன்று அதன் அழகிய தோலை எடுத்து வருகிறேன். நீ இங்கு சீதைக்குக் காவலாயிரு. புத்திமானும் சாமர்த்தியசாலியுமான கழுகரசரான ஜடாயுவும் துணையாக இருப்பார். நான்கு புறங்களையும் கவனித்து, சீதைக்கு ஒரு தீங்கும் அணுகாதபடி பார்த்துக் கொள், இக்காட்டில் ஆபத்துக்குக் குறைவில்லை. முன் ஜாக்கிரதையுடன் கவனித்துக் கொண்டு வா" வென்று எச்சரித்துக் கையில் வில்லேந்தி இடுப்பில் கத்தியை வைத்து அம் மாய மானைப் பின் பற்றினான் ரகுவீரன்.

[அரக்கனைக் கொல்வது ஓர் காரணம். அதை விட முக்கியமான காரணம், ஜானகி அதன் தோலை ஆசனமாக்கித் தன்னுடன் உட்கார வேண்டுமென்ற ஆசை அவள் கணவன் அன்பை விளக்கிற்று. இதையறிந்த பதி பரமப் பிரீதியடைகிறான். அந்தரங்கமான உயரிய தாம்பத்ய இன்பத்தை மெருகூட்ட உதவுகிறது இவ்வுணர்ச்சி மிக்க நிகழ்ச்சி!]

---

## 44 மாரீசன் மறைவு

ஒரு சமயம் அம்மான் கையில் அகப்படுவது போல் அண்மையில் தோன்றும், மற்றொரு சமயம் அச்சங் கொண்டு வானில் எழும், சிலசமயம் கண் முன் தோன்றி வெகு தூரத்தில் மறையும். இப்படி அம் மாய மான் வெகு நேரம் தன் மாயா வினோதத்தைக் காண்பித்துக் கொண்டே ராமனைக் காட்டினுள் அழைத்துச் சென்றது. அதனைப் பின்பற்றும் ராமபிரானை வேண்டுமென்று வெகு தூரம் அழைத்துச் செல்லும் எண்ணத்தை அப் பொய்மானிடம் கண்ட ராமனுக்குக் கோபம் எல்லையையடைந்தது. பொல்லா எண்ணமுடையவன்; வஞ்சகன்; தன் தன்மையை ராமன்

தெரிந்து கொண்டானென்பதை உணர்ந்தவன்; உணர்ந்தும் அதே தீய வழியில் சென்று கொண்டிருக்கிறான். இரண்டு தடவை முன்பு கொல்லாது மன்னித்து விடப்பட்டவன்; எனினும் நன்றியற்றவன்; தீய எண்ணங்கள் இன்னும் அவனை விட்டபாடில்லை.

[இவன் மடிய வேண்டியது நியாயம். இவனை இன்னும் இவ்வுலகில் இத்தொழில் புரிய விடுவது தகுதியல்ல. ஆகையால் இவனை மாய்த்தே தீர வேண்டும். மாய்ந்த பின் ஆத்மா திருந்துமா? அவ்வாத்மா அறிவு மாறி நல்வழியில் திரும்ப வேண்டும். இத்தகைய விளைவு இழைக்க ஒரே வழி தான் உண்டு, ஆத்மா எங்குச் சென்றிருப்பினும் எவ்வெண்ணங்கள் எழினும், எச்செயல்கள் செய்ய விருப்பினும், எம சொரூபமாகக் கண் முன் தோன்றிக் கொண்டே யிருக்கும் மகிமை கொண்ட தலைசிறந்த மந்திரசக்தி பெற்ற பிரும்மாஸ்திர மொன்றே நிகரற்ற ஆயுதமாகும். இவ்வஸ்திரத்தின் பெருமையை வர்ணிக்க இயலாது. இது இயற்கையின் தன்மையையும் மனப்பான்மையையும் மாற்றியமைக்கும் ஆற்றல் வாய்ந்தது.

[மாரீசனுக்கு மாய சக்தி கையாளுதல் இயற்கை. அவன் ஆத்மா எவ்வுலகிலுருப்பினும்—இனி அதைக் கையாள முடியாது. பூலோகத்தில் நேர்ந்த முடிவை எண்ணித் துடிக்கும் அவ்வாத்மா. மாய சக்தியை உபயோகித்து உருவாக்கிய மான் ரூபத்தை அவ்வஸ்திரம் துளைத்து மாய்த்து உடலை திடப் பொருளாகவே மாயமாய் மறைந்து விட முடியாதபடி—நிலை நிறுத்தி விட்டது. ஆகவே மாயசக்தியை அபகரித்து விட்டது. இவ்வெண்ணங் கொண்டே—அரக்கனின் மாயசக்தி ஒழியவே—அச்சக்தியால் ஆக்கப்பட்ட இவ்வற்புத மான் வடிவத்தை நிலை பெறச் செய்யவே—மகிமையுற்ற பிரும்மாஸ்திரத்தை உபயோகப் படுத்த எண்ணினான்—மதிப்பிட முடியா மேதாவியான மைதிலி மணாளன். அம்மானுடலை நிலைபெறச் செய்து அதன் தோலைத் தன் தலைவிக்குக் கொணர்ந்து கொடுக்கவே, ஆச்ரமத்திலிருந்து புறப்படும் போது கூரான கத்தியை முதலிலெடுத்து கச்சையுல் சொருகிக் கொண்டான் என்று வால்மீகி வாக்யம். அது மாய மான் என்று ராகவனுக்குத் தெரியாதென்று சொல்லுவது பொருத்தமாகாது.]

கபட நடனஞ் செய்த மாயமானைத் தரையில் மாய்த்து விடத் தீர்மானித்தான் ரகுபதி. உடனே பிரும்மாஸ்திரத்தை உச்சரித்து ஓர் வாளியை விடுகிறான். அவ்வளவுதான்! மாயமானடிபட்டு வேகந்தாங்காது வானெழுந்துத் துள்ளி விழுந்து மரணாவஸ்தையில் அலறிப் புடைத்துத் துடிதுடித்தது. அப்பொழுதே மாரீசன் மான் உடலை விட்டு விட்டுத் தன் சுய ரூபங் கொண்டான். மார்பு பிளக்கப்பட்ட, ஆபரணங்களணிந்த கோரப் பற்களுடன் விளங்கும் ராக்ஷதனைத் தரையில் புரண்டு திணறித் துடித்தான். உடனே ராவணன் இச்சமயத்தை எதிர்பார்த்து நிற்கிறான் என்று ஞாபகம் செய்து அவனுக்குத் தன் மரணாவஸ்தையிலும் துணை புரிய இசைகிறான். இலங்கை அரசனின் ஆலோசனையை நினைக்கிறான்.

சாகும் தருவாயில் இராமன் குரல் கொண்டு மாரீசன், 'ஹா ஸீதே! லக்ஷ்மணா! என்று ஓலமிடுகிறான். அவ்வோலம் ராகவனுக்கு பிரமிப்பையும் ஆழ்ந்த கவலையையும் விளைத்தது. இது பெருஞ் சூழ்ச்சி யென்றும், இதனால் வைதேகிக்குக் கட்டாயம் ஆபத்து நேரக் கூடுமென்றும் கலங்கினான் ராகவன்.

[மாரீசன் ராமன் குரலை உபயோகித்து ஓலமிட்டான். "இதைக் கண்டு ஏமாற வேண்டாம்; இது மாரீச வரக்கன் உபயோகித்த போலிக் குரல்; தனக்கு ஒன்றும் ஆபத்தில்லை; கவலையின்றி யிருக்கலா" மென்று ஏன் ராமனும் தன்னுடைய உரத்த குரலில் ஆச்ரமத்திலுள்ள சீதை லட்சுமணர்களுக்கு எச்சரிக்க வில்லை? ஆம்; உரத்த குரலில் எச்சரித்து விடலாம் எனினும் அவர்களின் மன வோட்டத்தை நன்கறிந்தவன் ரகுநாதன். முதலில் ராமன் குரலால் அவயக் குரல் கேட்கிறது. பின்பு அதை மறுத்து ராமனது உண்மைக் குரல் க்ஷேமத்தைத் தெரிவிக்கிறது. இதில் எது உண்மை? ஒருவேளை முதலில் கேட்கப்பட்ட அவயக் குரல் உண்மையானால், லட்சுமணன் அதைப் புறக்கணித்து உடனே உதவி புரியப் போகாமல் நின்று விட்டால், விபரீதம் நேர்ந்து விடுமல்லவா? முன் வந்த ராமனின் அவயக் குரல் போலிக் குரலென்றால் பின் வந்தது உண்மைதான் என்று எவ்வாறு நிச்சயங் கொள்வது? ஒன்றும் பயமில்லை; க்ஷேமந்தான் என்று பின் வந்த குரல் ஏன் அரக்கனின் குரலாயிருக்க முடியாது? எல்லாம் அவன் வந்ததும் வெளியாகு மென்றிருந்து விட்டால், ஒருவேளை ராமன் வருவதற்குப் பதிலாக அரக்கன் வந்து விட்டால், முதல் அவயக் குரல் கேட்டதுமே லட்சுமணன் துணைக்குப் போகாதது பெரும் பாதகமாகி விடுமே! பின்பு என்ன நேர்ந்திடினும் சீதைக்கு என்ன பிரயோஜனம்! எனவே, உண்மை என்னவென்றறிய உயிர் துடிப்பாளல்லவா வைதேகி? எவ்விதத்திலும் லட்சுமணன் பர்ணசாலையை விட்டுத் தன்னை நாடி வருவது நிச்சயம். சீதை தனியே இருக்கும் போது என்ன ஆபத்து நேரிடுமோ? என்று எண்ணங்கள் எழுந்தனவோ என்னவோ.]

சந்தேகத்திற்கும் ஆழ்ந்த கவலைக்கும் ஆளாகியும் அவன் தன் கடமையைச் செய்து முடிக்கப் பின்வாங்க வில்லை, மானைப் பிடித்துக் கொண்டு வரவோ, அல்லது அதைக் கொன்று அதன் தோலை எடுத்துக் கொண்டு வரவோ, வாக்குக் கொடுத்தான். மேலும், அரக்கன் தன் அவயக் குரலில் கத்துவதைக் கேட்டதும் எல்லாவற்றையும் அப்படியே போட்டுவிட்டுப் பர்ணசாலைக்கு விரைந்து வரவில்லை. தான் சென்ற காரியத்தை முடித்து வருகிறான்,

[முன்பு ராவணன் மாரிசனைத் தவசியாய்க் கண்டான். இவன் மானுருவங் கொள்ளு முன் தவசியாகவே இருந்தான். இப்பொழுது மடியும் போது சுயரூபங் கொண்டு அரக்கனாகவே மடிகிறான். ஏன்? அவன் உண்மைத் தவசியாயில்லை போலும்]

இணையற்ற அஸ்திரமான பிரும்மாஸ்திரத்தால் மாரீசன் நெஞ்சு பிளக்கப்பட்டு உயிர் விடும் போது மானுருவத்தை விட்டுத் தன் சுயமான பூதாகாரமான ராட்சத உருவத்தைக் கொண்டான். தோள்வளைகள், ஆபரணங்கள், பொன் மாலை இவைகளை அணிந்தவனாய் கோரப் பற்களுடைய அரக்கனாக ஆனான்.

மிக்க கோரமாய் காணப்பட்ட அரக்கன் அடிபட்டு உதிரம் பெருக்கி மரணவேதனையுற்று மண்ணில் மாய்ந்து விட்டதைக் கவனித்து ராகவன் லட்சுமணனுடைய எச்சரிக்கையை நினைத்து சீதையை ஆபத்து அணுகாமலிருக்கட்டு மென்று மனத்தால் அவளை அடைந்தான்.

அரக்கனின் போலிக்குரலைக் கேட்டதும் ரகுநாதன் மனங் கலங்கினான். இச்சப்தத்தைக் கேட்டு சீதை என்ன செய்வாளோ, லட்மணனும் என்ன அவஸ்தைப் படுவானோ என்று நினைக்க உள்ளம் பதறினான். என்ன ஆபத்து நேரிடுமோ வென்று ஐயங் கொண்டு துடித்தான், பின்பு அதிவேக மாகவே மான் உடலிலிருந்து தோலைப் பிரித்தெடுத்துக் கொண்டு ஜனஸ் தானத்தை நோக்கி விரைந்து வந்தான்.

[இங்கு பெரியோர்கள், மாரீசன் மாய மானாய் அடிப்பட்டுக் கீழே விழுந்ததும் தன் சுய ரூபங் கொண்டதால் மாயமான உருவம் மறைந்து விட்டதென்றும் அப்பொழுது வேறொரு மானை அடித்துத் தள்ளி அதன் மாமிசத்தை—தோலையல்ல-கொண்டு வந்தான் என்றும் பொருள் கொடுத் திருக்கிறார்கள்.

[மிக்க கவலை கொண்டவன், சீதைக்கு என்ன நேரிடுமோ வென்று அஞ்சி நடுங்கி ஓடிவருபவன் மற்றொரு மானைக் குறிவைத்து அம்பெய்திக் கொன்று அதைக் கிழித்து மாமிசத்தைக் கொண்டு வரத் தாமதிப்பா னோ?

[இது பொய்மான், இவன் அந்த மாயாவி மாரீசனே என்று தம்பி எச் சரிக்கிறான். உண்மையில் இது மானாயிருந்தால் அதன் தோல் வானி லுள்ள மிருகசீர்ஷ மென்னும் மானின் தோலை நிகர்த்தது—என்று சிலாகித்து அதை ஆசனமிட்டு வைதேகி அதன் மேல் தன்னுடன் அமர வேண்டு மென்ற ஆசையை நிறைவேற்ற அதற்காகக் கத்தியையும் எடுத்துக் கொண்டு மானைபின்பற்றினவன். இப்பொழுது அஸ்திரங்களுள் தலை சிறந்த பிரம்மாஸ்திரத்தைவிட்டு அரக்கனின் உயிரை மானுருவத்திலேயே மாய்த்து அதன் உடலை நிலைப் பொருளாக்கி அதன் தோலை எடுத்து வந் தான் என்று கொள்வது தான், அவன் 'தோலை எடுத்து வருவேன்'' (வால் மீகி வாக்கியம்) என்று சொன்ன சொல்லை நிறைவேற்றினவனாவான்.

[மேலும், அகத்திய மாமுனி எவ்வண்ணம் தன் இரையாய் அமைந்த வாதாபி என்பவனை ஜீரணமாக்கிவிட்டாரோ அவ்வாறே இவனும் அம் முடிவை அடைவான் என்று சொன்னதைக் கவனிக்குங் கால் எவ்விதம் வாதாபியின் மாயசக்தியை அகத்தியர் ஒழித்து விட்டாரோ அவ்வாறே இவன் சத்தியும் ஒழிந்து போம் என்பது புலனாகிறது. மாரீசன் பெற்றி ருந்த பிரும்ம சிருஷ்டியான மாயை பிரும்மாஸ்திரங்கொண்டு ஒழிந்திடவே அரக்கனும் சுயரூபத்துடன் மண்ணில் புரண்டு மடிந்தான். மாய சக்தி மறையவே மான் உடல் ஓர் ஜடப்பொருளாய் நின்று விட்டது. அதற்கு மறைந்து போகும் சக்தி நீங்கிவிட்டது.

[சிலர் 'மாயமான்' மாய மாரீசன் என்று எப்போதும் இருபதங்களும் சேர்ந்து குறிப்பிட்டிருக்கிறபடியால் உண்மையாக மானுருவமில்லை. மான் போல் தோற்றமே. அரக்கன் செப்படி வித்தைகாட்டினான் என்கிறார்கள். அப்படியானால் அது வெறும் தோற்றமேயாயின் ராமன் விட்ட வாளி வெறும் காற்றை—தோற்றத்தைத் துளைத்து விட்டதாகும். இதனால் மாரீ சன் எங்ஙனம் மார்பு பிளக்கப்பட்டு பனைமரம் உயரம் மானாகத் துள்ளிக் குதித்து கீழே விழ முடியும்?

ஆகவே, பிரும்மாஸ்திரத்தாலடிபட்ட மானுருவம் கீழே விழுந்தது. மாய சக்தி போய் விட்டதும் வெறும் பூத உடலாய் நின்று விட்டது. இவ்வுருவத்தைக் கொண்ட மாரீசனும் சட்டையைக் கழற்றி எறிந்தது போல் அதை விட்டு விட்டு சுய உருவத்தில் உயிர் நீத்தான், என்ற எண்ணங்கள் எழுவில்லை என்று யார் சொல்ல முடியும்?

இங்ஙனம் பகுத்தறிவிற் கெட்டிய எண்ணங்கள் சரிதான் என்று முடிவு கொள்ள, ஸ்ரீ வைணவப் பெரியார் பேராசிரியர் ஸ்ரீ நிகமாந்தமகா தேசிகன் "ரகுவீரகத்யம்" என்ற கிரந்தத்தில் மாரிசனின் மாயமான் தோலில் அமர்ந்திருந்த, என்ற வாக்கியமேஒரு சிறந்த சான்றுகுமல்லவா ]?*

## 45. போலிக் குரலின் விளைவு

வேகமாக ஆச்ரமத்திற்குத் திரும்பி வரும் கோதண்டபாணி நினைத்தபடியே விபரீத விளைவு நடந்தேறியது. பர்ணசாலையில், திடீரென்று ராம குரலில் அவயங் கேட்டு மனமுடைகிறாள் ஜானகி. ஐயோ! கணவனுக்கு வந்து விட்டது ஆபத்து என்று நடுங்கி லட்சுமணனை உடனே அவனிடம் அனுப்பத் துடிக்கிறாள், "லட்சுமணா! அண்ணன் அவயக் குரல் இது. போம். உடனே அவருக்கு உதவி புரியப் பறந்து போம்" என்று பதறினாள்.

லட்சுமணன் அவ்விடத்தை விட்டு அசைய வில்லை. "ஐயோ! ஏன் போகாமல் நிற்கிறார்" என்று திசிலடைந்தாள் மைதிலி. மனம் விண்டது. சினங் கொண்டு சீறினாள், "ஸௌமித்ரே! ஏன் போகாமல் நிற்கிறீர். அண்ணன் அவயக் குரலைக் கேட்டும் அவரிடம் ஓடாமல் நிற்கிறீரே. ஐயோ! போம், அவரிடம் விரைவீர்! என்ன? பலதரம் சொல்லியும் இன்னும் அசையாது நிற்கிறீரே! என்ன எண்ணம்? அண்ணனுக்குத் துணை புரிய வேண்டாமா? ஓடும்! ஓடும்! அவருக்குப் பெரிய ஆபத்து வந்து விட்டது. மரம் போல் நிற்கிறீரே? நீர் இங்கே நிற்பது என் பொருட்டா? அவருக்குக் கஷ்டம் உமது இஷ்டமா? அவர் மாண்டு விட்டால்—ஐயோ! அவர் போன பின்பு என்னை அடையவா நிற்கிறீர்! எவரை முக்கியமாய் நினைத்துவனம் வந்தீரோ அவர் மறைந்த பின் என்னால் ஆக வேண்டியது என்ன?"

இக் கடுஞ் சொற்களைக் கேட்ட லட்சுமணன் உள்ளம் பதறினான். அவள் ஆவி துடித்துப் பேசுகின்ற பேச்சென்று கவனித்து "அம்மா! உங்களுடைய கணவருக்கு எங்கேனும் ஆபத்து என்பது உண்டா? பன்னகர், அசுரர், கந்தர்வர், தேவர்கள் ஆகிய எவராலும் அவர் வெல்ல முடியாதவரென்று சொல்லவும் வேண்டுமா? வெற்றி வீரனின் உயிர்ச் செல்வியே! ரகுநாதனை வெல்லுபவர்கள் மூவுலகிலுமில்லை. தேவர்களோ, மனிதர்களோ, கந்தர்வர்களோ, பக்ஷிகளோ, ராட்சதர்களோ, பிசாசங்களோ, கின்னரர்களோ, மிருகங்களோ, அசுரர்களோ எவர்களாலும் வீரராகவனை வெல்ல முடியாது. ஆகையால் அந்த அவயக் குரல் ராமனுடைய

*"மாரீச மாயா ம்ருகசர்ம பரிகர்மித, நிர்ப்பர தர்ப்பாஸ்தரணு"!

தல்ல, இது மாய அரக்கன் குரல். சந்தேகமில்லை. நீங்கள் கவலையற்றிருக்க வேண்டும். அப்பொய்ம்மானைக் கொன்று விட்டு, இதோ வரப் போகிறார் அவர். வைதேகி! உங்களை ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்துத் திருப்பி ஒப்புவிக்கும் படி என்னிடத்தில் என் தமையனார் கட்டளையிட்டிருக்கிறார், ஆகையால் உங்களைத் தனியே விட்டு விட்டுப் போக உடன் படேன்.

"கல்யாணி! ஜனஸ்தானத்தில் ராமபத்ரன் கரன் முதலிய அரக்கர்களைக் கொன்றதால். எஞ்சின அரக்கர்கள் நம்மிடம் வைரம் வைத்திருக்கிறார்கள். நமக்குத் தீங்கிழைக்கக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுள் ஒருவன் நம்மை ஏமாற்ற ராமன் குரலால் உங்களையும் என்னையும் கூவியிருக்கிறான், வேறொன்றுமில்லை. உங்களுக்குக் கலக்கம் வேண்டாம்' என்றான்.

இதைக் கேட்டதும் சீதையின் ஆத்திரம் அதிகரித்தது. மனத்துடிப்பில் கதறுகிறாள் :—'ராமனுடைய அவயக் குரலே அது! ஆனால் நீர் அது ராமனுடையதல்லவென்றும் அது ஒரு மாயக் குரல் என்றும் நிச்சயித்து வாளாவிருக்கிறீர். ஐயோ! ஒருவேளை அது ராமன் குரலாயிருந்து, நீரும் உடனே அவ்விடம் விரைந்து போகாவிட்டால் அநர்த்தம் நேர்ந்து விடுமே. பின்பு என்ன நேரிடினும் என்ன? ஆகையால் நீர் உடனே செல்ல வேண்டும்" என்று பன்மடங்கு சொல்லித் தத்தளிக்கிறாள். எப்படியாவது இவனை உடனே அங்கு அனுப்பி விடவேண்டும். கடுஞ் சொற்களைச் சொன்னால்தான் இவன் இவ்விடத்தை விட்டு நகர்வான் என்று எண்ணங் கொண்டாளோ, அல்லது, உண்மையாகவே தன் மன அவஸ்தையில் லட்சுமணன் அசையாது நின்றதைப் பற்றிச் சந்தேகங் கொண்டாளோ என்னவோ, வசை மொழிகளை வன்மையுடன் வாயு வேகமாய் அவன் பால் அள்ளி வீசுகிறாள், "அற்பனே! இரக்கமற்றவனே! தமையனிடம் பற்றற்றவனே! குல கீர்த்தியைக் கெடுக்க எண்ணமுள்ளவனே! ரகுநாயகன் ஆபத்தில் சிக்கிக் கொள்வது உமக்குச் சம்மதமா? துணை செய்வதாகப் பாவனை செய்து, அவருக்குத் தீங்கிழைக்கவா வந்திருக்கிறீர்? என் பொருட்டா அல்லது பரதனின் பொருட்டா இங்கு வந்தது? இச்சூழ்ச்சி எண்ணங்கள் ஒருநாளும் நிறைவேறா வென்று மனத்தில் இருக்கட்டும். இதோ பாரும் நான் உம் எதிரிலேயே என் உயிரை மாய்த்துக் கொள்வேன்; தீக்குதிப்பேன்; நதியில் வீழ்வேன்; விஷ முண்பேன். அவரைப் பிரிந்து நான் ஒரு கணமும் உயிர் வாழேன்" என்று கதறினாள்.

இவ்வன் மொழிகளைக் கேட்ட லட்சுமணன் செய்வதறியாது அசைவற்று நின்றான், ஆகா என்ன அடாத சொற்கள் இவை! என்று உள்ளம் பதறினான்.

"அம்மா! நீங்கள் எனக்குப் பிரத்தியக்ஷ தெய்வம். உங்களை மறுத்துப் பேசுவதற்கில்லை. சமயம் வாய்த்தால் தருமத்தை விட்டு, மனம் போன படி கூசாமல் குத்திக் குத்திப் பேசுவார்கள் மாதர்கள். மாதர்களின் சுபாவமே இது. உங்கள் வன்மொழி என் காதால் கேட்கச் சகிக்க வில்லை. நான் நியாய வழியில் நடப்பவன். உங்கள் இதத்தையே கோருகிறவன். அநியாயமாய் என்னை அடாத சொற்களால் நிந்தித்தீர்கள். கிடக்கட்டும். ராமனிடம் சென்று விடுகிறேன். உங்களுக்கு க்ஷேமம் உண்டாகட்டும். கொடிய

அபசகுனங்கள் தோன்றுகின்றன. திரும்பி வந்து உங்களை ராமனுடனிருப்பதாகக் காண்பேனாக" என்றான்,

இவ்வார்த்தைகளை கவனித்தாளில்லை வைதேகி. "ஐயோ! ராமன் இப்போது எவ்வாறு வேதனைப் பட்டுத் துடிக்கிறானோ வென்று ஆவி துடித்து அலறினாள். கதறினாள், தலையிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு ஓலமிட்டு அழுதாள்.

இலட்சுமணனால் வைதேகியின் வசை மொழிகளை கேட்க சகிக்க முடியவில்லை. தான் அங்கு தங்குவதால்தான் இவ்வாறு அலட்டுகிறாளென்று கண்டு அவளை விட்டு அகன்றான்.

(கானகம் செல்லுமுன் தாய் சுமித்திரை மகனை நோக்கி, "ராமனைத் தசரதரென்றும், ஜானகியை நான் என்றும் கொண்டு நட' என்று எச்சரித்தனுப்பினாள். அதுமுதல் வைதேகியைத் தாயாகவே கொண்டு நடந்தவன். ஆத்திரம் பொங்கி, அடங்காச் சொற்களைக் கொட்டி, தாய்—மகன் என்ற உறவை அடியோடு அறுத்துத் தள்ளி, அவனை ஓர் அந்நியனாக்கி விடுகிறாள் மைதிலி. தாயின் ஆக்கினைபடி, ராமன் தந்தை தசரதரைப் போல் எண்ணி அவன் ஆக்கினை யொன்றையே மேலானதாகக் கருதி ராகவனும் கோசலாதேவியின் வார்த்தையைக் கேளாது வனம் வந்தது போல், அன்னை யென்று கொண்ட ஜானகியின் தூண்டுதலைப் பொருட்படுத்தாது ராமானுஜன் நின்றவிடத்திலேயே நின்று விடலாம், ஆனால் இந்த உறவையே அழித்து விடுகிறாள் அவள். நான் வேறு, அவன் வேறு என்றும், அவன் வேறு எண்ணங் கொண்டு நின்று விடுகிறானென்றும் அவனை ஒரு துர் எண்ணமுள்ள அந்நியனென்றும் விளக்கி உரவுப் பற்றையே நீக்கி விடுகிறாள் அவள். சடாரென்று மனமுடைந்து போகிறான் அவன், அவள் பனவோட்டத்தைக் கண்டு. இதை நிரூபிக்க "அவள் என்னை கெட்ட எண்ணமுடைய சத்துருவாகக் கருதி விட்டாள்" என்று தம்பி அண்ணனுக்குச் சொல்லி முறையிடுகிறான் அவர்கள் காட்டில் சந்தித்த போது.)

---

## 46. கபட சன்யாசி

மைதிலியின் பாதுகாப்பை விட்டு எப்போது இலட்சுமணன் விலகுவானென்று காத்திருந்த இராவணன், அவன் மனச் சஞ்சலத்தால் காட்டினுள் மறைந்ததும், ஒரு சந்நியாசி போல் வெளிக் கிளம்பினான். அழகிய மெல்லிய காவியுடை; சடைமுடி, குடை, பாதுகை, தண்டம், கமண்டலம், எல்லாம் பூண்டவனாகத் தோன்றினான், பர்ணசாலையை அணுகினான். வைதேகியைக் கண்ணுற்றான். உடனே அவன் மனமும் பார்வையும் தீய எண்ணங்களால் விகாரமுற்றன. இதைப்பற்றியோ என்னவோ தருமத்தினாலே நிலைபெற்ற இயற்கை அஞ்சினது போலும்! மரங்கள் அசையவில்லை, கோதாவரி நதி குதூகலித்து ஓடவில்லை, காற்று வீசையிழந்தது; பகல் ஒளி மழுங்கியது. இருள் சூழ்ந்த பய நிலையில் ஒங்கும் நிசப்தம்!

திருட்டு விழியுடன் போலிச் சன்னியாசி ராவணன் பர்ணசாலை முன் வந்து நின்றான். நிறைமதி போன்ற முகமும், தாமரைபோல் அகன்று செவ்

வரிபரந்த கண்களும், அக்கண்களின்று பெருகும் சோக நீருடன் கலங்கி நிற்கும் சீதா தேவியைப் பார்த்த வண்ணம் நின்றான். அவள் எழிலை அப்படியே பருகுவான் போல் வெகு நேரம் அவளைப் பிரமையுடன் பார்த்துவிட்டுப் பேசவாரம்பித்தான்,

"பொன் மேனியுடையாய்; பெண்மையின் மாணிக்கமே! நீ யார்? கட்டழகியே! நீ பூமி தேவியா, மகாலட்சுமியா, தேவ மாதா? கீர்த்திக் கொழுந்தா? ஐசுவரிய தேவதையா? இவ்வுலகில் இத்தகைய எழில் கொண்ட உருவான பத்தரைமாற்றுத் தங்கப் பதுமையை இது வரை தான் கண்டதில்லை.'' என்று அளந்து கொண்டே போகிறான். அவன் வர்ணனைக்கு எல்லையே இல்லை. ஒவ்வொரு அவயவத்தைப்பற்றியும் மை தீட்டிய உயர் சித்திரம் வரைகிறான். புலனடக்கிய ஒரு தவசி இப்படி ஒரு பெண்ணைப் பற்றியும் அவள் அவயங்களின் அழகைப் பற்றியும் விவரிக்கிறான்! தவசித்தன்மையை இழிவாக்குகிறான் என்று அறியாதவளா அவள், எனினும் பர்ணசாலை நாடி வந்த தவசியை அதிதியாக வரவேற்றுக் கௌரவிப்பதே முறை என்றுணர்ந்த ஜனக நந்தினி, அவனை மரியாதையுடன் வரவேற்று அர்க்ய பாத்தியங்கள் கொடுத்து, பழங்களையும் அவன் முன் வைக்கிறாள். அவன் அமர ஆசனமு மளிக்கிறாள். [இதனால் ராமனுடைய ஆக்ரமத்திற்கு முனிவர்கள் வந்து போவதும் அவர்கள் மரியாதையுடன் உபசரிக்கப்படுவதும் சகஜமென்று விளங்குகின்றது.] சந்நியாசி அமர்ந்தவுடன் பழங்களை வைத்துவிட்டு நாதன் வருகிறானவென்று எதிர் பார்த்த வண்ணம் வெளியே நிற்கிறாள் அவ்விசாலாட்சி!

---

## 47. போலித் தவசியின் போக்கு.

தவசியாய் வந்த அரக்கர் அரசன். அப்படியே அவளைப் பார்த்த வண்ணம் இருக்கிறான், "இதென்ன விபரீதப் பார்வை! இவன் உண்மையாகப் பிராமணனா? ஏன் என்னை இப்படி உற்றுப் பார்க்க வேண்டும்? இத்துறவி ஒன்றும் செய்ய முடியாதபடி எப்படியாவது ராமன் வரும் வரை பேச்சுக் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும்'' என்று எண்ணி மிதிலைச் செல்வி பேசவாரம்பிக்கிறாள்.

"சன்னியாசியாரே! நான் மிதிலைமன்னன் ஜனக மகாராஜன் புதல்வி. தசரத சக்ரவர்த்தியின் மருமகள். ராமருடைய மனைவி. என் பெயர் சீதை. உங்கள் ஆசி பெறுவேனாக. இக்ஷ்வாகுகுல மன்னவரின் நகரமாகிய அயோத்தியில் உலகிற் சிறந்த மாபெரும் போகங்களை அனுபவித்துக் கொண்டு எல்லா ஆசைகளும் நிறைவேறப் பெற்றவளாய் பன்னிரண்டுவருஷங்கள் வசித்து வந்தேன்.'' என்று தொடங்கித் தான் நாட்டில் வந்து வசிக்கும் வரையுள்ள நிகழ்ச்சிகளை யெல்லாம் விவரித்தாள். இச் சரித்திரத்தில் இடையிடையே கணவருக்கும் இலக்குமணர்க்கும் மேன்மேலும் புகழ் மாலையை அடுக்கினாள். ராமனையும் தம்பியையும் அவள் புகழப்புகழப் போலிச் சந்நியாசியின் ஆவேசமும், அவளைப் பார்த்துக் கொண்டிருந்தால் அதிகரிக்கும் ஆசையும், பெருக் கெடுத்துப் பரவின. கைகேயின் சாகச

மென்ன, தசரதனின் தரும சங்கட மென்ன, ராமனின் சத்திய விரதமென்ன இவைகளை எடுத்துச் சொல்லிக் கொண்டே வந்தாள் சீதை. அவன் அவைகளையெல்லாம் கவனித்தானே என்னவோ, இப்பொழுது சொல்லிக் கொண்டிருப்பவள் முற்றிலும் இளங்குமரியல்ல வென்றும், யதார்த்த மறிந்த உலகானுபவம் நிரம்பப் பெற்றவளென்றும், அவன் மனத்தில் பதியும் பொருட்டு, ராமன் பட்டாபிஷேக முயற்சி காலத்தில் அவனுக்கு இருபத்தைந்து வய தென்றும், தனக்குப் பதினெட்டு வயதென்றும், இப்பொழுது வனவாசத்தில் பத்து வருஷங்கள் சென்று விட்டதால், தான் சற்றேறக் குறைய முப்பது வயதுடைய மாது என்றும், அறிவிக்கிறாள். ராமன் பிறரை எதற்கும் எப்பொழுதும் இரக்காதவர், சதா எதையும் மற்றவர்களுக்கு ஈவதே அவரது பிறவிக்குணம்; சத்தியமே அவரது ஜீவநாடி; தருமமே அவருடைய வாழ்க்கை; இந்திரியங்களையடக்கி ஆளும் புருஷோத்தமன் அவர், என்று தன் கணவனைப் பற்றிச் சொல்லுகிறாள். தருமத்திலேயே நின்று தருமத்தையே பின்பற்றுகிறவன் அவன் தம்பி லட்சுமணன் என்று அவனைப் பற்றி தெரிவிக்கிறாள். இவ்விருத்தாந்தத்தைப் பரக்க விவரித்த போதிலும் இன்னும் ராமனும் வரவில்லை, லட்சுமணனும் வரவில்லை, என்ன ஆபத்து நேர்ந்ததோ வென்று மனவேதனை நெஞ்சடைக்கிறது. கண்ணில் நீர் அலை மோதுகிறது.

இவள் நிலையைக் கவனிக்கிறான் மாயச் சந்நியாசி. இன்னும் அவளை நடுக்க முறச் செய்கிறான். அரக்கத்தன்மையை அம்பலப்படுத்துகிறான், அதைப் பெருமை படுத்த எண்ணித் தற் புகழ்ச்சியிலிறங்குகிறான்.

"எவனைக் கண்டு தேவர்கள், அசுரர்கள் முதலிய அனைவரும் அச்சமுறுகின்றனரோ, அப்படிப்பட்ட ராட்சத மன்னனான ராவணேச்வரன் தான் நான், என்று இறுமாப்புடன் தன்னைத் தெரிவிக்கிறான். கடைசியில் தன் எண்ணத்தையும் வெளியிடுகிறான். தனக்கு மனைவியாக இசைந்தால், தான் அவளுக்குச் சகல போக பாக்கியங்களையும் இலங்கை ஐசுவரியங்களையும் தருவதாக நய வஞ்சகம் பேசுகிறான்.

உடனே ஜானகி கண்ணில் தீப்பொறி அவனை ஒரு அற்பத் துரும்பென வெண்ணி, சீ! "அரக்கப் பதரே! வென்று இழித்துப் பேசி அவனை அடக்க முயல்கிறாள் கற்பரசி." மாமலையைப் போல் சலியா நெஞ்சுறுதியுடையவனும் பெருங்கடல் போல் கலக்க ஒண்ணாதவனுமான, தேவர்களுக்கு இந்திரன் எவ்வண்ணமோ அதே போல் மானிடருள் தலைசிறந்தவரான ராமனைப் பர்த்தாவாகக் கொண்டவள்; ஆஜானுபாகுவும், அரவிந்தளம் போல் நீண்ட கண்களையுடையனான ராமபத்திரனைக் கணவனாயடைந்தவள்; பூர்ண சந்திர முக விலாசமும் காண்போரைக் கவரும் வனப்பும், அரசகுலத்து அருமையான செல்வச் சீமானும், எங்கும் புகழ் பெற்ற மகாத்மாவுமான ரகுநாதனைப் பதியாய் கொண்டவள்; மனிதச் சிங்கத்தினிடமிருக்கும் இவளா ஒரு நரியைப் பார்ப்பவள்? சிங்கத்தைச் சீண்டுபவனும், சர்ப்பத்தைச் சீறி எழத் தூண்டுபவனும் ஆலகால விஷத்தைக் குடிப்பவனும் உயிர் வாழ்வனா? ராமனுடைய மனைவியை இச்சிப்பவன், தன் கண்ணை ஊசியால் துடைப்பவனும் கத்தியை நாவினால் வருடுபவனும், அக்கினியைக் கையினால் எடுப்பவனும் பட்ட பாடுபடுவான். அவன் கூர்மையான எஃகுச் சூலங்களின் முனையில்

நடக்க நினைப்பவனை ஒப்பன். காட்டில் வாழும் சிங்க மெங்கே? ரகசியமாய் நுழைந்து மறையும் நரி யெங்கே? என்றும் வற்றாத கடலெங்கே? சிறு வாய்க்கால் எங்கே? பொன் எங்கே? ஈயமெங்கே? சந்தனமெங்கே, சேறு எங்கே? யானை எங்கே? பூனை எங்கே? கருடட் பட்சி எங்கே? காகம் எங்கே? அன்னப் பறவை எங்கே! நீர்க் கோழி எங்கே! ராமன் எங்கே? ராவணன் எங்கே!'' என்று ஏற்றத் தாழ்வை எடுத்துரைத்து அரக்கனை அல்பத் துரும் பாய் மதித்து மண்ணோடு மண்ணாய் மிதித்து விட்டாள் மைதிலி!

---

## 48. தீமையைக் கடிதல்

படபட வென்று வார்த்தைகளைக் கொட்டும் வைதேகியைக் கவனிக்கி றான் அரக்கர் கோன். ஏன் இத்தகைய கடும் வேகம்? ஆம், கணவன் வர வில்லை யென்ற கவலையும் தனியே இருக்கும் அச்சமும் கலந்து அவளை இவ் வாறு பேசத் தூண்டுகின்றன. அவள் மனம் நிம்மதியான நிலையில் இல்லை யென உணர்கிறான் இராவணன். அச்சமயம் இன்னும் அவளைப் பய முறுத்தி அச்சத்தால் அவளை அடக்க எண்ணி மதியிழக்கிறான். அவள் ராமனையும் இராவணனையும் ஏற்றத் தாழ்வில் ஒப்பிட்டது மேலும் அவன் கோபத்தைக் கிளறியது.

புருவத்தை நெறித்துக் கர்ஜிக்கிறான். ''சீதே என்னை யாரென்று நினைத்தனை? எவனைக் கண்டு தேவர்களும், அசுரர்களும் அஞ்சுகிறார்களோ பெரிய தாய் மகனும் தமயனுமான குபேரன் எவனுடன் போர் செய்து தோல்வியுற்று, நகரத்தையும், மனம் போனபடி செல்லக் கூடிய புஷ்பக விமானத்தையும் விட்டுக் கயிலை மலையில் வாசஞ் செய்கிறானோ, அப்படிப் பட்ட வீராதி வீரனான ராவணேச்வரன் நான் என்று தெரிந்து கொள். சுவர்க்கம், பூமி, பாதாளம் என்னும் மூன்று லோகத்திலும் பிரசித்தி பெற் றவன். நான் கோபங் கொண்டால் வாயு வேகமாய் வீசான். அக்கினி அழல் தணிவான். சூரியன் ஒளி குன்றுவான். அத்தகைய என்னைக் கோபமடையும் படி செய்கிறாய் நீ. போகட்டும், உன்னைக் கோபியேன். உன்னை வேண்டி வந்திருப்பவன் நான். நீ இக்காட்டினுள் வசிக்கத்தகாத வள். என்னுடன் சமுத்திரத்தின் நடுவே இந்திரனுடைய அமராவதி போன்ற இலங்கைமா நகரில் பொன் மயமான மாட மாளிகைகளில் வசிக் கத் தகுந்தவள். கேவலம், மானிடப் பெண்களின் வாழ்க்கைக்கு மேம்பட் டது உனது வாழ்க்கை. அந்த அழகிய இலங்கையில் எல்லா வித போகங் களையும் உல்லாசமாக அனுபவிக்கப் பிறந்தவள் நீ. கேவலம் அல்ப ஆயுள் கொண்ட மானிடனான ராமனால் உனக்கு ஆக வேண்டியது என்ன? அவ னும் எத்தகையவன்? தந்தையால் காடு கடத்தப் பட்டவன், வீரியமிழந் தவன், அரசைப் பறி கொடுத்து விட்டு மனமுடைந்து தவசியாய்க் கிழங் கைத் தின்று காலங்கழிப்பவன், அவனுடன் உனக்கு ஆக வேண்டியது என்ன? என்னையடைந்து எல்லாச் சுகங்களையும் அனுபவி. அசுரர்களுக் கும் அரக்கர்களுக்கும் ஈச்வரனான என்னை அவமதித்துப் பெரும் ஆபத் தைத் தேடிக் கொள்ளாதே. என்னை வெல்லுவதென்பது எங்கும் எப்

பொழுதும் கிடையாதென்றறிந்து கொள். என் சுண்டு விரலுக்கு இணை யாகான் அந்த அல்ப மானிடன் ராமன்." என்று ஒரு மானிடப் பெண்ணி டத்தில் மானிடத் தலைவனை இழிவாகப் பேசித் தற்புகழ்ச்சியில் திளைக்கி ருன் இலங்கை மன்னன்.

இவன் வசனங்களும் அவைகளின் கருத்தும் மைதிலிக்கு நன்கு புலனு கின்றன. "ஐயோ ! நாதன் வரவில்லையே, அவருக்கு என்ன ஆபத்தோ" வென்று நடுங்குகிருள். தைரியத்தை விடாது ஒருவாறு தேறி, அரக்கனு டன் பேச்சுக் கொடுத்துக் காலம் கழிக்க எண்ணுகிருள். இதற்குள்ளா வது ராம லட்சுமணர்கள் வந்து விடட்டும் என்பது அவள் எண்ணம்.

மாய சன்னியாசியைப் பார்த்துச் சொல்லலுற்ருள். 'அரக்கனே ! எல்லோர் வணக்கத்துக்கு முரியவனை புகழ் பெற்ற குபேரன் உன் தமை யன் என்று சொன்னுய். அவனே பரம சாது; தயையுள்ளவன்; அவன் தம்பியான நீ எங்ஙனம் அடாது செய்யத் துணிகிருய்? அவன் தேவ குண மெங்கே? உன் அரக்கக் குண மெங்கே? அவனை அளகையை விட்டுத் துரத்தியடித்து அவன் விமானத்தைத் திருடிக் கொண்டு விட்டுப் பெருமித மடைகிருய். தீய குணம் முழுவதையுங் கொண்ட உன்னை உலகோர் இகழ்வார்களா புகழ்வார்களா வென்றும் கூட நினைக்க மதியிழந்தவனுனுய்! அறிவிலி, துர்புத்தியுள்ளவன், இந்திரியங்களை யடக்கத் தெரியாத உன் போன்ற ஒருவனை அரசனுயடைந்த அரக்கர்கள் அடியோடு அழிவது நிச் சயம். இந்திரன் மனைவி சசியைத் திருடி உயிருடன் பிழைத்தாலும் பிழைக்கலாம். ராமனின் செல்வியை அபகரித்து உயிர் வாழ்வதென்பதே யில்லை. அவன் அமிருதமுண்ட ஆயுள் வலியுற்றவனுயினும் உடனே மடிந்து போவது நிச்சய மென்பதை மனதில்வை" என்று கடிந்து பேசினுள்.

---

## 49. தீமை தீண்டல்

வைதேகி வார்த்தைகளைக் கவனித்தானே என்னவோ, ராவணன் கால தாமதம் செய்கிருன். ராமலக்ஷ்மணர் வருமுன் இவளைத் தூக்கிச் சென்று விடவேண்டும் என்று கருதி இராவணன் இருகையையும் தட்டினுன். உடனே சன்னியாசி உருவத்தை விட்டு அரக்க ரூபமடைந்தான்! கோபத்தில் துடிக்கும் கொடிய மாபெரும் உருவம் கொண்டான்.

இதைக் கண்ட மைதிலி அப்படியே உள்ளங் கலங்கி பயத்தால் நடு நடுங்கினுள், அவளைப் பார்த்து இன்னும் பயமுறுத்துகிருன் இவ்வறிவிலி. "ஓதே! என்னைப் பார்த்தாயா? என் வீரியம் என்ன வென்பது தெரியுமா? வானில் நின்று மண்ணுலகைப் பெயர்த்தெடுப்பேன்; கடலை வற்றக் குடிப் பேன்; போரில் எமனையும் வெல்வேன்; சூரியனைப் பாணங்களகல் மறைப் பேன்; பூமியைப் பிளப்பேன்; நினைத்த உருவத்தை எடுப்பேன். எச்செயலி லும் வெற்றியே காண்பேன். ஆகையால் என்னை ஏற்றுக் கொள்" என்று பிரமட்டிப் பேசினுன்.

கண்களில் தீப்பொறி பறந்தது. கறுத்த பெருத்த மலை போன்ற உருவம், அக்நித்தணல் போன்ற கண்கள், பத்துத்தலைகள், பிரம்மாண்டமான வில்லும ஆயுதங்களும்,பூண்டு பயத்தால் பலாத்காரம் செய்ய முனைகிறான் மூடன். "சுந்தரி! என்று திரும்பவும் சீதையைப் பார்த்துச் சீறுகிறான். "மூவுலகிலும் மேன்மை பெற்ற பதியை விரும்புவாயாகில் என்னை ஏற்றுக் கொள். நான்தான் உனக்கு எல்லா விதத்திலும் தகுதியானவன். உன் மனம் கோணுது எப்பொழுதும் நடப்பவன். என்னுடன் சகல போகங்களையும் அனுபவி. நீ சுகமடைவாய்; கேவலம், ஒரு பெண் பிள்ளையின் வார்த்தையைக் கேட்டு தனக் குரிமையான அரசைத் துறந்து உன்னையும் அழைத்துக் கொண்டு எவன் துஷ்ட மிருகங்களுள்ள இக்காட்டில் வசிக்க வந்தானோ அவனிடத்தில்,—அற்பாயிசுடைய அவனிடத்தில்—எந்த குணங்களைக் கண்டு காதலிக்கிறாய்.? என்று பதற்றிக் கொண்டு கூறிய கோரப்பற்களும் பருத்த இருபது கைகளும் கொண்ட எமன் போன்றவனான அரக்கன் அவளை நெருங்கினான். இவன் உயரமும் பருமனும் விகார ரூபமும் அவளை ஒரு சிறு பொற் பதுமையாக்கியது. தன் இடது கையினால் அவள் கூந்தலையும், வலதுகையினால், சரேலென்று தொடைகளையும் பற்றி குழந்தையை எடுப்பது போல் அவளைத் தூக்கி எடுத்தான். அப்போது "ஹா ஹா! என்ன அநீதி! என்று கதறுவன போல் வனதேவதைகளும் மான்களும் பறவைகளும் பதறிக்கத்தின. மாய ரதம் உடனே அங்கு வந்து நின்றது. அதில் அவளை எடுத்து வைத்து ஆகாயத்தில் ரதத்துடன் வெளிக்கிளம்பினான் ராவணன்.

அன்னியர் ஸ்பரிசம் கண்டிராத சீலவடிவமான சீதா தேவி ராவணனால் தீண்டப்பட்ட உடன் மனமும் உடலும் குன்றினவளாய் மெய் மறந்து விட்டாள் பின்பு கடுந்துயரத்தில் மூழ்கினாள். கணவனை நினைத்து "ராமா! ராமா"! வென்று கதறினாள் உள்ளம் துடித்தாள். வானில் அதிவேகமாய்ச் செல்ல வாரம்பிக்கும் ரதத்திலிருந்த அவள் ஒன்றும் செய்ய முடியாது திணறிக் கதறினாள். அவயங்கள் அசைக்க முடியாது இறுக்கப்பட்டிருப்பது கண்டு செய்வதறியாது பிரமித்துத் துடித்தாள்.

பின்பு சற்றுத் தெளிந்து "ஹா லட்சுமணா"! வென்று கதறினாள். அவனைப் பற்றியே முதல் எண்ணம். கடுஞ்சொற்களை உதறிக் கொட்டி அவனை அனுப்பி விட்டதால் வந்தது இவ்வாபத்து என்று உணர்ந்தனளோ என்னவோ, "லட்சுமணா! வென்று ஓலமிடுகிறாள், "மகாபாகுவே; பகைவரைக் கொல்லவல்லவரே! இம்மகா முரடனான அரக்கன் என்னைத் திருடிச் செல்கிறானென்பதை நீர் அறியவில்லையா? ராகவா! நாதா! நீங்கள் எங்குற்றீர்கள்? சுகவாழ்வையும் அரசையும் தருமத்திற்காகத் துறந்த நீதி வள்ளலே! என்னை இக்கொடிய அரக்கன் திருடிப்போகிறான் என்பதை நீங்கள் ஏன் உணரவில்லை? துஷ்டனுக்குத் தீவினையின் பயன் உடனே விளையுமே, எனினும், இவன் என்னை திருடிக் கொண்டு போக ஏன் தண்டிக்காது இருக்கிறீர்கள்?. சுவாமி! வன தேவதைகாள்! விருட்சங்களே! பிராணிகளே, செடிகொடிகளே உங்களுக்கு நமஸ்காரம், என்னை ராவணன் திருடிச் செல்கிறானென்பதை ராமனுக்குத் தெரிவியுங்கள்" என்று வாய் விட்டுப் புலம்பி அழுதாள். சீதை ஓலமிடும் மெல்லிய அவயக்குரல் வானில் பரவியது.

உயர்ந்த மரக்கிளையில் தங்கியிருந்த ஜடாயு வென்ற கழுகு அரசன் இக் குரலைக் கேட்டவுடன் தலையுயர்த்தி வானில் கவனித்தான். அரக்கன் வசத்தில் சிக்குண்டு தவிக்கும் தடங் கண்ணாள் தழுதழுத்த குரலில் ஜடாயுவைக் கண்டதும் அலறினாள், "ஜடாயுவே! பெரியவரே! அநாதையான என்னை இதோ இப்பாவியான ராட்சதன் பலாத்காரமாய்த் திருடிக் கொண்டு போகிறான். இவன் மகாகொடியவன், அற்ப புத்தியுள்ளவன், முரடன், ஆயுதங்களுடனிருக்கிறான். ஆகையால் வயது வந்த உங்களால் எதிர்க்க முடியாது. ஜடாயுவே! என்னை எப்படி இவன் திருடிச் செல்கிறான் என்பதை விவரமாக இப்பொழுதே ராமருக்கும் லட்சுமணருக்கும் தெரிவியும். காலதாமதம் வேண்டாம்" என்று முறையிட்டாள். ரதம் ஆகாயத்தில் சென்று கொண்டிருந்தது.

—

## 50, தீமைக்குத் தடை

வானில் வெளி வந்த அவயக் குரல் மரக் கிளையில் துயின்று கொண்டிருந்த கழுகரசனான ஜடாயுவை எழுப்பிற்று. "ஹா! என்ன இது! ஜானகியின் அபாயத் தொனி போலும்" என்று உயரப் பார்க்க அரக்க அரசனின் ரதம் ஆகாயத்தில் வந்து கொண்டிருப்பதைக் கண்டான். ஆம்! கொடிய அரக்கன் இராவணன் ராகவன் மனைவி வைதேகியைத் தூக்கிச் செல்கிறானென்று கண்டு பிரமிப்படைந்தான்.

ராகவனும் லட்சுமணனும் வெளியே சென்றிருக்கையில் தனியேயிருந்த சீதையை இவன் அபகரித்து வந்திருக்க வேண்டுமென்று உணர்ந்து எதிர்நோக்கி ரதத்தின் முன் உடனே பறந்து வந்து "அடா! தசக்ரீவா! யாரையடா அழ அழ அபகரித்துச் செல்கிறாய்? ராட்சதப் பதரே! நான் கழுகரசு ஜடாயு என்று அறிவாயாக. உன் துர்ச் செய்கை ஈடேறாது. அல்பனே! உலகம் புகழும் உத்தமனான ராமசந்திரனிடம் பிழை செய்து உயிர் தப்ப முடியுமா? ஜனஸ்தானத்திலிருந்த சூர்ப்பணகை ராமனிடம் தீய நடத்தை செய்ய முற்பட்டாள். அதனால் அவள் மூக்கும் காதும் இழந்தாள். அதன் பொருட்டு போருக்கு வந்த கர தூஷணன் முதலானவரை இராமன் கொன்றொழித்தான். அவன் மேல் என்ன குற்றம்? இதற்காக லோக நாதனான ராமன் மனைவியைத் திருடிச் செல்லுதல் நியாயமா? நீசா! நீ ஒரு ஆண் மகன் தானா? இப்படிப் பட்ட திருட்டுப் புத்தியா பெயர் பெற்ற போர் வீரனென்ற ஓர் அரசனுக்கு? நீ அழிந்து விட்டாய் என்று காட்டுகிறது இத்தீச் செயல். நீயா ஒரு அரசன்? பிறர் மனைவியைக் காப்பதல்லவா அரசனின் முதற் கடமை. எதிரியிடம் முன்னின்று போர் புரிவதல்லவா சுத்த வீரனின் பெருமை. மேன்மையுற்ற விசிரவஸ் என்பவருடைய மகனா நீ? ராமனில்லாத போது அவன் மனைவியை அல்ப புத்தியால் திருடிக் கொண்டு போக முனைந்தாய். அரசாளும் மன்னவன் அனுசரிக்க வேண்டிய தருமம் ஒன்றே. அது பிறர் மனைவியை கற்பழிப்பதைக் கடுமையாய்த் தண்டிப்பது. இவ்வீனத் தொழிலை நீயே செய்ய முற்பட்டது

வேலியே பயிரை மேய்வது போலாகும். அதருமம், அநீதி, களவாடல்' அஞ்சியோடல் இத்தகைய இழிவுக் குணங்களை நீ இப்பொழுது மேற் கொண்டதால் உனக்கும் உன் அரசாங்க மக்களுக்கும் ஆபத்தும் அழிவும் நெருங்கி விட்டன வென்பது நிச்சயம். பாவியே! ராமன் உனக்குச் செய்த அபராதமென்ன? அவன் மனைவியைத் தூக்கிச் செல்கின்றாயே! ஜனஸ்தானத்தில் அரக்கர்களை யெல்லாம் இராமன் மாய்த்தது உனக்கும் மகத்தான எச்சரிக்கையாயிருக்கட்டும் என்று செய்தான் போலும். ராகவ னிடம் அபராதஞ் செய்தவன் கட்டாயமாக அழிந்தே போவான். அவன் கோபத்திற்கு ஆளாகாதே. மைதிலியை உடனே விட்டு விடு. இந்திரன் விருத்திராசுரனை வச்சிராயுதத்தால் எங்ஙனம் மாய்த்தனனோ அங்ஙனமே, ராமபாணம் உன்னைச் சாம்பலாக்கி விடுமென்று நினை. கொடிய விஷப் பாம்பை மடியில் வைக்காதே. கால பாசத்தைக் கழுத்தில் கட்டிக் கொள் ளாதே. சீதா தேவியை உடனே ராமனிடம் விட்டு விடு, இழிவையுண் டாக்கும் ஆபத்தையும், அதருமமுமான தீச்செயலையும் செய்யாதே. இல்லை யேல் அப்பாடத்தை நானே உனக்கு இதோ இடித்துக் கற்பித்துக் காட்டுகி றேன். அல்ப திருடனே! என் உயிர் போனாலும் உன்னை இச் செயல் புரிய அனுமதியேன். இதோ உன் தேரை அழித்து உன்னைக் கீழே வீழ்த்துகிறேன் பார்''! என்று சீறி, வீறு கொண்டு தேரின் மேல் பாய்ந்தான் கழுகரசன்.

---

## 51. ஜடாயு—ராவண யுத்தம்

எதிர்த்துச் சீறி வந்த ஜடாயுவின் வேகத்தைக் கண்டு கதி கலங்கினான் தசக்ரீவன். ரதம் கடுமையாக மோதுண்டு கிடுகிடுத்து நடுங்கிற்று. அதன் வேகமும் தடையுற்றது. அரக்க அரசனின் கண்கள் கோபத்தாற் சிவந்து ஆவேசங் கொண்டன. வில்லை வளைத்து நாளீகம், நாராசம் என்ற கூரிய முனையுள்ள பாணங்களை ராவணன் மாரி போல் பொழிந்தான். இவை களைப் பொருட்படுத்துபவனா கழுகரசன்? பின்னும் வெற்றியுடன் பாய்ந்து பாய்ந்து தாக்கித் தகைத்தான். கூரிய நகங்களால் அரக்கனின் உடலை கீறிக் குத்திக் கிளறினான். கழுகரசனும் அரக்க அரசனும் ஆச்சரி யமான ஆற்றல் கொண்டு ஆகாயத்தில் போராடினர்.

அடிக்கடிக் குத்திக் கிளறப் பட்ட ராவணன் உடலிலிருந்து ரத்தம் பீறிட்டுக் கிளம்பிற்று. ஜடாயு திரும்பிப் பறந்து வந்து மோது வதற்குள் அவனை அம்புகளால் வாட்டினான் அரக்கன். சிறகுகள் முழுவ தும் துளைக்கப் பட்டன. பாணங்களைச் சட்டென்று உதறி விட்டு, மேலும் மேலும் கண்ணீர் விட்டுப் பரிதவிக்கும் ஜானகியைக் கண்டு மேன் மேலும் வீறு கொண்டு ரதத்தைத் தகைத்தெறிந்தான் கழுகரசன். இரா வணனது பெரிய வில்லைப் பாணங்களோடு கூட மற்றொரு முறை தாக்கிக் கால்களால் முறித்தெறிந்தான்.

அடங்காக் கோபங் கொண்டு சீறினான் அசுரத் தலைவன். இன்னொரு வில்லைக் கைக் கொண்டு சரமாரி பொழிந்தான். கழுகு ராஜன் கூட்டில

டைபட்டவன் போல் பாணங்களால் மூடப்பட்டான். சீதையின் தீனக் குரல் கேட்டதும் சீற்றங் கொண்டு உயரக் கிளம்பிச் சிறகின் வேகத்தால் பாணங்களை உதறித் தள்ளி மறுபடியும் அரக்கன் மேல் பாய்ந்து அந்த வில்லையும் முறித்தெறிந்தான். அதே வேகத்தில் அவன் அணிந்திருந்த பொற் கவசத்தையும் இடித்துப் பொடியாக்கினான். பின்பு மறுபடியும் ரதத்தைத் தாக்கி அதில் பூட்டியிருந்த குதிரைகளையும் சிதைத்துக் கொன்று வீழ்த்தினான். அடுத்தபடி அதிவேகமாய்ப் பாய்ந்து மோதி, ரதத்தை உடைத்துத் தூளாக்கினான். மற்றொரு பாய்ச்சலில் குடை, சாமரங்களை உதைத்துத் தள்ளி சேவகர்களை நகத்தால் மார்பைப் பிளந்து, சாரதியின் தலையையும் மூக்கால் கொத்தித் துண்டித்தான்.

இராவணன் ரதமிழந்து, வில்லிழந்து உடலெல்லாம் ரத்த வெள்ள மாய்க் கீழே பூமியில் வந்து நின்று விட்டான். சீதையைத் தரையில் விட்டுப் பிடியையும் அகற்றினான், கிழவன். வலி குன்றினவன், சீதையின் சோக நிலை இவனுக்கு ஆற்றலையும் சீற்றத்தையும் கொடுத்துதவியது என்று கண்டு அவளைத் தனியே விட்டவுடன் கழுகரசன் ஒருவாறு நிம்மதி கொண்டான். உடனே யுத்தத்தின் கடுஞ் செயல்களால் களைப்படைந்தான். பெரு மூச்சு விட்டுச் சற்று இளைப்பாறினான். இதைக் கண்டான் அநீதியே உருவாகக் கொண்ட அரக்க அரசன். 'இவன் மிகவும் ஓய்ந்து சாய்ந்திருக்கிறான். இச்சமயத்தில் தான் இவனை வெட்டி வீழ்த்த வேண்டு மென்று போர் முறைகளைப் புறக்கணித்துத் தீய எண்ணங் கொண்டான் அரக்கன். இவனைக் களைப்பாற விடக் கூடாதென்று மறுபடியும் ஜானகியைப் பற்றிக் கொண்டு மாயா சக்தியால் உயரக் கிளம்பினான்.

இதைக் கண்ணுற்ற கழுகரசன் அரக்கனை நோக்கி "மூழு மூடனே! போர் முறையைக் கைவிடும் கசடனே! ஏன் சாவதற்கு விஷத்தைக் குடிக்கிறாய்? ராமன் மனைவியைத் திருடிக் கொண்டு தப்பிப் பிழைப்பாய் என்று கனவிலும் கருதாதே, நீயும் உன்னைச் சேர்ந்தவர்களும் இதோ கணப் பொழுதில் அழிவது நிச்சயம். தூண்டில் முள்ளால் தைக்கப்பட்ட மீன் தப்புவதுண்டா? வீணாய் மடிந்து போகாதே. ராகவன் சினம் மிக்க வன்மை கொண்டது. நீயோ அல்ப திருடன். சுத்த வீரனா நீ? என்னால் நன்கு புடைக்கப்பட்டாய். எனினும் புத்தி வந்த பாடில்லை. அது வரும் வரை என் கடமையைச் செய்தே தீருவேன்" என்று சொல்லி உயரக் கிளம்பி ராவணன் முதுகில் வேகமாய்ப் பாய்ந்து அறைந்தான் ஜடாயு. அப்படியே அவ்வுடலை இறுகப் பிடித்து கூரிய நகங்களால் உடம்பெல்லாம் மாவுத்தன் மத யானையை ஈட்டியால் குத்துவது போல் குத்திக் கிளறிக் காயப்படுத்தினான். அரக்கன் உயிர் துடித்தான். கோபத் தீ பரந்து மூண்டது, ஒரு கையால் வைதேகியைப் பிடித்துக் கொண்டு மற்றொரு கையால் கழுகரசனை பலமாய் அறைந்தான். உடனே அவன் கையை மூக்கினால் துண்டாக்கினான். ஆனால் அதே நிமிஷத்தில் அறுபட்ட இடத்திலிருந்து மறுபடியும் அரக்கன் கை முளைத்ததைக்கண்டு பிரமித்தான் ஜடாயு. ஆனால் அரக்கனோ தான் பற்றிய பிடியை விட்டானில்லை.

இராவணன் கீழே பூமியில் இறங்கினான். சீதையை விட்டான். பலத்தை யெல்லாம் ஒன்று திரட்டிக் கழுகைக் கையால் ஓங்கி அறைந்தான்.

புள்ளரசு மோதுண்டு கிடுகிடுத்தான். வலுவலுத்துப் போன கழுகைக் கவனித்த அரக்கன் உடனே, வாள் கொண்டு பட்சியின் சிறகுகளையும் கால்களையும் வெட்டி வீழ்த்தினான். கடுஞ் செயல் புரியும் ராட்சதனால் முரட்டுத் தனமாய்ச் சிறகுகள் அறுக்கப் பட்டதும் ஜடாயு குற்றுயிருடன் கீழே வீழ்ந்து துடித்தான், குருதி வெள்ளம் பெருக்கெடுத்துத் தரையில் புரண்டு துடிதுடிக்கும் ஜடாயுவின் நிலையைக் கண்டு, அவனைத் தன் தந்தையாகக் கருதின மைதிலி உடனே அவனிடம் அலறிக் கொண்டு ஓடினாள்.

''ஐயோ! என்ன அநியாயமான தீய செயல் இது! இதுவா சுத்த வீரனின் போர் முறை? கொடிய பாதகன், கொலைகாரன் என்று நினைத்து மனமுடைந்து ஜடாயுவைத் தழுவிக் கொண்டு வாய் விட்டுப் புலம்பிக் கதறினாள் சீதா பிராட்டி.

## 52. சீதா பிராட்டியின் விசனம்

தன்னைக் குத்திக் கிளறித் துன்புறுத்தின எதிரியான கழுகரசன் மரண வேதனைப் படுவதைக் கண்டு ராட்சதத் தலைவன் ஆறுதலடைந்து களைப் பாற்றிக் கொண்டிருந்தான். சீதையோ அழுது புலம்பிக் கொண்டிருந்தாள்.

அடர்ந்தவனப் பிரதேசம். வன விலங்குகள் அங்கு மிங்குமோடித் கொண்டிருந்தன. ''ராமா! ராமா''! என்று சீதையின் தீனக்குரல் எழுந்த வண்ணமிருந்து, ''ராமா! ஏன் தாமதிக்கிறீர்கள்? எங்கிருக்கிறீர்கள்? என் குரல் கேட்க வில்லையா? உங்களிடம் விஷயத்தைத் தெரிவிக்க இதோ பிராணிகள் உங்களிடம் ஓடி வருகின்றனவே! என்னைக் காப்பற்ற வந்த இந்த வீரப்பட்சிராஜனும் இப்பாவியால் அடிப்பட்டுத் துடிக்கிறான். இனி எனக்கு வேறு துணையில்லை. ஹா! ராம! லட்சுமணா! எங்கு தேடுகிறீர்கள்? என்று உரக்க கதறினாள் வைதேகி.

இனி இவளை இவ்வாறு புலம்ப விட்டால் குரலைக் கேட்டு எவரேனும் வரலாமென்று அரக்கன் அவளை அணுகினான். இதைக் கண்டு திகிலடைந்த ஜானகி சரேலென்று ஓடி ஒரு மரத்தைக் கெட்டியாய்ப் பற்றிக் கொண்டாள். இராவணன் பிடித்து இழுத்தான். கொஞ்சம் வலிவு குன்றவே வேகமாக ஓடி இன்னொரு மரத்தைப் பற்றினாள். அங்கும் வந்து இழுத்தான் ராட்சதன், இப்பொழுது கோபங் கொண்டு மூர்க்கமாய் அவன் இழுத்தவுடன் ''ஹா ராம, ராம''! என்று கதறினாள்.

என்ன பரிதாபமான மனதுருகும் சம்பவம்! இதைக் கண்ணுறச் சகியாது இயற்கைத் தோற்றம் உருக்குலைந்து மாறியது போலும் இருள் சூழ்ந்தது. காற்றடங்கிற்று. சூரிய ஒளி மறைந்தது. பட்சிகள் மிருகங்கள் கூக்குரலிட்டன. ஏதோ பெரும் ஆபத்து சூழ்ந்தது போல் இயற்கைச் சின்னங்கள் பயங்கரமாகக் காட்சியளித்தன. 'என்ன' என் அவயக் குரலைக் கேட்பவர் யாருமில்லையா? வன தேவதைகளே! வனவாசிகளான தவசிகளே! உங்கள் காதுகள் செவிடு பட்டனவா என்று மன்றாடித் தவிக்கிறாள் மைதிலி. தன்

வேலையிலீடுபட்டிருந்த பிரமதேவன் இக்குரலைக் கேட்டுத் திடுக்கிட்டார். அவர் மனங்கலங்கியது. ஆனால் உடனே அவர் 'ராமாவதாரத்தின் இலட்சியம் ஈடேறி விட்டது. பொல்லா அரக்கன் ஒழிந்தான்' என்று எண்ணிக் களித்தார். [இங்கு எல்லாம் தெய்வ சங்கல்பம் என்று விளக்குவதாக, பிரமனும் கண் திறந்தார் என்று குறிப்பிடப்படுகிறது. எனினும், எல்லாம் விதியே யென்று கை பிசைந்து மனமடைந்து நின்று விடுதல் கூடாது. அதற்காக ஆவன செய்ய முயற்சி செய்வதே ஆணவத்தின் அறிகுறி, என்பதை ரகுநாதன் ஜானகியைத் தேடியடைய அரும்பாடு பட்டதை, சிறந்த படிப்பினையாக நமக்கு வலியுறுத்துமாறு இக்குறிப்பு அமைகின்றது போலும்!] அதே சமயத்தில் தண்டகவனத் தவசிகள் சீதையின் கூக் குரலைக் கேட்டுத் தவத்தை நிறுத்திக் கவலித்தனர். சீதை அரக்கனால் கவர்ந்து போகப்படுகிறாள் என்று கண்டார்கள். உடனே மனித சுபாவம் மேலெழுந்து அவர்கள் மன வேதனை யுற்று ஆகா! என்ன அநீதி நடக்கிறதென்று உள்ளம் கலங்கினர். "இக்காரணத்தாலோ இராவணன் தன் அழிவையும்தேடிக் கொள்கிறான். உலகிற்கு இனி க்ஷேமந்தான்." [அவன் அழிவைத் தடை செய்வது தகுதியல்ல. ஆகவே இப்பொழுது நேர்ந்துள்ள மன வேதனையைச் சகித்துக் கொள்வோம், லட்சியமல்லவா நமக்குப் பெரிது!" என்று பொறுமையுடனிருந்து விட்டனரோ, என்னவோ.]

கொடிய அரக்கக் கள்வன் தன் முழு பலத்தால் அவளை மரத்திலிருந்து பிரித்துப் பற்றிக் கொண்டு ஆகாயத்தில் வெளிக்கிளம்பி விட்டான்! "ஐயோ! ராம; லட்சுமணா! வென்று ஓலமிட்டுப் புலம்பிக் கொண்டே போகிறாள். வானில் காற்றின் வேகத்தில் அவள் அணிந்திருந்த புஷ்பங்கள் கூந்தலிலிருந்து சிதறின. காலில் சிலம்பு தழுவி கீழே விழுந்தது. கரியமலை போன்ற அரக்கன் தன்னால் இறுகப்பற்றப்பட்ட சீதையின் பொன் வடிவம் அவன் கரிய இடுப்பில் தங்கக்கச்சை போல் காணப்பட்டது. கீழே பிராணிகள் தங்கள் முகத்தை உயர்த்திக் கொண்டு அவளைப் பின்பற்றுவது போல் அலறிப் புடைத்துத் தொடர்ந் தோடின!

---

## 53. வீராங்கனையின் வீரமொழி

குரங்கு பிடியாய்ப் பிடித்துப் பற்றிக் கொண்டு வானில் புகுந்து அதிவேகமாய்ச் செல்கிறான் அரக்க அரசன். மலை போன்ற அவன் கரிய உடல் அவளுக்குச் சுவராகிக் காத்து நிற்கிறது. ஒரு சிறு பொம்மையாக அப்பெரிய உடலில் காட்சியளிக்கிறாள் வைதேகி. அவள் உள்ளம் பதறுகிறது. அரக்கன் கையில் சிக்கியாய் விட்டது. ஆகாயத்தில் மாயமாய்ச் செல்கிறான் அவன். அவனிடமிருந்து தப்பித்துக் கொள்ள மனதில் உபாயம் தேடித்திடம் பெறுகிறாள். அவ்வுபாயம் பலனடைந்தால் அவளை அப்படியே தொப்பென்று கீழே போட்டு விடுவான். அவள் தரையில் விழுமுன்னமே மூச்சுத்திணறிப் பிராணன் போவது நிச்சயம். எனினும் அரக்கனிடமிருந்து தப்பினால் போதும். உயிர் போய் விடினும் அவ்வுபாயம் பலிதமாக வேண்டுமென்று தீர்மானித்துக் தன் வீரத்தைத் திரட்டித் தைரியமடைந்து அவனை நோக்கிப் பேசவாரம்பிக்கிறாள் :—

"ராவணா ! நீ ஒரு வீரனா? உனக்கு வெட்க மென்பதில்லையா? வீட்டில் பதியில்லாத போது அங்கு புகுந்து அவன் இல்லாளை பலாத்காரமாகத் திருடிக் கொண்டு ஓட்டம் பிடிக்கிறாய்? நீ எவ்வளவுக் கெவ்வளவு சன்னியாசி வேடத்தில் தற்புகழ்ச்சி செய்தனையோ அவ்வளவுக்கவ்வளவு பயந்தவன் என்று காட்டிக் கொண்டு விட்டாய். பயத்தால் நடுங்கி, மாயையால் ஒரு மானை நிறுத்தி என் பதியை அதன் மூலம் அப்புறப்படுத்தினாய், அவர் வருவதற்குள் என்னைப் பிடித்திழுத்துத் தூக்கிச் செல்கிறாய். ரகுநாதனை எதிர்த்துச் சண்டையிடுவதென்ற எண்ணமோ, தைரியமோ உன்னிடம் இல்லை, ஒரு கிழக் கழுகுடன் நீ பட்ட பாடு சொல்லுந்தரமன்று.

"தனிப்பெரும் வீரனான ரகுநாதன் தன்னந்தனியனாய்த் தன் தோள் வலியால் பதினாலாயிரம் அரக்கர்களை வெட்டி வீழ்த்தினான். அப்படிப் பட்ட என் பிராண நாதனைக் கண்டு எமனைக் கண்டு அஞ்சி ஓடுவது போல் அவனிடமிருந்து தப்பி மறைந்தோடுகிறாய். என்ன வீரன் நீ? நீயா அரக்கர்களின் உண்மை அரசனாவாய்? வெறும் ராட்சதப் பதர். போருக்கு அஞ்சி விரைந்தோடுகிறாய். உனக்கு வீர மென்பதில்லையா? அல்பனான நீ அயலானுடைய மனைவியைப் பலாத்காரமாகப் பற்றித் திருடி ஓடுவதில் உனக்கு வெட்கமில்லையா? உலகத்தார் உன்னை தூற்றுவார்கள் என்பதை உணரவில்லையா? உன் வீரியத்தையும் பலத்தையும் என்னிடம் காட்டுகின்றனை! அதைச் செயலில் காட்டாது கேவலம் மானிடன் என்று சொல்லி, மானிடனிடமிருந்துதான் அஞ்சி வானில் ஒளிந்து ஓடுகிறாய். உன் ஆண்மையைப் பொய்யாக்கினாய்."

இவ்வாறு ஜடாயு உடலெல்லாம் தன் கூரிய நகத்தாலும் மூக்காலும் குத்திக் கிளறினது போல் ஜானகி இப்பொழுது அரக்கனின் மனதைக் குத்திக் கிளறுகிறாள். அவன் ஆண்மையை இழிவாக்கி வசை மொழிகளை அள்ளி வீசுகிறாள் அவ்வீராங்கனை. இத்தகைய வன்மொழி ஒரு புழுவையும் துடிக்க வைக்கும் சக்தியுள்ளது. இவன் அவைகளைக் கேட்டு வாளா விருப்பனோ? கோபம் தலைக்கேறினதும் இவளைக் கீழே எறிந்து விடுவான் அல்லது கொன்று தின்று விடுவான். எப்படியும் மடிவது நிச்சயம். எனினும் அவனிடமிருந்து விடுதலை யடைவதே சிறந்த வழியென்று இன்னும் தைரிய மடைந்து கூரிய சூலம் போன்ற மொழிகளைத் திரும்பவும் அவனிடம் கையாளுகிறாள்.

"அரக்கர்களுள் கள்வனே ! உனக்குக் காலங் கிட்டி விட்டதென்று அறிந்து விட்டாயோ? அதனால்தான் நல்லெண்ணங்களையும் நடத்தைகளையும் கை விட்டாய். உன் கழுத்திலிருக்கும் காலபாசம் உன்னைக் கண வேகமாக இழுத்துச் செல்கிறது பார். மனதையும் மதியையும் சுட்டெரிக்கும் நரகத்திலிருக்கும் வைதரணி என்னும் நதியில் விழுந்து தத்தளிக்கிறாய் உன்னால் கரையடைய முடியாது. அப்படி அடைந்தாலும், பயங்கரமான கத்திகளை இலைகளாகக் கொண்ட அசிபத்ர வனம் என்ற காட்டினுள் புகுந்து அவதியுறப் போகிறாய். பின்பு தகிக்கும் அனலுடைய உருக்கின பொன் கொண்ட, வைடூரியமான கூர் முனைகளையுடைய இரும்பு முட்கள் கொண்ட நரகத்திலுள்ள சால்மலி எனும் தூணைக் கட்டிக் கொண்டு ரத்த விளாறுல் தவிக்கிறதைக் காண்கிறேன். உன் கொடிய செய்கை அருநரகில் இழுத்துச் செல்வதை அறியாயா? தனிப் பெரும் வீரனான வெற்றி

வாகை சூடிய மானிடச் சிங்கனை புருஷோத்தமனுக்கு நீ செய்த அபராதம் பொருக்கத் தக்கதன்று. அதற்காக கால தண்டனை யடையப் போகிறாய். உன் வேகமும் பயமும் அதற்கு அத்தாட்சி. வீர மென்பதே யறியாத, தீய செயல் செய்யும் அல்பத் திருடன் நீ. அரக்க அரசனென்றும் ஆண்மை கொண்டவனென்றும் தற்புகழ்ச்சி செய்தாய். அழியா இழிவை உன் இனத்திற்குத் தேடி வைத்ததுமன்றி நீயும் விஷத்தைக் குடித்து மடியப் போகிறாய். நீசா! உன் ஆணவமெங்கே? உன் பெயரும் புகழுமெங்கே?" என்று பன்முறை இடித்துக் காட்டினாள். [இங்கு பர தாரக் கள்வன் மறுமையில் அடையவிருக்கும் நரக தண்டனை விவரிக்கப் படுகிறது. இதில் நம்பிக்கை பரவியிருந்த காலம் அது. நம்பிக்கையிருந் தாலும் இல்லாவிடினும் இது ஒரு கொடும் பாதக மென்றும், நேர்மை முறை பிறழினல் இது எத்தகைய இழிவான செயலென்றும், எத்தகைய அறநெறி பற்றிய அக்காலக் கலாசாரப் பண்பாடென்றும் ஓர் எடுத்துக் காட்டாக அமைகின்றது இவ்வசனங்களின் கருத்து.]

அரக்கன் இம் மொழிகளைக் கேட்டுச் சிறிப் பதறுகிறான். எனினும் பிடியைத் தளர்த்தினவனல்ல, முன்னிலும் அதிவேகமாக ஆகாயத்தில் மறைந்து விரைகிறான்.

---

## 54. கவித் தலைவர்க்கு அருட் செல்வம்

[ஆகாய மார்க்கமாய் அதிவேகமாய்க் கட்டி இழுத்துக் கொண்டு போகப்படும் வைதேகிக்கு மூச்சுத் திணறியது. தன் முயற்சி யனைத்தும் வீணாயிற்று. திருடனின் வீரியத்தைப் பழித்தாள். அவன் ஆணவத்தை இழிவாக்கிக் காட்டினாள். அவள் வசை மொழிகள் முழுவதும் உண்மையை வெளிப்படுத்தியதை யுணர்ந்தான் அரக்கர் கோன். ஒன்றும் பதில் சொல வதிற்கில்லை. உணர்ச்சி அவன் வேகத்தைப் பெருக்கியது, அதற்கேற்ப மலை போன்ற அவன் கரிய உடல் இன்னும் அதிகமாக வளர்ந்தது. கடும் ஆபத்திலும் கடவுள் கருணை கிடைக்கலாமென்பதை விளக்கவோ என்ன வோ அவனது பெருகும் கரிய உடம்பு, சீதா தேவிக்கு எதிர் காற்றைத் தடுத்து அவளை முற்றுலும் திணற வைக்காது உதவியாயிருந்தது].

காடாந்தகாரமான நெடுமரம் பெருங்கிளை கொண்டு ஓர் மெல்லிய பொற் கொடியைப் பற்றி அமுக்கும் காட்சியை ஆகாயத்தில் கண்டார்கள். ஓர் மலையுச்சியிலிருந்த சில வானரர்கள். ஆஹா! என்ன பிரமிக்க வைக் கும் காட்சி இது! திடுக்கிட வைக்கும் நிகழ்ச்சி இது! என்று கண் கொட் டாது பார்த்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள்.

இவர்களை ஒரு நிமிஷம் கண்ணுறுகிறாள் கமலாட்சி ஜனக நந்தினி. துணை எங்கும் காணாது தவித்துத் துடிக்கும் அவள் ஐந்து பெரிய வானரங் கள் கண் கொட்டாது வானோக்கி வாய் பிளந்து நிற்பதைக் கவனித்தாள். அங்கு, முன்பு, ஜடாயு என்ற கழுகு துணை புரிய முன்னிட்டது. இங்கு இவ்வானரர்கள் வானில் நடப்பதைக் கவனிக்கிறார்கள். இவர்களும் ஏன் துணை புரிய வரக் கூடாது நீரில் மூழ்க விருக்கும் ஜீவன் துரும்பைப் பற்றி

யாவது கரை சேருவதில்லையா? கண்ணில் நீர் தாரை தாரையாய்ப் பெருக, "ராமா, ராமா" வென்று அவளறியாது உதடு முணுமுணுக்க, திக்கு துணையின்றி மனம் படபடைக்க, அனாதையாய், அந்நியனால்,—பூதாகாரமான ஓர் அரக்கனால்—அபகரிக்கப்பட்டு ஆகாயத்தில் இழுக்கப்பட்டு நெஞ்சடைக்க, —அந்தோ, அபலையின் ஆபத்தைக் கண் கொட்டாது கண்ணுற்றிருந்த ஐந்து பெரும் வானரர்களைப் பார்க்கிறாள் சீதா பிராட்டி! உடனே சட்டென்று தன் மேலாடையின் முனையைக் கிழித்து அதில் தானணிந்த ஆபரணங்களை முடிந்து அவ்வானரங்களை நோக்கி கீழே எறிந்தாள். இதை ராவணன் கவனித்ததாகக் காணவில்லை. இவர்களைக் கண்டதுமே முன்னும் அதிகமாய் விரைந்து பறந்தான் அவன். தீச் செயல் புரியும் தீயன் மற்றோர் திருஷ்டியில் சிக்கிவிட்டால் திடுக்குற்று ஓடி ஒளிவது இயல்புதானே.

[இந்நிகழ்ச்சி இக்காவியத்தில் ஓர் ருசிகரமான கௌரவ இடம் பெற்றதென்று பெரியோர்கள் விளக்கிக் கொடுத்திருக்கிறார்கள். வாடி, வதங்கி. ஏங்கித் தயங்கித் தத்தளித்துக் கொண்டிருந்த சுக்கிரீவன் முதலிய வானரத் தலைவர்கட்கு—கரை காணாது ஜீவன் கலங்கும் தசையில் இறைவன் அருள் சுரப்பது போல்—எதிர்பாராது வானிலிருந்து விழுகின்றது தேவியின் அணிகல முடிச்சு! இது அவர்களுக்கு ஓர் அளவிடற்கரிய அருட் பெருஞ் செல்வமாயமைந்தது என்று கண்டிருக்கிறார்கள். வான்மீகி ஆதிகவி இவ்விடத்தில், இராவணன் பிராட்டி நகைகளை முடிந்து எறிந்ததையும் அறியவில்லை. வானில் விரைந்து செல்லும் போது தான் மடியில் கட்டியிருப்பது ஓர் விஷப் பாம்பென்றும் அறியவில்லை அவ்வறிவிலி என்று குறிப்பிடுகிறார்.]

ஆம்! இதைக் கவனிக்குங்கால் இலங்காதிபதி கொடும் விஷங் கொண்ட சப்த நாகம் தீண்டியவனாகத் தோன்றி விடுகிறான். சப்த நாகம் தீண்டியவன் உயிர் மீட்பதேது? ஏழு நாகங்கள் எவ்வாறு இவனைத் தீண்டினவென்பது ஓர் ருசிகரமான ஆராய்ச்சி யாகுமன்றோ?]

[முதலாவது, சூர்ப்பணகை மூக்கறுபட்டு துடிதுடித்து இலங்கையடைந்து சகோதரனை தசகண்டனை அதருமத்தில் தூண்டியது, தர்மன் என்ற விஷ சர்ப்பம் தீண்டியதாகும். ரகுநாதனை அப்புறப் படுத்தி வைதேகியை அவன் திருடிச் சென்ற போது காமன் என்ற இரண்டாவது நச்சுப் பாம்பு அவனை முன்பே கடித்து விட்டது. ஜடாயு உருக் கொண்டு வந்து அரக்க வரசனையும் அவன் ரதத்தையும் முறித் தெறிந்தது மூன்றாவதான கால சர்ப்பம் எனப்படும் விஷப் பாம்பாகும். வசு எனும் நான்காவது கருநாகம், வானிலிருந்து மைதிலியின் அணி முடிச்சு வானரத் தலைவர்களிடையே வீசி விழுந்த போது தன் நச்சுப் பல்லை அரக்கன் இடுப்பில் பொதித்து அமுக்கியது. பின்பு அனுமன் கடல் கடந்து ராட்சத ராஜனுக்கு மனுநீதி வலியுறுத்தி, இலங்கையைக் கொளுத்திப் பொசுக்கி, அன்னையை அடிபணிந்து ஐயனிடம் திரும்பும் போது ஐந்தாவதான வாசுகி எனும் நச்சரவை அங்கு ஏவி வந்தான். பின்னர் வீரராகவன் ஸேது பந்தனஞ் செய்து இலங்கையை முற்றுகையிட்ட போது ஆறாவதான அனந்த னெனும் கொடிய சர்ப்பம் அரக்கரதிபதியை பின்னிப் பற்றிப் பிடுங்கிற்று. கடைசியில் ஏழாவதும் மிக்கக் கொடியதுமான கபிலன் எனும் கார் கோடக சர்ப்பம், இலங்கை விட்டு ராகவனைச் சரணடைந்த விபீஷணனைத் துரத்திய

போது செவ்வனே தீண்டி விட்டது. இத்தகைய கடு விடமுள்ள கரு நாகங்கள் ஏழும், ஒன்றின் பின் ஒன்றாய் இராவணனை அடுத்தடுத்துக் கடித்து விட்டன. விஷம் தலைக்கேறி மூச்சுத் திணறி நெஞ்சடைத்து, போரரங்கில் அவன் சப்த நாடியும் ஒடுங்கி உயிர் விட்டான்.

[இங்கு எவ்வாறு சப்த நாடியும் ஒடுங்கின வென்பதும் ஓர் ருசிகரமான பரிசிலனையாகும். உடலில் சப்த (ஏழு) நாடிகள் உள்ளன வென்பர் நம் மருத்துவர்கள். அவைகளுள், சுழிமுனை தலையுச்சியிலும், இடைகலை, பிங்கலை என்ற நாடிகள் உடலின் இருபுறங்களிலும், காந்தாரி எனும் நாடி நாபியிலும், அத்தி, சிகுவை எனும் கண்ணின் நாடியும், அலம்புடை புருடன் எனும் காதின் நாடியும். குரு எனும் பிடரி நாடியும், சங்கினி எனும் மர்மஸ்தான நாடியும் (மொத்தம் தச நாடிகள்.) ஆயினும் ஏழு நிலைகள் கொண்டதால் சப்த நாடிகள் எனப்படும். இவைகளே வாத நாடியாகவும், பித்த நாடியாகவும், சிலேத்ம நாடியாகவும் முறையே சுருங்கியும் விரிந்தும் வேலை செய்கின்றன வென்பது மருத்துவ நூல் விளக்கமாகும்.

[இதைக் கொண்டு ராவணன் முடிவைக் காணும் போது, சூர்ப்பணகையின் உபதேசம் அவனுடைய வாத நாடியை எழுப்பி அதி வேகமாய் ஓடச் செய்து, பின் அவனை ஒடுக்கியது. மாரீசன் மாய மானானது, அரக்கர் கோன் அன்னையை அபகரித்துச் சென்றது ஆகிய இவ்விரண்டும் அவன் பித்த நாடியை அணைத்தன. பின்பு அனுமன் வந்து அரக்கர் நாட்டைத் தீயிட்டு, ராட்சதரை வதைத்து அரக்க வரசனின் சிலேத்தும நாடியைச் சுட்டுப் பொசுக்கி விட்டது, அத்தி, சிகுவை எனும் கண்ணின் நாடி ஜானகியின் கண் பார்வை பர்ணசாலை விட்டு அகற்றப் பட்டது முதற் கொண்டு கடைசி வரை ஒரு தடவையாவது இராவணன் பால் திரும்பாது நின்று விட்ட போது குன்றி விட்டது. பின்பு விபீஷணன் அரச சபையில் அரக்க வரசன் அராஜகத்தைக் கண்டித்த சமயமே, அலம்புடன், புருடன் எனும் செவி நிலை நாடிகள் விழுந்து விட்டன. தன் வலக் கையும் உயிர் நிலையாயுமிருந்த கும்பகர்ணனும், இந்திரஜித்தும் மடியவே தசகண்டனின் நாபி நாடியான காந்தாரி தளர்ந்து சாய்ந்தது. யுத்த களத்தில் முதல் நாளிலேயே கை சளைத்து மூச்சுத் திணறுவதைக் கண்ட கோசலேந்திரனை கருணை வள்ளல் "இன்று போய் நாளை வா" வென்று அனுப்பி விட்ட போதே ராவணனின் பிடரி நாடி குருவும் மங்கி மடங்கிற்று. கடைசியில், கோதண்டபாணியின் பிரும்மாஸ்திரம் எஞ்சியிருந்த சங்கினியையும், சுழிமுனையையும் குத்திக் கரந்து சென்றது. இவ்வாறு சப்த நாகம் தீண்டி சப்த நாடியும் ஒடுங்கி யுத்தப் படுகளத்தில் உயிர் நீத்த அரக்கன் தன் இழி செயலின் பயனை நினையாது இறுமாந்து மாய சக்தியில் வானில் விரைந்து மறைகிறான். வானரர்கள் கண்டு விட்டார்கள் என்று உணர்ந்தானோ என்னவோ, இன்னும் அதிவேகமாய்ப் பறக்கிறான் ராட்சதராஜன்,

[முன்பே, அகம்பனன் முதல் முதலாக ராம சரிதமான தேரின் வடத்தை (இலக்கியத் தொடர்ச்சியை) இலங்கையில் கொண்டு வந்து விட்டான். இவனைத் தொடர்ந்து சூர்ப்பணகையும் மாரீசனும் தேரின் சக்கரங்களை இலங்கையில் நன்றாய்ப் பதிய வைத்து பாதையையும் சமப் படுத்

தினர்கள். இனி அந்த ரதத்தை யடைந்து, அதிலமர்ந்து, வெற்றிப் போர் —வீரப்போர்—அறப் போர் நிகழ்த்த ராம லட்சுமணர்களை அழைத்து வரவேண்டி மணி முடிச்சை எறிந்து செய்தி சொல்லி அனுப்புகிறாள் வைதேகி! ]

வானரத் தலைவர்கள் வானில் மறையும் ராட்சத பூதாகாரத்தைப் பார்த்த வண்ணமிருந்தனர். இராவணனோ அதிவேகமாய் பம்பா நதியை யும், மலைகளையும், ஆறுகளையும் தாண்டி கடைசியில் தெற்கு சமுத்திரத் தையும் கடந்து விரைந்தான்.

பிறர் மனைவியை இச்சிப்பது பெருங்குற்றம், பலாத்காரமாய் அவளை அபகரித்துச் செல்வது மாபாதகம். இச்செயலில் மிக்க மனக் களிப்புக் கொண்டவனாகவும் ஏதோ வீரம் நிகழ்த்திய பெருமிதங் கொண்டவனாகவும் விரைந்து செல்லும் அப்பனை, உலகில் எந்நிகழ்ச்சிக்கும் சாக்ஷி பூதமா யுள்ள இயற்கை வன்மையாகக் கண்டித்தது போலும்! கடலின் அலைகள் எழும்பாது அமர்ந்து விட்டன. அதிலுள்ள மீன்கள் முதலிய சகல ஜீவ ராசிகளும் சலனமற்று நின்று விட்டன. உலகில் இத்தகைய தீமை நடந் தேறுவதா? பெரும் அதருமம் நிகழும் போதும், அதன் விளைவால் கடும் விபத்து நேரிடும் போதும் இயற்கையில் ஊன்றிக் கவனிப்போர் சிற்சில சின்னங்களையும், அறிகுறிகளையும் காணலாம். 'இத்துடன் தொலைந்தான் கொடும்பாவி பத்துத் தலையன், அரசனும் அரசன் இவன்!' என்று வானில் ஒலித்தது, சித்தர், சாரணர் முதலிய வானோர் வாக்கு!

பலாத்கார முறையில் அசுரத் தன்மை தலைக்கேறிய இலங்காதிபதி விரைந்து பறந்து தன் ராஜ்யத்தை அடைந்த போதுதான் அவன் உள்ள உதறல் விட்டுத் தைரிய மடைந்தான். இலங்கையில் புகுவது எவர்க்கும் அசாத்தியம் என்று எண்ணிக் கொண்டு பெருமித மடைந்தான். சோகத் தில் மெய்மறந்து பரிதாபமாய் ஓர் வாடி வதங்கிய பூங்கொடி போல் ஜனக நந்தினி மலைக்குன்றுகளை யொத்த அவன் மாபெரும் கைப்பிடியிலிருந்து துவண்டு தொங்கினாள். உடனே அவளைத் தரையில் விட்டுத் தன் சுய உருவமடைந்து தனியே அமையப் பெற்ற தன் அரண்மனை அந்தப்புரத்தில் அவளைப் பற்றிக் கொண்டு நுழைந்தான். அவளோ இன்னும் சோகக் கடலில் மெய்மறந்து காணப்பட்டாள்.

முன்பு இங்ஙனமே மயன் எனும் கொடிய அசுரன் ஸ்வயம் பிரபை (அஸ்வரி எனப்படுபவள்) என்னும் அப்ஸரஸ் மாதை அபகரித்து வந்தான். அவளை மற்றெவரும் காண இயலாதபடி மாயையால் ஓர் சிறையை நிர் மாணித்து அதில் அவளை சிறையிலிட்டான், எனினும் அவன் செய்த முயற்சி வீணாயிற்று. அதருமம் ஒருநாளும் நிலை நிற்காதென்று உணராது அவன் அழிந்து போனான். அவ்வாறே இப்பொழுது ராவணன் மைதிலியை சிறை யில் வைத்தான். (இவனும் கடைசியில் அழிந்து போகிறான்.)

அங்கு அல்லும் பகலும் காவல் பார்த்து வந்த மிக்க கோரத் தோற்ற முள்ள அரக்கிகளை முன் நிறுத்தி எச்சரித்தான். "இவள் சீதை எனப்படு பவள். இவளை என் அனுமதியின்றி ஆண், பெண் எவரும் கண்ணெடுத் தும் பார்க்கக் கூடாது. இவளுக்கு எது வேண்டுமோ, மணியோ, முத்தோ, பொன்னோ, உடையோ, எது வேண்டு மென்றாலும் உடனே அளிக்கக் காத்

திருங்கள். உங்களுள் ஒருத்தி, அறிந்தோ, அறியாமலோ அவளுக்குப் அப்பிரியமான ஒரு வார்த்தை சொன்னாலும் அன்றே அவள் வாழ்வு முடிவு நாள் என்று நினைவிலிருக்கட்டும்." என்று கடும் உத்தரவிட்டான்.

அவன் சொல்லிலிருந்து, இதுவரை அரக்க வரசனின் ஆக்கினையையே சிரமேற்கொண்டு பணிவிடை செய்த அரக்கிகள் இனி இத்தேவிக்கு சேவை செய்வதே தங்கள் வாழ்வின் ஆதார மென்றுணர்ந்தவர்களாய், பயந்து பணிந்தனர்.

இராவணன் அவ்விடம் விட்டு வெளிவந்தான். அவன் மனம் இன்னும் சுயநிலையடையாது பதைபதைத்துக் கொண்டிருந்தது. விபரீதமான தீச்செயல் புரிந்ததாலோ, அல்லது உண்மையாகவே அனுயாசமாய்த் தன்னந் தனியே, தன் தோள்வலியினாலேயே வில்லால் சிலம்பங்காட்டி ஜனஸ்தான அரக்கர் படையனைத்தும் நொடிப் பொழுதில் எமலோகமனுப்பிய, மங்காப் புகழ் செறிந்த தனிப் பெரும் வீரச்சிங்கன் வீரராகவனிடம் அச்சம் கொண்ட நடுக்கத்தினாலோ, ராட்சத இனத்தையே இழிவாக்கிய இலங்கேசன் அப்படியே நின்று சிந்தனையிலாழ்ந்தான். பின்பு திடங்கொண்டு எல்லா விதத்திலும் தலைமை பூண்டவர்களான எட்டு முக்கிய அரக்கர்களை அழைத்தான். அவர்களின் இனத்தை அறவே யொழித்த ரகுவீரனைப் பற்றிச் சொல்லி, அவர்களின் பகைமையையும் தேசாபிமானத்தையும் உணர்வுறச் செய்து, ராட்சத வைரியான அயோத்தி ராஜபுத்திரனை, தான் எப்படியாவது வஞ்சம் தீர்க்க சமயம் பார்த்துக் கொண்டிருப்பதையும் அறிவித்து, அவர்களை ரகுநாதனிருப்பிடஞ் சென்று அவன் என்ன செய்து கொண்டிருக்கிறானென்பதை அடிக்கடி வந்து அறிவிக்குமாறு உத்திரவிட்டான். பிறகு ஏதோ அரும்பெரும் வீர நிகழ்ச்சி செய்து முடித்தவனாக எண்ணிப் பெருமிதங் கொண்டு மகிழ்ந்தான், ராமகோபத்திற்கு ஆளாகி விட்டான் என்பதை முற்றிலும் அறியாத அறிவிலி!

---

## 55. கற்பின் சிறப்பு.

இலங்காதிபதி தான் கள்ளத்தனமாய் அபகரித்து வந்த மாது சிரோன்மணியை சிறையிட்டு விட்டு, ரகுவீரனிடம் ஒற்றர்களை யனுப்பி விட்டு பெருந் திருப்தியடைந்தான். மகத்தான சாதனையை சாதித்து விட்ட ஆநந்தத்தில் மிதிலைச் செல்வியைப் பற்றி நினைத்தான்.

[சட்டென்று அவன் மனம் ஏமாற்றங் கண்டது! எவ்வளவு எண்ணினாலும், ஞாபகம் செய்த போதிலும், தரும மூர்த்தி ராம பத்தினியின் உருவமும் வடிவதனமும் அவன் மனதில் எள்ளளவும் பதிந்ததாகக் காணோம்; என்ன அற்புத மிது! கற்புடை மங்கை அன்னியன் கனவிலும் புகாள் என்ற உண்மையை நிரூபிப்பது போல் அவன் எவ்வளவு எண்ணிய போதிலும் அந்நாரீமணியின் முழுத் தோற்றத்தை நினைவில் அவன் காண முடியவில்லை. சிற்சில அவயங்கள், அவைகளின் அமைப்பின் சிறப்பு, அதிலிருந்து எழும் பரிசுத்த உணர்ச்சி, உலகிற்கே அருமையான ஓர் உன்னத

அபூர்வ படைப்பு, மானிட உலகில் வாழ்வே ஜீவனுக்கு ஓர் சிறப்பான சம்பவமென்று களிப்புறவைக்கும், தெய்விகம் விளக்கும், தூய அமைப்புத் தொகுதியின் அபார உயிரோவியம், இவைகளை அவன் மனக் கண்ணும் ஞாபக சக்தியும் வரைந்து கொடுக்கின்றன, ஆனால் அவள் மேனியின் எழிலும் அருள் சுரக்கும் அமுதப் பார்வையும், புன்னகை அரும்பும் அழகை அழகு படுத்தும் மிருதுவதனமும், அவன் மனதில் பதியவேயில்லை. இது உண்மைதானே? ஒரு தரமாவது அவனை அவள் நேரிட்டுப் பார்த்திருந்தாலல்லவா மான் விழியாளின் பிரதிபிம்பம் அவன் மனக் கண்முன் பிரதி பலிக்கும். முதல் முதல் கபட சந்நியாசியாய் ஆச்ரமத்தில் அவள் முன் தோன்றிய போது, ஏதோ பெரியார் வந்தாரென்று மரியாதையில் தலைகுனிந்தாள். ஆசிரமவாசியான பதிவிரதை ஓர் தவசியைக் கண்டதும் தரிசிக்கத் தலை வணங்குவதே ஆசார நடைமுறைப்பண்பாடு, வீடுதேடி வந்த அதிதியை அவள் கண்ணெடுத்தும் பாராது உபசாரத்தில் முற்றிலும் ஈடு படுவாளன்றோ! ஆகவேதான் அவளைப் பார்த்தது முதல் அவன் ரணகளத்தில் கடைசி மூச்சு விடும்வரை அவள் நேரான பார்வை ஒரு தடவையாவது அரக்கன் கண்ணிற்குக் கிடைக்காமலே போயிற்று! அன்னையின் அருள்—லக்ஷ்மீ கடாக்ஷம் அடையாத எஜ்ஜீவனும், ஓர் பெரும் தீவினை விளைவித்த பின் குளம், மடம் கட்டுவித்து நற்கருமஞ் செய்த போதிலும்—நற்கதியடையாதென்ற, படிப்பினையை எடுத்துக் காட்டவோ, என்னவோ, ராட்சதன் பல முயற்சி செய்த போதிலும் ஒரு தரமாவது அவளது கண்பார்வையைத் தன்னிடம் அவன் இழுக்க முடியாது அழிந்து போனான். இதையே தெள்ளெனத் தெரிவிக்கின்றன அவன் செய்யும் முயற்சிகள்.]

சீதாபிராட்டியைப் பற்றி எண்ணமிடுகின்றது அவன் மனம். தன்னைப் பயங் கொண்ட கள்வனென்று இகழ்ந்தாள். நல்லது, தன் வீரத்தையும், வெற்றிகளையும் எடுத்துக் காட்டும் இலங்கையின் வைபவத்தை இவள் கண்ணாரக்காணட்டும் என்று தீர்மானித்து மறுபடியும் சீதையிடம் விரைந்து வந்தான்.

"இந்நகரைக் கண்ட இவள் பிரமிப்பிலும் களிப்பிலும், இந்த எல்லா இலங்கைச் செல்வங்களும் தனதென்றும், தானே அதை அனுபவிக்கும் பட்ட மகிஷியென்றும், அரசனை உள்ளிட்ட எல்லோரும் தன் ஆக்கினையின் கீழ்தான் என்று சர்வாதிகாரம் பெற்ற மகிழ்ச்சியையு மடையட்டும். இவ்வாறு இவள் களிப்புறுவதில் தீவிரமாக முயல்வேன்" என்று திடங் கொண்டு ஜானகி முன் வந்து நின்றான்.

அவளோ காக்கைகள் நடுவே அன்னப் பேடு போல், கோர அரக்கிகள் நடுவே மகாலக்ஷ்மி போல் விளங்கினாள். எனினும் அவள் சோகத்திற்கு அளவில்லை. கண்ணில் நீர்ப் பெருக்கு அலை மோதி வழிந்து கொண்டிருந்தது. நெட்டுயிர்ப் பெறிந்து ஆவி துடிக்கிறாள். செடியினின்றும் பறித்துப் போடப்பட்ட மலர் போல் வாடி வதங்கி ஒடுங்கி விட்டாள். துயரத் தீ அவள் சோபையை மறைக்க, அவள் தரை குனிந்த தலை சற்றும் உயரவேயில்லை. அவள் துயரத்தை மாற்ற நினைத்து, "சீதே! ஏன் துக்கப்படுகிறாய்? உன் கண்ணிற்கு இனிமை யளிக்கும் இரத்தின மேடைகளையும், பொற்படிகளையும், வைர மிழைத்த வேலைப் பாடுள்ள கூடங்களையும், பதுமை

தாங்கிய மாடங்களையும், வனப்பு வாய்ந்த பூஞ்சோலைகளையும், சித்திரக் கலை தீட்டிய ஸ்படிகத் தூண்களையும் முக முயர்த்தி பார். இத்தகைய பெருஞ் செல்வம் எங்குண்டு?" என்று அவளை பலாத்காரமாக எழுப்பி ஒவ்வோரிடத்திற்கும் கரகர வென்று இழுத்துச் சென்று அவள் கவனத்தை மாற்ற முனைந்தான்.

பல விடங்கள் சென்று கடைசியில் அம்மாளிகையில் தலைசிறந்த இனிய ஓரிடத்தில் அவளை அமர்த்திச் சோகம் புலப்பட வொட்டாமல் அவளிடம் பேச்சுக் கொடுத்தான். "சுந்தரி! வீரிய மில்லாதவனும், வலியற்றவனு மாகிய உன் கணவன் இத்தகைய நிர்மாணிப்புகளை இசைக்க முடியுமா? பூமிக்கு உயரத்தில் நூறு யோசனை தூரமுள்ளதும், எல்லா வளங்களும் நிரம்பப் பெற்றதும், அநேகமாயிரம் அரக்கர்களாலும் சூழப்பட்டது இவ் விலங்கைமா நகர். அன்றியும் நாற்புறமும் கடலை அரணாகக் கொண்டது. மலைச் சிகரத்தில் தகைக்க முடியாத கோட்டை மதில்களால் காக்கப்படும் இந்நேர்த்தியான நகரம் தேவர்களாலும் மனிதர்களாலும் மற்றும் யாவ ராலும் எளிதில் முற்றுகையிட முடியாதது, கணக்கற்ற அரக்கர் சேனை புடை சூழ, வெற்றி வீரம் வாய்ந்த போர் வீரர்கள் மேல் பார்வையில் எல்லையற்ற போகங்களை அனுபவிக்க வசதிகளுள்ள அரண்மனையில் அரசு புரியும் அரக்க மன்னனாகிய நான் வீரம் இழந்தவனா, என்பதை ஆலோசித் துப் பார். திரிலோகத்திலும் எனக்கு நிகரானவன் உளனோ வென்பதைச் சிந்தனை செய்" என்று வீராப்பு மொழிகளை அடுக்கடுக்காய்த் தொடுத் தான் இராவணன்.

உள்ளம் விண்டு உயிர் துடிக்கும் அன்னையின் அபார சோகத்தைத் தன் தற்புகழ்ச்சியால் மாற்ற எண்ணுகிறான் இவ்வறிவீனன். இந்தத் தற் புகழ்ச்சிப் பிரசங்கம் அவன் மதியை வெகு தூரம் இழுத்துச் சென்று விட் டது. ராமச்சந்திரனை இகழ்ந்து பேசவும் தலைப்பட்டான்.

"நாட்டை விட்டுத் துரத்தப் பட்டவன் உன் கணவன். பிழைக்க வகையின்றி, அவன் ஆண்மையிழந்து கானகத்தில் தீனனாய்த் தபசி வேடம் பூண்டு காய் கறி வர்க்கங்களை அருந்திக் காலங்கழிக்கிறான். ஆயுளை எண்ணி வாழ்கின்ற அற்ப மானிடன் அவன். அவனால் உனக்கு என்ன பிரயோசனம்? [இராமனை அசட்டை செய்து அதே மனித இனத்தைச் சார்ந்த அவன் மனைவியுடன் காமுறுகின்றான் இவ்வரக்க சிகாமணி!]

தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு அவளை வேண்டுகிறான். 'கட்டழகி' என்றும், 'சுந்தரி' என்றும், 'நுண்ணிடையா ளென்றும் புகழ்கிறான். "காற்றைக் கயிற்றால் எவ்வண்ணம் கட்ட முடியாதோ, கொழுந்து விட்டெரியும் தீயைக் கையால் எவ்விதம் அணைக்க முடியாதோ அவ்வாறு ராமனால் ஒரு நாளும் இவ்விலங்கையை அடைய முடியாது. ஆத லின் இலங்கேஸ்வரனான என்னை அங்கீகரித்து என்றென்றும் குறைவற்று இன்புற்றிருப்பாய் என்று மன்றாடுகிறேன். உன் முற் பிறப்பின் தீவ னைப் பயன் தண்டகவனத்தில் வசித்ததால் முடிவடைந்தது. உன் நல் வினைப் பயனால் இனி எல்லாப் போகங்களையும் நீ இவ்விலங்கையில் அனு பவிக்கப் போகிறாய்" என்று கூறி சொல்லுகிறான். புஷ்பக விமானத்தைக் காட்டித் தூண்டுகிறான். ஒன்றும் பலிக்க வில்லை. தன் முகத்தை அவன்

காண முடியாதபடி தன் உடையால் மூடி ஓரிடத்தில் உட்கார்ந்து விடு கிறாள் மைதிலி.

களைப்படைந்த அவள் தன் உடலை வஸ்திரத்தால் மூடிக் கொண் டாள். அவள் பாதங்கள் மாத்திரம் வெளியில் தெரிகின்றன. மலரின் வனப்பு வாய்ந்த பாதங்கள்! பஞ்சினும் மிருதுவான மெல்லடிகள்! கருணை வடிவமாய்க் குளிர்ந்த சிறிய செந்தாமரை யொத்த திருவடிகள்! மனத்தையும் மதியையும் கவரும் ஜோதியுற்ற பொற் சரணங்கள்! உல கத்தை ரட்சித்துப் பக்தர்களின் வினையைப் போக்கும் திருமகளின் திவ்விய பாதார விந்தங்கள்! இவைகளைக் காணப் பெறும் பாக்கியம் பெற்றோர்க் குத் தலையணியாக விளங்கும் திருக்கமலப் பாதங்கள்! இத்தகைய பெருமை வாய்ந்த திருவடிகளைக் கண்ணுற்ற கடுவினையுருக் கொண்ட அரக்கத் தலைவன் அப்படியே அவைகளின் அழகிற்கு அடிமையாகிறான். "சத்தியமாக நான் உன் அடிமை", "அவைகளை என் சிரத்தில் பதிய வைக்கத் திருவுள்ளம் பற்ற வேண்டு" மென்று மன்றாடுகிறான்.

[பக்திப் பெருக்கின் விசேஷத்தையா புலனுக்குகிறது இம்மனநிலை என்று அவன் வார்த்தையைக் கேட்போர் அஞ்சு முன், காம வசமான அவன் அறிவு அப் புனிதப் பாதங்களை விட்டு விட்டு மேல் நோக்கிச் செல்லுகின் றது. உடனே தன் சுய ராட்சதத் தன்மை யடைந்து விடுகிறான். பிறர் மனைவியை அன்னையாயும் சகோதரியாகவும் பாவிக்கும் தருமத்தைக் கை விட்டு விபரீத எண்ணங்களுக்குத் தன்னை அடிமையாக்குகிறான். மோகத் தால் மயக்குண்டு மதியிழந்து முறையிடுகிறான்.]

"கட்டழகு இன்னதென்பதை விளக்குபவளே! நீ இம்மகத்தான இலங்கை ராஜ்யத்தைப் பரிபாலனம் செய்வாயாக! நானும், மற்ற தேவர் களும்—ஏன்—சராசரங்களனைத்தும், உன் அடிமைகளே வென்று உறுதி கொள். [அவனறியாது ஆத்ம தத்துவத்தை வெளியிடுகிறான்!] களிப் புறு, சிறுன பானஞ் செய்; நல்லாடை யுடுத்தி ஆபரணங்களணிந்து சோபையுற்று காட்சி தருவாய். அதைக் கண்டு நானும் களிப்பேன். சிறந்த நறுமணங்களும் மாலைகளும் சகல பட்ட மகிஷியின் ஆபரணங் களும் உன்னை அலங்கரிக்கத் துடிக்கின்றன.

"இதோ, என் தமையன் குபேரனுடைய புஷ்பக விமானம்! சூரியக் காந்தி கொண்டு ஜொலிப்பதைப் பார். என் ஆண்மையால் அதை என தாக்கிக் கொண்டேன். மனோ வேகங் கொண்ட அவ்விமானத்திலுள்ள நவரத்தின ஆசனத்தில் அமர்ந்து கொள். எங்கும் செல்ல வல்ல விமானம் அது. வா! அதிலமர்ந்து போய் பார்ப்போம். புவன சுந்தரி! நாரீமணி! எழில் பொழியும் தாமரை மலரை யொத்த உன் பேரெழில் திருமுகம் சோகத்தில் ஒளி மங்கி யிருப்பதா? என்று அடுக்கிக் கொண்டே போகிறான். சோகப் போர்வையும் ஆடைப் போர்வையும் அவள் உடலைக் கண்ணிற் படாது மறைத்து விடுகின்றன, அவளுடைய பொற் பாதங்களை மட்டும் கண்டு தனது துராசையில் அவைகளின் தூயத் தன்மையை அவன் அறியவில்லை.

பிராட்டியோ தலை குனிந்தவள் குனிந்தவளே. எதையும் கவனித்த வளாகக் காண வில்லை. 'ராமா, ராமா' வென்று வாய் முணுமுணுத்துக் கொண்டிருந்தது. அலைமோதும் கண்ணில் நீர்ப் பெருக்கு நின்றபாடில்லை. பரிதாபமான தோற்றம் அவள் மன வேதனையைப் படம் பிடித்துக் காட்டி யது.

இதைக் கண்ணுறும் புல்லறிவாளியான அரக்க வரசன் மேலும் முறையிடுகிறான் ''வைதேகி! உன் குனிந்த முகமும் பரிதபிக்க வைக்கும் உன் நிலையும் பெண்மை என்ற தன்மையைக் கௌரவிக்கச் செய்தன, அதற்கு நீ மரியாதை செய்தது போதும். எழுந்திரு. மகத்தான சுகவாழ்வு உன் வரவை எதிர் பார்த்து நிற்கிறது. எவர்க்கும் கிடைக்கா அவ்வரிய பாக்கியத்தை ஏற்றுக் கொள்வாயாக!

''இதோ! என் பார்வை முற்றிலும் பற்றிப் பதிக்கும் ஈடு இணையற்ற உன் இரு திருவடிகளையும் என் சிரமேல் வைப்பாயாக! தயங்காது இப் போதே எனக்கு அனுக்கிரகம் செய். இதோ உன் வசப்பட்ட உனது அடிமை தலை வணங்குகிறேன். இது ஸத்தியமே. இலங்காதிபதியான ராவணன் இது வரை ஓர் பெண்ணைத் தலை வணங்கினவனல்ல, ஆகவே நான் உரைத்ததை அங்கீகரிப்பாயாக'' என்று பணிவாக மொழிந்தான்.

தன் வார்த்தைகள் கபட மல்ல வென்று வற்புறுத்துகிறான். இவை களை அவள் நம்பி விடுவாளென்றும் பெருந் தன்மையில் இசைந்து விடுவா ளென்றும் தான் சாதுரியமாகப் பேசி விட்டதாகவும் எண்ணி அகமகிழ் கிறான். இவைகளனைத்தும் கபட வார்த்தைகளென்றும் சூசிப்பிக்கிறான் 'இனி இவள் என்னுடையவள் தான்' என்றும் எண்ணிக் கொள்கிறான்!

## 56. ஓர் ஆண்டுத் தவணை

இலங்கை அரசனின் தற்புகழ்ச்சியைக் கேட்டாள் சீதா பிராட்டி. அதன் கருத்தை அறிகிறாள், அவன் சொற்கள் அவளை இம்மியளவும் அசைக்க முடியவில்லை. உள்ளம் சற்றும் கலங்காது, கணவனைப் பிரிந்த சோகம் மேலிட்டு, சற்றும் அஞ்சாதவளாய், ஓர் துரும்பைக் கிள்ளி எதிரே கிடத்தி தலை குனிந்த வண்ணம், முகத்தைத் துணியால் மூடிக் கொண்டே பேச வாரம்பிக்கிறாள், [கற்புடைய மங்கை எவ்வாபத்திலும், என்னிலையி லும் பர புருஷனைக் கண்ணெடுத்தும் பாராள், அவனுடன் நேராக உரை யாடுவதும் கிடையாதென்ற நடை முறைப் பண் பாட்டை விளக்கிக் காட்டுகிறாள்.]

''தருமத்திற்கு நிலையாயும், அணையாயும், அதன் எல்லையாயுமிருந்த சத் தியசந்தர் தசரத சக்கரவர்த்தி. உலகக் கீர்த்தி பெற்ற ஸ்ரீ ராமர் என்பவர் அவருக்கு புத்திரராவர். அவரே என் கணவர். அவரே என் பிரத்தியக்ஷ தெய்வம். புவனப் பிரதாபரான நெடுந் தோளரும், மலர்ந்த குளிர் பார்வை கொண்டவருமான ஸ்ரீராமப் பிரபு தலை சிறந்த தருமாத்மா. தம்பி லட்சு மணனுடன் எவர் உன் உயிரை மாய்க்க விருக்கிறாரோ, இக்ஷ்வாகு குல சிம் மனான அவர் அளவிற்கரிய பெருந்தன்மை படைத்தவர், அவர் கண் முன் நீ

என்னைத்தொடவும் எண்ணங்கொண்டாயாகில் அக்கணமே கரனைப்போல் நெடுந்துயில் கொண்டிருப்பாய். ஜனஸ்தானத்திலிருந்த வீரம் படைத்த அரக்கத் தீரர்கள் கருடனைக் கண்டு சர்ப்பங்கள் அடங்குவதுபோல் ஸ்ரீரகு வீரனைக் கண்டு அடங்கி ஒடுங்கி மாய்ந்து போனதை மறந்தாயா? குமிழியிடும் பிரவாகம் கங்கைக் கரையை அறுப்பது போல் ராமபாணம் உன் உடலை கிழித்தெறியக் காத்திருக்கின்றது. அசுரரோ, தேவரோ உன்னைக் கொல்ல முடியாதென்கிருய். யாகக் கம்பத்தில் கட்டப்பட்ட யாகபலி எவ்வாறு உயிர் தப்பாதோ அவ்வாறே ராமகோபத்திற்கு ஆளாகி விட்டு நீ உயிர் தப்புவது அசாத்யமே, ஸ்ரீ ராகவர் இன்று உன்னைக் கண்டு விட்டாராகில் இன்றே உன் வாழ்வு முடிவு நாளாகும். என்னை நீ சிறையிலிட்டதாக எண்ணிக் கொள்கிறுய். ஹூம்!—அவர் இசைந்தால் உலகும் நடுங்குமே; விண்ணிலிருந்து வெண்மதியைப் பறித்தெறிவர்; வேண்டுமென்ருல் அதை அழிக்க வல்லவர். கடலை வற்றச் செய்யும் வீர வள்ளல். அவரால் ஆகாத காரியமுமுண்டோ? ஆகையால் என்னைச் சிறை மீட்பது அவருக்கு எம்மாத்திரம்! இதை நன்ருய் மனத்தில் வை. நீ ஆயுள் முடிந்தவன். தருமமென்ற செல்வமழிந்தவன். அபாக்கியன்; வீர மொடுங்கியவன், உன் தீவினையால் இலங்கை நகர் பதியிழந்த விதவையாய்த் தவிக்கப் போகின்றது. மந்திரங்களால் பரிசுத்தமாக்கப் பட்டுப் புனித சக்தியுற்று விளங்கும் யாக வேதிகை எவ்வாறு கொலை களவு செய்யும் சண்டாளனல் தீண்ட முடியாதோ—தீண்ட முற்பட்டாலும் எவ்வாறு தீப்பிடித்துச் சாம்பலாவனே—அவ்வாறே பதிவிரதயென்ற யாகத்தைக் கொண்ட, தரும மூர்த்தியான யாக புருஷன் ரகுநந்தனின் தரும பத்தினியைத் தீண்ட முடியாதென்றறிவாயா? அத் தரும மூர்த்தியின் கோபத்தைத் தணிக்க முனை. இல்லையேல் இன்று அவர் சினங் கொண்ட பார்வை உன் மேல் விழுந்தது என்ருல் இன்றே நீ எரிக்கப் பட்டு சாம்பலாவாய். அரக்கனே! அறிவாயா நீ பதிவிரதை தருமம் என்ன வென்பதை! என்னைத் தீண்டிப் பற்றிக் கட்டி இங்கு இழுத்து வந்தாய், ஆனுல் என் மனமும் மதியும் உயிரும் ஆவியும் என் கணவரிடமே இருக்கின்றதை நீ உணர வில்லை போலும். ஜடமாகிற இச் சரீரத்தைப் பற்றி எனக்கு அக்கரையில்லை. இது சிறையிலிருந்தாலென்ன? ராட்சத இறையானுலென்ன? உணர்வற்ற கட்டையைப் பற்றி ஆவதென்ன? என்னை என் பதியிடமிருந்து ஒரு இமைப் பொழுதும் உன்னுலும் எவராலும் பிரிக்க முடியாதென்று அறிந்து கொள். ஆகையால் உன் எண்ணம் ஒரு பொழுதும் நிறைவேருது. நான் தருமத்திலிருந்து சிறிதும் நழுவாதவளென்று உலகமறியும்" என்று உண்மையை வெளியிட்டு மௌனமாயினுள்.

இம் மொழிகள் அரக்க அரசனின் செவியைச் சுட்டன. அவன் உள்ளம் எரிந்து கருகினுன், கண்ணிமை சிவந்தது. கோபத்தால் துடிதுடித்துக் கத்துகிருன் :—

"மைதிலி! என் கோரிக்கையை அங்கீகரிக்க உனக்குப் பனிரண்டு மாத காலம் தவணை கொடுக்கிறேன். இதற்குள் நீ இணங்காவிடில், மனதைக் கவர்ந்து விடும் புன்முறுவல் பூத்த உன் முகத்தையும் உன் உடலையும் என் காலை போஜனத்திற்காக, என் சமையற்காரர்கள் துண்டம்

கண்டமாய் வெட்டி பக்குவப் படுத்தி விடுவார்கள் என்பதை நினைவில் வை'' என்றான்.

கோபம் தலைக்கேறி மதியிழந்து, இத்தகைய கடுஞ் சொற்களைக் கொட்டி விட்டு ராவணன், அருகிலிருந்த அரக்கிகளை கண்ணால் எரித்து விடுபவன் போல் பார்த்து, "ஏ, கோர அரக்கிகளே! இவள் திடத்தை முறித்து விடுங்கள். இவளை அசோக வனத்தின் நடுவே எடுத்துப் போங்கள், இவளிருக்கு மிடம் எவரும் அறிய முடியா ரகசியமாயிருக்கட்டும். காட்டு யானை பிடிபட்ட பின் அதை எவ்வாறு பழக்குவார்களோ. அவ் வண்ணமே, இங்கிதமாகவும் சங்கிதமாகவும், கோபத்தாலும் இரக்கத்தாலும், பேச்சாலும் நடத்தையாலும் எப்படியாவது இவளை வழிக்குக் கொண்டு வர வேண்டியது'' என்று எச்சரித்தான்.

அரக்கிகள் உடனே சீதையை வலிய எடுத்துக் கொண்டு கனிகள் செறிந்த, இன்பம் விளைக்கும் அசோக வனம் புகுந்தனர். செந்நாய்களிடையே அகப்பட்ட பெண் மான் போல் கலங்கி வாடினாள் கமலாட்சி. அவள் வாய் மாத்திரம் 'ராம, ராம' வென்று முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

---

## 57. துர்நிமித்தத் தோற்றங்கள்

அடங்காக் கோபத்தில் அவ்விடத்தை விட்டு அகன்றான் அரக்கன். அவன் நடையின் வலிமை தாங்காது பூமி அதிர்ந்தது. அரக்கிகள் அன்னையைச் சூழ்ந்து கொண்டு அரசன் கட்டளைப் படி யாரும் அணுக முடியாத அசோக வனத்தில் அவளைக் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். காட்டு யானைப்பேடைப் பழக்குவது போல் இவளை தன் எண்ணத்திற்கு இசைய வைக்க வேண்டு மென்று அரக்கன் அவ்வரக்கியர்களுக்குக் கட்டளையிட்டிருந்தபடி அரக்கியர் குழாங்கள் அவளை நாற்புறமும் சூழ்ந்து கொண்டு நெலியத் தொடங்கினர். வைதேகியோ வலையிலகப்பட்ட மான் போல் துக்கத்தின் கரை காணாது பயந்து மனங் கலங்கிக் கணவரை நினைத்து மெய்ம்மறந்து கிடந்தாள்.

ராமன் அச்சமயம் மாரீசனைக் கொன்று ஆச்ரமம் திரும்பி விரைந்து கொண்டிருந்தான். மாரீசன் மடியும் போது மாயக் குரலால் மோசம் செய்ததைக் கவனித்து மிக்க கவலை கொண்டான். வரும்போது அவன் பின்னே ஒரு நரி விகாரமாய் ஊளை யிட்டதைக் கேட்டு திடுக்கிட்டான். ஹா! என்ன இது? தனிமையில் ஓர் நரியின் ஊளை பெரும் ஆபத்தை விளைக்கும் அபசகுன மல்லவா வென்று அவன் மனம் குழம்பிற்று. "ஐயோ! அரக்கர்களால் அல்லல் உண்டாகாமல் ஆச்ரமத்தில் ஜானகி க்ஷேமமாக இருக்க வேண்டுமே! என்று எண்ணினான். மாயாவி மாரீசன் என் குரலைக் கொண்டு ஓலமிட்டான். ஒரு வேளை இதைக் கேட்டு இளையவன் கவலை கொண்டு சீதையைத் தனியே விட்டு என்னைத் தேடி வருகின்றானோ? அல்லது வைதேகிதான் அக்குரலைக் கேட்டு நான் அபாயத்திலிருப்பதாக நினைத்து லட்சுமணனை என்னிடம் அனுப்பியிருக்கிறாளோ? ஒன்

றும் தெரியவில்லையே! இது அரக்கர்களின் தீய சூழ்ச்சி போலும்! ஜனஸ்தான அரக்கர்கள் மடிந்ததிலிருந்து எஞ்சிய அரக்கர்கள் வஞ்சம் தீர்க்க செய்த சூழ்ச்சிதான் இது! நிச்சயம். நரி ஊளையிட்டது மாத்திரமல்ல, என் இடது கண்ணும் கையும் துடிக்கின்றனவே. தவிர, பட்சிகளும் மிருகங்களும் இடது புறமாய் வந்து விகாரமாகக் கூச்சலிடுகின்றனவே. இம் மகா வனத்தில் தனியாயிருக்கும் லட்சுமணனுக்கும் ஸீதைக்கும் ஒன்றும் நேரிடாதிருக்க வேண்டும்!" என்று கவலைப் பட்டுக் கொண்டே ரகுவீரன் அதிவேகமாக திரும்பி வந்து கொண்டிருந்தான்.

அப்போது, எதிரே ஒளி குன்றி, முகம் வாடி, கண்ணீர் பெருக்கி, உள்ளம் பதறி, கோப உணர்ச்சியில் வந்து கொண்டிருந்தான் தம்பி லட்சுமணன். "ஐயோ! சீதையைத் தனியே விட்டு வந்து விட்டானே! அவளுக்கு என்ன ஆபத்து நேர்ந்ததோ! என்ன விபரீதமிது? என்று சொல்லிக் கொண்டே ராமன் தம்பியிடம் தாவினன். அவன் முகச் சோர்வைக் கண்டு மனம் விண்டான். எனினும் மனம் பதறாமல், தம்பியின் கையை அன்புடன் பற்றி தேனினும் இனிய மொழியில் "ஸௌம்மியனே! லட்சுமணா! தேவியைத் தனியாய் விட்டு நீ இங்கு வருவது சரியாகுமா? அப்பனே! அவளுக்கு ஆபத்து ஒன்றும் நேரிடாதிருக்க வேண்டுமே! அவள் பிராணனோடு க்ஷேமமாயிருக்கக் காணுவோமா! அபசகுனங்கள் பல தோன்றுகின்றனவே! ஐயோ! அவள் சுகமாயிருப்பளோ! கொடிய அரக்கர்கள் அவளைத் தூக்கிச் சென்றனரோ? கொன்றுத் தின்றனரோ? லட்சுமணா! என் மனங் கலங்குகிறது. திரும்பி அவளை ஆச்ரமத்தில் காண்போமா! இதோ பார்! மான் கூட்டங்களும் ஒரே ஒரு நரியும் பட்சிகளும் சூரியனைக் கண்டு ஓலமிடுகின்றன. (நரி கூட்டமாகக் கத்தினால் அபசகுனமில்லை) வீரனே! இக் குறிகள் மன்னர் குலத்தோர்க்கு அசுபத்தை சூசிப்பிக்கின்றனவல்லவா? மன்னன் மகள் மைதிலிக்குத் தீங்கு விளைந்து விட்டதென்றே நினைக்கிறேன். நான் அம்மாய மானைத் துரத்தி வெகு தூரம் வந்து விட்டேன், அப்பாவி மடியும்போது அரக்கனாக மாறி மாயக் குரல் கொண்டு கூவி உங்களை மோசஞ் செய்தான். ஐயோ! இப்பொழுது நீயும் அவளைத் தனியே விட்டு வந்து விட்டாய். என் மனம் ஓடிகிறது. உடல் சோர்கிறது. இடது கண் ஓயாமல் துடித்துக் கொண்டிருக்கிறது. அப்பனே! சீதை போய் விட்டாள். நிச்சயம். அவள் இறந்தனளோ! அல்லது தூக்கி எடுத்துக் கொண்டு போகப்பட்டனளோ! துயரந் தாங்காது உயிர் விட்டனளோ! வா, வா! போகலாம்" என்று பதறித் துடித்து இருவரும் பர்ணசாலை நோக்கிப் பறந்தார்கள்.

## 58. பர்ணசாலையில் சூனியம்

இருவரும் அதி வேகமாக ஆச்ரமம் நோக்கி விரைகையில் தம்பி தமையனைக் கவனிக்கிறான். ஆம், கவலை காரணமாக முகம் சற்றுச் சோபை குன்றியிருக்கிறது,

[அக்காலத்துக் கல்வியறிவையும், கலையறிவையும் கொண்டு, சுய அறிவைப் பெருக்கிக் கொள்வதை விளக்கிக் காட்டுகின்றன ராகவனின் சொற்கள். சுபாசுப சகுனங்கள, அவைகளின் சூசனைகள், பல்லி உடலில் விழுதல், அவைகளின் கணிப்பு, காக்கை கரைதல், அங்கங்களின் துடிப்பு, அவைகளின் அறிகுறிகள் இவைகளின் பலாபலன்களை ஆராய்ச்சி செய்து ஆன்றோர்கள் முடிவு கட்டியிருப்பதுமன்றி, அவற்றை நடை முறை நிகழ்ச்சியிலும் அநுபவித்து வந்திருக்கிறார்கள். இது தொன்று தொட்டு வரும் பழக்கம். இச் சகுன சாஸ்திரங்களை நன்கு கற்றுணர்ந்தவர்கள் ராம லக்ஷ்மணர். நரியின் ஊளை யொலியை இப்பொழுது தன்னிடம் கண்டவுடனே அறிவும் நம்பிக்கையும் ஒன்றாகி இனி எதிர்கால நிகழ்ச்சியையும் அனுபவத்தையும் இவைகள் நிதரிசனமாக்கப் போவதையும் திடமாகத் தம்பியிடம் சித்தரிக்கிறான் தமயன்.]

"தம்பீ! இத்தகைய அபசகுனங்களைக் காண்கிறேன். நீயும் ஜானகியைத் தனியே விட்டு விட்டு வந்து விட்டாய். நிச்சயமாக அவளுக்கு ஆபத்து நேர்ந்து விட்டதென்றே நினைக்கிறேன், அவளே எனது உயிர் நாடியாதலின், அவள் காணாமற் போய்விட்டால் எனது பிராணன் ஒடுங்கி விடும். அவள் இன்னும் பிழைத்திருக்கிறாளோ, அல்லது அரக்கர் உணவாகி விட்டனளோ? கடமையைச் செய்யத் தவறினதால் எழுந்த விளைவுகள் இவை" என்று பிரலாபிக்கிறான். [நம்மைப்போல் அபசகுனங்களைக் கண்டு உடல் நடுங்குகிறான், உள்ளம் பதறுகிறான். நாமும் அவனுடன் கண்ணைக் கசக்கிக் கை பிசைகிறோம்,]

"லட்சுமணா! நாட்டை விட்டு வனத்திற்கு என்னைப் பின் தொடர்ந்த நீயும் கடமை தவறி அவளைத் தனியே விட்டு வந்து விட்டாய். நம் வைதேகி எங்கே?" சோகம் குமுறும் குரலில் கூவி யழைக்கிறான். அரசைத் துறந்து கடும் கானகத்தில் கல்லும் பரலும் காலில் உறுத்தக் கால் நடையாய் எளிமை வாழ்க்கையை மேன்மைப் படுத்தி என் துக்கத்தைப் போக்கி எனக்கு உயிர்த் துணையாயிருந்த அம்மெல்லிடையாள் எங்கே? வீரனே! எவளை விட்டுப் பிரிந்து ஒரு கணமும் ஒரு யுகமே. எவளில்லாமல் உயிர் வைத்திருக்க இசையேனோ, அந்தப் புனித வடிவங் கொண்ட பொன்னி எங்கே? ஐயோ! அவள் க்ஷேமமா? சொல். ஒரு வார்த்தை சொல். அல்லது அவள் பிரிவு எனக்கு மரணத்தைத் தேடிக் கொடுக்க விருக்கிறதா? நான் என் பிராணனை வைதேகியைப் பிரிந்து உயிர் விட்டவுடன் நீ நாடு திரும்பினால் நடந்ததை அறிந்த கைகேயியின் உள்ளம் களிக்குமா? நினைத்த படியே முடிந்ததென்று அவள் மன நிம்மதி பெறுவாளா? புத்திரனைப் பறி கொடுத்த கௌசலையின் கதி என்னவாகும்! லட்சுமணா! ஏன் வாய் மூடி தரையை நோக்கிக் கண்ணீர் சொரிகிறாய்? எங்கே வைதேகி? பிழைத்திருக்கிறாளெனும் செய்தி கேட்டால் தான் நான் ஆசிரமம் திரும்பு

வேன். இல்லையேல் உயிர் தரியேன், என்னை வழக்கப்படி அன்போடு அவள் வரவேற்க வில்லையென்றால் அந்த க்ஷணமே என் ஆவி துடிக்கும். ஆ! ஜானகி உயிருடனிருக்கிறாளா, இல்லையா? என்ன நேர்ந்து விட்டது? சொல். சுகுமாரியும், அன்பு நிலையாளும், துக்கத்தையே அறியாத குழந்தையாயுள்ள மிதிலைச் செல்வி எனது பிரிவால் இப்பொழுது மன மொடிந்து துக்கத்தில் மூழ்கி விட்டாள் என்று நிச்சயமாய் நம்புகிறேன். பாவி மாரீசன் என் குரல் கொண்டு அலறும் போதே என் மனம் கலங்கிற்று. உன்னையும் சீதையையும் அக்குரல் முற்றிலும் கலவரப் படுத்தியிருக்க வேண்டும். என்னைக் காண்பதற்கு உடனே விரைந்து செல்லும் படி அவள் உன்னைத் தூண்டித் துரத்தியிருக்க வேண்டும். உன் பிரிவுக்காகக் காத்திருந்த பகை அரக்கர்களுக்குத் தக்க சமயமளித்தாய். நீ பிரிந்த சமயம் பார்த்து அவளை எடுத்துச் சென்று கொன்று தின்று விட்டார்கள் அப்பாவிகள்.'' என்று உள்ளம் விண்டு புலம்பினான்.

இருவரும் ஆச்ரமம் அடைந்தார்கள். ராமன் சொன்ன படியே ஆயிற்று. பர்ணசாலையில் ஒரே சூனியம். ராமன் அவள் பெயரைச் சொல்லிக் கூவினான். பதிலில்லை. அங்குமிங்கும் ஓடினான். அவளைக் காணவில்லை. பசி, தாகம், சோர்வு, மனைவி காணாமை எல்லாம் ஒன்று சேர்ந்து அவனை வாட்டி ஒடுக்கின.

---

## 59. லட்சுமணனின் நியாயமும் முறையீடும்

இருவரும் ஜானகியைக் கூவிக் கொண்டு பர்ணசாலையைச் சுற்றிச் சுற்றி வந்தனர். தேவியைக் காணவில்லை. ராமனின் துயரம் எல்லையற்றுப் பெருக்கெடுத்தது. அவள் இருந்த இடம், இளைப்பாறின மேடை, மலர் தொடுக்கும் மணல் திட்டு, அமரும் ஆசனம் எல்லாம் சூனியமாகி, ஒவ்வொன்றும் அவ்வழகுப் பதுமையைப் புதுப்பித்தன. ஆடை, ஆபரணங்கள், துயிலிறும் நார் கட்டில் எல்லாம் கூக்குரலிட்டுச் 'சீதை எங்கே' வென்று கதறுவன போல் காட்சி யளித்தன. சலங்கை, கெட்டி வளையல் முதலிய ஆபரண ஓசை அவ்வாச்ரமத்தில் இன்னும் ஒலிப்பதாகத் தோன்றின. நீர் வற்றி அழகிழந்த தாமரை ஓடை போல் ஆச்ரமம் அவளின்றிப் பொலிவிழந்து காணப்பட்டது.

வெளிவந்து துயரம் மேலிட்டு மனங் குன்றிக் கீழே அமர்ந்தான் அனந்தராமன். லட்சுமணனது முகம் கண்ணீர் சொரிந்த வண்ணம் குனிந்து கொண்டே யிருந்தது. தமையன் அவனைக் கவனிக்கிறான். தன் துயரத்தில் அவனும் கலந்து கொண்டு வருந்துகிறான். எனினும் அத்துயரத்தின் விளைவு தனதேயாகு மென்று உணர்ந்தானா? கோபத்திற்குடன் பட்டுக் கடமையை கடந்து விட்டான். அவனைப் பார்த்து பேசவாரம்பிக்கிறான். ''லட்சுமணா! உன்னை நம்பி அவளை விட்டுப் போனேன். நீ அவளைத் தனியே விட்டு வந்து விட்டாய். உன்னைத் தனியே நான் பார்த்ததுமே என் மனம் கறுக்கென்று கவலை கொண்டது. அபசகுனங்கள் தோன்றின, சரி! ஆபத்து நேர்ந்து விட்டதென்று கண்டேன். ஐயோ! உன்னை நம்பியிருந்தேனே!'' என்றான்.

தம்பி முகத்தை உயர்த்தினன். தமையனைப் பணிந்து தாழ்மையுடன் பதிலளிக்கிறன், "ஹா சீதே, ஹா லட்சுமணா! என்ற அவயக் குரல் உங்கள் குரலாக எங்கள் காதில் விழுந்தது. உடனே உள்ளம் துடித்தாள் தேவி. பதறினள், கதறினள், உங்களுக்கு ஆபத்து நேர்ந்து விட்டதென்று முடிவு கட்டி விட்டாள். என்ன சொல்லியும் கேட்க மறுத்து விட்டாள். என்னை உடனே உங்களுக்குத் துணை புரியும் படி செல்லத் தூண்டினள். நான் அசைய வில்லை. மேன் மேலும் துடித்துத் தபித்துத் தூண்டிக் கொண்டேயிருந்தாள், "உலகத்தைத் தனியே காத்து ரட்சிக்கும் உங்களுக்குத் தீங்கு விளைவிக்கவோ, உங்களை அடக்கி வெற்றி கொள்ளவோ, இம் மூவுலகிலும் எவனுமில்லை; இக்குரல் ஒரு அரக்கனின் மாயக் குரலே. கவலை வேண்டாம். தேவர்களைத் தேற்றித் துணை புரியும் வீர வள்ளலா அவயக் குரல் இடுவன்? இதை நம்ப வேண்டாம். இது முற்றிலும் பொய்க் குரல், ராகவனை எதிர்த்து வெற்றி யடையும் வல்லவன் எங்குளன்? இது உங்களுக்குத் தெரியாததா! கவலையற்று நிதானியுங்கள்" என்று வேண்டினேன். அப்போது சீதா பிராட்டி துடிதுடித்து அக்குரலை நம்பி, உங்களுக்குக் கஷ்டம் நேர்ந்தும் நான் போகாதிருந்ததைப் பற்றி என்னிடம் உடனே சந்தேகங் கொண்டு விட்டாள். "என் பொருட்டு நீ போகாதிருக்கின்றனையா? அப்படியானல் உன் துராசை ஒரு நாளும் கை கூடாதென்று நினை. அவரோ அடிபட்டு அபயமிடுகிறர், நீ அசையாமல் நின்று சாக்கு போக்கு சொல்கிறய். இது நீ பரதனுடன் செய்து கொண்ட சூழ்ச்சி போலும்? நல்லவனாக நடித்த சத்துரு நீ. என்னையடைய வேண்டி இங்கு நிற்கிறய். உன் எண்ணம் நிறைவேருது" என்று இத்தகைய அடாத மொழிகளை அள்ளி வீசினள். காதால் நான் கேட்க முடியவில்லை. அபாண்டமான பழியை யிட்டு அடங்காக் கோபங் கொண்டாள். உடனே தங்களை நாடி வந்தேன். உங்களிடம் போவதாகச் சொல்லி விட்டு அதைப் பொய்யாக்கி, மறைந்திருந்து அவளைக் காக்க முடியாதவனுனேன்." என்று சொல்லி முடித்தான்.

"ஆம்! லக்ஷ்மணா? எனினும் என் வாக்கைத் தவறி விட்டாய். கோபத்தில் உன் கடமையை மறந்தாய். என்று தம்பியின் குற்றத்தை உணர்த்தினன், எக்காலத்திலும், எந்நிலைமையிலும் தன் கடமையைச் செய்தே தீரும் தரும மூர்த்தியான தினகரகுல திலகன் ரகுநாதன்.

---

## 60. துயரமும் சோர்வும்

பர்ணசாலை சூனியமாய் விட்டதைப் பார்த்துப் பார்த்து தடுமாற்றமடைந்தான் தயரதன் தனயன். "என்ன செய்வேன்"? என்று மனமுடைந்து கதறினன், சீதையை எப்படியாவது காண வேண்டுமென்று உள்ளம் துடித்தது. ஆத்திரங் கொண்டு அங்கு மிங்கும் அவளைக் கூவிக் கொண்டே ஓடுகிறன். மரங்களிடம் தேடித் தாவுகிறன். அவை அழுவன போலக் காண்கிறன். புஷ்பச் செடிகளிடம் தேடுகிறன். புஷ்பங்கள் கொய்யப் படாமலிருப்பன கண்டு அவை வாடி வதங்கித் துயரப்படுவன

வாக எண்ணங் கொள்கிறான். மான்களையும் பட்சிகளையும் நோக்குகிறான். அவைகளிடமிருந்து புலன்கள் கிடைக்குமோ வென்று எதிர்பார்த்து கேட்கிறான். அவைகள் தங்கள் தொழில்களை நிறுத்தி விட்டுத் துக்கப்படுவதாகக் கண்ணுறுகிறான். நாற்றிசைகளிலும் பார்வையிடுகிறான். "சீதே! எங்கே போனாய்? "நில், நில், விளையாடினது போதும், வா, வா, ஜானகி" என்று அலறுகிறான். இயற்கை ஒளி குன்றி அலங்கோலமாயிருப்பதாயும், வன தேவதைகள் அங்கிருந்து மறைந்ததாயும், அவனுக்குத் தோன்றுகின்றன. ஐயோ! அவள் எங்குற்றாள்? என்ன சொல்கிறாள்!" என்று துடிதுடித்து மறுபடியும் பர்ணசாலையில் புகுகிறான். மான் தோல் ஆசனங்கள் சிதறியும், தர்ப்பைகள் தாறுமாறாய் இறைந்தும் கிடக்கின்றன. "ஐயோ! காதலி என்ன பாடு பட்டனளோ?" என்று மனதைப் பிடுங்கிப் பிசைந்து சோகம் மேலிட்டுத் துடிக்கிறான். ஐயோ! சீதை அபகரிக்கப் பட்டனளோ மடிந்தனளோ, எங்கேனும் சென்று வழி தெரியாது திகைக்கின்றனளோ? அரக்கர்களுக்கு இரையாய் விட்டனளோ, அல்லது பயமுறுத்தப் பட்டுச் சிறையிலடைக்கப் பட்டனளோ! தீனியாய்த் திகைத்துத் தவிக்கின்றனளோ? புஷ்பங்கள் கனிகள் கொய்ய எங்கேனும் சென்றிருக்கின்றனளோ! தீர்த்த மெடுக்கத் தடாகஞ் சென்றனளோ! இவ்வாறு ஐயங்கள் கணக்கின்றி எழுந்து மனத்தைக் குத்திக் கிளறின. ஆவி துடித்து மனம் அமைதியின்றி நிலை குலைந்து உடல் பதறியது. ஆத்திரம் பொங்குகிறது. அவளைக் காண வேணும், காண வேணும் என்று அவாக் கொண்டு மரங்களிடமும், குன்றினிடமும் நதியினிடமும் ஓடுகிறான்!

எதிரில் காணப்படும் கதம்ப மரத்தினிடம் நிற்கிறான். 'ஏ கதம்பமே! உன் மலரணிந்த உன் மணம் வீசும் எழிலுடைய உன் செல்வச் சீதையைக் கண்டனையா? என்கிறான். பதிலில்லை. ஓடுகிறான், களைப்பால் பெரு மூச்செறிந்து வில்வ மரத்தினிடம் சென்று, "வில்வ விருட்சமே! உன் கனியின் வர்ணமுடைய பட்டாடையுடுத்திய கவர்ச்சி கொண்ட கண்ணழகியைக் கண்டனையோ?" என்கிறான். அங்கும் பதிலில்லை. அருகே நிற்கிறது மருத மரம். அவள் அதன் புஷ்பங்களைக் கொண்டு மாலை தொடுத்தது நினைவுக்கு வருகிறது. அவளுக்கு ஆவலுடன் தினமும் மலரளிக்கும் அம்மரத்தினிடம் சென்று சீதையைக் குறித்து வினவுகிறான். பதில் சொல்லாது மரம் மௌனமாயிருப்பது விசனத்தைக் காட்டுகிறதாக எண்ணி மற்றொரு பக்கத்தில் உயர்ந்து நிற்கும் ககுப மரத்தினிடம் செல்கிறான். அம்மரம் மலர், தளிர்களுடன் வாடுவதாகத் தோற்றமளிக்கிறது. அதுவும் தன்னைப் போல் சீதையின் பிரிவாற்றாமையால் வாட்ட மடைந்ததாக எண்ணித் துக்கிக்கிறான். எதிரே கூவி யழைக்கும் திலக மரத்தினிடம் மெதுவாக வருகிறான். "ஏ திலகமே! திலகந்தரித்த நாரியர் திலகமாகிய நங்கை சீதையை நீ கண்டதுண்டோ? என்று கேட்கிறான். அதுவும் விடை யளிக்கவில்லை. மனஞ் சோர்ந்து அதன் அணைப்பில் அமர்ந்திருந்த அசோக மரத்தை யடைந்து நிற்கிறான். "சோகத்தை அகற்றும் அசோகமே! எனது பிரிவாற்றாமையால் சோகமெலா மோருருவாய்த் திகழும் சுந்தரி உன்னிடம் வந்ததுண்டோ? அவள் எங்கே சென்றாள்?" என்கிறான். விடையின்றி அதன் கிளைகள் காற்றால் உயரக் கிளம்புகின்றன. அப்படியே மேல் நோக்குகிறான். பின்னால் உயர்ந்து நின்று தலையசைக்கிறது பெரும் பனைமர மொன்று. அதனடியில் மெல்ல

மெல்ல அடி வைத்து வந்து சீதையை நினைப்பூட்டுவன போன்று உயர நோக்குகிறான். பருத்து விளங்கும் கனிக் குலைகள் நிறைந்துக் காணப்படுகின்றன. "தாளிப் பனையே! உன் கனிகளை யொத்த தனமுடையாள் வரலாற்றினை நீ அறிவாயோ?" வென்று வாய் வெருவிக் கேட்கிறான், நிசப்தம்! பின்னிற்கும் நாவல் மரத்தின் கனிகள் அவள் கண்ணழகைக் கண்முன் நிறுத்தி அவன் கேள்விக்குப் பதிலுரையாது பழங்களை உதிர்க்க அது தன்னுடன் தினமும் விளையாடும் செல்வியை இழந்து கண்ணீர் சொரிவதாகச் சித்திரம் தீட்டி நிற்கின்றது. பின்பு, கொன்றைமா, கடம்பு, ஆச்சா இவை ஒவ்வொன்றும் தனித்தனி துயரமுறுவதைக் கவனித்து அவன் வருத்த வெள்ளம் மடை உடைகிறது. பின்னர் மறுத்தோன்றி, மல்லி, முல்லை, சம்பகம், தாழை முதலிய மலர்ச் செடிகளிடம் தேடித் தேடி அலைகிறான். அவைகளும் மௌனமாகி மலர்களை யுதிர்க்க மனவேதனைத் தாங்காது புலம்புகிறான். மானையும், யானையையும். புலியையும் நட்புணர்ச்சியில் கண்டு, மறைந்த மனைவியின் புலனை வினவுகிறான். அவைகளும் வாய் மூடி யொடுங்கி அங்கங்கே தங்கி விட்டன. "ஜானகி! இது உன் விளையாட்டோ? நான் தேடத் தேட ஓடி மறைகிறாயா? விளையாட்டை விடு. அன்பு உண்டெனில் ஓடாமல் நில். என்னால் உன் பிரிவு தாங்க முடியவில்லை" என்று ஓலமிட்டுக் கண்ணீர் சிந்துகிறான். களைப்படைந்து கவலை மேலிட்டு மனமுடைந்து அப்படியே அங்கேயே சாய்ந்து விடுகிறான். வனத்தையும் நதியையும் குன்றையும் நீர் வீழ்ச்சியையும் சுற்றிச் சுற்றி வருகிறான். சீதையைக் காணோம்! என்ன செய்வதென்று தெரியவில்லை.

மனம் தளர்ச்சி யடைந்தும் ஆவி குன்றி, ஆற்றலடங்கித் துயரம் மேலிட்டும், இனி ஆக வேண்டிய தென்ன வென்று கைவிரித்துக் கோழைத் தனத்தில் குற்றுயிராய்த் தரையில் கிடப்பவனா அவன்? உயிருள்ள வரை அவளைத் தேடி யடைவேன் என்ற புது உணர்ச்சி உதிக்க, தளரா வீரங் கொண்ட ராமன் எழுந்து விரைகிறான்.

---

## 61 சோர்வும் கடமையும்

பூஞ்சோலைகளிலும், பழத் தோட்டங்களிலும், பர்ணசாலை முழுவதிலும் சீதையைத் தேடித் தேடி அவளைக் காணாது மனமுடைந்து இரு கரங்களையும் மேலுயர்த்தி ஆகாயத்தைப் பார்த்து "ஐயோ! வென்று ஓலமிட்டுக் கதறுகிறான், தலைவியைப் பிரிந்த தலைவன். "லட்சுமணா! வைதேகி எங்கே? அவள் எங்கு போனாள்? எவன் அவளைத் திருடிப் போனான்? சீதே! ஒரு வேளை நீ விளையாட்டாக மரத்தின் பின் ஒளிந்து கவனிக்கின்றனையா? போதும் உன் விளையாட்டு. இங்கே வா. மிக்க வேதனையுறுகிறேன். மடவாய்! இதோ இம்மான் குட்டிகளைப் பார்! அவை உன்னை நினைத்து உன்னைக் காணாது கண்ணீர் விடுகின்றன. ஐயோ! ஏன் வரவில்லை! ஹா! லட்சுமணா! சீதை எங்கே! இனி என்னால் இவ்வருத்தம் தாங்க முடியாது. அவளின்றி உயிர் தரியேன்" என்று ராகவன் வைதேகியின் பிரிவாற்றாமையைத் தாங்காது புலம்பிக் கொண்டே போகிறான்.

துயரம் மேலிட்டு அவளைப் பற்றி எண்ணி எண்ணிப் பரிதபித்து அவளிடமுள்ள பாசத்தால் மரணவஸ்தை யடைகிறான். எனினும் அத்தருணத்திலும் அவனை விட்டு மேலெழுந்து எச்சரித்து விளங்கி நிற்கிறது கடமை என்ற உணர்ச்சி. "இன்முகமுடையாய்! உன்னைப் பிரிந்து நான் இப்புவியில் வாழ முடியாது; மண்ணுலகை நீத்துப் பரலோகம் சென்றால் நான் தந்தையைக் காண்பது நிச்சயம், ஆனால் அது எத்தகைய சந்திப்பு? பதினான்கு வருஷங்கள் வனவாசம் பண்ணுவதாக வாக்குறுதி செய்தேன். அது முடியுமுன் நான் என் வாழ்நாளை முடித்து விண்ணுலகெய்தினால் அவ்வாக்கு பொய்த்துப் போமே. சத்திய சந்தரான என் தந்தை சத்தியம் தவறின என்னைக் கண்ணெடுத்தும் பார்ப்பரோ? மேலும், சீதையைக் காணாது உயிர் துறப்பினும் கடமையைச் செய்யத் தவறினவனென்று உலகம் பழிக்குமே!" என்று தரும சங்கடத்தில் தத்தளிக்கிறான்.

[காதலியையே தன் உயிர் நாடியாய்க் கொண்ட உண்மைக் காதலன், அவள் பிரிவால் மரித்தல் இயல்பே. ஆனால் அவ்வெண்ணம் உதிப்பினும் அதனால் விளையும் விளைவைக் கவனித்துக் கடமையைக் கடை பிடித்து அவ்வெண்ணத்தைக் கொள்வது தகுதியென்று உணர்ந்து சமாளிப்பது ஒரு விசேஷ தருமம் என்பது பெரியோர்கள் கருத்து.]

தந்தையின் நிந்தனைக்கு ஆளாக வேண்டுமே யென்று ஒருபுறம் அச்சம். ஜானகியின் பிரிவுத் துயரம் மற்றொரு புறம். சோகத்தால் பரிதபித்து "நுண்ணிடையாய்! உன்னிடத்தில் எனக்கு அன்பில்லை என்று கண்டனையோ! என்னை விட்டு எங்கு சென்றனை? என்னை விட்டு விடாதே. நீயே என் உயிர், நீ இன்றி நான் உயிர் தரியேன்" என்று மறுபடியும் கண்ணீர் விட்டுக் கதறுகிறான்.

அருகிலிருந்த லட்சுமணன் இதைக் கண்டு மிக்க வருந்தினான். சேற்று மடுவிலகப்பட்ட யானை போல் தத்தளிக்கும் தமையனைக் காண்கிறான். அவனுடைய நிலை இப்படியே நீடித்தால் என்னாகுமோ வென்றஞ்சி, அண்ணனுக்குத் தேறுதல் சொல்லுகிறான் :—"மகாபாகுவே! நீங்கள் இப்படி துயரப் படலாமா? என்னுடன் தேவியைத் தேடும் முயற்சியில் இசைந்தருளும். அவளுக்கு என்ன நேர்ந்ததென்று அறிய வேண்டாமா? இப்படிக் கைபிசைந்து, செயலற்றுச் சோர்வுற்று, மனந்தளர்ந்து தேம்பித் தவித்தால், மேலே நடக்க வேண்டிய காரியங்கள் எவ்வாறாகும்? வலிவற்றவரே வகையின்றி வாடி வருந்துவர்; வாருங்கள். இங்கு பல மலைக் குகைகளுள்ளன. அங்கு போய்த் தேடுவோம். புருஷோத்தமா! (அன்னை) வைதேகி ஒருகால் நதிக்கரை யடைந்திருக்கலாம். அல்லது பரிகாசஞ் செய்ய வெண்ணி உங்களையும் என்னையும், 'இவர்கள் எப்படிக் கண்டு பிடிக்கிறார்கள்?' என்று அறிய வேண்டி, காட்டில் எங்கேனும் ஒளிந்து கொண்டிருக்கலாம், கோமகனே! காலங் கழிக்காது அவளைத் தேடுவதிலே நாமிருவரும் முனைந்தாக வேண்டும். எழுந்திருங்கள்" என்று மன்றாடுகிறான்.

தம்பியின் அன்பு நிறைந்த சொற்கள் தமையனைத் தொட்டெழுப்புகின்றன. ராமன் ஒருவாறு தேறி, பிரிந்தவளைத்தேட இருவரும் விரைகிறார்

கள். முயற்சி திருவினையாக்கும் என்ற பொன் மொழி பொய்க்காதெனும் திடநம்பிக்கைக் கொண்டு அவர்கள் மிகுந்த கவனத்துடன் வனங்களிலும், மலைகளிலும் ஆறுகளிலும், ஓடைகளிலும், மலைக் குகைகளிலும் தேடிக் கொண்டே போகிறார்கள். இடையிடையே, சீதையை கூவியழைத்து அவளைக் காணாது ஏமாற்றத்தால் மனந்தளர்கிறான் தமையன். அப்போது தம்பி லட்சுமணன் அவனைப் பார்த்து, "முழுதுணர் ஞானியே!" என்று பின்வரும் வினைவை முன்னரே மனக் கண்ணால் காணும் அவனது பிறவிக் குணமான அறிவின் சக்தியை நினைப் பூட்டி "உங்களுக்குத் தெரியாததென்ன? உங்களால் அடைய முடியாததும் உலகில் உளதோ? சர்வ வல்லமையுள்ள திருமால் மாவலியின் வலியடக்கித் தன் வெற்றித் திறத்தால் பதினான்கு உலகங்களையும் அடைந்தது போல, நீங்களும் எல்லாத் தீமையையும் உங்கள் அறத்திறனால் உதறித் தள்ளி, உலக மாதாவான உத்தமியை அடையப் போகிறீர்கள்" என்று உறுதி கூறினான். குறி கேட்டுத் தேறுவது போல் ராகவனும் ஆறுதலடைந்தான். மறுபடியும் உற்சாகத்துடன் தேடித் தேடி அங்கு மிங்கும் அலைந்தார்கள். வைதேகியைக் காணவில்லை.

"எல்லாமறிந்தவனே! ஓரிடமும் விடாமல் எங்கும் தேடினோம்; சீதை காணப்படவில்லை. இனி என்ன செய்வது? அவளை இழந்தே விட்டேன்" என்று பெருமூச்சு விட்டு அவயவங்கள் சோர்ந்து செயலற்று உட்கார்ந்து விட்டான் ராமன்.

இந்நிலையைக் கண்டு இளையவன் மனங் கலங்கித் தனக்குள்ளே யோசிக்கிறான் :—எத்துயரினையும் மனத் தளர்ச்சியின்றி மகிழ்ந்தேற்கும் இவனே இவ்வாறு மனமொடிந்து பரிதபித்தால் உலகம் இவனை எவ்விதம் மதிப்பிடும்? சீதையிடம் கொண்ட அளவற்ற அன்பல்லவோ இவனை இவ்வளவு துயரத்துக்கு ஆளாக்கியது. இவனது இயற்கைக் குணத்தைக் கொண்டே இவனைத் தணிக்க வேண்டுமென்று தீர்மானித்து, "அண்ணா! அன்பு என்ற சக்தி மிகவும் வலிமை வாய்ந்தது. அது எதையும் பொருட்படுத்தாது; எவ்வித எதிர்ப்பு வரினும் சமாளித்து வெற்றி பெறும் வலிமை வாய்ந்தது; ஆற்றலையும் ஆர்வத்தையும் ஆக்கி வைத்து ஆக்கமளித்து ஆவேச மூட்டும் ஆணி வேர் போன்றது. அன்புள்ளவன் மனத்தளர்ச்சி யடையான்; சோர்வஞ்சான்; தன்னாலாகாதென்று தயங்கி நிற்கான். மதி கலங்கி மனமுடைபவன் அல்லன். ஆகவே, அண்ணலே, அண்ணியிடமுள்ள அன்பை அடக்காது, அதையே மேற்கொண்டு துயரம் நீங்குங்கள்" என்று லட்சுமணன் பலவாறாய்த் தலை வணங்கிய வண்ணம் தேற்றுகிறான்.

---

## 62. மனச்சோர்வின் உச்சநிலை

தம்பியின் ஆறுதல் மொழிகள் தமையனின் துயரத் தீயைத் தணிக்க மாட்டவில்லை. பிரிவாற்ருமையின் வேதனை காதல் மொழிகளைக் கொட்டிக் கொண்டு கொதித்து வெளிக் கிளம்புகிறது.

"பிரியே! புஷ்பங்களின் மேல் உன் ஆசை அளவிட இயலாது. அவைகள் கொய்வாரின்றி வாடுகின்றன. நீ அவைகளைக் கவனியாது ஏன் துயரத்தை அதிகரிக்க அசோக மரத்தினிடை மறைந்து கொண்டிருக்கிருய்? ஓகோ! இதோ இவ்வாழை மரங்களிடையே ஒளிந்திருக்கிருயா? அசடே! இத்தண்டுகள் உன் தொடைகளைக் கண் முன் காண்பிக்கின்றதால் உன்னைப் பார்த்து விடுகிறேன் என்று அறியாயா? இக்கர்ணிகார மரத்தினருகே நீ புன்முறுவலுடன் போவது போல காட்சியளிக்கிருய். நீ அங்கேயே தாமதிப்பதேன்? இங்கே வந்து விடு. கண்ணுக்கினியாய்! இனி உன்னைக் காணுது கணமும் உயிர் தரியேன். உன் விளையாட்டு போதுமே! தடங்கண்ணுய்! உனது பர்ணசாலை நீயின்றிப் பாழாய்ப் போனதைக் கவனித்தாயா?" ஏன் பதிலில்லை? ஹ!—சீதே! எங்கே போனுய்? "லட்சுமணு! இந்த மான்களைக் கவனி. அவைகள் கண்ணீரை உதிர்க்கின்றன பார்! இதிலிருந்து அவள் அரக்கர்களுக்கு இரையானுளென்று நினைக்கிறேன். என்னுல் கௌரவிக்கப் பட்டவளே! குணக் குன்றே! பெண்களின் நாயகமே! நீ எங்கு சென்றனை? உன்னுடன் காட்டுக்கு வந்தவன் நீயின்றியா நாட்டிற்குச் செல்வேன்? அங்ஙனம் சென்ருல், 'வீரமற்றவன், வலியிழந்தவன், காதலியினிடம் கருணையற்றவன் என்று பூதலம் என்னைப் பழிக்குமே! புதல்வியைப் போற்றி வளர்த்து என்னிடத்தில் ஒப்படைத்த ஜனகர் 'என் இன்மகளெங்கே?' என்ருல் யாதுரைப்பேன்? அவளின்றி என்னை அவர் கண்ணெடுத்துப் பார்ப்பரோ ஆகையால் அவளின்றி யான் அயோத்தி திரும்பேன்."

"லட்சுமணு! என்னை விட்டு நீ அயோத்திக்குச் செல். அன்புடன் உன்னை வரவேற்கும் பரதனிடம், 'ராமன் அனுமதியின் பேரில் அரசு புரிவாய். என்று சொல். என் தாய்மார்களை நான் தண்டனிட்டதாகத் தெரிவி. முக்கியமாக நம் தாய் கைகேயி வெகு ஜாக்கிரதையுடனும் எல்லா மரியாதைகளுடனும் கவனிக்கப்பட வேண்டியவள், என்பதை மறக்காதே. எனது தாயினிடம் காட்டில் நடந்த நிகழ்ச்சிகளை விவரமாய்ச் சொல்." என்று நெஞ்சடைக்க உள்ளம் ஒடிந்து தன் நம்பிக்கையிழந்து புலம்பினுன்.

"இதென்ன விபரீதமாகப் பேசுகின்ருனே இவன்! செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யாமல் துக்கம் மேலிட்டு தவிக்கிருன்" என்று உணர்ந்த லட்சுமணனின் நிலையும் சற்றுத் தளர்ந்தது. அவனும் மிக்க துயரமுற்றவனுயினுன்.

## 63 தன்னம்பிக்கைக்கு அறைகூவல்

லட்சுமணன் தன் அண்ணனை ராகவனின் மன வருத்தத்தைப் பற்றி கலங்கிக் கொண்டிருக்கையில், ராமன் மனைவியை யிழந்த சோகத்தைத் தாங்க மாட்டாது இன்னும் அதிகமாக முறையிடலானன். [சாதாரண மானிடனை விடத் தாழ்ந்து போவது போல் அமைகின்றன அவனது சொற்கள். இவைகள் அவனை நம்மிடம் பிணைத்து அவன் பரிதபிக்கையில் நம் கண்ணைத் துடைத்துக் கொள்கிறோம்.] 'லக்ஷ்மண! துயரம் ஒன்றின் பின் ஒன்ருய் என்னை வாட்டி வதைக்கின்றது. முற்பிறப்பில் செய்த வினையின் பயன்கள் இவை போலும்! [இவ்வாறு எதிர் பாரா்த கஷ்டங்கள் அனுபவிப்பது முன் ஜென்ம விதிப்பயனே என்று முற்பிறப்பற்ற—பாயசத்தில் உருவாகிய ராமபத்திரன், நம் போல் சொல்லிப் புலம்புவது நம்முள் ஒருவனுஇருனென்று காட்டு வதுமின்றி, அவன் வருத்தத்தை நம்முடன் பகிர்ந்து கொள்வதுமன்றி, நமக்கு சகிப்புத் தன்மை, எளிமை என்ற வாழ்க்கையின் இன்றியமையாத உயர் குணங்களையும் கற்பிக்கின்ருன் போலும்!] "நாட்டையும் அரசையு மிழந்தேன். உற்ருேர் உறவினரையும், தந்தை தாய்களையும் துறந்தேன். காடே கதியென்று இங்கு வந்தேன். இங்குச் சீதையையுமிழந்து விட்டேன். வாழ்க்கையில் துயரம் இன்னும் என்ன வேண்டும்? என் போன்ற பாவியும் உலகில் உளனே? அவளுடனிருக்கையில் இக்காட்டில் எல்லாத் துயரங்களையும் மறந்து இனிது காலங் கழித்து வந்தேன். இப்பொழுது அவள் இல்லாமையால் எல்லாக் கஷ்டங்களும் ஒன்று கூடி என்னை வாட்டு கின்றன. என் கஷ்டம் ஒரு புறமிருக்க, வைதேகியின் நிலை சொல்ல வொண்ணுதது. ஐயோ! தனியே இருக்கையில் அரக்கர்கள் அவளைத் தூக்கிச் சென்றனரோ? அப்போது அவள் எவ்வகை இன்னலுற்றனளோ! எவ்வாறு புலம்பிப் பரிதபித்தனளோ! சண்டையிட்டு அவர்களை எதிர்த் தனளோ! அதனல் காயமடைந்து அவள் செம்பொன் மலர்மேனி குருதிக் குழம்பால் நனைந்து எங்கு விழுந்து கிடக்கின்றனளோ! ராகுவினல் பிடிக் கப்பட்ட சந்திரன் ஒளியிழப்பது போல் அவள் முகம் ஒளி மங்கிக் கறுத் துத் துவண்டு போவதை நினைக்க, ஐயோ! என் நெஞ்சம் குமுறுகின்றதே! சீதை அரக்கரிடம் சிக்குண்டு அவர்களுக்கு இரையாய் விட்டாள் என்றே நம்புகிறேன், என்ன செய்வேன்?"

"லட்சுமண! இந்த கற்பாறையைப் பார். இங்கே தான் அவள் உட் கார்ந்து என்னுடன் சரசமாக இசைபாடுவது, இப்பொழுது அவளின்றி இது பாழாய்க் கிடக்கிறது. நீர் கொண்டு வர நதிக்குப் போயிருப்பளோ! மலர் கொண்டு வர பூஞ்சோலைக்குச் சென்றனளோ? தனியே என்னை விட்டு எவ்விடமும் செல்ல இசையாதவளாயிற்றே அவள். ஓ! சூரிய பக வானே! உமக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. அவள் எங்குற்ருள்? சொல்லியருள்வீராக! வாயுவே, எவ்விடமும் செல்லுபவரே! என் ஆரு யிர்க் காதலி எங்குற்ருள்? அவள் உயிருடனிருக்கின்றனளா? அதையே நும் அருள் புரிந்து மேலும் மேலும் சொல்லுக." என்று புலம்பவே, லட்சு மணன் இனி இப்படியே விட்டால் விபரீதமாய்விடும் என்று கண்டு "அண்

ணலே ! தாங்களா இவ்வாறு மனம் தளர்ச்சி யடைவது ? மனச் சோர்வில் நம்பிக்கையிழக்கலாகுமோ"? இது நமக்கழகாகுமோ வென்று தேற்றினன்.

---

## 64 அன்பு சினமாவது

குசலவர்களின் பதின்மூன்ருவது தினம் கானம் பின்வருமாறு :

ராகவன் லட்சுமணன் அறைகூவலுக்குச் செவிசாய்த்து, "லக்ஷ்மணு! சீதை தாமரை மலர் கொய்வதன் பொருட்டு ஒருகால் கோதாவரிக்குச் சென்றிருக்கலாம். நீ போய்ப் பார்த்து வா" என மொழிந்தான். இளைய வன் அவ்வாறே கோதாவரித் துறைகளில் தேடி விட்டு, "ஜனகநந்தினியைக் கண்டிலேன்; உரக்கக் கூவினேன்; பதிலில்லை" என்று தெரிவித்தான்,

ராமச்சந்திரன் அது கேட்டுத் துக்கத்தால் மெய்ம்மறந்து தானே கோதாவரி சென்று அந்நதியைக் கண்டு சீதையைப் பற்றி விசாரித்தான். பதிலில்லை. சரி, இங்கு அவள் இல்லை போலும்! மந்தாகினியிலும், ஜனஸ்தானத்திலும், இங்கிருக்கும் மலையிலும் தேடிப் பார்க்கிறேன்" என்று ஒருவாறு உறுதி கொண்டான். ["ஆபத்து நேர்ந்தபோது மனம் தளர்ந்து துயரமுற்றுத் தன்னம்பிக்கை யிழந்து அழுது புலம்பிக் கொண்டிருப்பது அறிவீனம்; தைரியத்தைக் கொண்டு தன்னிலையடைந்து ஆவன செய்ய வேண்டும். விடா முயற்சியை விடக் கூடாது" என்று நம் போன்றவர்க்குப் படிப்பினை கற்பிக்கிருன் மனைவியையிழந்து மன வேதனையுறும் மன்னன் மகன்.] இருவரும் நதியை விட்டு அப்பால் அகன்ருர்கள்.

வழியில் மான்கள் கூட்டங் கூட்டமாக நின்று சோகத்தால் மெலிவுற்ற சகோதரர்களைப் பார்த்த வண்ணம் நின்றன. இவைகளைக் கவனிக்கிருன் ரகுநாதன். "லக்ஷ்மணு! துள்ளி யோடி விளையாடும் இம்மான்கள் என்னை நோக்கி ஏதோ சொல்வன போல் நிற்கின்றன பார். அவைகளின் பாவனை யைப் பார். இங்கிதத்தால்செய்தி சொல்கின்றன! என்று சொல்லிச் சற்று நேரம் கண்ணீர் விட்டு அவைகளைப் பார்த்து, "சீதை எங்கே போனுள்? சொல்லுங்கள்" என்று அவைகளை வினவினுன். அவ்வினுவிற்கு விடை யளிப்பன போல் அவை ஆகாயத்தில் உயரக் கிளம்பித் தென் திசையைப் பார்த்துத் தாவி அங்கே போய் நின்று மறுபடியும் ராமனை நோக்கி நின்றன! லட்சுமணன் அவைகளின் செயலை ஊகித்துணர்ந்து, "அண்ணு! இம்மான் களை சீதை எங்கே என்று தேவரீர் வினவ, உடனே அவைகள் மேல் கிளம் பித் தென் திசையில் தாவிக் குதித்து நிற்கின்றன. திரும்பவும் நம்மைப் பார்த்து விட்டு உயர நோக்கவே அவள் ஆகாய மார்க்கமாகத் தென்திசை போவதாகக் காட்டுகின்றன. ஆகையால் பிரபுவே! தேவரீர் இசைந்தால், இவ்வியற்கைச் சின்னத்தைக் கொண்டு, நாம் தெற்கு திசையிலே சென்று பார்ப்போம். ஏதேனும் புலப்படுமென்பது என் நம்பிக்கை" என்ருன்.

அறிவால் உயர்ந்த காகுத்தனும் அதற்கிசைய, இருவரும் தென் திசை நோக்கிப் புறப்பட்டனர். சிறிது தூரம் சென்றதும் பூமியில் சிதறிக் கிடந்த புஷ்பக் குவியல்களைக் கண்டனர். இதைக் கண்டு துக்கங் கொண்ட

ராமன் லட்சுமணனைப் பார்த்து, "அப்பனே! இம் மலர்த் தொகுதி நான் சீதைக்குச் சூட்டிக் கொள்வதற்காகக் கொடுத்த மலர்கள் என்றறிகிறேன். ஜானகி சூட்டிக் கொண்ட புஷ்பங்கள் தான் இவை! சந்தேகமில்லை. இவைகளைக் கவனித்தாயா? இவைகள் இன்னும் வாடாமலிருக்கின்றன. சூரியனும், வாயுவும், புகழையுடைய பூமி தேவியும் எனக்கு மகிழ்ச்சி உண்டாக்கும் பொருட்டு இவைகளை உலரவிடாது வைத்திருக்கிறார்கள் போலும்! என்றான். [அன்னை ஜானகி சூடும் மலருக்கு வாடும் தன்மையும் உண்டோ?] இருவரும் அப்புஷ்பக் குவியலருகில் சிறிது நேரம் நின்றனர். பின்னர் நாற்புறமும் உற்று கவனிக்கிறார்கள். அருகேயிருந்த மலையைக் கவனிக்கிறான் ராகவன். உடனே, கீழே விழுந்திருந்த மலரினும் மெல்லிய மேனியையுடைய செல்வியின் வரலாறு அறியும் பொருட்டு அம் மலையைப் பார்த்து, 'குன்றுகளின் தலைவனே! ஜானகியைக் கண்டனையா?' வென்றான், ஆனால் பதிலில்லை.

உடனே சினங் கொண்டான் ரகுநாதன். மலை பேசவில்லை என்று மனம் நெகிழ்கிறான் மன்னவன். பிராணிகளான மான்கள் ஏதோ தெரிவித்தன. இயற்கையான நதியும் மலையும் மௌனம் சாதித்தன. இதைக் கொண்டு கோபமுறுகிறான். [மனவேதனை கொண்டவனுடைய உணர்ச்சிகளின் மாறுபாடுகள் மாறி மாறி உச்சநிலை யடைகின்றன. முன்பு மனமுடைந்து சோகத்தின் எல்லையையடைந்து கண்ணீர் விட்டுப் புலம்பினான். இப்போது இயற்கைப் பொருள்களைக் கண்டு சீறுகிறான், இவ்வாறு ஒருணர்ச்சியிலிருந்து மற்றோருணர்ச்சிக்கு உட்படுகிறான். மனைவியை யிழந்த தலைசிறந்தக் காதலனின் மன நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறார் வான்மீகி கவி.]

சீரிய சிங்கம் சினங் கொண்டெழுகிறது. தன் கேள்வியே அம்மலையிலிருந்து எதிரொலியாய் வெளி வந்ததும், அடங்கா ஆத்திரமடைந்தான். ஓ! மாமலையே! என்னை ஒரு அற்ப மானிடனென நினைத்து என் கேள்விக்குப் பதிலுரையாது வாளாவிருக்கின்றாய். சீதையின் வரலாற்றை உரையாவிடில் என் பாணத் தீக்கு இலக்காகி நீராவாய்." என்று கர்ச்சிக்க, அப்பொழுதும் இவ்வுரைகளே எதிரொலியாய் மீண்டும் கேட்டனவே யன்றி ஏற்ற பதிலில்லை. அங்குள்ள நதியைப் பார்த்து, சீதையின் வரலாற்றை வினவுகிறான். அதுவும் பதிலுரைக்க வில்லை. அவன் சினம் தலைக்கேறியது. நதியும் மலையும் பதிலுரைக்குமா வென்று கூட நிதானித்து யோசிக்க அக்கோபம் இடம் தரவில்லை. கீழே குனிந்து பூமியை கவனிக்கிறான். நதியும் மலையும் மௌனம் சாதித்ததனால் பூமியிலிருந்தேனும் விடை பெற எண்ணங் கொண்டான் போலும்!

[தரும நெறி பிறழாதவனும், பிறருக்குத் தீங்கிழைக்காதவனும், அண்டினவர்களை ஆதரிப்பவனும், மன்னுயிரைத் தன்னுயிராய்க் கருதும் தூயாளனுமானவனைத் தீமை அணுகுமோ? அணுகினும் அவன் தருமமே தலை காக்குமன்றோ? இயற்கை உருவங்களான மலைகளும், ஆறுகளும், செடி கொடிகளும், மிருகங்களும், சிறகினங்களும் இத்தன்மையோனுக்குத் துணை புரியுமென்பது சான்றோர் மரபு, இதை எண்ணி இயற்கைப்

பொருள்களை அவன் வினவினுன் போலும். இதைக் கண் கூடாகச் செய்விக்கிறது பின்வரும் நிகழ்ச்சி.]

பூமியைக் கூர்ந்து கவனிக்கிருன் ரகுகுல திலகன். உடனே ஓர் அற்புதத்தைக் கண்டு பிடிக்கிருன். "தம்பீ! இதோ பூமியில் நன்ருய் ஆழ்ந்து படிந்ததொரு அடிச்சுவடு காணப்படுகிறதே! இது பிரும்மாண்டமான பருவதம் போன்ற ஒரு பேரரக்கனின் பாதச் சுவடாக இருக்க வேண்டும், அதன் அருகே பார். நம் பர்ணசாலை நோக்கிக் காணப்படும் மெல்லிய சிறிய அடிச்சுவடுகளும் தென்படுகின்றனவே. ஹா! இது அம்மெல்லிடையாளினவைகளே. அவை அதி வேகமாய் ஓடிவந்த இளம் காலடிகள். ஆகா! எவனே ஒரு கொடிய பேரரக்கன் இளங்கனியான ஜானகியை பின்பற்றி விரைந்து வந்திருக்கிருனென்பதை அச்சுவடுகள் தெளிவாக்குகின்றன. அவைகளின் அருகே ஒரு வில் முறிந்து கிடக்கிறதைக் கவனி. சற்றுத் தூரத்தில் இரண்டு அம்பருத் தூணிகளிருக்கின்றன. அவை பக்கத்தில் சிதறி முறிபட்டு அச்சு முறிந்த பிரும்மாண்டமான ரதம் ஒன்று தலைகீழாய் சாய்ந்து சிதைந்து கிடக்கிறதையும் பார்! என்ன நடந்து விட்டது?

இவற்றைக் கண்டு மனங் கலங்கி லட்சுமணனைப் பார்த்து, "லட்சுமணு! இங்கே பார். வைதேகியின் ஆபரணங்களின் பொன் துண்டுகள் வேறு சிதறிக் கிடக்கின்றன. ஐயோ! அவளணிந்த புஷ்பமாலையும் சிதறிக் கிடக்கிறதே! இன்னும் கவனி. இதோ பார்: பூமி முழுவதும் நடு நடுவே இரத்தத் துளிகள் காணப்படுகின்றன. ஐயோ! ஜானகி அரக்கர்களால் துண்டு துண்டாகக் கிழிக்கப்பட்டு அவர்கட்கு இறையாகி விட்டாளோ? வில் முறிந்து, ரதம் சிதைந்து கிடப்பதைப் பார்த்தால், இரு அரக்கர்களுள் கடும் போர் நிகழ்ந்திருக்க வேண்டு மென்று நினைக்கிறேன். இப்பெரிய பொற்பூணிட்ட வில் யாருடையது? இன்னும் இதோ பார்! ஒளிவீசும் மணிகளடங்கிய பொன்னுல் இழைக்கப் பட்ட தூள் தூளாய் முறிந்து, சிதறிக் கிடக்கும் கவசம் என் கண்ணைப் பறிக்கிறது. இது யாருடையது? ஸௌம்மியனே! இங்கே பார்! கம்பிகளிழைத்த பூமாலை பூண்ட கைப்பிடி முறிந்த குடை ஒன்று கிடக்கிறது. இது யாருடையது? அதோ பார்! பொன் கடிவாளங்களேந்திய பயங்கரமாக தோற்ற மளிக்கும் கோவேறு கழுதைகள் அடிபட்டு மண்டை யுடைந்து மாண்டு கிடக்கின்றன. எங்கும் சிதைந்து மழுங்கிய பாண மயம்! கையில் கடிவாளங்கள் பிடித்த வண்ணம் சவுக்குடன், கவசம் பிளவுண்டு குடல் சரிந்து உயிரற்றுக் கிடக்கும் சாரதியைப் பார்! இவன் யாருடைய சாரதி? சாமரமேந்திய தலைப்பாகையுடன் குண்டலங்களணிந்து இதோ இருவர் மாண்டு கிடக்கின்றனர். ஆகா! எத்தகையான கடும் போர் நடந்திருக்க வேண்டும்! இவர்களைக் கொன்றவன் யாவன்? மாண்டவர்கள் யாரைச் சேர்ந்தவர்கள்? மிக்க தோள் வலி கொண்ட அரக்கர்களின் போர் விளைவுகள் இவையெனத் தோன்றுகின்றன. இக் கொடிய ராட்சதன் என் வைரத்தை எழுப்பி விட்டான். அவனைப் பழி வாங்காது விட முடியாது? இவனே மைதிலியைத் தூக்கிச் சென்றவனுயிருக்க வேண்டும். அவனை வதை செய்வேன். ஐயோ! என் சீதையை கொன்று தின்ற கொலையாளி இவன்!

இதென்ன விந்தை! ஜானகியின் பதிவிரதா தருமம் அவளைக் காக்க மாட்டாது போய் விட்டதா என்ன? தரும தேவதை எங்கேனும் ஓடி யொளிந்ததோ? அநியாயமான அதருமத்தை ஓரரக்கன் விளைவிக்கப் பார்த்துக் கொண்டிருந்த தேவர்கள் ஏன் அதைத் தடுக்க வில்லை? தேவர் கள் தான் கைவிட்டு விட்டார்கள், தருமம் கூடவா அவளைக் கைவிட்டு விட்டது! தரும நெறியில் நிற்கும் என்னைத் திறனற்றவன் என்று அப் புல்லிய அரக்கர் எண்ணி விட்டார்கள் போலும்! இவ்வநீதி நிகழ்ந்த உலகையே, நிகழவிட்ட இயற்கையையே அழித்து விடுகிறேன் பார்! தரு மம் தலைகாக்காதென்றால் எல்லாம் அழியட்டுமே. தேவர்களோ, மனிதர் களோ, அசுரர்களோ, அரக்கர்களோ, எல்லோரும் ஒழியட்டும். இம்மூவுலக வாசிகளும் என் வலிமையைப் பார்க்கட்டும். எல்லாவற்றையும் மடித்துச் சாம்பலாக்குகிறேன் பார்! சூரியனை ஒளி இழக்க வைக்கிறேன். அக்கினி யையும், வாயுவையும் அழிக்கிறேன். மலைகளை மாய்க்கிறேன். கடல்களை யும் நதிகளையும் வற்ற வைக்கிறேன். மைதிலியின் பொருட்டு [அவள் தருமம் அவளைக் காக்க வில்லை என்றால்] எல்லாம் மடிந்து போகட்டும். அவள் எங்கு எடுத்துச் செல்லப்பட்டாளென்றும், உயிருடனிருக்கிறா ளென்று தெரியப் படுத்தாமலும், அவளை என்னிடம் திருப்பிக் கொணரா மலும் இருந்தால் இதோ எல்லாத் தேவர்களும் என் பாண வருஷத்தால் மூடுண்டு சிதைந்து போவதைப் பார். என் கோபத்தின் வலிவைக் காணப் போகிறது இவ்வுலகம்" என்று சீறிக் கோதண்டத்தைக் கையிலெடுத்தான் கோதண்டபாணி!

ஊழித்தீ சூழ்ந்து விட்டதென்று அறிகிறான் இளையவன் லட்சுமணன்.

[திருடமான தரும வலுவில் திளைக்கிறான். மனிதனுக்கு இயற்கை யாயமைந்த கடுஞ்சினம் முறுக்கேறுகிறது. வைதேகியின் பதிவிரதா தரும பலம் குன்றிவிட்டதா வென்று அவன் மனம் சீறுகிறது. இவ்வநீதி நிகழ எப்படி உலகம் அனுமதித்தது? இயற்கையும் மௌனமாகி விட, ஏமாற்றம் அவன் கோபாக்கினியை விசிறிக் கிளப்பிற்று. ஜானகி ஆச்ர மத்திலிருந்து காணாது போய் விட்டது அவனை சோகக் கடலில் ஆழ்த்தியது. இப்பொழுது அவன் சீற்றத்தை வானளாவச் செய்கிறது. உலகம் தன் போக்கில் செல்லுகிற போது, மூவுலகையும் அழித்து விட முற்படுகிறான். கோபம் பொங்கியெழும் போது, இவ்வக்கிரமம் நடந்தேற சந்தர்ப்பமளித்த உலகையே ஒழித்துக் கட்ட துடி துடிக்கிறது அப்பரிபூரண தருமமூர்த்தி யின் பரிசுத்த ஆணவம்! ஆகவே, கடுஞ்சினமும் ஓர் தூயத் தன்மையை எட்டுகிறது!]

[மேலும், ரகுவீரன் எவ்வெப்போது கடுஞ்சினங் கொள்கிறானோ அவ் வப்போது அவன் ஓர் முக்கியமான உண்மையை வெளிப்படுத்திக் கொண்டு செல்கிறான். புவனமனைத்தும் பணிந்து, பரிந்து புகழும் இக்ஷ்வாகு குல திலக சூரிய வம்ச ஸாம்ராட், ராமராஜ்ய சக்கரவர்த்தி அவன். ராஜரிஷி அயோத்தி மன்னவன் புதல்வன். மனுநீதி பிறழா, மாபெரும் ராஜசிம்மன். தருமத்தைத் தலைகாத்து, தருமத்தையே வழங்கி, தருமத்தை நிலைநிறுத்து வதே இணையற்ற அவன் செங்கோல் முறை. ராஜதானியில் செங்கோல், காட்டில் கோதண்டம். எங்கெங்கு தருமம் நழுவக் காண்கிறானோ, அங்

கங்கு சீறி எழுந்து, தடையைத் தகர்த்துத் தருமத்தை நிலைநிறுத்தும் தலை சிறந்த நீதிபதி. இவ்வுணர்ச்சியை ஒருநாளும் அவன் கைவிடுவதில்லை. இதுதான் இவன் சினத்தின் கருத்தும், காரணமும், சிறப்புமாகும். இதை ஒவ்வோர் நிகழ்ச்சியிலும் காணலாம்.]

[ராமாநுஜன் அண்ணலின் சீற்றத்தை அளவிடுகிறுன். தரும மூர்த்திக்கு இயற்கையும் இசையுமன்றே! அதுவரை அவனைத் தணிய வைக்கும் பணியை மேற்கொள்கிறுன்,]

---

## 65. தருமத்திற்காக முறையீடு

ஜானகியைக் காணுது துயரம் மேலிட்டுத் துடிக்கும் அண்ணலைக் கண்ணுறுகிறுன் ராமாநுஜன். ஊழித் தீயைப் போல் சினங்கொண்டு உலகையே அழித்து விட வில்லைக் கையிலெடுத்து நிற்கிறுன். உள்ளும் புறமும் கோபாக்கினிச் சுவாலை சுடர் விட்டெரிகின்றது. கண்ணில் தீப்பொறி. தக்ஷனின் யாகத்தில் உலகையழிக்க யெழுந்த பரமசிவன் எப்படி நின்றனனே அத்தகைய அனல் சூழும் கடுஞ்சினத்தில் இதுவரை ராகவனை லட்சுமணன் கண்டதேயில்லை. என்ன நேரிடுமோ வென்று உள்ளம் கலங்கி அண்ணலை நோக்கி இருகைகளையும் தலைமேல் உயர்த்திப் பணிவுடன் அவன் பாதங்களில் வணங்குகிறுன். பக்தி ததும்பும் இனிய குரலில் பேசவாரம்பிக்கிறுன்:-

"ஐம்புலன்களை யடக்கி யாளும் வீர தீரனே! எல்லாப் பிராணிகளுக்கும் இதத்தையே அருளும் கருணைமூர்த்தியே! நீர் இதுகாறும் இளமனதுடையவரும், நீதியளிப்பவரும், எல்லாப் பிராணிகளுக்கும் நலம் செய்வதிலேயே விருப்பமுள்ளவராயிருந்து விட்டு, இப்போது கோபத்தின் வசமடைந்து ஒருவன் செய்த பிழைக்காக, தருமச் செங்கோலைக் கொடுங்கோலாக்க அனுமதிக்கலாமா? மனுநீதி தவருு மன்னவன், வெண்மதியின் தண்ணளியும், கதிரவனின் தூயப் பிரகாசமும், வாயுவின் நடமாட்டமும், பூமியின் பொறுமையும் ஒப்புயர்வற்ற உங்களிடம் திளைத்துத் திகழ்கின்றன வென்பது உலகும் நானும் கண்டறிந்த உண்மை. இவைகளை மறந்து ஒருவன் செய்த தீவினைக்காக மற்றவர்களை—ஏன், உலகத்தையே அழித்து விடத் தேவரீர் சினமுறுவது நியாயத்தின் பாற் படாதென்பது அடியேன் விண்ணப்பம், ஜகத் சர்வமும் பரிபாலிக்கும் ராஜேந்திரா! ஜகத் சர்வமும் அழிவதும் உங்களால் இயலாததன்று. கொடும் பாவியான பூதாகாரமான அரக்கன் ஒருவனுடைய கால் சுவடுதான் காணப்படுகிறது. சேனைகளின் அடிச்சுவடும் காணப்பட வில்லை. ஆகையால் ஒருவன்தான் தேவியை அபகரித்துச் சென்றிருக்க வேண்டும். அவனை அழிப்பது நம் கடமை. அவன் பொருட்டு உலகையே அழிப்பது நியாயமாகுமா வென்று சிந்திக்க வேண்டுமென்பதும் என் விண்ணப்பம். வைதேகியாரின் பதிவிரதா தருமம் அழிவற்றதென்று சொல்லவும் வேண்டுமா? தருமத்தினின்றும் அதருமம் விளையுமா? எப்பிராணியும், எஜ்ஜீவனும், ஏன், இயற்கையும், பஞ்ச பூதங்களும் ஒருநாளும் அதருமத்தை தலைகட்டா. தருமத்திலே நிற்கின்ற பதிவிரதா திலகமான திருமங்கைக்கு யாதொரு தீங்கும் நேரிடாதென்பதை நான்

நினைப்பூட்டவும் வேண்டுமா? கணவனையே கடவுளாகக் கடு விரதங் கொண்டவர்க்குக் களங்க மென்பது கனவிலும் காணக் கிடைக்குமா?

"ஆகவே இங்கு கவனியுங்கள், அண்ணா! ரதமுறிந்து, குதிரை மடிந்து, கவசம் சிதைந்து, வில்லொடிந்து கிடப்பது, இவை யாருடைய தென்று அறிய முற்படுவோம். புலன் கொண்டு அவனைத் திரும்பியடைவதில் தீவிரமாக முனைவோம். நம் உடனடியான கடமை இது. வாருங்கள்; கடமையைச் செய்யும் போது கோபத்திற்கிடமேது? ராஜநீதி அனுபவம் பெற்ற அரச குமாரரே! அரசர் மனம் பதறார். கோபங் கொள்ளார்; விதிப்படி குற்றவாளியை மாத்திரம் தண்டிப்பவர் அவர். ஆகையால் அப் பூரவி யாரென்பதை அறிய முனைவோம். எக்காலத்திலும், எவர்க்கும் வேண்டியவைகளை யளிக்க வல்ல கருணை வள்ளலும், யாவர்க்கும் புகலிடமும் தாங்களே யாவீர். யாவரையும் பரிபாலித்து போஷிக்கும் பெருந் தகை ஒருவன் பிழைக்கு உலகையே இலக்காகக் கொண்டு வஞ்சம் தீர்க்கலாமா? ராகவா! உங்களிடம் அபராதஞ் செய்ய மலைகளும், கடல்களும், பிராணிகளும், மனிதர்களும், தேவர்களும் எவருமே சம்மதியார்? உத்தமரே! எவனொருவனால் சீதா பிராட்டி அபகரிக்கப்பட்டனளோ, அவனை நீர் வில்லுங் கையுமாய் இக்கானக முனிவர்கள் உதவியாலும், அடியேனுடைய சேவையாலும் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும். காலதாமதமின்றி விரைவோமாக. கடல், மலை, காடு, குகை, நதி முதலிய இடங்களில் தேடித் திரிவோம். அங்கு காணவிடில் தேவலோகம், கந்தர்வ லோகங்களிலும் தேடுவோம். நம் முயற்சி பயனடைய வில்லை என்றால், தருமம் என்ற சக்தி தலைகாத்து நிற்கவில்லை என்றால், தருமத்தில் நிற்கும் தேவர் தலைவர்களும் சீதை விஷயத்தில் உதவி யுரியவில்லை என்றால், தருமம் தடுமாறிய உலகம் உங்கள் கோதண்டத்தின் சக்தியை அறிந்து தலை கீழாகட்டும். அதருமத்தின் விளைவு ஜகப்பிரளயம் தான் என்று எப்படைப்புமறியட்டும்; தருமத்திலேயே நிற்கிறீர், தரும முறையாலும், சாத்வீகத்தாலும், விடா முயற்சியாலும் மனம் சலிப்பின்றித் தரும விதிப்படி தேவியைத் தேடும் நம் கடமையைச் செய்வோம், பலனில்லை என்று கண்ட போது, கடைசியான தண்டோபாயத்தைக் கொண்டு அம்பு மாரிகளால் உலகத்தைத் தண்டித்து விடுங்கள், எவ்விதத் தண்டனையையும் விதிக்க அதுவே தக்க காலம். அதுவரை பொறுமையுடன் தரும வழியில் சாந்தமாக நின்று நாம் முயற்சி செய்வோம்" என்று வேண்டினான்.

---

## 66. சீற்றம் தணிதல்

தருமத்தில் நின்று கடமையை உணர்த்துகிறான் தம்பி. கோபமோ, சோகமோ எவ்வித உணர்ச்சியிலும் கடமையைச் செய்து விடுவது தான் நேர்மையென்று தெளிவாக்குகிறது ராமனின் தெள்ளறிவு.

[இதற்குப் பின்பு (துவாபர யுகத்தில்) குருக்ஷேத்திர யுத்தத்தில், தேர்த்தட்டிலிருந்த வண்ணம் அருச்சுனனை வியாஜமாக வைத்துக்கொண்டு உலகிலுதித்த எத்தகைய ஜீவனும் தத்தம் கடமையைச் செய்வதே சிறந்த தருமமென்று எடுத்துக் காட்டப் போகிறான் இன்னொரு நரோத்தமன்.]

தமையன் லட்சுமணன் சொல்வதைக் கவனிக்கிறான், தான் சொல்வதைத் தமையன் செவி சாய்க்கிறானென்று உணர்கிறான் இளையவன். துயரத்தால் துடிக்கிறான் அண்ணன். அன்பின் மேலீட்டால் காதலியைத் திரும்பப் பெறக் கோபத்தைக் கைக் கொள்கிறான். எனினும் கடமையை நினைப்பூட்ட, சற்று நிதானிக்கிறான். இதுதான் தகுந்த வாய்ப்பென்று மறுபடியும் அண்ணனை அடிபணிந்து பாதங்களைப் பற்றிக் கொண்டு வேண்டுகிறான் அனுசன்.

"ராம! தேவர்கள் எத்தகைய பிரயத்தினங்கள் செய்து அமிர்த்தத்தைப் பெற்றார்களோ அப்படியே, தசரத சக்கரவர்த்தி பல நோன்புகள் நோற்று உங்களைப் புதல்வராக அடைந்தார் எனினும் நற்குணக் களஞ்சியமாகிய உங்களைப் பிரிந்த வருத்தத்தால் ஆற்றாது அவர் உயிர் துறந்தார், என்று பரதன் சொன்னது நினைவிலிருக்கிறது. [அதாவது, எந்த அளவிற்கு தசரதர் துக்கத்துக்கு ஆளானாரோ, அந்த அளவு குறைவு விளைந்ததால் உயிர் நீத்தாரென்று ஊகம்புகல்கிறான் போலும்!] தருமத்தின் பொருட்டு நாட்டைத் துறந்து கானகமடைந்து கஷ்ட நஷ்டங்களைச் சகித்து சீதாபிராட்டிக்கும் எனக்கும் உற்சாகத்தை வளர்த்து வந்தவர்கள் நீங்கள். எதிர்பாராது வந்த இக்கஷ்டத்தை நீங்களே இவ்வளவு தூரம் சகித்து விட்டு இப்போது சகியாமற் போனால் உலகில் எந்த சாதாரண மானிடன் தான் சகிப்பான்? மக்களின் தந்தையான தாங்களே துக்கத்தால் கோபம் மேலிட்டு உலகை சிதைக்க எண்ணினால், கேவலம், சாதாரண மனிதர்களுக்குப் புகலிடமெங்கே? துன்பத்தைச் சகிப்பது எல்லா ஜீவராசிகளின் இயல்புதானே. துயரமும் இன்பமும் பெரியோர்களைக் கலக்க முடியாது. நகுஷனின் புதல்வரான யயாதி உண்மையையுரைத்த போதிலும், செருக்கடைந்தான் என்று இந்திர லோகத்தை விட்டுக் கீழே தள்ளப்பட்ட போது ஆத்திரங் கொண்டனரா? நம் குலகுருவான வசிஷ்ட மாமுனிவர் தம் புதல்வர்கள் நூறு பேரும் ஒரே காலத்தில் ரிஷியின் சாபத்தால் மாண்டு விட்ட போது அவர் இதைப் பொறுக்காது கோபங் கொண்டனரா? எவ்வாறு எல்லோருக்கும் இவ்வுலகில் கஷ்டம் நேரிடுவது இயற்கையோ, அவ்வாறு அதைச் சகிப்பதும் இயற்கையன்றோ! பொறுமையே குணமாய்க் கொண்ட பூமி தேவிக்கும் பூகம்பம் ஏற்படுகிறதே! உலகிற்குக் கண் போன்றவர்களும், ஒளிக்கும், மழைக்கும் காரணமாயிருக்கின்றவர்களுமான சூரிய சந்திரர்கள் கிரகண காலத்தில் இராகு கேதுக்களால் பீடிக்கப்படவில்லையா? ஆகையால் வாழ்க்கையில் இடர்கள் காண்பது இயல்புதானே! இயற்கையைத் தண்டிப்பது மதியின் சிறப்பாகுமோ? கஷ்டமும் சுகமும் வாழ்க்கையின் விளைவுகள். அதைச்சகித்துச் சமாளிப்பதும் சுபாவம் தானே? இந்திரன் முதலான தேவர்களுக்குங் கூட சுக துக்கங்கள் உண்டு என்கிறார்கள் பெரியோர்கள். ஆதலின் காகுத்தரே! நீங்கள் இடருக்கு வயப்பட்டுச் சினத்திற்கு இடங் கொடுக்கலாகாது. எக்காலத்திலும் உயர் அறிவு கொண்ட உங்களைப் போன்ற மகாத்மாக்கள் மனச் சோர்வடைந்தால் மற்றவர்கள் நிலை எவ்வாறாகுமென்பதை யோசித்துப் பாருங்கள். இதை நீங்களே எனக்குப் பன்முறை போதிக்க வில்லையா? புருஷோத்

தமா! உங்கள் உயர் அறிவைக் கொண்டு மனந் தளர்ச்சியின்றி சிந்தனை செய்யுங்கள். வல்லவரே! உங்களுடைய மேலான அறிவுடைமை எவருலும் அறியவல்லதல்ல. உங்கள் சோகத்தில் அழுந்தியிருக்கும் அவ்வுயர் அறிவை எழுப்ப வேண்டுகிறேன். இக்ஷ்வாகுகுல திலகமே! குல கீர்த்தயையும், உங்களுடைய தெள்ளறிவையும், தூய்மையுடன் விளங்கும் அபூர்வ குண மானிடப் பிறவியின் சிறப்பையும், (திவ்வியமான மானிடப் பண்பாடு—''திவ்வியம்—மானுஷம்'' என்பது வால்மீகியின் வாக்கியம் இது ''அமானுஷம்''—தெய்வீகத் தன்மையை லட்சுமணன் நினைப்பூட்டுகிறுன் என்று சில பெரியோர்களின் அபிப்பிராயம்; தெய்வீகத் தன்மை என்ருல் மறைந்து கிடக்குமா, இக்சிக்கலில் தான் மனம் பதறுமா. மானிடத் தன்மை பரிபக்குவமடைந்தால் தெய்வீகத் தன்மை எய்தும் என்று உணர்வுறச் செய்கிறது போலும் இவ்வாக்கியம்!) உங்கள் ஒப்புயர்வற்ற பராக்கிரமத்தையும், சற்று நினைப்பூட்டுகிறேன். நமக்கு இத் தீங்கிழைத்த தீயனைத் தண்டிக்கும் முயற்சியில் கவனஞ் செலுத்த வேண்டி அடிபணிகிறேன். புருஷோத்தமா! சினங் கொள்ளாதிருக்குமாறு மன்ருடுகிறேன். உங்கள் சினத் தீயால் யாவரையும் சுட்டெரிப்பதால் பயன் என்ன? தேவரீருக்கு அபராதம் விளைத்த துஷ்டனை மட்டும் தேடிப் பிடித்து அவனைத் தகுந்த படி தண்டனை செய்ய இசையுமாறு வேண்டுகிறேன்'' என்று பல வாறு வேண்டி அண்ணலின் கடுஞ் சினத்தை ஒருவாறு தணித்தான் தம்பி லட்சுமணன்.

---

## 67. தருமத்திற்கு உயிரிழந்த பறவைப் பெரியார்

கருத்தை ஊகத்தால் எளிதில் கண்டுணரும் கருணமூர்த்தி தம்பியின் சொற்களைக் கவனிக்கிறுன். ''ஆம்! கடமையை நினைப்பூட்டி முயற்சியை மூட்டுகிறுன். முயற்சியால் ஆகாதது என்ன? கடுஞ் சினத்தால் இம்சை தான் விளையும், சாந்தமே சகல பயன்களையும் தரும். சரி, அவன் சொற்படி இசையச் சம்மதித்துக் கோபத்தை உறையிலிட்டு, வில்லினின்றும் நாணைத் தளர்த்தி. ''அப்பா லட்சுமணு! நீ சொல்வது சரி. இப்போது என்ன செய்யலாம்? எங்கு செல்லலாம்? நான் மீண்டும் சீதையையடைவதற்கு உபாயம் எது? என்று யோசி.'' என்று அமைதி தோன்ற இனிது மொழிந்தான் காகுத்தன். [கோபத்தை ஒரு விநாடியில் ஒடுக்கி விட்டான் இந்த ஜிதேந்திரியன்.]

''அண்ணலே! உங்கள் கீர்த்திக்கும் பொறுமைக் குணத்திற்கும் எல்லை காண்கிலேன். வாருங்கள்; இதே வழியாகத் தெற்கு நோக்கி மலை, காடு, குகைகள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே செல்வோம். துயரம் நீக்குங்கள்; உங்களை யொத்த பெரியோர்கள் எத்துயரிலும் மலைபோல் நின்று மனஞ்சலியார்கள்'' என்று திருப்தி எழுப்பி அழைத்துச் சென்ருன்,

இருவரும் கொஞ்ச தூரம் தேடிக் கொண்டு சென்ருர்கள். அப்பொழுது குருதிக் கடலில் நாட்டப்பட்ட மலைபோல் பெரிய உடல் கொண்டு. அவ்வுடலெல்லாம் படுகாயத்தால் உதிரம் பெருக அடிபட்டுக் கீழே விழுந்து கிடந்த கழுகரசஞன ஜடாயுவைக் கண்டு திடுக்கிட்டனர். ராகவனுக்கு

சந்தேகம் உதித்தது. கழுகரசனுகவும், நண்பனுகவும் தோன்றிய இவன் உண்மையில் அரக்கனு? சீதையைக் கொன்று தின்று விட்டுக் கீழே கிடக்கிருனு? இச்சந்தேகத்தை லட்சுமணனுக்கு வெளியிட்டுக் கொண்டே வில்வில் நாணேற்றிக் கொண்டு அப்பட்சியை அணுகினன்.

இராவணன் அம்பால் அடியுற்று வேதனையுற்ற கழுகின் வேந்தன் வாயினின்றும் நுரையையும், ரத்தத்தையும் கக்கிக் கொண்டு தீனமான குரலில் தாசரதியைப் பார்த்து, "பல்லாண்டு வாழும் பிரபுவே! அரியதொரு மூலிகையைக் காட்டில் தேடுவது போல் நீங்கள் எவளைத் தேடுகின்றீர்களோ, அத்தேவியையும், என் பிராணனையும் ராவணன் என்ற கொடிய அரக்கன் கவர்ந்து விட்டான். ராகவா, பலாத்காரமாக அவ்வரக்கப் பதர், தேவியை ஆகாயத்தில் தூக்கிப் போவதைக் கண்டேன். உடனே அவனேடு யுத்தஞ் செய்து அவனுடைய ரதத்தையும் சாரதியையும் வில்லையும் கொடியையும் அழித்து ஒழித்தேன். அதோ முறிந்து கிடக்கும் ரதமும், குதிரைகளும், வில்லும் கவசமும் அவ்வரக்கனுடையன. கடும் போரில் நான் சற்றுச் சோர்ந்து போன சமயம் பார்த்து, சுத்த வீரனல்லாத அத்துஷ்டன் தன் வாளால் எனது சிறகுகளிரண்டையும் வெட்டி வீழ்த்தி, சீதையைப் பற்றிக் கொண்டு ஆகாய வழியே மாயையால் இருள் மூட்டித் தென் திசை சென்று மறைந்தான். முன்பே அக்கொடியவனல் அடிபட்டு மரண வேதனையிலிருக்கும் என்னை நீ சந்தேகப்பட்டுக் கொல்ல வேண்டாம்" என்று அன்புடன் தெரிவித்தான்.

இதைக் கேட்டு மனம் விண்டான் ராமச்சந்திரன். "ஆகா! இவரிடமா சந்தேகங் கொண்டேன், எனக்காக அரக்கனை எதிர்த்துக் கடும் போர் புரிந்து தன் உயிரையே தியாகஞ் செய்த தூய குணமுள்ள இத்துணைவரை அரக்கனென்று சந்தேகித்தேனே! என்னிலும் இழியவன் உளனே?' என்று துயரம் மேலிட்டுத் தனுசைக் கீழெறிந்து ஓடோடி வந்து குற்றுயிராய்க் கிடக்கும் கழுகரசனைக் கட்டியணைத்துக் கதறினன், "லட்சுமணு! என்ன விபரீதங்கள் நேர்ந்தன பார்த்தனையா? அரசை விட்டு அரணியம் நண்ணி மனைவியையும் பறிகொடுத்த என் விஷயத்தில் பரிவு கொண்டு ஜானகியைக் காக்க கடும் போர் விளைத்துத் தீனதசை யடைந்த என் தந்தையை யொத்த கழுகரசனையும் இழக்க நேரிட்டதே! இதனினும் துன்பம் வேறென்ன வேண்டும்! என் துர் அதிர்ஷ்டம் அக்கினியை எரிக்கும். கடலில் நுழைய கடலும் வற்றி விடும். ஒரு ஜீவனுக்கு எத்தகைய அபாக்கியம் மேலும் மேலும் வந்து கவ்வுகிறது. பார்! நம் ஆபத்தில் துணைபுரியமுற்பட்ட நமது தந்தையின் உயிர்த் தோழராகிய இப்பெரியார் எனக்காக இறக்கும் தறுவாயிலிருப்பதை நோக்க என் துர் அதிர்ஷ்ட தசை எல்லையை யடைந்து விடவில்லையா?" என்று பரிதபித்துப் புலம்பி ஜடாயுவைத் தடவிக் கொடுத்து "அப்பனே! என் ஆருயிர்த் துணைவியான மிதிலைச் செல்வியின் கதி என்ன? அவள் எங்கு போனுள்?" என்று அலறிக் கதறி அவளைப் பிரிந்த சோகம் மேலிட்டு மெய்ம்மறந்தான்.

———

## 68. ஜடாயுவின் முடிவு

"என் தந்தையின் ஆருயிர்த் தோழர்; மிக்க வயது முதிர்ந்தவர்; வலிமையின் வேகம் குன்றினவர்; பாவம், அத்தகையோர் தன் தோள் வலி ஒன்றையே கொண்டு தன்னந் தனியராய் மாபெரும் பாதகனாகிய அரக்கனிடம் கடும் போர் தொடுத்து ஜானகியைக் காப்பாற்றப் பெரும் பாடு பட்டாரன்றோ? இப்பெரியாரின் உதவிக்குக் கைம்மாறு உண்டோ? என்று ஏக்கங் கொண்டு ஜடாயு இறகுகள் அறுபட்டுத் துடிப்பதைப் பொறுதவனாகி லட்சுமணனைப் பார்த்து, "அப்பா! இக்கழுகரசர் எனக்குத் துணை புரிவதில் ஈடுபட்டு மரண வேதனையுறுகிறார். ஜடாயுவே! சீதையைப் பற்றின செய்தியை யறிய வேண்டுகிறேன், உமக்கு மங்கள முண்டாகுக. அவளைப் பற்றிக் கவலைப் படுகிறேன். எதற்காக ராவணன் சீதையை அபகரித்துச் சென்றான்? நான் இவனுக்கு இழைத்த தீங்கு என்ன? கழுகரசே! ஜானகி எவ்வாறு தவித்தாள்? என்ன சொன்னாள்? அவள் முகம் எவ்வாறிருந்தது? ஐயனே! அவ்வரக்கனின் வீரியம் எத்தன்மையது? அவன் யாண்டுள்ளான்? விடை அருள் புரிய வேண்டும்" என வேண்டினான்.

இவ்வாறு புலம்பிக் கதறும் ராமனைப் பார்த்த ஜடாயு கண் திறந்து பேசமுடியாது சிரமப் பட்டு பெருமூச்சு விட்டுக் கொண்டு மெல்லிய குரலில் பதிலுரைத்தார்:—"ராமா! அரக்க அரசனான ராவணன் மாயா சக்தி கொண்டவன். அச்சக்தியால் அவன் காற்றை அடக்குவான். ஆகாயத்தை மறைப்பான். அவன் சக்தியை இன்னதென்று சொல்ல முடியாது. அந்த மாயாவி ஆகாய மார்க்கத்தில் சீதையை தூக்கிக் கொண்டு தென் திசையில் விரைந்து சென்றான். ராகவா! எனது ஆவி துடிக்கிறது. கண் பார்வை மங்குகிறது. உன்னைப் பார்த்ததால் பேறு பெற்றேன். உன் திவ்விய கரங்களால் என்னைத் தடவிக் கொடு, உலகக் கட்டிலிருந்தும் விடுபட்டவனாகி நற்கதியடைவேன். அப்பனே! அத்துஷ்டன் வைதேகியை எந்த நேரத்தில் தூக்கிச் சென்றனனோ அவ்வேளை விஜயமெனும் வேளை, இந்த முகூர்த்த பலத்தால், காணாமற் போன பொருளை, அப்பொருளுக்குடையவன் விரைவில் பெறுவன். நீ அஞ்ச வேண்டாம். இதை அவன் அறிந்தவனல்லன். ஆகையால் நீ சீதையைத் திரும்பி அடைவதில் சந்தேகம் வேண்டாம், அதற்குரிய முயற்சிகளைச் செய். அவனோ தூண்டு முள்ளை இழுத்துப் போடும் மீன் போலத் தன் அழிவை இதோ அடையப் போகிறான். ஜனகனின் செல்வியைப் பற்றி இனி நீ கவலை கொள்ள வேண்டாம். அவ்விராட்சதனைச் சீக்கிரமே கொன்று அவளைத் திரும்பி அடையப் போகிறாய் அவன் விச்ரவ முனிவரின் பிள்ளை. குபேரனுடையதம்பி." என்று தட்டுத் தடுமாறிச் சொல்லும் போதே வாயினின்று ரத்தம் வெளிவந்தது. அவரும் உயிர் நீத்தார்.

ராமன் அடங்காத் துயரமடைந்தான். "ஐயோ! இன்னும் கொஞ்சம் பேசுமே, சீதையைப் பற்றிச் சொல்லுமே" என்று கதறும் போது பிராணன் போய் சடலம் கீழே சாய்ந்தது. நீர்வழிய ரகுராமன் தம்பியை நோக்கி, "லட்சுமணா! கவனித்தாயா! இவ்வனத்தில் அநேக வருஷங்கள்

வாழ்ந்து வந்த இப்பறவை மன்னர் எனக்காக இப்போது பிரா ணனை விட்டார், விதியின் பயன்தான் என்னே! எனக்குப் பேருதவி புரிந்தவர் இப்பெரியார். ஜானகியை மீட்க முயற்சித்தார். கொடிய அரக் கனால் கொலையுண்டு மாண்டார். மகத்தான சேவையல்லவா இது? சுமித் திரையின் செல்வனே! இங்கு ஒரு விசேஷத்தைக் கவனி. கேவலம், மானிட அறிவுமில்லாத பிராணிகளிடத்தும் தயை, தருமம், வாய்மை. தூய்மை, தியாகம் முதலிய நற்குணங்கள் காணப் பெறுகின்றன. படைப்பின் பெரு மைதான் என்னே! சீதையை இழந்த துக்கத்தினும் இப்பெரியாரை யிழந்த துக்கம் என்னை மிகவும் வருத்துகிறது. என் தந்தை போல் போற்றப்பட வேண்டியவர் இப்பறவையரசர். ஆகையால் நானே இவருக்கு ஈமைக் கட னைக் செய்வேன். அக்கினி மூட்டு. என் பொருட்டு உயிர் நீத்த இம்மஹானின் பூத உடலைத் தகனஞ் செய்ய வேண்டும். புனிதமான கோதாவரி நதிக்கரை யில் சிதையை அடுக்கு" என்று சொல்லி விட்டு அப்பெரும் உடலைத் தூக் கிச் சென்றான் தயரதன் தனயன். பின்னர் அக்கினியை யுண்டாக்கி ஜடாயுவின் உடலைச் சிதையிலிட்டு, "கழுகரசே! மகா புண்ணியாத்து மாவே! சிறந்த யாகஞ் செய்தவர்களுக்கு எந்த நற்கதியுண்டோ, பஞ்சாக்னி மத்தியில் நின்று கடுந்தவமியற்றியவர் எவ்விடத்தை அடைவரோ, போ ரில் பின் வாங்காது உயிர் விட்டவர் எந்த வீர சொர்க்கஞ் சேர்வரோ, பூமி தானஞ் செய்கிறவர்கள் செல்லும் உலகம் எதுவோ, அவ்வுத்தமமான இடத்திற்குச் செல்வீராக. என்னால் செய்யப்பட்ட பிதுர்கர்ம பலன் உம்மை அங்கு கொண்டு சேர்க்குமாக." என்று இவ்வாறு சொல்லிக் கொண்டே எரியும் சிதையில் அவரையிட்டுத் தாசரதி தகனம் செய்தான்!

[சரபங்கரும், சுதீக்ஷ்ணரும் தாங்கள் தவபலத்தால் எய்திய லோகங் களை ராமபத்ரனுக்கு அர்ப்பணஞ் செய்த போது, "இவைகளை நானே அடைய முடியும்" என்றான் ரகுராமன். அயோத்யா காண்டம் 2-வது ஸர்க்கத்தில் இவன் ஸத்திய ஸந்தனானகையால் எல்லா உலகங்களையும் பலனுயடைந்தவன் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஸத்தியமே தருமம், அத்தருமத்தால் எவ்வுலகையும் எய்தலாம். மனிதனும் பரிபூரணனானால் தெய்வீக சக்தியும் அவனிடம் இயங்கும்; என்ற உண்மையை விளக்குகின் றதோ, என்னவோ, ரகுராமனின் திட வாக்கியம் "இவைகளை நானே அடைய முடியும்" என்பது. ஆகவே, சத்திய மூர்த்தியான சியாமளரூபன், ஜடாயுவிற்குகந்த பலனை அவர் அடைவது உரித்தாகு மென்று எவ்வுலகும் இயங்கும் சக்திக்கு தருமத்தின் அதிகார ஆக்ஞையை வெளியிடுகிறான். ஆகையால் ஜடாயுவிற்கு—தருமாத்மாவான சக்ரவர்த்தித் திருமகனே ஈமச் சடங்கு செய்யப் பெற்றுப் புனிதமான ஒரு ஆத்மாவிற்கு—மிக்க உயர் கதி கிடைத்தது ஆச்சரியமன்று.]

ஜடாயுவின் ஆத்மா திருப்தியடைய ஈமச் சடங்குகளைச் செய்து முடித்து, கோதாவரியில் ஸ்நானஞ் செய்து, பிதுர் தர்ப்பணம் முதலிய நீர்க் கடன்களையும் விதிப்படி செய்து முடித்தான். பின்னர் புது ஒளி கொண்டு சற்று மனச்சாந்தி யடைந்து. வைகுந்த நாதனை விஷ்ணுவையும், வானவ ரரசனை இந்திரனையு மொத்த ராமலக்ஷ்மணர் இருவரும், இனி சீதையைத் தேடுவதில் ஊக்கம் வைத்து வேறு வனத்துக்குச் சென்றார்கள்.

---

## 69. இடர்களைப் போக்கி முயற்சியில் முன்னேறுதல்

வைதேகியைத் தேடும் முயற்சியில் ஊக்கங் கொண்டு சென்ற சகோதரர் இருவரும் தெற்கு நோக்கிச் செல்லும் ஒற்றையடிப் பாதை யொன்றை மேற்புறமாய் கண்டு அவ்வழியில் செல்லத் தலைப்பட்டனர். எங்கும் முட் புதர்களும் இருளடைந்த செடி கொடிகளும். வானளாவிப் பகலவனை மறைக்கும் காட்டு மரங்களும், பயங்கரமான கொடிய வன விலங்குகளும், நிறைந்த தண்டகவனத்தை அவர்கள் அரிதிற் கடந்தனர். இவ்வாறு பல பருவதங் கடந்து கடைசியில் கிரௌஞ்ச மென்னும் காட்டை அடைந்தார்கள்.

இக்காட்டில் வன விலங்குகளின் பயங்கரத் தொனிகளும், பறவைக் கூட்டங்களின் பேரொலியும் கேட்டுக் கொண்டே அரசிளங்குமரர் மிதிலையர் கோன் மகளை எல்லாத் திக்குகளிலும் தேடிக் கொண்டு சென்றனர். சீதையைப் பற்றின புலன் சிறிதும் கிடைக்க வில்லை. அதனால் சோர்வுற்ற மனத்தினராய் அவ்வனத்தையும் விரைவில் கடந்து ஐந்தாறு மைல் நடந்து செல்லும் போது கொடிய விலங்குகளும், பறவைகளும் தங்கியிருந்த காரிருளடைந்த பாதாளம் போன்ற பெரியதொரு குகையைக் கண்டனர். அதன் வாயருகே, பேயுருவங் கொண்ட விகார ரூபமும் விரிந்த கூந்தலுமுடைய ஓர் அரக்கி தென்பட்டாள். அவளை அவர்கள் நெருங்கியவுடன் அவள் எதிர் கொண்டு வந்து லட்சுமணனைப் பற்றிக் கொண்டாள், அவலத் தோற்றமுள்ளவள், ஆட்டுமுக முள்ளவள், கோரப் பல்லும். தொங்கும் நாக்கும் சரிந்து விழுந்த பெருவயிறும், சணல் போன்ற செம்பட்டை மயிர் புச்சங்களும், வக்கிரப் பார்வையும், அவள் பேய்த் தோற்றத்தை வெளியிட்டு அருவருப்பை எழுப்பின. இத்தகைய அரக்கி லட்சுமணனைப் பார்த்து, "வா, நீ எனக்குகந்த காதலன்தான். நாமிருவரும் கவலையற்று ரமித்துக் கொண்டிருப்போம், அயோமுகி எனப்படும் நான் உன்னைக் காதலனாகக் கொண்டேன். நான் கிடைத்தது உனக்கு அதிர்ஷ்டம் தான். வா, மலைக் குகைகளிலும் மணல் மேடைகளிலும் நாமிருவரும் உல்லாசமாய் விளையாடலாம்" என்று சொல்லி அவனைத் தழுவிக் கொண்டாள்.

லட்சுமணனால் அருவருப்புத் தாங்க முடியவில்லை. தன் வாளினால் உடனே அவள் காதையும் மூக்கையும் தனத்தையும் வெட்டித் தள்ளினான், பேய் போன்ற அவ்வரக்கி பேரிரைச்சலிட்டு வலிதாங்காது வந்த வழியே ஓடி மறைந்தாள்! அவ்விடத்தை விட்டு மறுபடியும் இருவரும் ஒரு சிறு பாதையைப் பின்பற்றி இன்னொரு வனம் வந்தடைந்தார்கள்.

இந்த இடம் மிகப் பயங்கரமான தோற்றத்தையுடையது. முற்றிலும் சோபையற்று இயற்கையே வாய் விட்டு அழுவது போல் காணப்பட்டது. அப்போது லட்சுமணன் ராமனைப் பார்த்து, "ராகவா! என் இடது கை துடிக்கிறது. மனத்தில் ஒருவித கலவரத்தைக் காண்கிறேன். ஆபத்தைக் காட்டும் அபசகுனங்களைக் காண்கிறேன். ஸ்வாமி! நாம் வெகு ஜாக்கிரதையுடனிருத்தல் வேண்டும். ஆனால் இதோ, கவனியுங்கள், இத்தொனி 'வஞ்சுலக' மென்கிற பட்சியினது. இது கூவும் போது போரில் வெற்றி உண்டாகும் என்பார்கள்" என்றான்,

இச்சொல்லை முடிக்கு முன்னே நிலம் நறுக்குறும்படி ஒரு பேரொலி கேட்டது. அதனால் மரமும் மலையும் நடுக்குற்றன, ராம லட்சுமணர்கள் காதைப் பிளக்கும் அப்பேரொலியைக் கேட்டு அதன் காரணத்தை நாடுகையில் எதிரே மலைபோல் ஓர் பேருருவம் ஒரு புதரில் காணப்பட்டது. திகிலெழச் செய்யும் கோர ரூபம்; ஒரே பூதாகாரமான பேருடல்; தலை கிடையாது, கழுத்தில்லை. வயிற்றில் முகம்; இடிபோல் வெடித்த குரல், ரம்பம் போன்ற கோரப் பற்கள், அடர்ந்த ஊசிகள் போன்ற மயிர். கார் மேகத்தை யொத்த வர்ணம், அக்னிச் சுவாலை போல் செந்நிறமான சதுப்பு இமைகள், நெற்றியில் ஒற்றைக் கண். அது மார்பினிடம் தீப்பொறி கொண்டு எரிந்து கொண்டிருந்தது. எட்டு மைல் நீளமுள்ள மரக் கலத் துடுப்பு போன்ற இரும்புக் கைகள். அவற்றால் தன் கைக்குட்பட்டவன விலங்குகளைப் பற்றிக் கொண்டிருந்தான். வழியை மறைத்து மலை போல் காணப்பட்டவனை இருவரும் கூப்பிடு தூரத்தில் கண்டார்கள். அதே வினாடியில் சந்திராதித்தர் போல் தேஜசுடன் விளங்கிய ராமலட்சுமணர்களை அந்நீளக் கையன் அவர்கள் இருவரையும் ஒரு சேர இடுக்கி போல் கைகளைக் கூட்டி அமுக்கிக் கொண்டான்.

இவர்களைக் கண்ட அரக்கன் அவர்களை நோக்கி "இளங் காளைகளே! நீவிர் யாவர்! இவ்வனத்தை யடைந்த காரண மென்ன? ஆயுத பாணிகளான நீங்கள் பசியினால் வருந்தும் என் வாயில் விழுந்து விட்டீர்கள் இனி நீங்கள் பிழைப்பதரிது." என்றான்.

திடீரெனத் தோன்றிய இவ்விடரைப் பொருட் படுத்தாது ரகுநாதன் வீரம் விளங்க வாளாவிருந்தனன். இளையவனோ மனம் பதறினன். அண்ணனைப் பார்த்து "அண்ணா! இக்கொடிய அரக்கனிடம் சிக்கி மடிவது திண்ணம், நான் இறத்தலால் நஷ்டம் ஒன்றுமில்லை. நீங்கள் இப்போதே விடுவித்துக் கொள்ளுங்கள். என்னை இவன் இறையாக்க முனையும்போது நான் அவனிடம் போரிடும் போது நீங்கள் தப்பித்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படும். நீங்கள் அதிவிரைவில் அன்னை ஜானகியை அடையப் போகிறீர்களென்பது நிச்சயம். அயோத்தி திரும்பி சுகமாய் அரசு புரியும்போது என்னை நினைத்துக் கொள்ளுங்கள்" என்று சோகித்தான்,

இதற்கு ராமபத்திரன், "தம்பி! நீயா இவ்வாறுரைக்கிறாய்? சூரர்களான உன் போன்றவர்கள் எவ்வாபத்திலும் மனந் தளறுவரோ?" என்று அதட்டினான்,

---

## 70. கபந்தன் கைகளைக் களைவது

இதைக் கண்ணுறுகிறான் கபந்தனெனும் கோர அரக்கன். என்ன இது! என் கையில் சிக்குண்டும் இவர்கள் இன்னும் தைரியமாயிருக்கிறார்களே! என்றான். இதைக் கேட்ட லட்சுமணன் "அண்ணா, இவன் நம்மைப் பற்றியிருக்கிறான். வாயில் போட்டு விழுங்கு முன் இவன் கரங்களை வெட்டி விட வேண்டும்" என்று தூண்டினான். ராமனும் அதை ஆமோதிக்க இருவரும் வாள் கொண்டு சடக் கென்று அவனுடைய எல்லையற்று நீண்டுள்ள இரு கைகளையும் அவைகள் அவன் வாயருகே நெருங்கும் போதே வெட்டி

வீழ்த்தினார்கள். இடி முழக்கத்துடன் கைகள் பூமியில் மலைபோல் விழுந்து மோதின. கையறுபட்ட கபந்தன் கானகம் நடுங்கக் கதறிக் கொண்டு "நீங்கள் யார்?" என்று கூக்குரலிட்டான். லட்சுமணன் ராமனின் வரலாற்றை ஆதியோடந்தமாகச் சொல்லி, அரக்கனைப் பார்த்து, "நீ யார்? முழங்கால் முறிந்து இக் கபந்த உருவத்துடன் இவ்வனத்தில் ஏன் புரளுகிறாய்" என்று கேட்டான்.

உடனே கபந்தன் ஒரு புது உணர்ச்சி கண்டான். அடங்கா ஆனந்தமடைந்தான். தனக்கு இந்திரன் கொடுத்த சாபத்தை நினைவிற் கொண்டு மிக்க பயபக்தியாய் வணங்கிப் பதிலுரைக்கிறான் :—"பெரியோர்களே! உங்கள் வரவு நல்வரவாகுக! நீங்கள் அடியேன் எதிர் பார்த்துக் காத்திருந்த புருஷோத்தமர்கள் என்று உணருகிறேன். என் பாக்கிய வசத்தினால் உங்களால், என் இரு கைகளும் இப்பொழுது அறுக்கப்பட்டன. புருஷர்களுள் சிறந்தவர்களே! எனக்கு இவ்வுருவம் வந்த காரணத்தைச் சொல்கிறேன் செவிசாய்த்தருள வேண்டும்" என்று பணிந்தான்.

[முன்பு விராதன் என்ற அரக்கன் இதே விதமாகக் கையறுபட்டவுடன் வேறொருவனாக மாறினான். தன் சுய அறிவும், ரூபமும் பெற்றான். அவர்களைத் தூக்கிச் சென்றான். அவர்களின் ஸ்பரிசம் பட்ட மாத்திரத்தில் அவன் தூய்மை யடைந்து பூர்வ ஞானம் பெற்று இத்திவ்விய மனிதர்களைப் பணிந்து பக்தனாயினான். இங்கும் கபந்தனுக்கு அத்தகைய விமோசனம் ஏற்படுகிறது. ராமனின் ஸ்பர்சம் படவேண்டியதுதான் தாமதம். உடனே தூய்மையும் புனித உணர்ச்சியும் தானாகத் தேடி வருகின்றன. அவன் திருவடி ஸ்பர்சம் பட்ட மாத்திரத்தில் ஒரு கல்லிலிருந்து எழுகிறாள் அகலியை என்னும் கட்டழகி. மாமுனிவரும் சித்தியடைந்த தவசிகளும் விண்ணுலகம் போவதையும் விட்டு அவனைக் காணப் பெறும் காலத்தை எதிர் பார்த்துக் காத்துக் கிடந்தனர். ராமனுடைய திவ்விய தேஜஸ்ஸின் மகிமையில் தன் வலிவையும் அகந்தையையும் ஒழித்து அவனைச் சரண மடைந்தான் பரசுராமனெனும் மாமுனி. இத்தகைய திவ்விய மங்கள விக்கிரக மகிமை வாய்ந்தவன் அப்புனித மூர்த்தி ராமபத்திரன்.]

---

## 71. கபந்தன் கதை

கோதண்டபாணியான ராமனையும் லட்சுமணனையும் பணிந்து மிக்க மரியாதையுடன் பேச வாரம்பித்தான் கையறுபட்ட கபந்தன் :—"மஹாபாகுவே! உண்மைப் பராக்கிரம சாலியே! ராமா! முன்பு என் ரூபமும், சௌந்தரியமும், சந்திரன், சூரியன், இந்திரன் முதலியவர்க்கு எத்தகைய ரூபலாவணியம் அமையப் பெற்றதாய்ச் சொல்கிறார்களோ, அத்தகைய கவர்ச்சி யுள்ளதாகவிருந்தது. அதில் அகமகிழ்ந்து பெருமிதங் கொண்டு அகந்தையினால் இந்திரனை எதிர்த்தேன். அவன் கோபத்தால் இந்த பீம் மாபெரும் உருவங் கொண்டு இவ்விடம் வந்தேன். எல்லாப் பிராணிகளும் இவ்வுருவத்தைக் கண்டு பயந்தோடின, மிருகங்கள் பயந்தால் மனிதர்களைப் பற்றிக் கேட்பானேன்? விளையாட்டாக இங்கு வசித்த தவசிகளைத்

திடுக்கிடச் செய்தேன். அவர்களுள் ஸ்தூலசிரஸ் என்ற முனிவர் என்னால் அவமானப் படுத்தப் பட்டவராகி எண்ணி என்னைச் சபித்தார். "எல்லாரும் வெறுக்கும் இவ்வுருவமே உனக்கு நிலையாயமையட்டும்" என்று விதித்து விட்டார், அப்பொழுது மனங்குன்றி நிலை தடுமாறி அவர் காலில் விழுந்து அபசாரத்தைப் பொறுத்தருள வேண்டினேன். என் சுய உருவம் அடையும்படி அருள வேண்டி அவரை மன்றாடினேன். அதற்கு அவர் இணங்கி, "எப்பொழுது ஸ்ரீ ராமன் உன் இரு கரங்களையும் வெட்டி வீழ்த்தி உன்னைக் கொளுத்துகிறாரோ அப்பொழுது நீ உன் சுய உருவமடைவாய்" என்று மொழிந்தார். தானவனுடைய அழகு வாய்ந்த தனு வென்ற புத்திரன் நான். போரில் இந்திரனின் கோபத்தால் இந்தக் கோர ரூபம் அடைந்தேன். கடுந்தவமியற்றி பிரும்மாவிடமிருந்து நீண்ட கால ஆயுளைப் பெற்றதால் செருக்குற்று இந்திரன் என்ன செய்ய முடியுமென்று அவனை எதிர்த்தேன். அவன் தனது வஜ்ராயுதத்தால் சினங் கொண்டு ஓங்கி யடித்து என் தலையை வயிற்றில் புதைத்து விட்டான். கைகள் ஒடிந்து விழுந்தன. மகத்தான விகார ரூப மடைந்து அவனிடம் என் மரணத்தை வேண்டினேன். அதற்கு அவன், "பிரம்மாவின் வாக்குப் பொய்யாக்க இயலாதது" வென்று சொல்லவே, தலை நொறுங்கிய நான் உணவு தேடிக் கொள்ள வகையில்லாமல் "இக் கோர வுருவத்துடன் எங்ஙனம் நெடுங்காலம் நான் உயிர் வாழ்வது?" என்று கேட்டேன். அதற்காக எனக்கு இந்திரன் எட்டு மைல் நீளும் இரு கரங்களையும் கூரிய பற்களுடைய பெரும் வாயையும் என் வயிற்றில் அமைத்துச் சென்றான். அது முதல், நீண்ட இவ்விரு கரங்களை நீட்டி அவைகளிடையே எவைகள் சிக்குமோ அவைகளை வாரித் திரட்டித் தின்று வந்தேன். தேவேந்திரனும் எனக்கு ராமனால் தான் விமோசனம் என்று சொல்லிப் போந்தான். மகாராஜ லக்ஷணங்களும் அவர்கள் குணங்களும் அமையப் பெற்ற புருஷோத்தமன் நீர் என்று அறிகிறேன். சுவாமி! உங்கள் மனக் கவலையையுமறிகிறேன். என்னால் சாத்தியமாகும் வரை உதவி புரிய முன் வருகிறேன்" என்றான்.

இக் கடைசி வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் ராமனுக்கு உடல் துடித்தது. கபந்தனை நோக்கி, "காட்டில் தனியேயிருக்கையில் ராவணன் ஜானகியைத் திருடிச் சென்று விட்டான். அவன் பெயரை மாத்திரம் அறிந்திருக்கிறேன். அவனை எங்கும் தேடித் திரிகிறோம். அவன் எங்கிருக்கிறானென்றும், அவனது பராக்கிரமத்தைப் பற்றியும் அறிய முடியவில்லை. இவ்வேளையில் நீ உதவி புரியத் தக்கவன். இதோ, நீ கேட்டுக் கொண்டபடி உன் பெரிய கோர சரீரத்தை ஒரு குழியில் தள்ளித் தகனஞ் செய்கிறோம், கவலை வேண்டாம். உனக்கு ஜானகி விஷயத்தில் தெரிந்ததைச் சொன்னால் பேருதவி புரிந்தவனாய். எக்காரணத்தால், எவ்வெண்ணங் கொண்டு அவ்வரக்கன் அவளைத் திருடிச் சென்றான்? எங்கு சென்றான்? அவன் எங்கிருக்கிறான்? என்று மிக்கக் கவலையுடன் கேட்டான்.

ராமன் கேள்விகளுக்குக் கபந்தன், "சுவாமி! எனக்கு எதையும் கண்டறிந்து கொள்ளும் நுட்ப ஞானமில்லை. ஆகையால் ஜானகியைப் பற்றி அறிய முடியாதிருக்கிறேன். எனினும் என்னை நீங்கள் தயை கூர்ந்து தக

னஞ் செய்வீர்களாகில், நான் என் சுய உருவம் பெற்றவுடன் சீதையை நீங்கள் திரும்பியடைய எவர் உதவி புரிவாரென்று அறிந்து சொல்ல முடியும். ஐயனே! நான் கொளுத்தப்படாத வரையில் சாப விமோசன மடைய முடியாது. சாபத்தின் விளைவால் என் ஞானமும் மறைந்து விட்டது. ஆகையால், கருணைக் கடலே! இப்பொழுது பிற்பகல் சூரியன் அஸ்தமிக்கு முன்பே நீங்கள் என்னைத் தகனஞ் செய்து விட வேண்டும், எல்லாப் புண்ணியங்களும் உங்களிருப்பிட மென்று உணர்கிறேன். தேவரீரால் குழியில் தள்ளப்பட்டுத் தகனஞ் செய்யப்பட்டு என் சுய உருவ மடைந்தவுடன் உங்களுக்கு இவ்விஷயத்தில் உதவி புரிபவனைப் பற்றியும், அவனுடன் நீங்கள் நட்பு கொள்ள வேண்டிய அவசியத்தையும் என் சுய அறிவைக் கொண்டு சொல்ல முடியும். உங்களுக்கு உதவி புரிபவன் எல்லாவற்றையுமறிந்தவன். முன்பு ஒரு காரணத்தால் எல்லா உலகங்களையும் சுற்றி வந்திருக்கிறான். ஆகையால் அந்த இடங்களில் உள்ளதை நன்கறிவான். அவன் துணையால் உங்கள் மனோரதம் கை கூடும்'' என்று மறுபடியும் பணிந்து வணங்கினான் கபந்தன்.

[கபந்தன் தன் நினைவு வந்தவுடன் ராவணன் இருப்பிடமும் ஜானகியைப் பற்றிய விஷயமும் தனக்குத் தெரியாதென்றான். எவன் இவ்விஷயத்தில் உதவி புரிவான் என்பதை மாத்திரம் அறியக் கூடு மென்கிறான். மறுபடியும் தன் சுய ரூபமடையு முன்னரே துணை புரிபவனைப் பற்றி பிரஸ்தாபிக்கிறான். ஒரு காரணத்தால் மூவுலகையும் சுற்றி வந்தவன் அவன். அவனுக்குத் தெரியாத விட மொன்றுமில்லை என்றும் சுக்கிரீவனைப் பற்றி தெரிவிக்கிறான், இதன் கருத்தென்ன? கபந்தனுக்கு ராம லட்சுமணர்கள் ஸ்பரிசம் கிட்டின உடனேயே ஞானோதயம் சம்பவித்து விட்டதென்பதைத் தெளிவாக்குகிறான் போலும்!]

---

## 72. தானவன் தனயனின் ஆலோசனை

கைகள் வெட்டிச் சாய்க்கப் பட்ட கபந்தனின் வார்த்தைகள் ராஜபுத்திரர் இருவருக்கும் புது ஊக்க மளித்தன. சீதையைத் தேடிப் பிடிக்கும் ஆர்வத்தில் அவர்கள் நொடிப் பொழுதில் மலைக் குகை நிகர்த்த மிகப்பெரிய சிதையை உருவாக்கினர். அரக்கன் கைகளையும் உடலையும் அச் சிதையில் தூக்கி வைத்தனர், லக்ஷ்மணன் எரியும் கொள்ளிக் கட்டையால் சிதையை நாற் புறமும் தீயிட்டான், அது கொழுந்து விட்டெரியும் போது இளையவன் தமயனை நோக்கி, "அன்னையைத் தேடும் பணியில் முன்பு ஜடாயு இவ்வாறே தகனஞ் செய்யப் பட்டார், இப்பொழுது இவன் இரண்டாவதாக சிதையிலிடப் பட்டான். எதை மூன்றாவதாக ஏற்பாடு செய்ய கட்டளையிடப் போகிறீர்களோ''? வென்று ராகவனுக்கு மகிழ்ச்சி யூட்ட வுரைத்தான். [சுக்கிரீவன் வாலிக்கும், விபீஷணன் ராவணனுக்கும் இதைச் செய்ய ராமனால் கட்டளையிடப் போகிறார்கள் என்பதை இவ்வார்த்தைகள் சூசிப்பிக்கின்றன போலும்!)

அக்கினி கொழுந்து விட்டெரிய அச்சுவாலையிலிருந்து ஒரு திவ்விய ரூப மெழுந்து பிரகாசித்தது. பொன்னுடையும் மாலையுமணிந்து, ஒரு அழகிய விமானத்தில் நின்று ராமனை நோக்கி, "ராகவா! எவ்விதம் ஜானகியை நிச்சயமாய் அடைவீர்களோ, அதைச் சொல்கிறேன். கவனிப்பீர்களாக. ராம! உலகில் எதையும் ஆராய்ந்தறிந்து செயலாற்ற வேண்டுவது அவசியம். ஆறு யுக்திகள், வகைகள் என்றும், பிரமாணங்கள் அடையாளங்கள் என்றும் அறிவை யடையும் வழிகள் என்பார்கள். (நட்பு, பகை, ஆக்கிரமிப்பு, மறைவிலிருந்து சமயம் பார்த்துத் திடீரென்று வெளிக் கிளம்பி எதிரியைப் பிரமிக்க வைத்து வெற்றி பெறுவது, எதிரிக்கும் அவன் படையினருக்கும், எதிரிக்கும் அவன் நண்பர்களுக்கும் ஒருவருக் கொருவர் துவேஷ மடையச் செய்து பிரித்துப் பலவீன மடைந்த போது வெற்றி பெறல். உடன் படிக்கையோ, சரண் புகுதலோ, கைக் கொள்ளல் இத்தகைய யுக்தி, லட்சணங்கள் அரசியல் நிர்வாகத்திலும், மற்றக் காரியங்களிலும் ஆலோசனைக் குறியவையாகும். ஒரு அனுபவத்தை நேரில் காண்பதோ, அதைப் பற்றி அனுமானிப்பதோ, அதே போன்ற உபமானங்களைக் கொண்டு அதன் பலாபலன்களை நிர்ணயிப்பதோ, அதற்குரிய சப்தத்தால் நிகழ்ச்சியை அறிவது, மற்றவைகள் இல்லாததால் இந்நிகழ்ச்சிதான் என்று ஒன்ருென்ருய் நீக்கி மிச்சமான ஒன்றையே உண்மையெனக் கொள்ளுதல், இத்தகைய அனுபோகங்களைக் கொண்டு சம்பவிக்கப் போவதை ஊகித்தல், என்ற இவ்வித பிரமாணங்களைக் கொண்டு) நீங்கள் சீதையை யடையும் முயற்சியைக் கைக் கொள்ள வேண்டும். கஷ்ட தசையிலிருப்பவன், அத்தசையை விட்டு மீளப் போகிறவன் எவனே அவன்தான் கஷ்ட தசையிலிருப்பவனைப் பற்றி நன்குணர்ந்து நட்பு கொண்டு துணை செய்ய உரியவனுகிருன். நீங்கள் மனைவியைப் பறி கொடுத்து வேதனை யடைந்திருக்கிறீர்கள்.

"சுக்கிரீவன் எனப்படும் வானரத் தலைவன், தன் தமையனுன வாலி என்பவனுல் நாட்டை விட்டுத் துரத்தப் பட்டு வேதனை யுற்றிருக்கிருன். அவனே உங்களுக்குத் துணை செய்ய விருக்கிருன். அவன் ரிச்யமூக மென்ற மலையில் நான்கு வானரப் பெரியார்களுடன் வாசஞ் செய்து கொண்டிருக்கிருன். அச்சுக்கிரீவன் பெரும் வீரன்; சொன்ன சொல் தவருதவன்; உண்மை நண்பன்; உயர் அறிவாளி; ரகுநாதா! அவனே, சீதையைத் தேடும் பணியில் மிக்க உதவி புரிவான். அவனுக்கு அரக்கர்களைப் பற்றியோ, அவர்கள் இருப்பிடத்தைப் பற்றியோ தெரியாதது ஒன்றுமில்லை. அவனை நீங்கள் நட்புக் கொண்டு அக்கினி சாட்சியாக ஒரு மனப் பட்டு சிநேகம் செய்து கொள்ள வேண்டும். இப்பொழுதே இங்கிருந்து அவனிருக்குமிடம் எழுந்தருளுங்கள். அவன் வானரன் தானே என்று அலட்சியம் செய்ய வேண்டாம். அவனுல் ஆகாதது ஒன்றுமில்லை. அவன் உங்கள் உதவியையும் நாடி நிற்கிருன். அவனது மனோரதத்தை நீங்கள் தான் நிறைவேற்ற முடியும். அவன் எல்லாத் திக்குகளிலும் தேவரீர் பிராட்டியைத் தேட வானரர்களை அனுப்புவான். அவனுல் அனுப்பப்பட்டவர்கள் ராவணனுடைய இடத்தில் தேவரீருடைய சீதா பிராட்டியை, குற்றமற்றவளாய் கற்பைக் காப்பவளாய், உண்மை பதிவிரதையாகக் காண்ட

போகிறார்கள். கொஞ்சமும் கவலையும் சந்தேகமும் வேண்டாம். இதை நம்புங்கள், திடமாய் உறுதியளிக்கிறேன்" என்றான் தெய்விக வானோர்களின் திவ்விய உருவமடைந்த கபந்தனென்று வழங்கப்பட்ட, தனுவென்ற தானவன் புதல்வன்.

[அப்பூத உடலை விட்ட பின் திவ்விய ஞானம் வந்ததென்று அவன் சொல்லவில்லை. எனினும் ராமனுக்கு யார் உதவி புரிவாரென்றும் எவ்விதமென்றும் காட்டுகிறான். அவ்வளவு தூரம் அறிந்தவன், 'சீதை மாசற்றவளாகவே இருக்கிறாள்; அவ்வாறே காணப்படப் போகிறாள், என்றும் கூறுவது உண்மையும் ராமனின் வறண்ட இருதயத்திற்குப் பாலும் தேனும் பழமும் கொடுக்கும் பாலைவனச் சோலையாய் அமைவது இலக்கிய உண்மை போலும்! என்ன செய்ய வேண்டியதென்று வகுத்துச் சொல்கிறான். சுக்கிரீவனைப் பற்றி அறிமுகப்படுத்துகிறான். வாலியைப் பற்றிச் சொல்லாது அவன் கொடுமையைத் தெரிவிக்கிறான். வாலி வதத்திற்கு கால் நாட்டி விட்டான்.]

---

## 73. நட்பின் அவசியம்

வானில் விமானத்தில் நின்றபடியே தனுவெனும் தானவன் இன்னும் சொல்லிக் கொண்டே போகிறான். ரிச்யமூக பர்வதத்தில் தமையனால் துரத்தப்பட்டுத் தனியே தவித்து தங்கும் சுக்கிரீவனைச் சினேகஞ் செய்வது சீதையை அடைவதில் அவசியமானதென்று மறுபடியும் வற்புறுத்துகிறான் அந்தப் பர்வதத்தை அடைய வழியையும் விளக்கிக் காட்டுகிறான்,

மேற்குத் திக்கில் காணப்படும் மரங்களை வர்ணிக்கிறான். "அதோ, நாவல் மரம், அதற்கு அப்பால் வேங்கை, பலா, ஆல், தும்பை, அரசு, நாகம், திலகம், நீலா சோகம், கடம்பு முதலிய மரங்கள் வழியின் முற்போக்கில் தென்படுகின்றன. இவைகளைப் பற்றின வழியே சென்றால் மற்றொரு அழகிய நந்தவனத்தை யடையலாம், அது மதுரமான காய் கனிகள் கிடைக்குமிடம். பின்பு கொஞ்ச தூரம் செல்ல, கற்களில்லாத, பாசியற்ற, வழுக்காத சமமான படிகளுடனும் மணல் பாய்ந்து ஆழமில்லாமல் தாமரை மலர்களுடன் விளங்கும் பம்பை என்ற ஏரியை அடைய வேண்டும். மனதைக் கொள்ளை கொள்ளும் அதிரம்மியமான பிரதேசமது. அப்பம்பையின் நீர் அமிர்தச் சுவையுள்ளது. மிக்க ஆரோக்கியத்தை யளிக்க வல்லது. அந்த பரிசுத்தமான இயற்கைத் தோற்றமும் சூழ் நிலையும் மனச் சாந்தி யளிக்க வல்லன. இந்திரனது நந்தவனத்தை நிகர்த்த பூஞ்சோலை வனம். தேன் பெருகும் கனிகளுள்ளவை, லட்சுமணர் தேவரீருக்கு அம்மதுரமான கனிகளைப் பறித்து வழங்கட்டும். பம்பையில் சோபையுற்றுக் காந்தி பொருந்திய அற்புத மீன்கள் கண்ணைக் கவரும். அத் தூய தடாகத்தின் நீரை லட்சுமணர் தாமரை இலையில் கொண்டு வந்து தேவரீர் பருகக் கொடுக்கட்டும். அந்நீர் புனிதமானது. இவைகளை உட்கொண்டால் நன்மையுண்டு. தவமகிமை பெற்ற திவ்விய ஸ்தலமிது. இங்குப் புஷ்பங்கள் எப்பொழு

தும் வாடாமலும் உதிராமலும் மணங் கமழ்ந்து விகசித்திருக்கும், மதங்க முனிவருக்குச் சேவை புரிந்த சீடர்கள் வந்து இளைப்பாறின இடம் புண்ணிய தேசமாயிற்று. குரு சேவையில் களைப்படைந்த தொண்டர்கள் மணங் கமழ மனங் குளிரத் தேடி வைத்த பூச்செடிகள் அவை.

இப்பொழுதும் அத் தொண்டர்களுக்கு தொண்டு செய்து கொண்டு காலங் கழிக்கிறுள் சபரி என்ற பெருமை தங்கிய வயது முதிர்ந்த வேடமாது. அவள் உங்கள் வரவைப் பார்த்துக் காத்து நிற்கிறுள். எல்லோர் நமஸ்காரத்திற்கும் உரியவரான கண் கண்ட தெய்வீகத் தோற்றம் வீசும் உங்களைத் தரிசித்துப் பின்பு இப்பூத உடலை விட்டு திவ்விய தேச மடைய எண்ணிக் காத்திருக்கிறுள் அவள். தேவரீரைத் தரிசிப்பதே அவள் நற்கதி யடையும் உபாயம். காகுத்தரே! உண்மை பராக்கிரமத்திற்கும் பவித்திரமான மனிதத் தன்மைக்கும் பெயர் கொடுத்துப் புகழடைந்த ராமசந்திரா! தேவரீர் பம்பையின் மேற்குக் கரையடைந்து ஏகாந்தமான பிரத்தியேகமான, புனிதமான ஓராச்ரமத்தைக் காண வேண்டும்.

மதங்க முனியின் சிருஷ்டியானதால் அப்பிரதேசம் மதங்க வன மென அழைக்கப்படுகிறது. அவ்வனத்தின் இயற்கை எவ்வித மனக் கவலையும் தீர்க்க வல்லது அப் பம்பா ஸரஸ்ஸின் எதிரே இருப்பது தான் ரிச்யமூக மெனப்படும் பர்வதம். அப்பருவதத்தின் எல்லாப் பக்கங்களிலும் வலிய யானைகள் வாழ்ந்து கொண்டிருப்பதால் அம்மலை எளிதில் அணுக முடியாதது. மிகவும் வளமுற்று விளங்கும் ரம்மியமான இடம் அது. அம்மலையின் உச்சி ஒரு தனிப் பெருஞ்சக்தி கொண்டது. எவனொருவன் அங்கே உறங்கும் போது எதைக் கனவில் காண்கிருனே, அதையே அவன் கண் விழித்ததும் அடைவான். கொடுந் தன்மையுள்ளவர்களும் பாபிகளும் அவ்வுச்சியில் ஏறுவதுமில்லை; அங்குத் தங்குவதுமில்லை, தங்கினுல் இருட்டினதும் அவர்கள் அரக்கர்களால் தூக்கிச் செல்லப்படுவர்.

ஜெயராமனே! அம்மலையில் சிலாபிதான மெனும் குகை ஒன்றிருக்கிறது. அக்குகையின் முன், குளிர்ந்த ஜல முடையதும், அநேக வித கனிகளையும் கிழங்குகளையுமுடையதும். பல மிருகங்களால் நிறையப் பெற்றதும், மிகவும் அழகியதுமான ஒரு பெரிய மடு ஒன்றுருக்கிறது. அக் குகையில் தான், நான்கு தலைசிறந்த வானர வீரர்களுடன் வசிக்கிருன் சுக்கிரீவன். அவனையடைந்து அவனுடன் சத்திய நட்புக் கொண்டு காரிய சித்தி பெறுவீராக" வென்று ஆலோசனைகளைச் சொல்லி முடித்தான்.

ராமனும் லட்சுமணனும் அவ்வார்த்தைகளை ஊக்கத்துடன் மனதில் கொண்டு சற்று ஆறுதலடைந்தனர். வானில் நின்ற வண்ணம் அந்தத் தானவன் மேலெழுந்து செல்ல ராமனுடைய அனுமதியைக் கோரி நிற்கிருன் என்று கவனித்து, ராமன் அவனுக்குப் போக விடையளித்தான், அவனும், "இயக்கம் வெற்றி பெறுக" என்று ஆசி கூறி மேலெழுந்து மறைந்தான். கடைசியில் பார்வையிலிருந்து மறையும் போதும், ரகுநாதனை நோக்கி அஞ்சலி செய்து விட்டு, சுக்கிரீவனைச் சிநேகஞ் செய்து கொள்ளுமாறு எச்சரிக்கும் வேண்டுதலை ஈந்து ஆகாயத்தில் மறைந்தான்!

## 74. சபரி மோக்ஷம்

முன்பு கபந்தனுயிருந்த தானவன் விமானமேறி விண்ணுலகஞ் சென்று விட்டபின் ராம லட்சுமணர்கள் சுக்ரீவனைக் காண ஆசையுற்று முன்பு அறிவிக்கப் பட்ட மரங்களை ஒன்றுஒன்ருகப் பின்பற்றிக் கடந்து மேற்குத் திசையில் சென்றனர். குறிப்பிட்ட மலைக் குன்றுகளும், பூஞ்சோலைகளை யுங் கண்டு வியப்படைந்து, உள்ளங் களித்து, அத்தேசத்தின் அதிசயத் தைக் கண்ணுற்ற வண்ணம் பம்மையின் மேற்குக் கரை வந்தடைந்தனர்.

இங்கு ஒரு புது விதமான உணர்ச்சி எழுப்பும் சூழ்நிலை அவர்களை வர வழைத்தது. பரிசுத்தமான உணர்வு, புனிதமான எண்ணங்கள், உயரிய சேவை செய்யத் தூண்டும் ஆற்றலூட்டும் வனப்பு பூண்ட பிரதேசம், தவசிகளுக்காகவே அமையப் பெற்ற பிரத்தியேக சிருஷ்டி. இவைகளைக் கவனித்த வண்ணம் ராம லட்சுமணர்கள் அந்நந்தவனம் வந்ததும் மனத்தை கவரும் பர்ணசாலை ஒன்று பரிவுடன் உபசரித்து வரவேற்பதாகக் காட்சியளித்தது. அதுதான் கபந்தன் சொல்லிப் போன சபரியின் ஆச்ரம மென்றறிந்து அதை அணுகினர். எங்கும் நிச்சப்தம்! எங்கும் அமைதி நிலவியது. மனதைத் தூய்மை படுத்தும் உன்னத ரம்மியமான இயற்கை வனப்பு. இவர்கள் வரவிற்காகக் காத்திருக்கிருள் என்றுன் தானவன். அவளைப் பார்க்க இருவரும் ஆச்ரமம் நுழைந்தனர். உண்மைப் பக்தனைக் கடவுள் நாடிச் செல்கிருர் என்ற சான்றோர் மரபை எடுத்துக் காட்டுவது போல் ராமனும் லட்சுமணனும் அப்பர்ணசாலை யடைந்து உள்ளே நுழைந்து வரவே, ஓடோடியும் வந்து பாதங்களில் பணிந்தாள் சபரி. கடுந் தவசி, தூய எண்ணத்தையும் சித்தி பெற்ற பக்திப் பரவசமும் ஒருங்கிப் பிழிந்தன அவள் தோற்றமும், படிவும். என்றும் அடைய முடியாத அற்புத இணையற்ற கௌரவம் தாங்கிய மகாப் பிரபு ஒருவரை அதிதியாக வந்தடைந்தால் எவ்வித ஆனந்தமோ, அதைவிட அதிக ஆனந்தத்துடன் ராமன் வரவைப் போற்றிப் பேணிப் பரவசமாயினள். அர்க்யம், பாத்யம், ஆசமனீயம் அளித்து உபசரித்தாள்.

ராமனும் அவளைத் திருப்தி செய்யக் குசலம் வினவினுன். "தவத்தில் தலை சிறந்தவளே! உனக்கு இடையூறுகள் ஒழிந்தனவா? உனது தவம் வளருகிறதா? உனது கோபம் ஒழிந்ததா? ஆகாரமும் சுருங்கிற்று? விரதங்கள் முடிந்தவளாக, மன நிம்மதி அடைந்தனையா? உனது குரு சேவை சபலமாகும் நம்பிக்கை உணர்ச்சி மேலிட்டதா? உன்னைப் பற்றிக் கபந்தன் சொல்லிப் போயினன்" என்றுன். [இவ்வாறு தவசிகளின் நடை முறை ஆசாரங்களும் நியமங்களும், இலட்சிய மடையும் உள்ளப் போக்கும் நன் குணர்ந்தவன் லோகாபி ராமனுன கலைவள்ளல் என்று இக் கேள்விகள் நிரூபிக்கின்றன.] சபரி கை கூப்பி வணங்கி, "சுவாமி! உங்கள் தரிசனத் தால் என் தவமனைத்தும் சித்தி பெற்றன. என் வேள்வியும் நிறைவேறி யது. புருஷோத்தமா! ராமா! தேவர்களுக்கெல்லாம் தேவராய் ஒளியுடன் விளங்கும் உங்களை நான் இப்பொழுது பூஜை செய்ததால் என் வாழ்வே பல னடைந்தது. சுவர்க்க மடைந்த உணர்ச்சி காண்கிறேன், ரகுநந்தன! தேவ ரீரது குளிர்ந்த பார்வையால் அடியேன் புனிதமாயினேன். உங்களுடைய அநுக்கிரகத்தால் நிலையாயுள்ள ஆத்ம கதியை அடையப் போகிறேன்"

"ஐயனே! நான் சேவை செய்து வந்த இங்கிருந்த தவப்பெரியோர்கள் தேவரீர் சித்திர கூடம் எழுந்தருளின போது காந்தி பெற்ற விமானங்களில் விண்ணுலகெய்தினர், அவர்கள் செல்லும் போது "இப்புனிதமான ஆச்ர மத்திற்கு ராமன் தம்பியுடன் வரப் போகிறார். அவர்களைப் பரிவுடன் பணிந்து போற்றி, அவர்களைத் தரிசித்து விட்டு, உத்தமமான உலகையடை வாய்" என்று சொல்லி விட்டுப் போனார்கள். பதின்மூன்று வருஷங்களா கத் தங்களுடைய தரிசனத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன். புரு ஷோத்தமா! பம்பையின் கரையிலுள்ள அநேக விதமான அருமையுள்ள ருசியான கனி கிழங்குகள் தேவரீருக்கென்றே சேகரித்து வைத்திருக்கி றேன். சுவாமி! இவைகளை அங்கீகரித்து அருள் புரிய வேண்டும்" என்று அவைகளை அவர்கள் முன் சமர்ப்பித்துப் பணிந்தாள் சபரி.

[வெகுகாலம் கடுந்தவமியற்றி நற்கதியடைந்த மாமுனிவர்களுக்கு, மாசற்ற மனதுடன் பயபக்தியாய் சதா பணி விடை செய்தவள்; அவர்கள் ஆசிகளைப் பெற்றவள்; ராகவனைத் தரிசிக்க வேண்டும். பின்பு நற்கதி எய் தலாம் என்று அவர்கள் சொல்லிப் போனதைத் தன் வாழ்க்கையில் லட்சி யம் ஈடேறும் வழியாய்க் கொண்டு இதற்காகப் பதின்மூன்று வருஷங்கள் வெளியே வராது தவமியற்றியவள். இத்தனிப் பெரும் தவசியை, மதங் கொண்டு சண்டையிட்டுக் கொள்ளும் காட்டு யானைகள் கூட இவள் பர்ண சாலைக்கு வருவதில்லை என்று தானவன் புகழுரை செய்தான். இனிய கனி யையும் கிழங்குகளையும் தன் மன இனிமையில் உண்மை பக்தி கொண்டு பொருக்கித் திரட்டி அவனிடம் சமர்ப்பிக்கக் காத்திருந்தவள், முனித் தொண்டர்களுக்குத் தொண்டு புரிந்து பேரியோர்களின் ஆசி பெற்று ராகவ னைக் கடவுளாய்க் கண்டு பாதங்களில் பணிந்து பரலோகம் மடையும் உபா யத்தை விரதமாகக் கொண்டவள். சபரி என்ற பெயரால் வேட ஜாதியில் பிறந்தவள் என்று கருதப்பட்டு அவளுக்கு நேர்முகமாக ஸ்ரீ ராமபத்ரனின் அனுக்கிரகம் வேண்டுமென்று ரிஷிகள் அவளை விட்டுப் போனார்களோ. என்னவோ. ராமனைக் கண்டு அவன் பாதங்களைப் பணிந்து அப்பொழுதே நற்கதி யடைந்ததாய் உணர்வு கொண்டாள், இவளுடைய பக்தியின் பிர பாவம் விளக்கற்பாலதன்று. ஆதியில் ஒரு வேடன் இவ் வாதிகாவ்விய மான ஸ்ரீ ராமாயணத்தைத் துவக்குவதற்குத் தூண்டு கோலானான், பின்பு ஒரு வேடன் குகன் என்பான் ராகவனுக்குத் தன் அரசைத் தியாகஞ் செய்து தன் நாட்டை அவனுக்கு அர்ப்பணம் செய்து அவனுக்கு அடிமை பூண்டு சேவை செய்திட மன்றாடினான். இங்கு ஒரு வேடப் பெண்மணி ரகுநாதனைப் பணிந்து சுவர்க்கம் புக வேண்டி நிற்கிறாள். இதை எழுதித் தந்த மகரிஷி முன்பு வேடனாயிருந்தவர்தான்! சர்வேச்வரனான எம் பெருமான் எளியவர்க்கும், எளிமையான சுலபத் தன்மை கொண்டு மனிதனாய் அவதார மெடுத்து எல்லோரையும் உய்விக்க வந்த கருணை வள் ளலின் மகிமையை யார் அறியவல்லவர், யார் உரைக்க வல்லவர்?]

பயபக்தியாய்ப் பணிந்த சபரியின் உள்ளக் கருத்தை யுணர்ந்த கோச லைச் செல்வனான கலைஞானி, சபரியைப் பார்த்து, "உண்மையறிந்த ஞானி யே! உனது தவமகிமையைப் பற்றியும் இப்புண்ணிய க்ஷேத்திரத்தின் மகி மையைப் பற்றியும் தனு வெனும் தானவன் சொல்லிப் போனான். உனக்கு இசைந்தால் இத்தலத்தின் மகிமையை நேரில் காண எண்ணுகிறேன்" என்றான். உடனே சபரி ஒவ்வோருடத்திற்கும் அழைத்துச் சென்று அம்

மகிமையை விளக்கினுள். ரகுநந்தன! பூஜ்யராகிய எனது உண்மைக் குருக்களும் ஆசிரியர்களுமான முன்பு வசித்த பெரியோர்கள் இவ்விடத்திலே தான் விதிப்படி மந்திரங்களைக் கொண்டு தவமியற்றினர். இதுதான் "ப்ரத்யக்ஸ்தலீ" எனப்படும் வேதி (மேடை). இதோ இவ்விடத்தில்தான் வயது முதிர்ந்த அவர்கள் பக்தியால், நடுங்கும் கைகளால் கடவுளை மலர் கொண்டு பூஜை செய்தார்கள். இம்மலர்கள் இன்னும் வாடாமலிருக்கின் றன. அவர்களின் தவ மகிமையால் இந்த யாக வேதிகள் இன்னும் நிக ரற்ற காந்தியால் எல்லாத் திசைகளையும் ஒளி பரப்பிச் சோபிப்பதைக் காண்கிறீர்கள். நெடுங்கால உபவாசச்ரமத்தாலும் வெளியே செல்ல முடி யாத அவர்கள் கோரிக்கைப்படி, இந்த இடத்தில் ஏழு சமுத்திரங்களின் நீரும் ஒன்று கலந்து வந்து போவதைக் காணலாம். கருணைக் கடலான காகுத்தா! இதோ இம்மரங்களின் அடியே அத்தவப் பெரியோர்கள் ஸ்நா னஞ் செய்த போது களைந்து வைக்கப் பட்ட வல்கலங்கள் (மரவுரிகள்) இன்னும் ஈரமாகவே இருக்கின்றதைப் பாருங்கள்" என்று எல்லாவிடத் தையும் சுட்டிக் காட்டி அந்தந்த இடத்து மகிமைகளையும் விவரித்தாள்.

பின்பு, அவள் அவர்களைப் பணிந்து தன் ஆத்துமா முக்தியடைந்த தென்றும் தன் உடலை விட்டு அத்தவப் பெரியோர்கள் சென்றவிடத்திற்கு (அங்கும் அவர்களுக்குப் பணிவிடை செய்யவோ, என்னவோ) தானும் போக விடையளிக்குமாறு ராகவனைப் பணிந்தாள். அவனும் இசையவே, அக்கினி ஜ்வாலையை எழுப்பி அதில் புகுந்து எல்லோரும் பணிய வேண்டிய வனைப் பணிந்து, பூத உடலை நீத்து. திவ்விய சொரூபம் பெற்று மின்னல் போல் வெளிக் கிளம்பி மறைந்தாள்!

---

## 75. பம்பா தரிசனம்

[முன்பு கபந்தன், இதற்கு முன் தண்டகவனத்திலுள்ள தவ முடித்த முனிகள், இப்பொழுது சபரி, ஆகிய இவர்களெல்லோரும் நேர் முகமாகவே ரகுநாயகனைத் தெய்வமாகத் தரிசித்து 'நாங்கள் புனிதராயினோம், இனி, எங்களுக்கு நற்கதிதான்" என்று உறுதி கொண்டு சொல்லிப் போயினர். தாங்கள் பூவுலகில் கண் கொண்டு கடவுளாய்க் கண்டு தரிசித்துப் பூஜை செய்து பணிந்து, பரலோக மெய்தக் காத்திருந்தனர். ஆனால் ஒவ்வொரு வரும் தசரதன் மகன் ராமன் இங்கு வந்த போது தரிசித்து வரலாம், என்று மற்றவருக்குத் தெரிவித்துச் சென்றனர். அதே போல் விராதனுக்கும் கபந்தனுக்கும் சாபங் கிடைத்த போது, அவர்களின் விமோசனத்தையுங் குறித்துப் போன பெரியார்கள், தசரதன் மகன் ராமன் இங்கு வருவான் அப்பொழுது சாபந்தீரு மென்று சொல்லிப் போயினர்; புருஷர்களில் உத் தமன், அவனைத் தரிசித்த மாத்திரம் பாவங்கள் ஒழிந்து புனிதம் உதிக்கும் என்று நம்பிக்கைப் பரப்பினூர்கள். இவ்வற்புதச் சக்தி தெய்வ சக்தியன் ருே? எனினும் அதை அவர்கள் மறை முகமாகத் தெரிவித்தார்களேயன்றி அவன் தான் சாக்ஷாத் கடவுளென்றும் கேவலம் மானிடனல்ல வென்றும்

தெளிவாக விளக்கிக் கூறவில்லை. மானிடப் பிறவியின் மேன்மையைக் குறைக்கக் கருதவில்லை போலும்! அதை மேன்மைப் படுத்தியது மானிட இனத்தையே மேம்படச் செய்ததாகும். இதை யொட்டியோ, என்னவோ, ராமனும் பல தடவைகளில் தெய்வத் தன்மையைச் சிறப்புற்று விளக்கிக் காட்டாது மனித சுபாவத்தையே செய்கையிலும், எண்ணங்களிலும், உணர்ச்சிகளிலும் மேம்படுத்தி வாழ்க்கையை நடத்திச் செல்கின்ருன். இந்த அனுபவத்தையே இங்கும் காண்கிறோம். மேலுலகஞ் சென்றவர்கள் ராமனைக் கண் முன்பாகக் கண்டு போற்றிப் பணிந்து போகிறார்கள். அவர்களைக் களிப்புறப் போக விடை கொடுத்தனுப்பின பின்பு தனது சுபாவத்தை யடைந்து நம் போன்றவனாகி நம்மைத் தன்னுடன் அழைத்துச் செல்கிறான், சபரி மறைந்ததும் சுக்கிரீவனைத் தேடிப் போகிறான், சபரிக்கு மோக்ஷ மளித்த மோகனன்.]

தவமகிமையாலும் பெரியோர்களுக்குத் தொண்டு செய்த புண்ணியத்தாலும் சபரி நற்கதி யடைந்த பின் ராமச்சந்திரன் தம்பியை நோக்கி, "ஸௌம்மியனே! மகாத்மாக்களுடைய தூய்மை சக்தியின் விசேஷத்தால் வைரம் என்ற தன்மை மறந்து மான்களும் சிங்கங்களும் பிறவிப் பகைமை யொழிந்து ஒன்றோடொன்று நட்பு கொண்டு உறவாடும் பலவித பட்சிகளாலும் சேவை செய்யப்படும் இப்புண்ணியமான ஆச்ரமம் நம்மால் காணப்பட்டது. லட்சுமணா! பவித்திரமான ஏழு சமுத்திரங்களின் நீரில் ஸ்நானஞ் செய்து பித்ருகளுக்குத் தர்ப்பணமும் செய்தோம். ஒரு புது திவ்விய உணர்வு கொண்டோம். மனக் கவலை யொழிந்து சுபமான உணர்ச்சி காண்கிறோம். ஆகையால் நம் முயற்சி பலனடைய விருப்பதாக நிச்சயிக்கிறேன். நம்பிக்கை எழுந்து புத்துயிர் காட்டிப் பரவுகிறது, வா! ரிச்யமூகஞ் சென்று பம்பா கரைக்குச் செல்வோம். சுக்கிரீவனைக் காண்போம். சீதையைத் தேடுவது அவன் பொருப்பாகும்" என்றான். லட்சுமணனும் பின்பற்ற இருவரும் அவ்வாச்ரமம் விட்டு நகர்ந்தனர்.

ரிச்யமூகத்தின் இயற்கை அமைப்பும் பம்பையின் அமைதியான தோற்றமும் வழியில் காணப் பட்ட வனப்பும் சிறப்பும் இரு சகோதரர்களையும் வியப்படையச் செய்தன. எங்கும் நறுமணம் கமழும் மலர் கொண்ட மரங்கள், தேன், கரும்பு இனிய சுவையைப் பழிக்கும் பழுத்துத் தொங்கும் கனிகள்; அழகிய மிருகங்களும், பட்சி வகைகளும்! பம்பையைக் கடந்து ராம லட்சுமணர்கள் மதங்க ஸரஸ் எனும் மடுவில் நீராடினர். பின்பு வழி நடந்து செல்லும் போது அப்பிரதேசத்தின் வசீகர எழிலைப் பருகினர். ராமபிரான் இங்கு வைதேகி இல்லையே என்று அவளை நினைத்து வருந்தினான். மலையடிவாரத்தில் வந்தடைந்த ராகவன் லட்சுமணனைப் பார்த்து, 'அப்பா நீ சுக்கிரீவனிடம் போய் வா. என்னைச் சீதையைப் பறி கொடுத்த துயரம் தாங்க முடியாமல் வாட்டி வதைக்கின்றது. அவளின்றி உயிர் வாழ முடியாது' என்று சொல்லி இருவரும் 'பம்பை ஸரஸ்' என்னுமிடத்திற்கு வந்து சேர்கிறார்கள்.

**ஆரண்ய காண்டம் முற்றிற்று!**

India Printing Works, Madras-4.